34933

# மாதவியின் மனம்



சாண்டில்யன்

பாரதி பதிப்பகம்

# முன்னுரை

சங்க காலச் சோழர்கள் வலிகுன்றி பல்லவர் தலையெடுக்கத் தொடங்கிய காலம். அப்படித் தலையெடுக்க முயன்ற பல்லவர்களும் சின்னஞ்சிறு கிளைகளாக காஞ்சியிலும் வேங்கி நாட்டிலும் பிரிந்து கிடந்த சமயம், அந்த வம்சத்தில் தோன்றினான் பல்லவனான விஷ்ணுகோபன். அவன் ஆண்ட காலத்தில் வடக்கே குப்தப் பேரரசு பெரிதும் விரிந்து கிடந்தது. குப்த அரசர்களில் மகா வீரனும், இரண்டாவது அலெக்ஸாண்டர் என்று புகழப்பட்டவனுமான சமுத்ரகுப்தன் தனது பெரும்படையுடன் தெற்கே இறங்கி ஒவ்வொரு நாடாக முறியடித்து பல்லவ ராஜ்யத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தான்.

பல்லவனான விஷ்ணுகோபனை சமுத்ரகுப்தன் முறியடித்தானா? இல்லை முறியடிக்க முடியாததால் திரும்பி விட்டானா? இந்தக் கேள்விக்கு இன்னும் சரியான முடிவு தெரியவில்லை. ''விஷ்ணுகோபன் சமுத்ரகுப்தனால் முறியடிக்கப்பட்டான்'' என்று ஆசிரியர் வின்ஸெண்ட் ஸ்மித் எழுதுகிறார். ''விஷ்ணுகோபனை முறியடிக்கவில்லை. வேங்கியின் ஹஸ்திவர்மன், அவமுக்த நாட்டின் நீலராஜா, பலசாவின் உக்ரசேனன், தேவராஷ்டிரத்தின் குபேரன், குஸ்டபுரத்தின் தனஞ்செயன்-இவர்கள் துணை கொண்டு சமுத்ரகுப்தனை விஷ்ணுகோபனே வெற்றி கொண்டான். ஆகையால் சமுத்ரகுப்தன் தனது நாட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று'' என்று பேராசிரியர்

டுப்ரேயில் எழுதுகிறார். பேராசிரியர் கோபாலன் "ஏற்கெனவே வின்ஸெண்ட் ஸ்மித் எழுதியதை மறுக்க ருசு இல்லை" என்று குறிப்பிடுகிறார்.

எது எப்படியிருந்தாலும் சமுத்ரகுப்தன் காஞ்சியை அணுகியதாகவோ, அதைப் பிடித்ததாகவோ தெரியவில்லை. ஆகவே, பிரச்னையை மையமாக வைத்து அதன் அஸ்திவாரத்தில் இக்கதையை அமைத்திருக்கிறேன். விஷ்ணுகோபன் காஞ்சியின் ஆரம்ப காலப் பல்லவன் என்பதை எல்லா சரித்திர ஆசிரியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். பல்லவ ராஜ்யம் அவன் காலத்தில் திடப்பட்டதென்பதிலோ, காஞ்சி எந்த விதத்திலும் கட்டுக் குலையவில்லை என்பதிலோ கருத்து வேற்றுமையில்லை. இப்படி பல்லவ ராஜ்யத்துக்கு வித்திட்ட அந்த வீரனின் கதையை இந்த நாவலில் விவரித்திருக்கிறேன்.

காஞ்சியில் சமண, புத்த மதங்கள் அந்தக் காலத்தில் தழைத்துக் கிடந்ததற்கும், அவர்கள் மதத்தை மேலோங்கச் செய்ய முயன்றதற்கும் அத்தாட்சிகள் இருக்கின்றன.

இவைகளையெல்லாம் பிணைத்து வாலிபத் துறவி, மாதவி போன்ற கற்பனைப் பாத்திரங்களையும் இணைத்து இந்த வரலாற்று நவீனம் எழுதப்பட்டிருக்கிறது.

இதைத் தொடர்கதையாக வெளியிட்ட 'அமுதசுரபி' காரியாலயத்தாருக்கும், புத்தக வடிவில் கொணர்ந்த பாரதி பதிப்பகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை விடாது ஆதரித்துவரும் தமிழ்ப் பெருமக்களுக்கு எனது நன்றி எப்பொழுதும் இருக்கிறது.

சென்னை-17
4-6-81

சாண்டில்யன்

34933
5 2 3 1983

# மாதவியின் மனம்

## 1. வாலிபத் துறவி

கதிரவன் மலை வாயில் விழும் மாலைக்காலம் நெருங்கிவிட்டதால், ஜெயின, புத்த, சிவ, விஷ்ணு ஆகிய நான்கு காஞ்சிகளும் ஒரே சுவர்ண காஞ்சியாக எங்கும் பொன் பூச்சைத் தீட்டிவிட்டதன் காரணமாக, அது கண்ணை மயக்கும் காஞ்சியாயிருந்ததேயொழிய மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கும் நகரமாயில்லையென்பதை, அப்பொழுதே மூடத் தொடங்கிவிட்ட அதன் பெரும் வாயிற் கதவுகள் போட்ட பயங்கரச் சப்தமும், அம்மாநகரத்தின் மதில்கள் மீது வீரர்கள் ஏற்றத் தொடங்கிவிட்ட போர்க்கருவி வண்டிகளின் சக்கர ஒலிகளின் கிரீச்சாகாரமும் நிரூபித்தன. அந்த சுவர்ண காஞ்சியின் நிராதரவான நிலையைப் பார்த்துப் பரிதாபப்படுவனபோல், மேய்ச்சல் வயல்களிலிருந்து கூட்டம் கூட்டமாக வாயில்களுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த பசுமாடுகள் உறுமிய சப்த ஜாலங்களும், கூடுகளுக்குள் சீக்கிரம் நுழைந்து விட வேண்டுமென்ற அவசரத்தால் எங்கிருந்தோ கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்த பட்சி ஜாலங்களின் ஒலிகளும் விவரிக்க இயலாத ஒரு பிரமையையும் பயத்தையும் உண்டாக்கின.

அந்தி வேளையை முன்னிட்டுச் சிவ விஷ்ணு காஞ்சிகளின் பெரும் குளங்களில் மாலைக் கடன்களை முடித்துக் கொண்டிருந்த அந்தணர்கள் விட்ட அர்க்கிய மந்திரங்களும், குளங்கரைகளில் உட்கார்ந்து விஷ்ணு சகஸ்ர நாமத்தைக் குருமார்கள் உபதேசிக்கத் திரும்ப இரண்டு இரண்டு தரமாகத் திருப்பிச் சொல்லிக்

கொண்டிருந்த பிராமமணச் சிறார்களின் ஒலிகளும், சுவர்ண காஞ்சிக்குப் பாதுகாப்பை அளிக்கும் மந்திர சப்தங்களாயிருப்பது போக, அச்சத்தை அளிப்பனவாகவே தென்பட்டதன்றி அந்த மாலை சாதனைகள் நடந்த வேகம் மாணவப்பிள்ளைகள் சீக்கிரம் இல்லங்களுக்கு விரைவதில் அக்கறை கொண்டிருப்பதையே விளக்கமாக எடுத்துக் காட்டின.

சாதாரண ஜெயின, புத்த காஞ்சிகளில் எழும் சமண சுலோகங்களின் ஒலிகள் கூட அந்த மாலை வேளைகளில் அமைதியை அளிப்பதற்குப் பதில் வேதனையைஅளிப்பதாகத் தோன்றின, அம்மாநகர் மக்களின் காதுகளுக்கு. இப்படிச் சகல மதத்தினரையும், சகல மந்திரங்களையும், மனிதர்களையும், விலங்குகளையும், பட்சிகளையும் கூட ஒன்றுபடுத்தும் சக்தி ஆனந்தத்துக்கு மட்டுமல்ல, துன்பத்துக்கும் அச்சத்துக்கும் உண்டு என்பதை அறிவுறுத்தும் அத்தாட்சியாக அமைந்திருப்பது காஞ்சியின் அந்த மாலைக் காஞ்சன நேரம்.

பின்னொரு காலத்தில் கணிகண்ணன் நாடு கடத்தப்பட்டதை முன்னிட்டு ''மணிவண்ணா! நீ கிடக்க வேண்டாம், நீயும் உந்தன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்'' என்ற திருமழிசைப்பிரான் கட்டளையை முன்னிட்டு அரவணைப் பாயைச் சுருட்டிக்கொண்டு சென்றுவிட்ட 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' கூட அதற்கு இன்னும் காலம் இருக்கிறதென்ற நினைப்பாலோ, அல்லது காஞ்சியிருக்கும் ஆபத்தான நிலைமையை முன்னிட்டோ, திருவெஃகாவில் நன்றாகக் கண்ணை இறுக மூடிக்கொண்டு படுத்திருந்தார். அவர் காட்டிய குறிப்பைப் புரிந்து கொண்டதால் அர்த்த ஜாம சேவையை அந்திக் காலத்திலேயே முடித்துக் கொண்ட வைணவ பக்த சிகாமணிகள் இல்லங்களுக்கு விரையலாயினர். அப்பேர்ப்பட்ட பல விஷ்ணு ஆலய பட்டர்களும், சிவாலய குருமார்களும் பக்தியைச் சத்தியானுசாரம் சீக்கிரமாக முடித்துக் கொண்டு இல்லங்களுக்கு ஏகத் தயார் செய்து கொண்டனர்.



காஞ்சியின் அந்த நிராதரவான, மனத்தை உளைக்கும் நிலையைக் காண இஷ்டப்படாதவன் போலக் கதிரவனும் சற்று வேகமாக அஸ்தமனமாகி விட்டதால் காஞ்சிக் கதவுகள் வெகுவேகமாக சாத்தப்பட்ட சப்தம் நகரெங்கும் பெரிதாக எதிரொலி செய்தது. காஞ்சியின் நான்கு பெரும் வாயில்களின் கதவுகளில் மூன்று வாயிற் கதவுகள் சாத்தப்பட்டாலும் வடக்கு நோக்கியிருந்த கதவு மட்டும் சாத்தப்படாமல் யாரையோ எதிர்பார்த்த வண்ணம் வரும் மனிதர்கள் எத்தனை பேரானாலும் விழுங்கத் தயாராக இருக்கும் கபந்தனைப்போல் பயங்கரமாக வாயைப் பிளந்து கொண்டு நின்றிருந்தது. அது எதிர் பார்த்ததும் வீணாகாமல் பல புரவிகள் வரும் பேரொலி வெகு தூரத்தில் எழுந்துகொண்டிருந்ததால், கதவு சாத்தவும் காவலர் தங்கள் வேலையும் சீக்கிரம் முடியும் என்ற நினைப்பால் தங்கள் முகங்களில் மகிழ்ச்சியைப்படர விட்டுக் கொண்டு எந்தத் துன்பத்திலும் மனித வாழ்க்கையில் கடுகளவு ஆனந்தம் உண்டு என்பதை நிரூபித்தனர். புரவிகளில் வருபவர்கள் எப்படியும் வந்துதானாக வேண்டும் என்ற நியதி இருந்தாலும் கூட மனித சுபாவத்தின் காரணமாக மதில் மீதிருந்த வீரர்களில் இருவர் கண்களுக்கு மேல் தங்கள் இடக் கைகளை லேசாக மறைத்து, தூரத்தே உற்று நோக்கினார்கள். அப்படி நோக்கியும் புரவிகளோ, புரவி வீரர்களோ, அவர்களுக்கு முன்பு வர வேண்டிய கொடியோ கண்ணுக்குப் புலப்படாததால் மீண்டும் முகங்களில் துயரத்தை சிருஷ்டித்துக் கொண்டனர்.

அவர்கள் துயரத்தைத் துடைப்பனபோல் காஞ்சியில் விளக்கு வைக்கும் நேரத்தில் ஒரு சிறு புரவிக் கூட்டம் வரவே செய்தது. சுமார் பத்துப் புரவிகளுக்கு மேற்படாத அந்தக் கூட்டத்தின் முன்னிலையில் பல்லவக் கொடியை உயரத் தாங்கிப் பிடித்த வீரனொருவனும் வந்துகொண்டிருந்தான். அவனுக்குப்பின்னால் புரவி வீரர் கூட்டத்தின் தலைவனாய் மற்ற வீரர்களைப்போல் பூர்ண கவசமணிந்தவனாய், ஆஜானுபாகுவாய், தலையில் தனியொரு சிறு கிரீடத்தையும் அணிந்தவனாய் வந்தவனைக் கண்டதும் அந்த

வடபெருங்கதவுகளுக்குப் பின்னாலிருந்த பெரும் மணியொன்று அடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்துஎங்கோ இன்னும் இரண்டு பெருமணிகளின் ஓசை கேட்டதும் அந்தப் புரவி வீரர் தலைவன் நகருக்குள் புகுந்தான். புகுந்த சமயத்தில் கதவுகளை இனி சாத்தலாமென்பதற்கு அறிகுறியாகத் தனது கையையும் அதிகாரத் தோரணையில் அசைத்துவிட்டுச் செல்லவே ''கதவை மூடு, கதவை மூடு'' என்ற சொற்கள் மதில் மீதிருந்த வீரர்களிடமிருந்து எழுந்தன. அதை அடுத்துப் பெரும் சங்கநாதமொன்றும் அந்த வடக்கு வாயிற்பகுதியில் மட்டுமன்றி நகரத்தின் இதர பகுதிகளிலும் ஒலித்தது.

அதையொட்டி இருபது வீரர்கள் இருபுறமும் கதவுகளைத் தொட்டு அகற்ற, இருபெரும் யானைகள் மத்தகங்களால் முட்டக் கதவுகள் ஆமை வேகத்தில் மூடத் தொடங்கின. கதவுகளின் இரும்பு இணைப்புச் சுழல் அச்சுகள் போட்ட சத்தம், முட்டிய இரு வேழங்களின் பிளிறலை அர்த்தமற்றதாகச் செய்தன. இவ்வண்ணம் சாத்தப்பட்டுக் கொண்டிருந்த கதவுகளை நோக்கித் தூரத்தே ஒருவன் வெகு வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தான். கதவுகளை மூடவேண்டாம் என்பதைத் தெரிவிக்கத் தனது வலக்கையை உயரத் தூக்கி ஆட்டியும் தனது கருத்தைத் தெரிவித்தான். ஆனால் சுழல முற்பட்ட அச்சுகள் நிற்கவில்லை. பின்னாலிருந்த மத்தகஜங்களுக்கு அவன் எங்கோ ஓடி வந்தது தெரியவில்லை யாதலாலும், தெரிந்தாலும் மாவுத்தன் கையைத் தவிர வேறு சைகைகள் அவற்றிற்குப் புரியாத காரணத்தாலும், அவை தங்கள் பணியை நிறுத்தவில்லை. அரசன் ஆணை திட்டமாயிருந்த படியாலும், சற்று முன்பு சென்ற புரவிப்படைத் தலைவனின் உத்தரவும் சந்தேகத்துக்கு இடமில்லாதிருந்த படியாலும், வீரர்கள் தூரத்தே ஓடி வருபவனைக் கண்டாலும் லட்சியம் செய்பவர்களாகத் தெரியவில்லை. சாத்த முற்பட்ட கதவுகள் சாத்திக்கொண்டே இருந்தன. தூரத்தே வந்தவன் மதில் புறத்தை அடைய பல அடிதூரம் இருக்கும் பொழுதே அந்த மாபெரும் வடதிசைக் கதவுகள் பெரும் சத்தத்துடன் மூடப்பட்டன.



அதன் உட்புறத்தில் எடுத்து வீழ்த்தப்பட்ட பெரும் இரும்புச் சலாகைத் தாழ்ப்பாள்கள் குறுக்கே விழுந்த ஒலி ஏதோ அதிர்வெடிபோல் கேட்கவே அத்துடன் நகரப் பிரவேசம் முடிந்துவிட்டதென்பது மிகவும் தெளிவாயிற்று காஞ்சி மக்களுக்கு.

ஆனால், கதவை நோக்கி ஓடிவந்தவன் அதையும் இலட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. மானின் ஓட்டத்தையும் தோற்கடிக்கும் பாணியில் ஓடிவந்து கதவுகளுக்கு முன்பு நின்றான். பிறகு அண்ணாந்து பார்த்து ''யாரப்பா! சிறிது கதவைத் திறவுங்கள். வெகு தூரத்திலிருந்து வருகிறேன்'' என்று இரைந்து மேலே நின்ற மதில் காவலரை நோக்கிக் கூவினான்.

காவலரில் ஒருவன் கேட்டான் ''நீ இந்த ஊருக்குப் புதிதா?'' என்று.

''இப்பொழுது புதிதுதான். சிறுவயதில் இங்குதான் இருந்தேன்'' என்றான் அந்தப் பிரயாணி.

''நாளைக் காலையில் வா. இனி இந்தக் கதவைத் திறக்க முடியாது. மகாராஜா உத்தரவு'' என்றான் மதில் மேலிருந்த காவலன்.

ஆனால் பிரயாணி சொன்னான், ''எனக்குக் கதவைத் திறந்தால் மகாராஜா ஒன்றும் சொல்லமாட்டார்'' என்று.

நீ மகாராஜாவுக்கு உறவா?'' -காவலன் கேள்வியில் இகழ்ச்சி இருந்தது.

''இல்லை. ஆனால் அவர் குருவின் புதல்வன்'' என்றான் பிரயாணி.

மேலிருந்த காவலன் கீழிருந்த பயணியை உற்று நோக்கினான். மதிலின் பந்த வெளிச்சத்தில் வந்திருப்பவன் வாலிபனென்பதைப் புரிந்து கொண்டான் காவலன்.

அந்த வாலிபன் மிக விசித்திரமாயிருந்தான். அவன் மூலக் கச்சமாக ஒரே துணியை இடுப்பில் கட்டியிருந்தான். அந்தத்

துணியும் காவியாயிருந்தது. அவன் கையில் நீண்ட வழவழப்பான ஒரு கனத்த தடியிருந்தது. அதன் உயரத்திலிருந்து அது சந்நியாசியின் தடியாகத் தெரியவில்லை. பாதுகாப்புக்காக ஏற்பட்ட பயங்கரத் தடியாகவே புலப்பட்டது. அந்த தடியில் ஒரு துணி மூட்டையையும் கட்டிச் செருகித் தடியைத் தோளில் சாத்திக் கொண்டிருந்தான், அந்த வாலிபன். அவன் முகவாய்கட்டையிலும் மேலுதட்டிலும், முளைத்திருந்த அரும்பு மீசையும், கட்டையான தாடியுங்கூட அவன் செவ்விய முகத்துக்கு அழகையே ஊட்டின. மதில் பந்த வெளிச்சத்தில் பளபளத்த கண்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின.

அந்த வாலிபனின் தோற்றத்தையும் கணகளின் எதிர்பார்ப்பையும் கண்ட காவலனுக்கு அவன்மீது அனுதாபம் உண்டானாலும் அவன் ஏதும் செய்ய முடியாததால், ''அப்பா! நீ யாராயிருந்தாலும் கதவைத் திறக்க முடியாது, வேறு வழி எதுவும் கிடையாது'' என்றான்.

அந்த வாலிபத் துறவி சிறிது சிந்தித்தான் ''உன்னிடம் பெரும் கயிறு இருக்க வேண்டுமே?'' என்று வினவினான்.

''இருக்கிறது. அது நேரம் கழித்துவரும் வீரர்களுக்கு துறவிகளுக்கு அல்ல'' என்றான் காவலன்.

''தயவுசெய்து கயிற்றைத் தொங்கவிடு. நான் கண்டிப்பாய் உள்ளே போக வேண்டும்'' என்றான் வாலிபத் துறவி.

''கயிற்றைப் பிடித்து ஏறும் பழக்கமுண்டா?'' என்று வினவினான் காவலன்.

''இல்லை. இருந்தாலும் முயன்றால் முடியாதது உலகத்தில் எதுவும் கிடையாது'' என்று தத்துவம் பேசினான் வாலிபன்.

''நடுவில் நழுவி விழுநதால் உன் எலும்புகூடக் கிடைக்காது. மதில் மிக உயரம். கீழே பாறாங்கல் தரை. பார்த்தாயா?''



''பார்த்தேன்.''

''அப்படியும் ஏற விரும்புகிறாய்?''

''ஆம்.''

''சரி உன் தலை எழுத்து'' என்ற காவலன் கயிற்றை எடுத்து வந்து மதிலோரமாகக் கீழே தொங்கவிட்டான்.

அது கைக் கெட்டும் தூரம் வந்ததும் தடியை மூட்டையுடன் முகவாய்க்கட்டையில் இடுக்கிக் கொண்டு கைகளால் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கால்களை மதில் மீது தாக்கித் தாக்கி குரங்குபோல வெகு துரிதமாக ஏறினான் அந்த வாலிபத் துறவி.

அவன் இலாவகத்தைக் கண்டு பெருவியப்படைந்தான் காவலன். அதைவிட இன்னொரு வியப்பும் காவலனுக்குக் காத்திருந்தது. வாலிபன் மதிலின்மீது ஏறி முடித்த பிறகு.

## 2. சத்திரத்தில் ஒரு சங்கடம்

நீண்ட நாள் பல போர்களைக் கண்டவன் போலும், பல கோட்டைகள் மீது ஏறியவன் போலும், மிக இலாவகமாகவும் துரிதமாகவும் மதிலின்மீது ஏறிவந்த வாலிபத் துறவி, மதிலின் உச்சியை அடைந்ததும் ஒரு கையால் கயிற்றைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் மதிலின் தாழ்வரைப் பிடியைக் கைப்பற்றி அநாயாசமாக மேலே ஏறிக் குதித்தான். அப்படி ஏறியதும், கழுத்தில் கௌவியிருந்த தடியையும் தடியிலிருந்த மூட்டையையும் மதிலின் அகன்ற மேல்தாழ்வரையில் வைத்துவிட்டுக் காவலனை நோக்கி, ''ஐயா! மிக்க நன்றி. உங்கள் கருணையில்லாவிட்டால் இன்று நான் காஞ்சிக்குள் நுழைய முடியாது'' என்று கூறிவிட்டு அங்கேயே உட்கார்ந்து கழியில் கட்டப்பட்டிருந்த மூட்டையை அவிழ்த்தான். அதன் உட்புறத்திலிருந்த பொருள்களைக் கண்டு வியப்பு உச்சிக்கு

ஏறிவிடவே காவலன் வினவினான்: "உன் தொழில் என்ன? எதற்கு இந்த மாநகரம் வந்தாய்?" என்று.

வாலிபன் தனது மூட்டையிலிருந்த பொருள்களைச் சோதிப்பதை ஒரு விநாடி நிறுத்திக் கொண்டு "நான் ஒரு மாணவன். இங்குள்ள பெரியவரிடம் படிக்க வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு மூட்டையிலிருந்த ஓலைச் சுவடிக் கும்பலைத் தள்ளித் தள்ளி அலசினான்.

காவலன், வாலிபத் துறவியின் பதிலினால் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. மூட்டையில் ஓலைச் சுவடிகளுக்குள்ளிருந்து தலை நீட்டிய ஒரு கத்தியைக் காட்டி, "அது எதற்கு?" என்று வினவினான்.

வாலிபன் ஓலைகளைத் துருவிப் பார்த்த வண்ணம் சொன்னான்: "அது சிறிய வாள். வெது தூரத்திலிருந்து வருகிறேன். ஆகையினால் தற்காப்புக்கு எடுத்து வந்தேன்" என்று.

காவலன் சந்தேகம் அப்பொழுதும் தணியவில்லை. "சரி. நீ யாரிடம் படிக்க வந்திருக்கிறாய்?" என்று வினவினான்.

வாலிபன் சொன்ன பதில் காவலனைத் தூக்கிவாரிப் போட்டது. "மஹாயனரிடம்" என்றான் வாலிபன் தலையை நிமிராமலே.

"மஹாயனரிடமா?" -காவலன் பதிலில் வியப்பு மிதமிஞ்சி ஒலித்தது.

"ஆம். ஏன்?" என்று வாலிபன் காவலனை வியப் பொலியால் தலையை நிமிர்ந்தே கேட்டான்.

"அவர் இப்பொழுது யாருக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை." -காவலன் பதில் திட்டமாயிருந்தது.



"ஏன், நோய்வாய்ப்பட்டிருக்கிறாரா?"

"இல்லை."

"அப்படியானால் பாடம் சொல்லிக் கொடுத்தால் என்ன?"

"காரணம் எனக்குத் தெரியாது. ஆனால், வரும் சீடர்களை யெல்லாம் திருப்பி அனுப்பிவிடுகிறார். நீ எங்கிருந்து வருகிறாய்?"

"சோழ நாட்டிலிருந்து."

"பாவம், நீண்டதூரம் வந்திருக்கிறாய். ஆனால், நீயும் திரும்ப வேண்டியது தான். ஆனால் உடனடியாகத் திரும்பவும் முடியாது" என்று காவலன் திட்டமாகச் சொன்னான்.

காவலன் சொன்னதை வாலிபன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சட்டென்று மூட்டையிலிருந்து ஏதோ கண்டுபிடித்து விட்டவன் போல் ஒரு சிறு முத்திரையிட்ட ஓலையை எடுத்துக் கொண்டு "நல்லவேளை. இது தொலையவில்லை" என்று கூறி ஆசுவாசப் பெருமூச்சு விட்டான்; அந்த ஓலையை மட்டும் மடியில் செருகிக் கொண்டு மீதிச் சுவடிகளையும் கத்தியையும் மூட்டையில் வைத்து வெகு ஜாக்கிரதையாகக் கட்டலானான்.

அப்பொழுது இடைப்புகுந்த காவலன் "துறவி! அந்தக் கத்தி சிறியதாயிருக்கிறதே, அது போதுமா உன் பாதுகாப்பிற்கு?" என்று வினாவினான்.

வாலிபன் காவலனை நோக்கிப் புன்முறுவல் செய்தான். அந்தக் கத்தியை எடுத்துக் காட்டி "இது சாதாரண கத்தியல்ல. புகாரின் கத்தி" என்று கூறிவிட்டு இரண்டாக நடுவே மடிக்கப் பட்டிருந்த கத்தியைப் பிரித்து நடுவிலிருந்த இணைப்புப் பட்டயத்தால் அழுத்தி ஒன்றாக்கினான். சாதாரணமாக மூன்று கைப்பிடி நீளத்திலிருந்த அந்தக் கத்தி ஆறு கைப்பிடி நீளமாக நீண்டு மிக

மெல்லியதாக, ஏதோ தாழை மர சர்ப்பம்போல் மதில் பந்தத்தின் வெளிச்சத்தில் மின்னியது. அது மின்னிய நிலையில் சர்ப்பம்போல் வளைவதாகவும் ஒரு பிரமையை அளித்தது காவல் வீரனுக்கு. "மிக மெல்லிய ஆயுதம். ஆனால் பயங்கரமானது" என்றான் காவலன் அச்சத்துடன்.

வாலிபன் காவலனைப் பெருமையுடன் பார்த்தான். "புகார் கடற்கோளால் முக்கால்வாசி அழிந்துவிட்டதேயன்றி அதன் போர்க்கலை அழியவில்லை. ஆயுதங்களும் மறையவில்லை" என்று கூறினான் பெருமையுடன். பிறகு கத்தியைப் பழையபடி மடித்து பத்திரப்படுத்தி மூட்டையில் கட்டிக் கொண்டு எழுந்தான். அவனிருந்த இடத்திலிருந்து கீழே படிகள் ஓடிக் கொண்டிருந்ததைக் கவனித்து "இதில் நான் இறங்கிச் செல்லலாமா?" என்று காவலனை வினவினான்.

"செல்லலாம். ஆனால் இந்த இரவில் நீ மஹாயனர் இருக்குமிடம் போக முடியாதே! இங்கேயே தங்கிவிடேன்" என்றான் காவலன்.

மதில் தாழ்வரையைச் சுற்றுமுற்றும் பார்த்தான் வாலிபத் துறவி. ஆங்காங்கு தற்காப்பை முன்னிட்டு விற்கூடங்களும் வேற்கூடங்களும் மற்றும் பல பொறிக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்ததைக் கவனித்தான். "ஆம். இந்தக் கூடங்களில் ஒன்றில் படுக்கலாம். ஆனால் நான் சாப்பிட வேண்டும்" என்று காவலனை நோக்கிக் கூறிவிட்டு "இந்த நகரத்தில் ஓர் இரவு தங்க எது நல்ல சத்திரம்?" என்று வினவினான்.

"இங்கிருந்து கொஞ்சம் தெற்குத் திசையில் போனால் ஆனைக்கட்டிச் சத்திரம் இருக்கிறது. எதிரே யானை மண்டபம் இருப்பதால் அதற்கு அப்படிப் பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால், அண்மையிலிருக்கும் சத்திரம் அதுதான். இல்லாவிட்டால் ஊருக்குள் போக வேண்டும்" என்று தூர இருந்த பெரு மாளிகைகளைக் கையால் சுட்டிக்காட்டினான் காவலன்.



"வேண்டாம். ஆனைக்கட்டிச் சத்திரமே போதும். நீங்கள் மிக நன்றாக பழகுகிறீர்கள். உங்களை மறக்க மாட்டேன். உங்கள் பெயர்?"

காவலன் சிறிது சிந்தித்தான். "முகுந்தன்" என்றான சிந்தனைக்குப் பிறகு.

வாலிபனின் அழகிய முகத்தில் புன்முறுவல் படர்ந்தது. "மிக நல்லதாகப் போயிற்று. என் பெயரும் அதுதான்" என்று சொல்லிவிட்டுத் திடுதிடுவென்று படிகளில் இறங்கினான். காஞ்சியின் கோட்டைச் சுவரோரப் பெருவீதியிலிருந்து சிறிது தூரத்தில் மாளிகைகள் பல தெரிந்தன. அவற்றில் எரிந்த அலங்கார விளக்குகள் காஞ்சிக்கும் வட நாட்டுக்கும் இருந்த தொடர்பை விளக்குவனபோல ஒளியை வீசி, மாளிகைகளின் முகப்பு எழுச்சிகளுக்குத் தனி மெருகைக் கொடுத்தன. அவையெல்லாம் படைத் தலைவர்களின் மாளிகைகளாயிருக்க வேண்டுமென்பதை அவற்றின் அமைப்பிலிருந்தும் எதிரே காவல் புரிந்த வீரர்களின் நடமாட்டங்களிலிருந்தும் புரிந்து கொண்ட வாலிபத் துறவி மெல்ல அந்த விடுதிகளை நோக்கி நடந்தான். அங்கிருந்த வீரர்களை விசாரித்துக் கொண்டே ஆனைக்கட்டிச் சத்திரத்துக்கு வந்து சேர்ந்தான்.

ஆனைக்கட்டிச் சத்திரம் அப்படியொன்றும் பெரிதாயுமில்லை. பார்க்கத் தக்கதாயுமில்லை. எதிரேயிருந்த யானை மண்டபத்தின் அமைப்பும் அவற்றில் கட்டப்பட்டிருந்த யானைகளும் அந்தச் சத்திரத்துக்கு, ஒரு தனி மதிப்பைக் கொடுத்திருக்க வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்ட வாலிபத் துறவி அந்தச் சத்திரத்துக்குள் நுழைந்தான். சத்திரத்து வெளி முற்றத்தை அடுத்த கூடத்தில் சாப்பாட்டு மஞ்சங்கள் பல இருந்தன. பலர் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார்கள். சாப்பிடும் மஞ்சங்களிலிருந்து மது, மாமிச வகையறாக்கள் அந்தச் சத்திரம் துறவிகளுக்காக

ஏற்பட்டதல்லவென்பதை சந்தேகமற எடுத்துக்காட்டின. துறவி அந்தக் காட்சியைப் பார்த்து நின்று கொண்டிருந்த சமயத்தில் அவனை நோக்கிவந்த சத்திரக்காரன், "சுவாமி! இது தங்களைப் போன்றவர்களுக்காக ஏற்பட்ட சத்திரமல்ல. நீங்கள் ஊருக்குள் போய்ச்சாப்பிடுவது நல்லது" என்று சொன்னான்.

வாலிபத் துறவி சத்திரக்காரனை உற்றுநோக்கினான். "நீண்ட தூரத்திலிருந்து வருகிறேன். இரவு தங்க அறை ஒன்று கிடைக்குமா?" என்று வினவினான் சத்திரக்காரனை நோக்கி.

சத்திரக்காரன் முகத்தில் வியப்பு விரிந்தது. "நீங்கள் மாமிசம் புசிப்பீர்களா?" என்று வினவினான்.

"புசிக்க ஆட்சேபணையில்லை. ஆனால் சில நாட்களாக விரதமிருந்து வருகிறேன். ஆகையால் பழம், பால் ஏதாவது கொடுத்தால் போதும்" என்று சொன்ன துறவி மாமிசத்தை உண்டு கொண்டிருந்தவர்கள் வரிசையில் இருந்த ஒரு மஞ்சத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அவனது துறவி வேஷத்தையும், தடியையும் பார்த்த மற்றவர்கள் வியப்பு நிரம்பிய விழிகளைச் சத்திரக்காரன் மீது திருப்பினார்கள். இந்த மாதிரி பல வினோதமான பயணிகளைப் பார்த்திருக்கும் சத்திரக்காரன் அவர்கள் பார்வையைப்பற்றி அக்கறை கொள்ளாமல், "யாரடா அங்கே! சாமியாருக்கு பழம் பால் கொண்டு வா" என்று உத்திரவிட, பரிமாறும் ஆட்கள் ஒரு குவளையில் நீரும், ஒரு தட்டில் பழ வகையறாக்களையும் கொண்டுவந்து வாலிபத் துறவியின் முன்பு வைத்தார்கள்.

சாமியார் உடனடியாக பழங்களில் கை வைக்கவில்லை. குவளை நீரை எடுத்துக் கொண்டு வெளி முற்றத்துக்கு வந்து கைகளை நன்றாக அலம்பிக் கொண்டான். பிறகு வானத்தை நோக்கி ஏதோ முணுமுணுத்தான். அதற்குப் பின்பே வந்து ஆசனத்தில் அமர்ந்து பழங்களை ருசி பார்க்கலானான்.



பழங்கள் வெகு துரிதமாக உரிக்கப்படுவதையும், சாமியார் வாய்க்குள் சட்டென்று மறைவதையும் பார்த்துப் பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் மட்டுமின்றி சத்திரக்காரனும் பிரமித்தான். "சாமியாருக்குப் பாம்பு வயிறு போலிருக்கிறது சாப்பிடும் வேகத்தில் சத்திரத்தையே ஒழித்துவிடுவான் போலிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டான் சத்திரக்காரன் உள்ளூற. அந்தச் சமயத்தில் பரிமாறும் ஏவலாளி ஒரு குவளையில் பாலும் கொண்டு வைக்கவே அதை பரம பிரீதியுடன் பார்த்தான் வாலிபத் துறவி. அதை எடுத்து அவன் குடிக்க வாய்க்கருகில் கொண்டுபோன சமயத்தில் தான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்பொழுது கேட்டது வெளியே பலமான வெறிபிடித்த சிரிப்பு ஒன்று. அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து தடித்தனமான காலடிகளும் கேட்டன. நல்ல குடி வெறியுடனும் பெருத்த மீசையுடனும் சிவந்த கண்களுடனும் திறந்த வாயிற்கதவைத் தட்டி வேண்டுமென்றே ஓசை கிளப்பிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஒரு வீரன். அவன் தனது பருமனால் உள் வாயிற்படியை அடைத்துக் கொண்டு சாப்பிடும் கூடத்தின் மீது ஒருமுறை கண்களை ஓட்டினான். பிறகு கச்சையில் தொங்கிய பலமான வாளை அனாவசியமாகத் தட்டிச் சத்திரக்காரனை நோக்கி, "யாரவன், அதோ சாப்பிடுகிற சாமியார்?" என்று வினவினான்.

"யாரோ வெளி ஊரிலிருந்து வந்திருக்கிறார். இன்றுவரை பார்த்ததில்லை!" என்றான் சத்திரக்காரன் கிலி பிடித்த குரலில்.

அதற்கு மேல் ஏதும் பேசாத அந்த முரடன் தனக்குப் பின்னால் நின்றிருந்த இரு வீரர்களை நோக்கி, "டேய் நீங்கள் இங்கேயே நில்லுங்கள். ஆனைக்கட்டி மதுவை நான் ருசிபார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சாப்பிடுமிடத்திற்கு வந்து ஒரு மஞ்சத்தின் மீது தன் பெருங்கால்களை அகற்றிக் கொண்டு உட்கார்ந்து "யாரடா அங்கே; என் செலவில் எல்லாருக்கும் மது கொண்டுவா" என்று உத்தரவிட்டான்.

பரிமாறும் ஆள் அவன் உத்தரவைக் கேட்டு உள்ளே பறந்து பெரும் குவளையொன்றில் மதுவைக் கொண்டு வந்ததும் ''அதை எல்லாருக்கும் பரிமாறு'' என்றான் அந்த முரட்டு வீரன்.

எல்லாருக்கும் மதுவைக் குவளைகளில் ஊற்றிவந்த ஏவலாள் வாலிபத் துறவி உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்ததும், ''எனக்கு வேண்டாம்'' என்று வாலிபத் துறவி கையை நீட்டி மது ஊற்றப்படுவதைத் தடுக்கவும் செய்தான்.

''போடு அவன் குவளையிலும்'' என்று சீறினான் முரடன்.

''போடாதே'' - திட்டமாக எழுந்தது வாலிபத் துறவியின் குரல்.

முரடன் வாலிபத் துறவியைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தான். ''குடிக்கிறாயா? குடிக்கச் செய்யட்டுமா? வீரபத்திரன் உத்திரவை எதிர்த்து இதுவரை யாரும் பிழைத்ததில்லை'' என்றான் அந்த முரடன்.

''நான் சந்நியாசி'' என்றான் வாலிபத் துறவி.

''எத்தனையோ சந்நியாசிகள் குடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். நீயும் குடி'' என்று முரடன் சொன்னதோடு நில்லாமல் வாலிபத் துறவிக்கு அருகில் வந்து குவளையை எடுத்துப் பரிமாறுபவனிடம் நீட்டி, ''உம் ஊற்று? என்றான்.

ஏவலாள் நடுக்கும் கைகளுடன் ஊற்றினான். ''இப்பொழுது மதுவை அருந்து'' என்று வீரபத்திரன் வாலிபத் துறவியின் தலையைப் பிடித்தான். அடுத்த விநாடி சாப்பாட்டு அரங்கில் பெரும் விசித்திரம் ஏற்பட்டது. வாலிபத் துறவியின் மெல்லிய கை முஷ்டியாகி வீரபத்திரன் முகவாய்க்கட்டையில் பாய, வீரபத்திரன் வெட்டிச் சாய்த்த புளியமரம் போல் வீழ்ந்தான் தரையில். அவன் கைக் குவளையிலிருந்த மது அவன் மீதே சாய்ந்து உடல்மீது குருதிபோல் மதுவைப் பாய்ச்சி விட்டது.



விஷயம் அத்துடன் நிற்கவில்லை. ருத்திராகாரமான கோபத்துடன் எழுந்த வீரபத்திரன் தனது பெருவாளைக் கச்சையிலிருந்து உருவி, பெருமீசையுடன் தடவிக் கொண்டான்.

''வீரபத்திரப் பெருமானே! இங்கு சண்டை வேண்டாம். இது சத்திரம்'' என்று கூவிய சத்திரக்காரன் இரண்டு எட்டில் வீரபத்திரனை அடைந்து அவனைத் தடுக்க முயன்றான். ஆனால் வீரபத்திரன் அவனை இடக் கையால் அனாயாசமாகத் தள்ளிவிட்டுத் திரும்பித் துறவியை நோக்கினான்.

துறவி எழுந்து நின்று சிரித்துக் கொண்டிருந்தான். சிரிப்பு யமச் சிரிப்பாயிருந்தது. அவன் கையில் மடக்குவாள் நீண்டு, சாப்பாட்டு அரங்கின் விளக்கில் நாகசர்ப்பம்போல் மின்னிக் கொண்டிருந்தது.

## 3. அபாய உதவி

கையில் நீண்டு மின்னிக்கொண்டிருந்ததில் படர்ந்து விட்ட ஏளனப் புன்சிரிப்புடன், எதிரே ராட்சஸப் பிரமாணமாய் நின்ற வீரபத்திரனுடைய அடுத்த நடவடிக்கையை எதிர்பார்த்து நின்ற வாலிபத் துறவியை சாப்பாட்டுக் கூடத்திலிருந்த எல்லாருமே மிதமிஞ்சிய வியப்புடனும், அடுத்து நிகழவிருந்த விபரீதத்தை எண்ணி அச்சத்துடனும் நோக்கிக் கொண்டிருந்த சமயத்தில் வீரபத்திரனுடைய குரல் இடிபோல முழங்கியது தனது பட்டையான பெருவாளை இருமுறை திருப்பிய வண்ணம் ''அந்த விளையாட்டுக் கருவியால் என்னைக் கொன்று விடலாமென்று நினைக்கிறாயா?'' என்று வினவினான் வீரபத்திரன், இடிபோன்ற குரல்; குடியின் சேஷ்டையால் சிறிது ஆட்டம் கொடுக்க.

வாலிபத் துறவி அவனுக்கு நேராக பதில் சொல்லவில்லை. சற்று எட்ட இருந்த சத்திரக்காரனை நோக்கி, ''ஐயா! நீங்கள் எனக்கு உணவு அளித்திருக்கிறீர்கள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அந்தத் தடியனை இங்கே கொன்றால்

உங்களுக்கு ஏதாவது அரசாங்கத்திடமிருந்து உபத்திரவம் கிடைக்குமானால் அதை நான் செய்யவில்லை. சிறிது காயப்படுத்தி மாத்திரம் விட்டுவிடுகிறேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

வாலிபத் துறவி தன்னை எதிர்த்து வருவதோடு தன்னைக் கொல்லலாமாவென்பதைப் பற்றி சத்திரக்காரனைச் சந்தேகம் கேட்க முற்பட்டதால் வீரபத்திரன் ருத்திராகாரமாக மாறினான். சாப்பாட்டுக் கூடத்தின் விளக்கொளியில் குடியால் சிவந்திருந்த அவன் கண்கள் பயங்கரமாக உருண்டன. உருண்ட அந்தக் கண்களை நோக்கிய கூடத்திலிருந்த மற்றவர்கள் ஓரளவு நடுங்கவே செய்தாலும் ஏதும் நடவடிக்கை எடுக்கச் சக்தியற்றவர்களாக சண்டை ஏற்பட்டால் தாங்கள் பாதிக்கப் படாமல் இருப்பதற்காக கூடத்தின் பக்கங்களில் ஒதுங்கிக் கொண்டார்கள். அந்தச் சமயத்தில் வீரபத்திரன் கடகடவென நகைத்தான். சத்திரக்காரனை நோக்கி, ''ஏனய்யா! சாமியார் யோசனை கேட்கிறானே, சொல்வதுதானே'' என்று சிரிப்பை உதிரவிட்ட வேகத்தில் அடக்கிக் கொண்டு கேள்வியை வீசி பற்களை நறநறவென்று கடித்தான்.

சத்திரக்காரன் மிகுந்த கிலியிலிருந்தபடியால், ''பெருமானே! வேண்டாம். சாமியார் வாலிபக் கொழுப்பில் பேசுகிறார். சிறுபிள்ளை, விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சினான்.

வாலிபத் துறவி சத்திரக்காரனை நோக்கி மிக மெதுவாக ஆனால் அழுத்தந்திருத்தமாகப் பேசினான்: ''ஐயா! இவனிடம் கெஞ்சுவதை விட நீங்கள் என்னிடம் கெஞ்சுவது நல்லது. இவனை விட்டுவிடட்டுமா, கொன்று விடட்டுமா?'' என்று கேட்டான் அவன்.

சாப்பாட்டுக் கூடத்திலிருந்தவர்கள் துறவியின் துணிவைக் கண்டு வியந்தார்கள். ''இவனுக்கு ஆனாலும் அசட்டுத் துணிவு'' என்ற நினைப்பை உதிர்க்கும் கண்களால் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள்.



அப்பொழுது வீரபத்திரன் அவர்களை நோக்கி ''நீங்கள் எல்லாரும் சாட்சி. என் கோபத்தை வேண்டுமென்றே கிளறுகிறான். இவன் இறந்தால் பயணியைக் கொன்ற பாவம் என்னை அணுகாது'' என்று கூறிவிட்டு ''பேய் சாமியார்! உன் தவம் பலித்துவிட்டது. உனக்கு மோட்சம் கிடைக்கப் போகிறது. பயணத்துக்குச் சித்தம் செய்துகொள்'' என்று கூறிய வண்ணம் தனது வாளைச் சரேலென்று கண்ணிமைக்கும் நேரத்தில் வாலிபனை நோக்கிப் பாய்ச்சி விட்டான். இவன் வாளின் வேகம், இரண்டெட்டில் தனக்கும் துறவிக்குமிருந்த இடைவெளியைக் கடந்துவிட்ட நிமிடம் இரண்டும், சத்திரக்காரனையும் மற்றவர்களையும் அச்சத்தில் மூழ்கடித்துவிடவே சட்டென்று மூச்சைப் பிடித்துக் கொண்டார்கள்.

ஆனால், பிடித்த மூச்சை வெளியில் விடவில்லை அவர்கள். வாலிபத் துறவியின் காலம் முடிந்துவிட்டது என்று அவன் சடலத்தின் சாய்வை எதிர்பார்த்திருந்தவர்கள், சண்டையில் மின்னல் வேகத்தில் ஏற்பட்டுவிட்ட திடீர்த் திருப்பத்தால் பிரமை பிடித்து சலனமின்றி நின்று, கூடத்தில் சத்திரக்காரன் பல புதுமைகளைச் சிருஷ்டித்து விட்ட பிரமையை கண்டனர். அவர்கள் பார்த்ததெல்லாம் வீரபத்திரன் வாள்வீச்சு ஒன்று; வாலிபத் துறவி அந்த வாள் வீச்சுக்குக் குனிந்து மண்டியிட்டது இரண்டு; கேட்டதோ வீரபத்திரனின் பயங்கர அலறலும் கீழே விழுந்த அவன் பெருவாளின் 'கிளாங்' என்ற ஒலியும்.

அடுத்த விநாடி சுய நிலைக்கு வந்ததும் சத்திரக்காரன், கூடத்தின் நடுவில் வீரபத்திரன் தனது வாள் கரத்திலிருந்த குருதியைத் தடுக்க இன்னொரு கையால் அதை பிடித்துக் கொண்டிருந்த காட்சியைக் கண்டான். வாலிபத் துறவி அந்த நாகசர்ப்பத்தின் நுனியில் நான்கு விரற்கடை நீளத்துக்குப் படிந்துவிட்ட எதிரியின் ரத்தத்தைக் கையால் துடைத்துவிட்டு, சாப்பாட்டுத் தளத்தில் இருந்த குவளை நீரில் கையைவிட்டு அலம்பிக் கொண்டிருந்ததையும் பார்த்தான்.

அந்த விநாடிநேரச் சண்டையால் சத்திரக்காரனுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி நிலைமை பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. சாமியார் உண்மையில் அஹிம்சையில் நம்பிக்கையில்லாதவர் என்பதையும் அவர் மோட்சத்துக்குச் செல்வதானால் வீரபத்திரனை முன்னோடியாக அனுப்பிவிட்டுத்தான் புறப்படுவாரென்பதையும் உணர்ந்து கொண்டதால் வியப்பும் திகைப்பும் ஒருங்கே மனத்தை அலைக்கழிக்க நின்றார்கள். அவர்கள் பதுமை நிலையும் மசமசப்புத்தனமும் வீரபத்திரனுக்கு மிகுந்த எரிச்சலைக் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே அவன் கூவினான் "முட்டாள்களா! எதற்காக நிற்கிறீர்கள்? கைக் குருதியை நிறுத்த ஏற்பாடு செய்யுங்கள்" என்று.

இதைக் கேட்ட அவர்கள் பெரும் பரபரப்பைக் காட்டினார்கள். "யாரடா அங்கே? சீக்கிரம் நீர் கொண்டு வந்து எஜமானின் காயத்தைக் கழுவுங்கள். இரண்டு சாண்துணியும் பச்சிலைச் சாறும் கொண்டு வாருங்கள்" என்றான் சத்திரக்காரன். அவன் கட்டளையைக் கேட்ட பரிமாறும் ஆட்கள் பறந்தார்கள் சமையலறைக்குள்ளே.

"தேவையில்லை!" -அவர்களைத் தடுத்தான் வாலிபத் துறவி. "மூலிகை என்னிடமே இருக்கிறது" என்று ஒரு குவளையில் நீரை எடுத்துக் கொண்டு வீரபத்திரப் பெருமானிடம் சென்று காயத்தைக் கழுவினான். பிறகு தன் மூட்டையில் துழாவி பச்சிலை ஒன்றை எடுத்து எதிரேயிருந்த விளக்கில் சிறிது வாட்டி, அதைக் காயமடைந்த இடத்தில் வைத்து, தனது மூட்டைத் துணியில் ஒரு மூலையை நீளமாகக் கிழித்து திறமையுடன் கட்டும் போட்டான். "கச்சிதமாகிவிட்டது. இனி கையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாளைக்கே நீங்கள் மீண்டும் வாளைச் சுழற்றலாம்" என்று வீரபத்திரனை நோக்கிக் கூறிவிட்டு கூடத்தில் எட்டக் கிடந்த வாளை எடுத்து வந்து அதன் உறையிலும் போட்டான்.



பிறகு சிறிது தள்ளி நின்று வீரபத்திரப் பெருமானைப் பார்த்தான். வீரபத்திரப் பெருமானின் தோற்றம், வாளும் கச்சையும் அங்கியுமாக மிகப் பிரமாதமாயிருந்தது. அவன் பெரிய கண்களிலோ வியப்பு மிதமிஞ்சித் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தான் காண்பது கனவா அல்லது உண்மையில் சுயநினைவோடு இருக்கிறோமா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள இருமுறை தலையைத் தானாகவே ஆட்டிக் கொண்டான். அந்த ஆட்டத்துக்குப் பின் அந்தக் கண்களில் ஏதோ ஒரு புத்தொளி பிறந்தது. என்ன காரணத்தினாலோ இரு முறை பெரிதாகக் கனைத்தான். கைகளையும் தட்டினான்.

அதைத் தொடர்ந்து சத்திரத்து ரேழியிலிருந்து நான்கு வீரர்கள் உள்ளே தடதடவென வந்து வாலிபத் துறவியை வளைத்துக் கொண்டனர். துறவி நாக சர்ப்பத்தை எட்ட வைத்திருந்ததால் அதை அணுக முடியாத நிலையில் அந்த வீரர்கள் மத்தியில் அகப்பட்டுக் கொண்டான். வந்த வீரர்களின் வாட்கள் அவனது மார்பைத் தடவின. வீரபத்திரன் தனியாக வரவில்லையென்பதை உணர்ந்து கொண்டதால் சத்திரக்காரன் பெரும் கிலிக்கு உள்ளானான். சாமியார் வாழ்வு அன்றுடன் முடிந்துவிட்டதென்று தீர்மானித்தான்.

ஆனால், வீரபத்திரன் உடனடியாகத் துறவியை வெட்ட உத்தரவளிக்கவில்லை. "டேய் சாமியார்! இப்பொழுதாவது நான் கொடுக்கும் மதுவை அருந்து. உன்னை வெட்டிப்போட எனக்கு இஷ்டமில்லை" என்றான்.

வாலிபத் துறவியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. அவன் நாசியிலிருந்து ஆயாசப் பெருமூச்சு வந்தது. "சரி கொடுங்கள் மதுவை" என்றான் சலிப்புடன்.

"நீ புத்திசாலி, சாமியாருக்குக் கூட உயிர் வெல்லமாயிருக்கிறது" என்று கூறிய வீரபத்திரன் தானே ஒரு குவளையில் மதுவைக் கொண்டுவந்து, "சாமியார்! வாயைத் திற" என்றான்.

வாலிபத் துறவி வாயைத் திறந்தான். வாய் நிறைய மதுவை வாங்கியதும் சட்டென்று அதைப் பூராவையும் வீரபத்திரன் முகத்தில் துறவி உமிழ்ந்துவிடவே வீரபத்திரன் கண்களை எரிச்சலால் மூடிக் கொண்டான். அடுத்த விநாடி வீரபத்திரன் வாள் அதன் உறையிலிருந்து துறவியின் கையில் காட்சியளித்தது பயங்கரமாக. அதன் நுனி வீரபத்திரன் கழுத்தைத் தடவி நின்றது. அவன் கண்கள் மற்ற வீரர்களை நோக்கின. இகழ்ச்சி ததும்ப ''வாள்களைக் கீழே போடுங்கள்'' என்ற உத்தரவு எந்தவித உணர்ச்சியுமில்லாத வறண்ட குரலில் ஒலித்தது.

வாள்கள் கீழே படபடவென்று வீழ்ந்தன. அவற்றின் ஒலி அந்தச் சத்திரத்துச் சுவர்களைத் தாக்கிப் பல பல எதிரொலிகளைக் கிளப்பின. வீரபத்திரன் இருபுறமும் தனது பெரிய கண்களை உருட்டினான் அச்சத்துடன்.

அப்பொழுது அவனுக்கு இன்னோர் உதவியும் வந்தது. அந்த உதவி கழுத்தில் தடவிய வாளைவிட அதிக அச்சத்தை அளித்தது வீரபத்திரப் பெருமானுக்கு.

## 4. முகுந்தன்

**வீ**ரபத்திரன் கழுத்தில் வாளின் நுனியை லேசாக ஊன்றிய வண்ணம் மற்ற வீரர்களை நிராயுதபாணிகளாக்கி விட்ட வாலிபத்துறவி தனது கூரிய விழிகளை அவர்கள் மீது ஒரு முறை ஓடவிடவே, அவற்றின் குறிப்பையறிந்து கொண்டு அவர்கள் நாற்புறமும் விலகி நகர்ந்தனர். ''நான் அயர்ந்துவிடுவேனென்று ஏதாவது பைத்தியக் காரத்தனமான செயல்களில் ஈடுபடாதீர்கள். உங்கள் தலைவனை, இந்த மாமிச பர்வதத்தை நான் கொல்லப் போவதில்லை. வெளியூரிலிருந்து வரும் பயணிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு சிறிது பாடம் மட்டும் கற்பிக்கப் போகிறேன்'' என்று எச்சரித்த வாலிபத் துறவி,



வீரபத்திரனை நோக்கி, ''பெருமானே! அப்படியே திரும்பி வாயிற்படியை நோக்கி, நகருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

வீரபத்திரன் ஏதோ பழக்கப்பட்ட போர் யானை திரும்புவதுபோல மிக நிதானமாகத் திரும்பினான். வாலிபத் துறவியும் வாளை அவனது கழுத்தின் பின்புறத்தில் ஊன்றிய வண்ணம், ''இப்பொழுது வாயிலை நோக்கி நடக்கலாம்'' என்று கூறினான் சர்வ சாதாரணமாக.

இம்முறை வீரபத்திரன், வாலிபத் துறவியின் உத்தரவுப்படி நடக்க மறுத்தான். ''என்னை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான் கடுப்புடனும் அச்சத்துடனும்.

''வாயிலுக்குப் போனதும் தெரியும்'' என்றான் வாலிபத் துறவி.

வீரபத்திரன் மனத்தின் அச்சத்தோடு சினமும் உற்பத்தியானாலும் அச்சத்தை மறைத்துக் கொண்டு, ''நான் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று வினவினான்.

''தெரியும்'' -வாலிபத் துறவியின் பதிலில் ஏளனம் ஒலித்தது.

''யார்?'' -மிக மிடுக்காகக் கேட்டான், வீரபத்திரன்.

''வாளை அலங்காரத்துக்கு அணிந்து கொண்டு சத்திரங்களில் நுழைந்து கலவரம் விளைவிக்கும் ஒரு குடிகாரன், வெறியன்'' என்ற வாலிபத் துறவி, ''சரி, நட'' என்று சொல்லிக் கழுத்தில் கத்தியைச் சிறிது பலமாகவே அழுத்தினான்.

அந்தச் சமயத்தில் சத்திரக்காரன் இடைப் புகுந்து, ''இவர் மன்னர் உப தளபதிகளில் ஒருவர்'' என்று அறிமுகப்படுத்தினான்.

வாலிபத் துறவி சத்திரக்காரனைத் தனது ஓரக்கண்ணால நோக்கிவிட்டு, ''மன்னருக்கு எனது அநுதாபங்கள்'' என்று உரைத்துவிட்டு வீரபத்திரனைத் தனது இடக்கையால் தட்டி ''உபதளபதி! சற்று நடவுங்கள். இல்லை, நான் நடத்திச் செல்லும்படி யாயிருக்கும்'' என்று கூறினான்.

வீரபத்திரன் ஓர் அடி வாயிற்படியை நோக்கி எடுத்து வைத்துச் சிறிது நின்றான். "நான் இந்த நிலையில வெளியே போனால் மக்கள் என்னைப் பார்த்து நகைப்பார்கள்" என்றும் கூறினான்.

"அப்படியா!" என்று ஏதோ சிந்தித்த வாலிபத் துறவி "அதுவும் நியாயந்தான். சரி, கீழே மண்டியிட்டுத் தவழ்ந்து செல்லுங்கள் வெளியே இருக்கிற இருட்டில் முகம் தெரியாது" என்று கூறினான்.

ஆட்டுக் குட்டியிடம் புலி விளையாடுவதைப்போல் தன்னிடம் வாலிபத் துறவி விளையாடுகிறானென்பதையறிந்து கொண்ட வீரபத்திரன், கோபம் தலைக்கேறி விட்டதால் விளைவைச் சிறிதும் யோசிக்காமல் சரேலென்று திரும்பினான். வெறுங்கையாலேயே வாளைப் பிடித்து இழுத்து எறிந்துவிடவும் முயன்றான்.

ஆனால் வாள் வாலிபத்துறவியின் இரும்புப் பிடியில் இருந்ததால் அசைய மறுத்தது. தவிர, வீரபத்திரன் அந்த வாளைப் பிடித்து இழுத்ததால் அவன் உள்ளங்கையை வேகமாக அறுத்தும் விட்டதால் "ஐயோ" என்று பெரிதாக அலறினான் உபதளபதி. அப்பொழுது தான் எதிர்பாராத அந்த உதவி வந்தது அவனுக்கு.

"இங்கு என்ன நடக்கிறது?" என்று எழுந்த அமைதியும் அதிகாரமும் நிறைந்த குரலைக் கேட்டு வீரபத்திரன் மட்டுமின்றி மற்ற வீரர்களும் சத்திரக்காரனும் ஏற்கனவே அரைகுறையாகச் சாப்பிட்டு நின்றவர்களுங்கூட சட்டென்று சிலைகளாகிவிட்டனர். அந்த குரலில் இருந்த ஏதோ ஒரு விவரிக்க முடியாத ஒலி வாலிபத் துறவியையும் அசர வைத்ததால் அவன் அக்குரல் வந்த திசையை நோக்கினான். சத்திரத்துக்கு உள் வாயிற்படியில் ஓர் உயரமான மனிதர் நின்று கொண்டிருந்தார்.

நின்று கொண்டிருந்தாரே தவிர அவர் அசையவில்லை. நல்ல உயரமான அந்த மனிதர் மிகச் சாதாரண உடையையே அணிந்திருந்தாலும், அதிலும் ஒரு கம்பீரம் இருக்கவே செய்தது.



முழங்காலிலிருந்து சிறிது மட்டுமே இறங்கிய நாலு முழ வெள்ளை ஆடையும், மேலே உடலைச் சுற்றி 'ஆட்டிடையன்' போர்வைபோல போர்த்தப் பட்ட கெட்டிப் பழுப்புத் துணியும் அவர் எளிமையைக் காட்டின. ஆனால் அந்த முகம், அதுவும் விளக்கின் ஒளி லேசாகபட்டபோதே மின்னிய அந்த ஆழமான கண்கள், எந்தவித எளிமையையும் காட்டவில்லை. கூரிய அறிவையும் எதையும் நொடிப் பொழுதில் அளந்து விடக் கூடிய ஆற்றலையும் எடுத்துக் காட்டின.

அந்தச் சீரிய ஆழக் கண்கள் கூடத்தின் நிலையை ஒரு முறை துழாவின. வாலிபத் துறவியிடம் வந்தபோது சிறிது திடமாகவே நிலைத்தன. "இங்கே என்ன நடக்கிறது என்று கேட்டேன்" என்ற சொற்களும் வாலிபத் துறவியை நோக்கி உதிர்ந்தன.

வாலிபத் துறவி சிறிது சிந்தித்தான். "இந்த உபதளபதியைக் கேட்டால் சொல்லுவார்" என்று வீரபத்திரனைச் சுட்டிக் காட்டினான்.

அறுபது வயதைத் தாண்டியிருந்தாலும் அந்த வயதைக் காட்டாத முகத்தைப் படைத்த அந்தப் பெரியவர், "நான் உன்னிடம் கேட்டேன் கேள்வியை" என்றார் நிதானமான குரலில். மேலுக்குத்தான் நிதானமிருந்தது; ஆனால் உத்தரவுக்கான ஒலி அதில் பூரணமாயிருந்தது.

அப்பொழுதும் வாலிபத்துறவி நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "சத்திரக்காரரே! நீர் தான் சகலத்தையும் பார்த்துக் கொண்டிருந்தீரே, சொல்லும்" என்றான் சத்திரக்காரனை நோக்கி.

ஆனால் சத்திரக்காரன் வாயைத் திறக்கவில்லை. பெரியவரே பேசினார்: "அப்பா! நீ இந்த ஊருக்குப் புதியதாக இருக்கவேண்டும்" என்றார்.

"ஆம்" என்றான் வாலிபத் துறவி.

''தெரிகிறது. இல்லையேல் இந்த மாநகரத்தில் நான் கேள்வி கேட்டு உடனடியாகப் பதில் சொல்லாதவன் யாரும் கிடையாது'' என்றார் அவர்.

வாலிபத் துறவி அப்பொழுதும் அசையவில்லை. அவரது உடைகளைப் பார்த்தான் ஒரு விநாடி. பிறகு ''நீங்கள் படைத் தலைவரல்லவென்று தெரிகிறது'' என்றான்.

''இதை உணர பெரிய அறிவு தேவையில்லை. என் உடையே பறைசாற்றும்'' என்ற பெரியவர், ''வாலிபனே! கேள்விக்குப் பதில் சொல்கிறாயா, மறுக்கிறாயா?'' என்று வினவினார்.

வாலிபத்துறவி அதற்குமேல் தயங்கவில்லை. ''இந்த உபதளபதி இஷ்டவிரோதமாக என்னைக் குடிக்க வைக்க விரும்பினார். நான் அதற்கு இஷ்டப்படாததால் சிறிது தர்க்கம் ஏற்பட்டது. அதன் விளைவை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்'' என்று கூறிய வாலிபத் துறவி கையில் இருந்த வாளால் கீழே கிடந்த வாட்களையும் வீரபத்திரன் கைக் காயத்தையும் சுட்டிக் காட்டினான்.

பெரியவர் அந்த வாட்களையும் வீரபத்திரன் காயத்தையும் ஏற்கனவே பார்த்திருந்தார். நடந்ததையும் ஓரளவு ஊகித்திருந்தார். ஆகவே அந்த வாட்களையோ, வீரபத்திரன் கையையோ கவனிக்காமல், ''அப்படியா!'' என்று மட்டும் சொன்னார். பிறகு அவர் கண்கள் வீரபத்திரன் மீது ஒரு வினாடி நிலைத்தன. ''வீரபத்திரா! நீ திருந்திவிட்டாய் என்று நினைத்தேன். மீண்டும் குடி வெறியில் கலவரம் செய்கிறாய். இன்றிரவு சிறையில் இரு. நாளை உன்னை விசாரிக்கிறேன்'' என்று கூறித் தமது மெல்லிய கழுத்தைத் திருப்பி வெளியே பார்த்தார்.

அந்தப் பார்வையிலேயே ஏதோ மந்திரமிருந்திருக்க வேண்டும். அடுத்த விநாடி ஆயுதபாணிகளான பத்து வீரர்கள் அவரைத் தாண்டி உள்ளே வந்தார்கள். அவர் மனத்திலிருப்பதைப் புரிந்து கொண்டவர்கள் போல வீரபத்திரனைச் சுற்றிக் கொண்டார்கள்.



அப்பொழுது பெரியவர் கூறினார்: ''வாலிபனே! வீரபத்திரன் வாளை அவனிடமே கொடுத்துவிடு'' என்று.

வாலிபத்துறவி பதிலேதும் பேசாமல் வாளை வீரபத்திரனிடம் நீட்டினான். அதைப் பேயறைந்த முகத்துடன் வாங்கி உறையில் போட்டுக் கொண்ட வீரபத்திரன் தன்னைச் சுற்றிய வீரர்களுடன் வெளியே சென்றான். அவர்கள் செல்வதற்கு வழிவிட்டு, சத்திரத்து வெளி முற்றத்துக்கு வந்துவிட்ட பெரியவர், வீரபத்திரனின் துணைவர்களைப் பார்க்கவே, அவர்களும் பறந்தனர் வெளியே.

எல்லாரும் வெளியே சென்றதும் பெரியவர், வாலிபத் துறவியை நோக்கினார். சில விநாடிகள் அவர் சிந்தனையில் ஏதோ படர்ந்திருப்பதை விழிகள் காட்டின. அந்தச் சிந்தனைகூட விநாடி நேரத்தில் மறைந்தது. ஏதோ முடிவுக்கு வந்து விட்ட பெரியவர் ''உன் பெயரென்ன?'' என்று வினவினார்.

''முகுந்தன்'' என்று பதில் சொன்னான் வாலிபத் துறவி.

''இந்தச் சிறு வயதில் ஏன் துறவியாகிவிட்டாய்?'' என்று வினவினார் பெரியவர்.

''விரக்திக்கு வயது கிடையாது. வயது வந்தவர்களெல்லாரும் விரக்தருமல்லர்'' என்று பதில் சொன்னான் வாலிபத்துறவி.

''விரக்தனுக்கும் வாள் தேவையா? சண்டை தேவையா?'' என்று பெரியவர் கேட்டார்.

''விரக்தனுக்கும் தற்காப்பு அவசியம். உதாரணமாக நான் துறவி. குடிப்பதில்லை. வலுக்கட்டாயமாக குடிக்க வைக்க முற்பட்டான் உபதளபதி. இந்த மாதிரி நிலைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்குக் கத்தி தேவையாய் இருக்கிறது.''

''எதிரியின் கத்தி?''

''இல்லை, என்னிடம் ஒரு கத்தியிருக்கிறது'' என்று சற்று எட்டக் கூடத்தில் தனது மூட்டைக்கருகில் மின்னிக் கொண்டிருந்த நாகசர்ப்பத்தைக் காட்டினான்.

அதை நோக்கிய பெரியவர் அதை எடுத்து வரும்படி சத்திரக்காரனுக்கு உத்தரவிட்டார். சத்திரக்காரன் எடுத்து வந்ததும் அதன் நுனியை விரலால் கூர் பார்த்தார். "மிகச் சிறந்த, பலமான ஆயுதம்" என்ற அவர், மீண்டும் வாலிபத் துறவியின் மீது கண்களை ஓட்டி, "முகுந்தா! சோழ நாட்டிலிருந்து எப்பொழுது புறப்பட்டாய்?" என்று வினவினார்.

வாலிபத் துறவியின் முகத்தில் வியப்பு விரிந்தது. "நான் சோழநாட்டிலிருந்து வருவதாக யார் சொன்னது?" என்று வினவினான்.

பெரியவர் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. "முகுந்தா! உன் மூட்டையிலிருக்கும் அந்த முத்திரை ஓலையை எடுத்து வா" என்று ஓர் அதிர்வெடியை நிதானமாக வீசினார்.

முகுந்தன் முகத்தில் மேலும் வியப்பு விரிந்தது. "அதைப் பற்றி யார் சொன்னது உங்களுக்கு?" என்று வினவினான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

பெரியவர் கையிலிருந்த நாகசர்ப்பத்தைச் சுட்டிக் காட்டி "இவர்தான்" என்றார். இத்துடன், "சரி ஓலையைக் கொண்டு வா" என்று சற்று அழுத்தியும் சொன்னார்.

"அதைத் தங்களிடம் கொடுக்க முடியாது" என்றான் முகுந்தன்.

"ஏன்?"

"அதை மஹாயனரிடந்தான் கொடுக்கவேண்டும்."

"அவரிடந்தான் கொடுக்கச் சொல்கிறேன்."

இதைக் கேட்டதும் மலைத்தான் வாலிபத் துறவி. "அப்படியானால் தாங்கள்-" என்று தொடங்கினான்.



அப்பொழுது சத்திரக்காரன் உதவிக்கு வந்து "மஹாயனர்" என்ற வார்த்தைகளை மிக அச்சத்துடனும் மரியாதையுடனும் உதிர்த்தான்.

வாலிபத் துறவி பிரமை தட்டிய விழிகளை அவர்மீது நாட்டினான். ஆனால் அந்தப் பிரமையைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்த மற்றொரு நடவடிக்கையிலும் இறங்கிய மஹாயனர் "நீ எதிர்பார்த்தது இதுதானா பார்?" என்று கூறி மடியிலிருந்த எதையோ எடுத்து நீட்டினார்.

அதைக் கண்டதும் வாலிபத் துறவியின் உறுதியெல்லாம் எங்கோ பறந்துவிடவே அவன் சட்டென்று அவர் முன்பு மண்டியிட்டு அவர் பாதங்களில் சிரம் வைத்து வணங்கினான்.

## 5. பளிங்கு மண்டபம்

மஹாயனர் மடியிலிருந்து எடுத்து நீட்டிய பொருளை கையில் வாங்கியதும் பிரமை தட்டி அவர் முன்பு மண்டியிட்டு விட்ட வாலிபனான முகுந்தன் மண்டியிட்ட நிலையிலிருந்து நீண்ட நேரம் எழுந்திருக்கவே இல்லை. குனிந்த தலையையும் நிமிர்த்த வில்லை. கையில் பளபளத்த அந்தப் பெரிய மரகதக் கல் மோதிரத்தைக் கண்ணால் விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டே இருந்தான். அதன் உட்புறத்தைத் திருப்பி இருமுறை பார்த்து அதில் வெட்டப் பட்டிருந்த எழுத்துக்களை ஏதோ மந்திரத்தை உச்சரிப்பது போல் முணுமுணுத்தான். 'புத்தம் சரணம் கச்சாமி" என்ற வார்த்தையொன்றும் புது வார்த்தையல்ல அவனுக்கு. மௌரிய சாம்ராஜ்யமும், ஏன் தொல் உலகில் பல பகுதிகளுங்கூட அந்தக் காலத்தில் உச்சரித்துக் கொண்டிருந்த வார்த்தைக்கு இருபுறமும் வார்த்தைக்குச் சம்பந்தமில்லாத குறிகள் வெட்டப்பட்டிருந்ததால், அவற்றையும் அதிர்ச்சியடைந்த உள்ளத்துடனும் கண்களுடனும் நோக்கினான் வாலிபத் துறவியான முகுந்தன்.

"முகுந்தா! வணங்கியது போதும் எழுந்திரு" என்று மஹாயனர் கூறி அவன் சிரத்தை ஆசீர்வதிக்கும் முறையில் தொட்டபிறகே உணர்வு வந்த வாலிபத் துறவி மெல்ல எழுந்திருந்து பயபக்தியுடன் அந்த மோதிரத்தைப் பெரியவரிடம் கொடுக்கக் கையை நீட்டினான்.

மஹாயனர் அவனைத் தமது கருணைக் கண்களால் நோக்கினார். "முகுந்தா! அந்த மோதிரம் உன்னைச் சேர்ந்தது நீயே வைத்துக்கொள். இத்தனை நாள் அதை வைத்து நான் காப்பாற்றியது போதும்" என்று கூறி, "வா முகுந்தா! மற்ற விஷயங்களைப் பிறகு பேசிக் கொள்வோம்" என்று கூறி வாயிற்படியை நோக்கித் திரும்பினார்.

வாலிபத் துறவியும் பழையபடி தனது மூட்டையைக் கட்டி அதில் நாக சர்ப்பத்தையும் திணித்துக் கொண்டு சிறு தடியுடன் மஹாயனரைப் பின்பற்றினான் அப்படிப் பின் பற்றிச் செல்கையிலேயே கேட்டான் "குருநாதரே! ஓலையைக் கேட்டீர்கள், பார்க்கவில்லையே" என்று.

"மடத்துக்குப் போனதும் பார்த்துக் கொள்வோம். அதிலிருக்கிற விஷயம் எனக்குத் தெரியாததாக இருக்க முடியாது" என்று அலட்சியமாகக் கூறிய மஹாயனர் முன்னே நடந்தார்.

இருவரும் சத்திரத்து வாயிலுக்கு வந்ததும் உருவியவாளும் கையுமாக நின்றிருந்த பத்துப் பதினைந்து வீரர்களைப் பார்த்த மஹாயனர் "நீங்கள் மடத்துப் படை வீட்டுக்குச் செல்லுங்கள். நாளைக் காலையில் பார்ப்போம்" என்று கூறி அவர்கள் செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கையையும் அசைத்துவிட்டு, காஞ்சியின் பெரிய சாலையில் சிறிய மூட்டையுடனும் தடியுடனும் தொடர்ந்துவந்த வாலிபத் துறவியுடன் நடந்து சென்றார்.



இரவு ஏறிவிட்ட அந்த நேரத்திலும் காஞ்சி மாநகர் விழித்துக் கொண்டிருந்தது. வீடுகளின் உட்புறங்களில் எல்லாம் எரிந்த விளக்குகள் சாளரங்கள் மூலம் வெளியே வீசிய வெளிச்சப்பட்டைகள் வீதியில் போவோர் வருவோர் மீது அவ்வப்பொழுது விழுந்து அவர்கள் யாரென்பதை விளக்கிக் கொண்டிருந்தன. சாதாரண வீடுகளையொட்டி ஆங்காங்கு எழுந்திருந்த பெரிய மாளிகைகளில் கூட தீபங்கள் பளிச்சென்று எரிந்தாலும், உள்ளேகூட மனித உலாவும் சத்தமும் பேச்சின் அரவமும் கேட்டுக் கொண்டிருந்தாலும் நகர மக்கள் எதையோ ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சந்தேகமறப் புலனாயிற்று வாலிபத் துறவிக்கு. இருப்பினும் அவன் எதையும் கேட்காமல் மௌனமாக மஹாயனருடன் நடந்து சென்றான்.

முன்னால் சென்ற மஹாயனரோ, பின்னால் ஒருவன் தொடர்ந்து வருகிறானே என்ற பிரக்ஞை அறவே இல்லாமலும் பேச்சு எதுவும் கொடுக்காமலும் வேகமாக நடந்தார். அவர் வயதுக்கு அவர் நடந்த வேகம் மிக அதிகமாயிருந்ததால் வாலிபத்துறவி சிறிது நேரம் நடையிலும் சிறிது நேரம் ஓட்டத்திலும் சென்று கொண்டிருந்தான். அப்படிச் சென்றபோது அவர்கள் இருவர் நடை எழுப்பிய சத்தமும், யானைகட்டி மண்டப யானைகளின் பிளிறலும், கோட்டை வீரர் எச்சரிக்கைக் கூச்சலும் தவிர மற்றபடி பெரும் அரவமோ, வழக்கமாக காஞ்சி மாநகரில் இரவு நேரங்களில் ஒலிக்கும் நடன ஓசைகளோ இல்லாததைக் கண்டும் வியப்பு எதுமின்றி மஹாயனருடன் சென்றான் முகுந்தன்.

மஹாயனர் கோட்டை வாசல் வீதியிலிருந்த காஞ்சியின் உட்புறப் பெரும் வீதிகளில் திரும்பினபோதுதான் சிறிது சந்தேகப்பட்டு "குருநாதரே!" என்று அழைத்தான் முகுந்தன்.

மஹாயனர் அவனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. வேகமான தமது நடையை நிறுத்தவுமில்லை. "என்ன முகுந்தா" என்று மட்டும் கேட்டுக் கொண்டு நடையைச் சிறிது துரிதப்படுத்தினார்.

''நான் கேள்விப்பட்டவரை...'' என்று இழுத்தான் முகுந்தன், அவரை எட்டிச் சிறிது ஓடி!

''கேள்விப்பட்டவரை?'' - மஹாயனர் வினவினார் நடையை நிறுத்தாமல்.

''புத்த விஹாரம் காஞ்சிக்குக் கிழக்குப் புறத்திலிருக்க வேண்டும்'' என்றான் முகுந்தன்.

''அங்கு தானிருக்கிறது. வேறு எங்கும் போய்விடவில்லை. அவ்வளவு பெரிய கட்டடத்தை யார் பெயர்க்க முடியும்?'' என்று விதண்டாவாதமாகப் பேசினார் மஹாயனர்.

அவர் விதண்டாவாதத்தை முகுந்தன் கவனிக்கவே செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், ''அப்படியானால் நாம் போகும் வழி மிகச் சுற்று வழி போலிருக்கிறதே'' என்றான் முகுந்தன்.

''எங்கு போவதற்குச் சுற்று வழி?'' மஹாயனர் அலட்சியமாகக் கேட்டார்.

''மடத்துக்கு.''

''அங்கு போவதாக யார் சொன்னது?''

''வேறு எங்கு போகிறோம்?''

''நீ இருக்க வேண்டிய இடத்துக்கு.''

வாலிபத் துறவி சட்டென்று நின்றுவிட்டான். அவன் நின்றுவிட்டத்தை உணர்ந்து மஹாயனரும் நின்று அவனை நோக்கித் திரும்பினார். சாதாரணமாகக் கோபம் துளிர்க்காத அவர் கண்களில் சற்றுக் கோபம் துளிர்த்திருந்ததைச் சற்று எட்ட இருந்த வீட்டுச் சாளரத்திலிருந்து விசிய விளக்கொளி நன்றாக எடுத்துக் காட்டவே முகுந்தன் சொன்னான் பணிவுடன்: ''எனக்குப் பல விஷயங்கள் புரியவில்லை குருநாதரே!'' என்று.



''புரியாத விஷயங்களைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று கேட்டார் மஹாயனர்.

''நான் வந்த காரியம் புத்த மடத்தில் தங்களிடம் வித்தை கற்க'' என்று சுட்டிக் காட்டினான் முகுந்தன்.

''ஆம்'' - அலட்சியமாக பதில் சொன்னார் மஹாயனர்.

''வித்தை கற்பதானால் நான் மடத்துக்குத்தான் வர வேண்டும்'' என்று சொன்னான் முகுந்தன்.

''அப்படி ஏதாவது நிபந்தனை கூறினாரா உன் தந்தை?''

''இல்லை''

''என்ன சொல்லியனுப்பினார்?''

''நீங்கள் எதைச் சொன்னாலும் தட்டாமல் நடக்கும் படி சொன்னார்.''

''அப்படித்தான் செய்கிறாயா இப்பொழுது?'' என்று சற்று உஷ்ணமாகவே கேட்ட மஹாயனர் சட்டென்று திரும்பி மேலும் நடக்கலானார்.

வேறு வழியின்றி முகுந்தன் அவரைப் பின்பற்றிச் சென்றான். மஹாயனர் பல தெருக்களைக் கடந்து கிழக்கு ராஜவீதியின் எல்லையிலிருந்த மிகக் குறுகலான ஒரு வீதிக்கு வந்து அங்கிருந்த ஒரு சிறிய வீட்டின் வாயிலில் நின்றார். ''முகுந்தா! வீட்டின் வாயிற் கதவை உன் கைத்தடியால் இருமுறை லேசாகத் தட்டு'' என்று உத்தரவும் இட்டார், வாலிபத் துறவிக்கு.

குறுகலான அந்த வீதிக்கு காஞ்சியே கண்டு அஞ்சக் கூடிய மஹாயனர் ஏன் வந்தார்? அந்தச் சிறிய வீட்டுக் கதவை எதற்காகத் தட்டச் சொல்கிறார் என்பதை எண்ணிப் பார்த்து ஏதும் புரியாவிட்டாலும் மஹாயனர் கட்டளையை மறுக்க முடியாமல் அவர் சொற்படிக் கதவை இருமுறை தட்டினான். சிறிது நேரம் கழித்து உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது. ''யாரது?'' என்று.

வாயிலில் நின்றிருந்த மஹாயனர் ''நான்தான்'' என்று குரல் கொடுக்கவே உள்ளிருந்த பெரும் தாழ்ப்பாழ் கிரீச்சென்ற பெரும் சத்தத்துடன் அகற்றப்பட்டு வாயிற் பெரும் கதவும் மிகக் கஷ்டத்துடன் திறக்கப்பட்டது. அந்தக் கதவின் திண்மையையும் அதைத் திறப்பதிலிருந்த கஷ்டத்தையும் கவனித்த முகுந்தன் 'இத்தனை சிறிய வீட்டுக்கு இத்தனை பெரிய கதவு எதற்கு? அரண்மனையில் இருக்க வேண்டிய கதவை இந்தச் சிறுவீட்டுக்கு ஏன் பொருத்தியிருக்கிறார்கள்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாலும் அதைப் பற்றி வாய்விட்டு விசாரிக்காமல் மஹாயனர் உள்ளே செல்ல வழிவிட்டு நின்றான்.

மஹாயனர் தன்னைத் தொடர்ந்து வரும்படி முகுந்தனுக்குச் சைகை செய்து அந்த வீட்டுக்குள் நுழைந்தார். உடன் நுழைந்த முகுந்தன், கதவைத் திறந்தது ஒரு பணிப் பெண் என்பதைக் கவனித்து வியந்து கொண்டே நடந்தானென்றால், அடுத்து கண்ணுக்கு தெரிந்தவை அவன் வியப்பை லட்சோப லட்சம் மடங்கு உயரச் செய்தன.

அந்தச் சிறிய வாயிலுக்கு அப்பால் ஒரு சிறு இடைகழி இருந்தது. அது ஒரு பெரிய பளிங்குக் கூடத்திற்குள் இணைந்தது. பளிங்குக் கூடத்திலிருந்த தூண்களின் சித்திர வேலைப்பாடுகளின் மதிப்போ ஒரு சிற்றூரையே விலைக்கு வாங்கக் கூடிய நிலையிலிருந்ததைக் கண்ட முகுந்தன், இந்தச் சிறிய வீதியில் சிறு முகப்புடன் கூடிய இந்த பெரிய அரண்மனை இருக்க வேண்டிய அவசியம் என்னவென்று சிந்தித்தான் பல விநாடிகள். அவன் கால்கள் அந்தப் பளிங்கு மண்டபத்திலிருந்து அசைய மறுத்தன.

நீண்ட நேரம் அந்தப் பளிங்குமண்டபத்தின் மீதே கண்களை ஓட்டினான். ஒவ்வொரு தூணிலும் ஒரு பெண்சிலை செதுக்கப்பட்டிருந்ததால் தூண்களே பெண்களாக காட்சியளித்தன. ஒவ்வொரு உருவமும் ஏதோ நர்த்தன சாஸ்திரத்தின் ஒரு பகுதியை விவரிப்பதாக அபிநயமும் நாட்டியமும் பொருந்திய நிலையில்



இருந்ததால் இதை யாரோ மிக ரசிகனான சிற்பி தயாரித்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தான் முகுந்தன். நாட்டிய நவரசங்களையும் அள்ளி வீசிய அந்தப் பதுமைகள் அவனைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை ஏற்பட்டதால் முகுந்தன் பளிங்கு மண்டபத்தின் தரையை நோக்கினான்.

அந்தத் தரையில் மண்டப நர்த்தனப் பிரதிமைகள் ஓரிரண்டின் கைகளிலிருந்த விளக்குகளின் ஒளி படிந்திருந்ததால் அவன் உருவம் தலைகீழாகத் தெளிவாகத் தெரிந்தது. கண்ணாடியையும் பழிக்கும் அந்தத் தரையின் தெளிவைக் கண்டு பெரும் பிரமைக்கு உள்ளான முகுந்தன் அதில் தெரிந்த தன் உருவத்தைக் கண்டு வியந்து கொண்டே நின்றான். ஒருமுறை கையால் தனது சிறு தாடியைத் தடவிக் கொண்டபோது பிரதிபிம்பமும் அதைச் செய்தது. பிறகு வேண்டுமென்றே முகுந்தன் தனது மீசையைத் தடவினான். பிம்பமும் மீசையைத் தடவியது. அதைக் கண்டு அவன் லேசாகப் புன்முறுவல் செய்தபோது பிரதிபிம்பமும் லேசாகப் புன்முறுவல் செய்தது. அந்தச் சமயத்தில் மற்றொரு விசித்திரமும் நிகழ்ந்தது. பிரதி பிம்பத்தின் தலை சட்டென்று ஏதோ நிழலால் மறைக்கப் பட்டு அகன்றது. தலையற்ற முண்டம் மட்டும் தரைக்குள் தெரிந்தது. ''இது எப்படி சாத்தியம்?'' என்று அவன் சிந்திக்கையில்தான் அந்தச் சிரிப்பொலி அவன் காதில் விழுந்தது. தலை நிமிர்ந்து நோக்கிய முகுந்தன் தன் எதிரில் இரண்டடி தூரத்தில் மற்றொரு சிலை நிற்பதைக் கண்டான். சிரித்தது அந்த அழகு சிலையாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவு கட்டிய முகுந்தன். ''பெண்ணே! நீ யார்? இங்கு என்ன செய்கிறாய்?'' என்று வினவினான்.

அவள் பதில் சொல்லவில்லை- சற்று தூரத்திலிருந்து மஹாயனர் குரல் ஒலித்தது. ''அவள் தான் மாதவி'' என்று.

இதைக் கேட்டதும் முகுந்தன் குழப்பம் அதிகமாகியதே தவிரக் குறையவில்லை.

''நான் எதற்காக இங்கு அழைத்து வரப்பட்டேன்'' என்ற சீற்றத்துடன் சற்று எட்ட இருந்த மாடிப்படி முனையில் நின்ற மஹாயனரை நோக்கி வினவினான் முகுந்தன்.

''உன் துறவறத்துக்கு முடிவு கட்ட'' என்றார் மஹாயனர்.

## 6. மகிழ மரத்தின் அடியில்

மஹாயனர் பேச்சும் போக்கும் சிறிதும் புரியாததாலும் எதிரே நின்ற வண்ணச்சிலை புன்முறுவலே பூத்துக் கொண்டிருந்ததாலும் நிலைகுலைந்த சோழ நாட்டு வாலிபனான முகுந்தன், மஹாயனரையும் அந்தப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தான். பளிங்கு மண்டபத் தரையில் பிரதிபலித்த தன் தலை மறைந்து விட்டதற்குக் காரணம் அந்தப் பெண்ணின் தலை நிழல் அதில் பட்டதே யென்பதை அறிந்து கொண்ட வாலிபத் துறவி, தலை நிமிர்ந்த சமயத்திலும் அவள் அற்புத அழகால் தனது தலை நிதானமிழந்து பறந்து கொண்டிப்பதை நினைத்துச் சிறிது சினத்தின் வசப்படவும் செய்தான். சினம் அவனை மேலும் அவளைப் பார்க்கவே தூண்டியதே அல்லாமல் விழிகளை வேறுபுறம் திருப்பச் சக்தியற்றதாயிற்று.

அந்தனை ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தாள் மாதவி. 'சிலப்பதிகாரத்தின் மாதவி எத்தனை அழகாய் இருந்திருப்பாளோ தெரியாது. ஆனால் இந்த மாதவி அவள் அழகுக்குச் சற்றும் குறைந்தவளல்லள்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் வாலிபத் துறவி. அவள் சுருண்ட குழல்முடியும், முகத்தில் தொங்கிய சுட்டியும், அப்பொழுதும் பளிங்கு மண்டபப் பிராந்தியத்தை நறுமண மயமாக அடித்த அவள் தலையில் சூடியிருந்த காஞ்சி மல்லிகை வாசனையும், கூந்தலின் கருமைக்கு வெண்மை யூட்டிய அதன் வர்ண விசாலமும் துறவியின் உள்ளத்தை அள்ளிச் சென்றன. அவள் விசால வதனமும், கரிய பெரிய வண்டு விழிகளும்,



செம்பருத்தி உதடுகளில் வளையாடிய மென்மைச் சிரிப்பும், சற்றே அளவுடன் எழுந்த மார்பும், பொய்யோ எனும் இடையும், சேலைக்குக் கீழே தெரிந்த செங்கமலப் பாதங்களும் அவளைத் தெய்வப் பிறவியாகக் காட்டினாலும், அவள் மனிதத் தன்மைக்கு அறிகுறியாக கண்களில் விரிந்த கருணை, உள்ளத்தின் தூய்மைக்குச் சான்று கூறவே செய்தது. இப்படிப் பளிங்கு மண்டபச் சிலைகளில் இன்னொரு சிலையாக நின்ற மாதவியை அதிகமாக அலசுவதோ பார்ப்பதோ முறை கெட்ட செய்கை என்று எண்ணியதால் வாலிபத் துறவி குருநாதர் மீதே கடைசியில் கண்களைத் திருப்பினான். ''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை'' என்றும் கூறினான்.

மஹாயனரின் சலனமற்ற கண்கள் அவனை உற்று நோக்கின. ''உன் மூட்டையிலிருக்கும் முத்திரை ஓலையை எடு'' என்று மட்டும் கூறினார்.

மூட்டையைத் தரையில் வைத்துத் தானும் உட்கார்ந்து பிரித்து ஓலையை எடுத்த முகுந்தன் ''பெண்ணே! இதைக் குருநாதரிடம் கொடு'' என்று கூறினான்.

மாதவியும் குனிந்து அவன் கையிலிருந்த ஓலையை வாங்கிக் கொண்டு மஹாயனரை நோக்கினாள். ''முத்திரையை நீயே உடைத்துப் படி மாதவி!'' என்ற மஹாயனரை முகுந்தன் இடைமறித்து ''தங்களைத் தவிர வேறு யாரும் இதைப் படிக்கக் கூடாது என்று என் தந்தை சொல்லியிருக்கிறார்'' என்று தடுக்க முயன்றான்.

''மாதவி வேறு, நான் வேறல்ல. அவளுக்குத் தெரியாத ரகசியம் எதுவும் இந்தக் காஞ்சியில் கிடையாது'' என்ற மஹாயனர், ''சரி, படி மகளே'' என்று மாதவிக்கு உத்தரவும் இட்டார்.

மாதவி முத்திரைகளை உடைத்து இரைந்தே படித்தாள்.

''குருநாதர் மஹாயனருக்கு, சோழர் குலக் கிளை மன்னன் சென்னி வணக்கத்துடன் எழுதுவது. இந்த ஓலையைக் கொண்டுவரும் என் மகனுக்கு வில்வித்தையும் வாள் வித்தையும்

நன்றாகத் தெரியும். காஞ்சி இருக்கும் நிலைமையில் இவன் உங்களுக்கு உதவுவான் என்று நம்பி அனுப்புகிறேன். இவன் துறவியாகிவிட்டான். அப்படியே நின்றுவிடவும் விரும்புகிறான். இந்தப் பைத்திய நிலையிலிருந்து தாங்கள் தான் இவனை மீட்க வேண்டும். துறவறத்துக்கும் ஒரு வயது உண்டு என்பது தாங்கள் அறியாததல்ல. தங்களுக்குத் தெரிந்த வித்தைகளில், சாஸ்திரங்களில், ஏதாவது ஒரு திவலையாவது இவனுக்கு வருமானால் நான் பெரும் நிம்மதியுடன் இருப்பேன். இவனை ஆட்கொண்டு திருப்ப வேண்டியது தங்கள் பொறுப்பு'' என்று ஓலையைப் படித்தாள் மாதவி.

மஹாயனர் இதழ்களில் புன்னகை விரிந்தது. ''கேட்டாயா முகுந்தா உன் தந்தையின் விருப்பத்தை?'' என்று வினவினார் மஹாயனர் அந்த புன்முறுவலின் ஊடே.

முகுந்தன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ''இத்தகைய ஒரு கடிதத்தை தந்தை எழுதுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் சில விநாடிகளுக்குப் பிறகு.

''இப்பொழுது என்ன செய்ய உத்தேசம்?'' -மஹாயனர் கேள்வி திடத்துடன் எழுந்தது.

''தாங்கள் சொல்வதைக் கேட்பதாக ஆணையிட்டு வந்திருக்கிறேன் தந்தையிடம். காஞ்சி மிக ஆபத்திலிருக்கிற தென்றும் அதற்கு என் வாள் பயன்பட வேண்டுமென்றும் தந்தை ஆணையிட்டிருக்கிறார். அதைத் தவிர தங்களிடம் நான் விரும்பும் வேதாந்த பாடத்தையும் கேட்கலாமென்று சொன்னார். என் நிலை இப்படியிருக்கிறது'' என்ற முகுந்தனின் சொற்களில் துன்பம் ஊடுருவி நின்றது.

அதை மஹாயனரும் கவனித்தார். மாதவியும் கவனித்தாள். அவர்களிருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொள்ளவும் செய்தனர் ஒரு விநாடி. பிறகு மஹாயனர் சொன்னார்: ''முகுந்தா! உனக்கு



வேதாந்தப் பாடம் மாதவி சொல்லுவாள். அதில் அவள் கற்ற அளவுக்கு இந்த நகரில் வேறு யாரும் கற்றது கிடையாது. போர்ப்பயிற்சி மட்டும் நானே அளிக்கிறேன். அதுவரை இங்கேயே தங்கியிரு'' என்று அத்துடன் மாதவியையும் நோக்கி, ''மாதவி! இவன் என் மகனுக்குச் சமானம். ஆகையால் வேதாந்த விசாரம், தர்க்கம் எதையும் ஒளிக்காமல் விவரமாகச் சொல்'' என்று உத்தரவிட்டார்.

மாதவி தலை குனிந்தாள். மஹாயனரை நோக்கி ''இவர் துறவி உடை...'' என்றும் தடுமாற்றத்துடன் சொன்னாள்.

''ஆம், ஆம். அதை மறந்துவிட்டேன்'' என்ற மஹாயனர், ''முகுந்தா! இந்தத் துறவியின் உடைகளைக் களைந்து விடு. வேறு உடைகளை அணிந்து கொள். மாதவி அதற்கு ஏற்பாடு செய்வாள்'' என்று கூறினார், வாலிபத் துறவியை நோக்கி.

''துறவறம் என் சொந்த விஷயம். அதை யாரும் மாற்ற முடியாது மஹாயனரே! அந்த விஷயத்தில் தங்கள் உத்தரவைக் கூட நான் மீற நேரிடும்'' என்றான் முகுந்தன்.

''துறவறம் ஆடையை மட்டும் பொறுத்ததல்ல''- மஹாயனர் குரலில் சினம் இருந்தது.

''ஆம்'' -முகுந்தன் பதிலிலும் சினம் ஒலித்தது.

''இந்தத் துறவி வேடத்தைத் துறந்தும் நீ துறவியாய் இருக்கலாம்.''

''இது வெறும் வேடமல்ல; உள்ளத்தின் வெளி அத்தாட்சி.''

''இரண்டுக்கும் பொருள் ஒன்றுதான். உள்ளத்தில் காவியிருந்தால் அதை ஆடை மூலம் வெளி உலகத்துக்குப் பறைசாற்ற அவசியமில்லை.''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று விளங்கவில்லை முகுந்தனுக்கு.

''சொன்னபடி செய் முகுந்தா! இதற்கெல்லாம் காரணம் உனக்குப் பின்னால் தெரியும். இப்பொழுது எதையும் கேட்காதே. நாளை உன்னைச் சந்திக்கிறேன்'' என்ற மஹாராயனர் ''நான் வருகிறேன் மாதவி!'' என்று கூறிவிட்டு உட்புறம் சென்று விட்டார்.

மடத்துக்குப் போக வேண்டியவர் அந்த மாளிகையின் உட்புறம் செல்ல வேண்டிய அவசியமென்ன என்று சிந்தித்த வாலிபத் துறவி, மேலும் என்ன விசித்திரந்தான் இந்த இரவில் நடக்கிறது பார்ப்போம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு ஓலை மூட்டையை மீண்டும் கட்டி தடியில் கோத்துக் கொண்டு எழுந்து நின்றான். பளிங்குத் தரையிலிருந்து. அதுவரை சிலையென நின்ற மாதவி அவனைத் தன்னுடன் வர சைகை செய்து முன் சென்றாள். அவளைத் தொடர்ந்த முகுந்தன் சிறிய முகப்புள்ள அந்த வீடு, உள்ளே பெரிய அரண்மனை என்பதைப் புரிந்து கொண்டான். சுமார் மூன்று பெரிய கட்டுகளைத் தாண்டி மாதவி அவனை அழைத்துச் சென்றாள். அந்தக் கட்டிலும் யாரும் அவனது கண்களுக்குத் தெரியவில்லையானாலும் ஆங்காங்கு தென்பட்ட அறைகளுக்குள் இருந்து பல கண்கள் தன்னைப் பார்ப்பதை உள்ளூற உணரவே செய்தான் அந்த வாலிபத் துறவி. அப்படி உணர்ந்ததால் 'பார்ப்பவர் யாராக இருக்கக் கூடும்? ஆண்களா பெண்களா?'' என்று பலவிதமாக எண்ணம் ஊடுருவச் சென்ற முகுந்தனை நான்காவது கட்டு வந்ததும் மேற்புறம் ஓடிய ஒரு மாடிப்படிக்கு அழைத்து வந்தாள் மாதவி. ''இந்தப் படிகளில் ஏறிச் சென்றால் இரண்டு அறைகள் இருக்கும். அதில் இரண்டாவது அறையில் தங்குங்கள். தங்களுக்குப் பணிவிடை புரிய ஆள் அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு மாதவி வந்த வழியே சென்று விட்டாள்.

அவள் சொன்ன மாடிப்படிகளில் ஏறி இரண்டாவது அறைக்கு வந்ததும் அந்த கதவின் வேலைப்பாட்டைக் கண்டே அசந்துவிட்ட முகுந்தன் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே சென்றதும் இன்னும் அதிகப் பிரமிப்புக்கு உள்ளானான். அந்த அறையின் உட்புறத்தில்



ராஜபோகத்துக்கான சகல வசதிகளும் இருந்தன. பெரிய கட்டில், உயர்ந்த பஞ்சணை, ஒரு மூலையில் பல துணி மணிகள், சுவாசசித் துணிகளைப் போட மான் கொம்புகள் இத்தனையும் கண்டான் முகுந்தன். அறையின் ஓர் ஓரத்திலிருந்த பெரிய தூத்துவிளக்கின் வேலைப்பாடுகூடப் பிரமிக்கும்படியாக இருந்தது. ஆனால் விஷயம் ஏதும் புத்திக்கு வராது போகவே அதைப்பற்றிய சிந்தனையை அகற்றினான்.

பிறகு பயண அலுப்பினாலும் இரவு வெகு நேரம் ஆகியிருக்க வேண்டுமென்ற பிரமிப்பாலும் சீக்கிரம் படுக்கவேண்டுமென்ற எண்ணத்தாலும் தன் மேலுடையை மட்டும் களைந்துவிட்டு அந்த சிறைச் சாளரத்தின் மூலம் தலையை வெளியே நீட்டினான். வெளியே விரிந்தது ஒரு பிரமையான உலகம். எட்ட வெள்ளை வெளேரென்று மணலுடன் தெரிந்தது வேகவதி நதி. அதை அடுத்து அதன் அக்கரையில் எழுந்தது பிரமாண்டமான புத்த விஹாரம். ஆகாயத்தில் சந்திரன் மங்கிக் கொண்டிருந்தான். மெதுவாக வெள்ளி முளைக்கும் நேரம் ஆகவில்லையென்றாலும் நள்ளிரவு கடந்து நீண்டநேரம் ஆகிவிட்டதென்பதை ஒன்றிரண்டாகத் தெரிந்த விண்மீன்களிலிருந்து புரிந்து கொண்டான் அந்த வாலிபன். ''சரி படுப்போம்'' என்று கூறிக்கொண்டே சாளரத்திலிருந்து தலையை உள்ளே இழுக்கத் தொடங்கிய முகுந்தன் சட்டென்று தலையைக் கீழே குனிந்தான். அந்த மாளிகைச் சுவரின் அருகில் இருந்த ஒரு மகிழமரத்தின் அடியில் மாதவி நின்றிருந்தாள். அவளை நோக்கிப்புரவியில் வந்த ஒரு மனிதன் தரையில் குதித்து அவளைத் தழுவிக் கொண்டான். பிறகு அவள் தலைமயிரைக் கோதியும் கொடுத்தான்.

என்ன காரணத்தாலோ வாலிபத் துறவியின் மனம் கொதித்தது. சட்டென்று சாளரக் கதவை மூடிக்கொண்டு பஞ்சணையில் போய்விழுந்தான். அந்தச் சமயத்தில் அவன் அறைக்கதவு மெல்லத் திறந்தது. மாதவி உள்ளே நுழைந்தாள் ஒரு குவளையுடன்.

பைத்தியம் பிடித்துவிடும் நிலைக்கு வந்தான் வாலிபத் துறவி. "அதற்குள் இங்கு எப்படி வந்தாய்?" என்று சீறினான் முகுந்தன்.

குழப்பமடைந்த முகத்துடன் மாதவி அவனை நோக்கினாள். "என்ன உளறுகிறீர்கள்?" என்றும் வினவினாள், வியப்பு மண்டிய குரலில்.

## 7. அவள் ஓதிய மந்திரம்

**வா**லிபத் துறவி கேட்ட கேள்வியால் மாதவி வியப்படைந்தாளே தவிர திகிலடையவில்லையென்பதை அவள் அழகிய முகத்தின் மீது விழுந்த அறைவெளிச்சம் திட்டவட்டமாக அறிவித்தது. "என்ன உளறுகிறீர்கள்?" என்று அவள் தொடுத்த கேள்வியும் அதே நிலையை வலியுறுத்தவே துறவி சிறிது குழம்பவே செய்தான். பிறகு நிதானித்துக் கொண்டு, "நான் ஒரு கேள்வி கேட்டேன்" என்று சொன்னான், குழப்பம் குரலிலும் ஒலிக்க.

மாதவி முறுவல் செய்தாள். "ஆம்! கேட்டீர்கள் ஓர் அர்த்தமற்ற கேள்வி" என்றும் கூறினாள்.

"அர்த்தமற்றதா?" -துறவி எழுந்து உட்கார்ந்து கொண்டு மாதவியை உற்று நோக்கினான்.

"ஆம்" -மாதவியின் பதில் திட்டமாகவும் அலட்சியமாகவும் இருந்தது.

"எப்படி அர்த்தமற்றது?"

"அதற்குள் இங்கு எப்படி வந்தாய் என்று கேட்டீர்கள்."

"ஆம்."

"எதற்குள் என்பதை விளக்கவில்லை. வேறு எந்த இடத்தைக் குறிப்பிடுகிறீர்கள் என்பதும் தெரியவில்லை."





இந்தப் பதிலைக் கேட்ட முகுந்தன், 'மாதவி மாயக்காரியா, பசப்பு வார்த்தைகளால் தன்னை ஏமாற்ற முயலும் மோசக்காரியா' என்று தன்னுள் கேட்டுக் கொண்டே படுக்கையில் மௌனமாக ஒரு விநாடி உட்கார்ந்து கொண்டான், பிறகு சொன்னான்: "சற்று முன்பு உன்னை மகிழ மரத்தடியில் பார்த்தேன்" என்று.

மாதவி அதற்கு பதிலேதும் சொல்லவில்லை. மேலும் அவன் பேசட்டும் என்று காத்திருந்தாள். துறவியே பேசினான்; "பார்த்துத் திரும்பப் படுக்கையில் படுத்தேன். நீ கதவைத் தட்டி உள்ளே வந்தாய். அது எப்படி முடியும்?" என்று.

"முடியாதென்பது புரிகிறதல்லவா?" என்று மாதவி கேட்டாள்.

"புரிகிறது" என்றான் துறவி.

"அப்படியானால் நீங்கள் பார்த்தது நானல்லவென்று விளங்கியிருக்க வேண்டும் உங்களுக்கு."

"ஏன்?"

"இரண்டு இடங்களில் ஒரே நேரத்தில் நான் இருகக முடியாது என்ற காரணத்தால்."

இதைக்கேட்ட வாலிபன் மீண்டும் குழம்பினான். பிறகு மறுபடியும் கேட்டான்: "அப்படியானால் நான் பார்த்தது யார்!" என்று.

பதிலுக்கு மாதவி 'களுக்' கென்று நகைத்தாள். "நீங்கள் பார்த்தது யாரென்பதைச் சொல்ல நான் ஜோஸ்யமா படித்திருக்கிறேன்" என்றும் கேட்டாள் நகைப்பின் ஊடே.

துறவியும் தன் பிடிவாதத்தை விடவில்லை. "நான் பார்த்தது நீதான். சந்தேகமில்லை" என்றான் திடமான குரலில்.

"நல்லது" என்றாள் மாதவி.

துறவி நிதானத்தை இழந்தான். "எது நல்லது? மகிழ மரத்தடியில் நின்றது நல்லதா?" என்று வினவிய முகுந்தன் மிகுந்த சீற்றத்துடன், கட்டிலிலிருந்து இறங்கித் தரையில் அவன் இறங்கிய வேகத்தில் மாதவிக்கு வெகு அருகில் வந்து நின்றான்.

அவள் சமீபம், இணையற்ற அழகு! எழுந்து தொட்டுவிடுவன போல் தோன்றிய இரட்டை பிம்பங்கள், அப்பொழுதும் புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டிருந்த பவழ உதடுகள் துறவியை என்னவோ செய்யத் தொடங்கின. 'இப்படித்தான் விசுவாமித்திரன் மேனகையிடம் துறவறத்தைப் பறி கொடுத்திருப்பான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் சோழநாட்டு வாலிபன்.

அவன் இறங்கிய வேகத்தையும் தன்னருகில் வந்து நின்ற நிதானமற்ற நிலையையும் மாதவி கவனிக்கவே செய்தாள். ஆனாலும் அதைப்பற்றி அவள் கவலைப்படவே இல்லை. கையிலிருந்த குவளையை அவனை நோக்கி நீட்டி, "இதில் பாலிருக்கிறது அருந்துங்கள்" என்றாள்.

துறவி அவள் கையிலிருந்த குவளையை வாங்கி அதை ஒரு முறை விளக்கு வெளிச்சத்தில் நோக்கிவிட்டு, "அப்பட்டமான தங்கம்" என்று முணுமுணுத்தான்.

"உள்ளிருப்பதும் அப்பட்டமான பால்" என்றாள் மாதவி.

அதை அந்த வாலிபத் துறவி காதில் வாங்கிக் கொள்ளாமல் குவளையை எடுத்துக் கொண்டு அறையின் ஒரு மூலைக்குச் சென்று அங்கிருந்த சாளரத்தில் வைத்து விட்டுத் திரும்பவும் மாதவியிடம் வந்தான். "மாதவி இந்த மாளிகையின் விவகாரங்கள் பெரிய மர்மமாய் இருக்கின்றன. எனக்கு எதுவுமே புரியவில்லை. நான் மேற்கொண்டுள்ள விரதத்துக்கும் இந்த மாளிகை விவகாரத்துக்கும் சற்றும் பொருத்தமில்லாதிருக்கிறது. நான் துறவி. இந்த அரண்மனையோ கேளிக்கை விலாசத்துக்கு ஏற்பட்டதாகத்



தெரிகிறது. சாஸ்திரம் படிக்க, வாள் வித்தை, வேல் வித்தை பயில மஹாயனரிடம் வந்தேன். உன்னிடம் படிக்கச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். நட்டநடு இரவில் சாளரத்தின் வெளியே பார்க்கிறேன். நீ யாரையோ கட்டித் தழுவுகிறாய். அடுத்த விநாடி இங்கு காட்சியளிக்கிறாய்" என்று கூறிய துறவி, "சற்று முன்பு கீழே வந்தவன் யார்" என்று கேட்டான்.

மாதவி கேட்டாள். "யாராயிருந்தால் உங்களுக்கென்ன?" என்று.

துறவி அதுவரையில் காட்டிய நிதானத்தை இழந்தான். ஓலை மூட்டையைக் கட்டிய மேல் துணியில்லாததால் அவன் மார்பில் முரட்டு மயிர் படர்ந்திருந்ததாலும் குறுந்தாடியும் அரும்பு மீசையும் தலையின் சுருள் மயிரும் காட்சியளித்ததாலும் காட்டுமிராண்டி போல் காட்சியளித்த அந்த வாலிபன் மாதவியின் இரு தோள்களையும் பிடித்து அழுத்தினான் பலமாக. "மாதவி! யாரவன் சொல்! சொல்" என்றும் சீறினான்.

மாதவி மட்டும் சிறிதும் நிதானம் தவறவில்லை. "யாராயிருந்தால் உங்களுக்கென்ன?" என்று இரண்டாம் முறை பழைய கேள்வியையே திருப்பினாள்.

"நீ என் குரு" என்றான் வாலிபன் கோபத்துடன்.

"ஆம். மஹாயனர் சொன்னார் சாஸ்திரம் போதிக்கும்படி" என்றாள்.

"எந்த சாஸ்திரம்? மகிழமரத்தடியின் சாஸ்திரமா?" வாலிபன சீற்றமும் மிகுந்தது, கைப்பிடியும் அவள் தோள்களில் இறுகியது.

"அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நீங்கள் தான் சொன்னீர்கள். அப்படி ஏதாவது நிகழ்ந்திருந்தால் அதுவும் சாஸ்திரந்தான்" என்ற மாதவி, அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள்.

ஆனால், துறவியின் பிடி இரும்புப் பிடியாயிருந்தது. அவள் சமீபம், அவள் பேச்சு எல்லாமே அவனுக்கு வெறியை ஏற்றியிருந்தன. அவன் கைகள் அவளைச் சட்டென்று குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி பஞ்சணையில் முரட்டுத்தனமாக எறிந்தன. பிறகு துறவி அறை மூலைக்குச் சென்று குவளையை எடுத்து வந்தான். ''மாதவி! குடி பாலை'' என்று அவள் உதட்டில் குவளையின் நுனியை அழுத்தினான். அவள் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. வாயை லேசாகத் திறந்து இரண்டு வாய் பாலைக் குடித்தாள். பிறகு கையால் குவளையை அகற்றி ''போதும். மீதியை நீங்கள் அருந்துங்கள்'' என்றாள்.

துறவி சிலையென நின்றான், கட்டிலுக்கு அருகில் அவளை நோக்கிக் கொண்டு சில விநாடிகள். ''உன் எச்சிலை என்னைக் குடிக்கச் சொல்கிறாயா?'' என்று சீறினான் முடிவில்.

''ஆம்'' -மாதவி முணுமுணுத்தாள்.

''உன் திமிர் மிகவும் அதிகம்'' என்றான் துறவி.

''ஆம்''

''எச்சிலை நான் அருந்தலாமா?''

''எச்சல் நினைவிலிருந்து விலகிவிடும் சமயங்கள் உண்டு.''

''அதில் இது ஒரு சமயமா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''நான் துறவியென்பதை மறந்துவிட்டாய்.''

''மறந்தது நானல்ல. நீங்கள்'' என்ற மாதவி, புன்முறுவல் கொண்டாள்.

துறவி அறை மூலைக்குச் சென்று பால் குவளையை வைத்துவிட்டுத் திரும்பிவந்து கட்டிலின் முனையில் உட்கார்ந்து



கொண்டு, தான் எப்படிப் போட்டானோ அப்படியே பஞ்சணையில் படுத்துக் கொண்டிருந்த அந்த அழகுப் பாவையைக் கூர்ந்து நோக்கினான். விளக்கொளி அவள் உடலுக்குப் பலவித இந்திர ஜாலங்களை விளைவித்துக் கொண்டிருந்தது. மல்லாந்து கிடந்த அவள் உடல் லாவண்யங்கள் தொடுத்த மலர்க் கணைகள் முகுந்தனின் உள்ளத்தைச் சுக்கு நூறாய் உடைத்துக் கொண்டிருந்தன. துறவறம் தன்னை விட்டுப் பலமாகப் பறப்பதை உணர்ந்தான் வாலிபத் துறவி. என்ன உணர்ந்தும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தன் ஒரு கையை அவளுக்குக் குறுக்கே போட்டான். மாதவி தடை எதும் சொல்லவில்லை. ''குனியுங்கள்'' என்றாள் மெதுவாக.

குனிந்த துறவியின் காதில் ''அறைக் கதவைத் தாழிட மறந்து விட்டீர்கள்'' என்று மந்திரம் ஓதினாள்.

## 8. விஷ்ணு கோபன்

சோழ நாட்டிலிருந்து சாஸ்திரமும் சாஸ்திர வித்தையும் பயில வந்த வாலிபத் துறவிக்கு, அன்றிரவு பஞ்சணை முகப்பில் உட்கார்ந்த சமயத்தில் பல விஷயங்கள் புரியவில்லை. அவள் தன்னைக் குனியுங்கள் என்று சொன்னதும் தான் ஏன் குனிந்தோம். கதவைத் தாழிட மறந்து விட்டீர்கள் என்று அவள் ரகசியமாக ஓதியதைக் காதில் வாங்கிய பின்பும் சுய நிலைக்கு வராமல் ஏன் மதுவுண்ட வண்டுபோல் மயங்கியிருந்தான் என்ற எதுவுமே புரியவில்லை முகுந்தனுக்கு. அறைக் கதவைத் தாழிடாதது தான் செய்த பெரும் குற்றமோ என்றுகூடத் தோன்றியதால் அவன் அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான்.

இதழில் லேசாக அரும்பிய புன்முறுவல் காந்தம் போல் அவன் இதழ்களை இழுக்க கண்களின் அறைகுறைப் பார்வை அவன் கண்களையும் இதயத்தையும் ஒருங்கே கவ்வ, சாதாரணமாக விட்ட

மூச்சுக்கூட அவள் மார்பகத்தைத் தன் மார்புக்கு எதிராக எழவும் தாழவும் செய்து தனது உணர்ச்சிகளை நிலை குலையச் செய்ய, பஞ்சணையில் கிடந்த அந்தப் பாவையை, வைத்த கண் வாங்காமல் பார்த்த வாலிபத்துறவி நீண்ட நேரம் உட்கார்ந்த நிலையிலேயே இருந்தான். உறுதியான தன் மனத்தை யாரும் உலுக்கிவிட முடியாதென்ற நினைப்புக்கு அன்று அழிவுகாலம் நெருங்கிவிட்டதை முகுந்தன் சந்தேகமற உணர்ந்து கொண்டதால் அவன் பெருமூச்சு விட்டான். காரணமில்லாமல் இருமுறை கூடாது கூடாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை இப்புறமும் அப்புறமும் ஆட்டினான். பிறகு மாதவியை நோக்கி, "இது சரியல்ல" என்றும் சொன்னான்.

மாதவியின் இதழ்கள் அரைகுறையாக விரிந்தன. "எது?" என்ற கேள்வி மிக மெதுவாக வெளிவந்தது செம்பருத்தி இதழ்களிலிருந்து.

"இந்த நிலையில் நாம் இருப்பது" என்றான் முகுந்தன்.

"இந்த நிலையை விளைவித்தது யார்?" -கேள்வியை மதுரமாகக் கேட்ட மாதவி மதுரமாகப் புன்முறுவலும் செய்தாள்.

வாலிபத் துறவி சேலாகச் சினத்தைக் காட்டினான் முகத்தில். 'நீ சொல்வது புரியவில்லை?' என்றான்.

அவள் மெல்லச் சொன்னாள்: "இந்தக் கட்டிலில் என்னைத் தூக்கி முரட்டுத் தனமாகப் போட்டது நீங்கள்" என்று வாசகத்தை அவள் முடிக்காமல் பாதி விழுங்கியதிலேயே பொருள் அதிகமாகப் புதைந்து கிடந்தது.

வாலிபத் துறவிக்குப் பதில் ஏதும் சொல்லத் தெரியாததால், "உன்னை யார் இந்த அறைக்கு வரச்சொன்னது?" என்று கேட்டான்.

மாதவி நகைத்தாள், மெதுவாக. "சோழ நாட்டில் இப்படித்தான் பழக்கமா?" என்றும் கேட்டாள்.



349313
5.3.1983

"என்ன பழக்கம்?" - துறவி மூர்க்கமாக வினவினான்.

"அறைக்குள் வரும் பெண்களைப் பஞ்சணையில் போடுவது."

"போடுவது"

"பிறகு அவர்கள் உடலுக்குக் குறுக்கே கையைப் போடுவது"

"நிறுத்து போதும்" என்று சீறிய முகுந்தன், பஞ்சணையை விட்டு எழுந்து நின்றான்.

மாதவி வாய்விட்டுக் 'களுக்' கென்று நகைத்தாள். அத்துடன் கேட்டாள், "ஒன்று தெரியுமா உங்களுக்கு?' என்று.

"எது?" - துறவியார் எரிந்து விழுந்தார்.

"இது என் அறை" என்ற மாதவி, மீண்டும் நகைத்தாள்.

வாலிபத் துறவி அசைவற்று நின்றான். பிறகு அவளையும் பார்த்து அறைக் கதவையும் நோக்கினான். அடுத்தபடி சாளரத்தண்டை சென்று மீண்டும் வெளியே நோக்கினான். மகிழமரம் அவனைப் பார்த்து நகைப்பது போலத் தனது சின்னஞ்சிறு மலர்களை பொலபொலவென உதிர்த்தது. அதன் நறுமணம் அவன் நாசியில் புகுந்து சிந்தனையை ஏதேதோ செய்தது. முகுந்தன் மகிழ மரத்தை வெறித்து நோக்கினான். 'மாதவி! இங்கு தானே நீ அவனைத் தழுவினாய் இறுக்க' என்று உள்ளே சொல்லிக் கொண்டான். அந்த நினைப்பு அவனுக்கு மீண்டும் வெறியை மூட்டியது. 'மாதவி யார், தான் யார்? அவளை எவன் கட்டியணைத்தால் தனக்கு என்ன?' என்று சிந்திக்கும் சக்தியை அவன் அறவே இழந்து கிடந்தான். ஆகவே சட்டென்று திரும்பி அறைக் கதவை நோக்கி நடந்து அதை முரட்டுத் தனமாகத் தாழிட்டு அதில் முதுகைச் சாத்திக்கொண்டு அங்கிருந்தே மாதவியை நோக்கினான். மாதவி பஞ்சணையில் லேசாக நெளிந்து சற்று வளைந்து படுத்தாள், அகஸ்மாத்தாக எறியப்பட்ட புஷ்ப மாலையைப் போல். அவள் கண்கள் மீண்டும் அவனை நோக்கின.

வாலிபத் துறவி வாலிபத்தை மட்டும் மனத்தில் தேக்கிக் கொண்டு துறவிப் பதத்தை தியாகம் செய்தான். அதன் விளைவாக வேகமாக நடந்து பஞ்சணையை நோக்கி வந்தான். மாதவி துறவியின் வருகையைக் கண்டு அஞ்சவுமில்லை. நாணத்தை அதிகமாகக் காட்டவுமில்லை. அவன் பழையபடி உட்கார இடம் விட்டு நகர்ந்து படுத்தாள்.

துறவி வந்து பழையபடி பஞ்சணை முகப்பில் உட்கார்ந்து தனது கையையும் அவள் உடலுக்குக் குறுக்கே போட்டான். போட்டதுடன் நிற்காமல் அவள் பூவுடலைத் தன்னை நோக்கி இழுக்கவும் செய்தான். அவள் அவனுக்கு அதிகமாக சிரமம் கொடுக்க விரும்பாததால் அவனை நோக்கித் தன் உடலைத் தானே நகர்த்தினாள். அப்படியே நிலைமை நீண்டிருந்தால் என்ன விபரீதம் நேரிட்டிருக்குமோ சொல்லமுடியாது. அந்தச் சமயத்தில் அறைக் கதவு லேசாக தட்டப்பட்டது.

மாதவியை இழுத்து அவளை நோக்கிக் குனியப்போன வாலிபத் துறவி சட்டென்று நெட்டுக்குத்தாக நிமிர்ந்து உட்கார்ந்தான். மீண்டும் இருமுறை லேசாகக் கதவு தட்டப்பட்டது. விழித்தான் வாலிபத் துறவி. ''யாரது''? என்று கேட்கவும் செய்தான்.

பதிலில்லாததால் மாதவியை நோக்கினான். அவள் எந்தவித உணர்ச்சியுமின்றிப் படுத்திருந்தாள். அந்த நிலையில் அவள் தனது உதவிக்கு வருவாளென்று துறவி எதிர்பார்த்திருந்ததால் ஏமாந்தே போனான். அவள் இதழை லவலேசமும் அசைக்காமல் ஏதும் பேசாமல் இருந்ததால் ''இப்பொழுது என்ன செய்யட்டும்''? என்று கேட்டான்.

''எது வேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்றாள் மாதவி.

''கதவு தட்டப்படுகிறது.'' -உக்கிரமாகப் பேசினான் துறவி.

''ஆம்.'' -சர்வ சாதாரணமாயிருந்தது மாதவியின் பதில்.



''ஒன்று அதைத் திறக்க வேண்டும் அல்லது பேசாமல் இருந்துவிட வேண்டும்'' என்றான் வாலிபத் துறவி.

''ஆம்.''

அந்த 'ஆம்' அவனுக்கு எரிச்சலைக் கொடுத்ததால் ''நான் கதவைத் திறந்தால் உன் பெயர் கெட்டுப் போகும்'' என்றான் முகுந்தன்.

''உங்கள் பெயர்?'' என்று அவள் கேட்டாள் பதிலுக்கு. வாலிபத் துறவிக்குக் கோபம் அதிகமாகி விடவே அவன், சட்டென்று எழுந்து சென்று கதவின் தாழை வேகமாக அகற்றினான். கதவையும் நன்றாகத் திறந்தான். திறந்தவன் ஏதோ பாம்பை மிதித்தவன் போலப் பின்னடைந்தான். இன்னொரு மாதவி கதவுக்குள் நுழைந்து வந்தாள். அவளை உள்ளே நுழையவிட்டுப் பின்னடைந்து நின்ற வாலிபத் துறவி, வந்தவளையும் கட்டிலில் கிடந்த மாதவியையும் மாறி மாறி நோக்கினான்.

அறையில் நின்ற திருக்கோலமும் படுத்திருந்த திருக்கோலமும் லவலேசமும் வித்தியாசமில்லாமல் இருந்தன. ஒரே அச்சில் வார்த்த இரு சொர்ண பிம்பங்கள்! இரண்டையும் பார்த்த வாலிபத் துறவியின் மனத்தில் மகிழ்ச்சியும் படர்ந்தது. மகிழ மரத்தடியில் மற்றொருவனைக் கட்டி அணைத்த காரிகை மாதவியல்லள் என்ற நினைப்பால்.

அந்த இரு பெணகள் நிலையில் மாறுதல் ஏதுமில்லை. இருவரும ஒருவரையொருவர் பார்த்து நகைத்துக் கொண்டார்கள். ''தேவகி! அவர் என்ன செய்கிறார்? என்று மாதவியே முதலில் வினவினாள்.

''நீராடப் போயிருக்கிறார். பாவம்! நீண்ட பயணத்தால் களைத்திருக்கிறார்'' என்றாள் தேவகி. அவள் சொற்களில் துன்பம் சொட்டியது. பிறகு கேட்டாள் வாலிபத் துறவியை சுட்டிக்காட்டி. ''இவர் என்ன செய்கிறார்'' என்று.

''அவரையே கேள் தேவகி!'' என்றாள் மாதவி.

தேவகி முகுந்தனை நோக்கினாள் தன் துயர விழிகளால். ''ஆமாம் துறவியாரே! நீங்கள் என்ன செய்கிறீர்கள்?'' என்று வினவினாள் தேவகி.

வாலிபத் துறவி விழித்தான். ''தவறாக நினைத்து விட்டேன்'' என்று சொன்னான் சிறிது நேரத்திற்குப் பிறகு.

''எதைத் தவறாக நினைத்துவிட்டீர்கள்?'' - தேவகியின் கேள்வி குழப்பத்துடன் வெளிவந்தது.

''உங்களை மாதவியென்று நினைத்து விட்டேன்.''

''அதனால்?''

இந்த இடத்தில் மாதவி குறுக்கிட்டு, ''என்னைத் தூக்கிப் படுக்கையில் போட்டார்'' என்று சொன்னாள்.

தேவகியின் கண்களில் சீற்றம் மிதமிஞ்சித் தோன்றியது. ''என் தங்கையைத் தொட உமக்கு என்ன துணிச்சல்.'' என்று சீறினாள்.

''மாதவி உங்கள் தங்கையென்று தெரியாது. இரண்டு பேரும் ஒரே மாதிரி இருக்கிறீர்கள்.'' -சங்கடத்துடன் இழுத்தான் வாலிபத்துறவி.

''உம்.''

''அதுமட்டுமல்ல.''

''வேறென்ன?''

''மகிழ மரத்தடியையும் பார்த்தேன்.''

இதைக் கேட்ட தேவகி மௌனம் சாதித்தாள். துறவியே தொடர்ந்தான். ''அங்கிருந்தது மாதவியென்று தவறாக நினைத்துவிட்டேன்'' என்று.





திடீரென்று உதித்த உணர்ச்சிகளைத் தேவகி அடக்கிக் கொண்டாள். ''அதற்கும் மாதவியை நீர் தொட்டுத் தூக்கிக் கட்டிலில் போட்டதற்கும் என்ன சம்பந்தம்? மாதவியை உங்களுக்கு முன்பின் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தெரியாது'' - வருத்தத்துடன் பதில் கூறினான் வாலிபத் துறவி.

''அப்படியிருக்க ஒரு பெண்ணைத் துறவியான நீர் தொடலாமா?'' என்று கேட்ட தேவகி ''நீர் இங்கு வந்தது சாஸ்திரம் படிக்கத்தானே?'' என்றும் வினவினாள்.

மாதவி கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். ''அப்படித் தான் சொன்னார் அக்கா'' என்றும் கூறினாள்.

இதைக்கேட்ட தேவகி நகைத்தாள். மாதவியும் அதில் கலந்து கொண்டாள். துறவி அவ்விருவரையும் நோக்கி ஏதும் அறியாமல் விழித்தான். அந்த மாளிகையை ஏதோ பெரும் மர்மம் சூழ்ந்திருக்கிறது என்று மட்டும் புரிந்து கொண்டான். அந்த இரு மாதரும் அவனை உற்று நோக்கினார்கள்.

இப்படி மூவரும் தங்களையே நோக்கிக் கொண்டிருந்ததால் மற்றொருவர் அந்த அறைக்குள் நுழைந்ததையோ, கதவுக்கருகில் சிலைபோல நின்றதையோ கவனிக்கவில்லை. மூவரில் அவரை முதலில் கவனித்த மாதவி கட்டிலிலிருந்து கீழே குதித்து ''அக்கா! அவர்...'' என்று அச்சத்துடன் உதிர்த்தாள் சொற்களை. அதைக் கேட்ட தேவகி சட்டென்று திரும்பினாள். மாதவி துறவியின் அருகில் வந்து, ''உம்! ஏன் நிற்கிறீர்கள்? மண்டியிட்டு வணங்குங்கள்'' என்று அவனைத் தள்ளினாள் வந்த மனிதன் எதிரே. சொன்னது மட்டுமின்றி தான் முதலில் சென்று வணங்கினாள். காரணம் ஏதும் தெரியாவிட்டாலும் வாலிபத் துறவியும் அவளுடன் சேர்ந்து வணங்கி எழுந்திருந்து வந்தவரை நோக்கினான்.

வந்தவர் ஆஜானுபாகுவாயிருந்தார். அவர் முகத்தில் வீரக்களை சொட்டிக்கொண்டு இருந்தது. கறுத்து அடர்ந்து சீராக வெட்டப்பட்டிருந்த முரட்டுக் குழல்கள் தலையிலிருந்து இறங்கிக் கன்னங்களில் வளைந்து நின்றன. அவர் ஆபரணங்கள் ஏதும் அணியவில்லை. அவற்றுக்குப் பதில் பல தழும்புகள் அவர் மார்பிலும் கைகளிலும் தெரிந்தன. அவர் இடையில் சாதாரண உடையை அணிந்திருந்தார். தோளில் மட்டும் ஓர் அங்கவஸ்திரம் துலங்கி தொடை வரையில் தொங்கிக் கொண்டிருந்தது. அவர் கண்கள் மிகத் தீட்சண்யமாயிருந்தன. அவரைச் சில விநாடிகள் அளவெடுத்து ஒரு மகாவீரன் முன்னிலையில் தான் நிற்பதைப் புரிந்து கொண்டான் முகுந்தன். ஆகவே கேட்டான் வந்தவரை நோக்கி "தாங்கள் யார்?" என்று.

வந்தவர் பதில் கூறவில்லை. மாதவியே பதில் கூறினாள். "உங்கள் முன்னிருப்பவர் விஷ்ணுகோப மகாராஜா" என்று பயபக்தியுடன் சொற்களை உதிர்த்தாள்.

முகுந்தன் விழிகளில் பயமும் பக்தியும் கலந்து விரிந்தன. தலை தானாக மீண்டும் தாழ்ந்தது.

"நீதான் சென்னியின் புதல்வனா" என்று விஷ்ணு கோபன் வினவினார். அவர் குரலில் அன்பு சொட்டியது.

"ஆம், மகாராஜா!" என்ற துறவியைத் துன்பம் நிறைந்த விழிகளால் நோக்கனார். "சென்னியின் புதல்வனே! நீ எத்தகைய ஆபத்தில் சிக்கியிருக்கிறாய் தெரியுமா?" என்று கேட்கவும் செய்தார்.

"தெரியாது மகாராஜா!" என்ற துறவியின் குரலில் குழப்பம் இருந்தது.

ஆபத்தை மகாராஜா விவரித்தார். துறவியின் திகில் எல்லை மீறியது.



# 9. அவனைச் சூழ்ந்த ஆபத்து

வாலிபத் துறவியை நோக்கி அவன் சிக்கியிருக்கும் ஆபத்தை விவரிக்கும் முன் மகாராஜா விஷ்ணுகோபரியன் தன் சீரிய கண்களால் மாதவியையும் தேவகியையும் நோக்கினார் சில விநாடிகள். "இந்த வீரனைச் சூழ்ந்திருக்கும் ஆபத்து எத்தன்மையுடையது என்பது உங்கள் இருவரில் யாருக்காவது தெரியுமா?" என்று தேவகியையும் மாதவியையும் வினவினார்.

"தெரியாது" என்றாள் மாதவி. தங்கையுடன் சேர்ந்து, "ஆம், தெரியாது" என்று தேவகியும் ஒத்துப் பாடினாள்.

"அப்படியானால் நீங்கள் மூவருமே அதைப் புரிந்து கொள்வது நல்லது" என்ற மகாராஜா மெல்லக் கம்பீரமாகச் சாளரத்துக்கு நடந்து சென்று வெளியே தமது கண்களை ஓடவிட்டார். பிறகு அதிலிருந்து சற்று விலகிஉள்ளே வந்து "வீரனே! நீயும் சாளரத்தின் மூலம் வெளியே பார்" என்று உத்தரவிட, வாலிபத் துறவியும் எட்டி வெளியே நோக்கினான். சற்று முன்பு விஷ்ணுகோப மகாராஜா தேவகியைக் கட்டியணைத்த அதே மகிழமரத்தடியில் சற்று பருமனான ஒரு மனிதன் நின்றிருந்தான். துறவி தலையை நீட்டியதும் மகிழமரத்து மறைவில் பதுங்கிக் கொண்டான்.

அந்த மனிதன் யாரென்பது புரிந்ததால் சீற்றத்தின் வசப்பட்ட முகுந்தன் சட்டென்று திரும்பி தன் மூட்டையிடம் சென்று நாகசர்ப்பத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அறையைவிட்டு ஓட முற்பட்டான். அவன் கையைத் தமது கையால் பிடித்த மகாராஜா "முகுந்தா! அவசரத் தினாலோ ஆத்திரத்தினாலோ எந்தக் காரியமும் சாதிக்கப்படுவதில்லை" என்று கூறி அவனைத் தடுத்ததன்றி "உனக்கு அவனை நான் காட்டியதன் காரணமே உன் ஆபத்தை விளக்கத்தான்" என்றும் விளக்கினார்.

''இந்தக் குடிகாரன்தான் என்னைச் சத்திரத்தில் சண்டைக் கிழுத்தான்'' என்ற முகுந்தன் முகத்தில் கோபம் பெரிதும் தாண்டவமாடியது.

''ஆம்.''- மகாராஜா சர்வ சாதாரணமாக ஒப்புக் கொண்டார்.

''சத்திரத்து விஷயம் தங்களுக்குத் தெரியுமா?'' வாலிபன் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

''தெரியும்'' என்றார் மகாராஜா.

இந்தச் சமயத்தில் தேவகியும் இடைப்புகுந்து, ''மகாராஜாவுக்குத் தெரியாமல் இந்த மாநகரத்தில் துரும்புகூட அசையமுடியாது'' என்று பெருமையுடன் கூறினாள். அவள் குரலிலிருந்த பெருமையிலிருந்தும் பிரேமையிலிருந்தும் அவளுக்கும் மகாராஜாவுக்குமிருந்த அந்நியோன்யம் மிகத் தெளிவாகத் தெரிந்தது வாலிபத்துறவிக்கு. ''மகாராஜாவுக்காக இவள் உயிரைக்கூட விடுவாள்'' என்று துறவி தனக்குள் சொல்லிக் கொண்டான். நினைவு அந்தத் திசையில் ஓடியதால் உடனடியாக அவன் உரையாடலைத் தொடங்கவில்லை. மாதவியே அவனை ஊக்கத் தொடங்கி, ''மேலே சந்தேகம் ஏதாவதிருந்தால் மகாராஜாவைக் கேட்டுவிடுங்கள்'' என்று கூறினாள்.

வாலிபத் துறவி மகாராஜாவை நோக்கினான். பல விநாடிகள் ஏதும் பேசாமல், பிறகு பேசத் தொடங்கிய போது அவன் சொற்கள் வியப்பு, கவலை ஆகிய இரண்டு உணர்ச்சிகளையும் கலந்து தாங்கியே வெளிவந்தன. ''மகாராஜா! இந்தக் காஞ்சியின் மர்மம் எனக்குப் புரியவில்லை. இது பாரதத்தின் மிகப் பெரிய நகரம். வித்தியார்த்திகளுக்குச் சிறந்த கல்விக் கோயில், கலைக்கு இருப்பிடம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். இது அளிக்கும் கல்வியைப் பெறவே தந்தையிடம் அனுமதி கேட்டேன். அவரும் ஓலை எழுதி முத்திரையிட்டுக் கொடுத்தார். அதில் என்ன





எழுதியிருந்தாரென்பது தெரியாமலே இங்கு வந்தேன். மாதவி ஓலையைப் படித்த பின்புதான் இங்கு நான் சாஸ்திர வித்தைகள் பயில மட்டுமின்றிக் காஞ்சிக்காகப் போராடவும் வந்திருக்கிறேனென்பதைப் புரிந்து கொண்டேன். நான் வந்தது. இங்கு புகுந்தது, பிறகு நடந்தது எல்லாவற்றிலும் பெரிய மர்மங்கள் புதைந்திருப்பதை நான் இப்பொழுது உணருகிறேன். இவற்றுக்கு என்ன காரணம்?'' -மெல்ல ஆனால் உறுதியாக பேசினான் துறவி.

மகாராஜாவின் கருணைக் கண்கள் அவன்மீது பதிந்தன. ''உன் அவசரந்தான் உன்னைக் காட்டிக் கொடுத்தது முகுந்தா!'' என்றார் மகாராஜா கருணை தமது குரலிலும் துலங்க.

துறவி தன் கூரிய விழிகளை மகாராஜாவின் மீது நிலைக்க விட்டான். ''என் அவசரமா!'' என்றும் வினவினான் மிகுந்த பணிவுடன்.

''ஆம், முகுந்தா!''

''விளங்கவில்லை மகாராஜா!''

''முகுந்தா! நீ காஞ்சியின் பெருவாயிலை அடைந்த போது கதவுகள் அடைக்கப்பட்டன.''

''ஆம்.''

''மூடப்பட்ட கதவுகளையும் மீறிக் காஞ்சியின்பெரும் மதில் சுவரில் ஏறி உள்ளே வந்தாய்.''

''உண்மை மகாராஜா....!''

''இதற்குப் பதில் சொல்லுமுன் சிறிது சிந்தித்தான் முகுந்தன். ''இத்தனையும் மகாராஜாவுக்கு இதற்குள் எப்படித் தெரிய வந்தது? மாதவி சொல்லியிருப்பாளா? இருக்காது. வந்ததிலிருந்து மாதவிதான் என்னை விட்டு அகலவே இல்லையே. தேவகி

சொல்லியிருப்பாளா? அவள் என்னைப் பார்க்கவே இல்லையே. மஹாயனர் சொல்லியிருப்பாரா? இருக்காது; அவரும் மகாராஜாவும் சந்திக்க அவகாசம் இல்லையே! அப்படியானால் இத்தனையும் மகாராஜாவுக்கு எப்படித் தெரிந்தது?''

-இப்படிப் பல கேள்விகளை உள்ளூரக் கேட்டுக் கொண்ட முகுந்தனை நோக்கிப் புன்முறுவல் காட்டினார் மகாராஜா. ''முகுந்தா! இன்று மாலை நீ இந்நகருக்குள் நுழையாது வெளியில் தங்கி நாளை வந்திருந்தால் உன்னைப்பற்றிக் காஞ்சியில் அதிகமாக எதுவும் தெரிந்திருக்காது. ஆனால் உன் அவசரம், நீ அநாயாசமாக மதில் மீது ஏறிய திறன், இவை உன் வரவைப் பறைசாற்றிவிட்டன'' என்ற மகாராஜா கேட்டார்: ''ஆமாம் முகுந்தா! நீ கேட்டதும் மதில் மீதிருந்த காவலன் கயிற்றைத் தொங்கவிட்டானே. அவனை உனக்கு முன்பே தெரியுமா?'' என்று.

''எப்படித் தெரியும்? நான் இங்கு ஊருக்குப் புதியவனாயிற்றே'' என்று கேட்டான் முகுந்தன். மகாராஜாவின் கேள்வியின் பொருள் அவனுக்குப்பளிச்சென்று புரிந்ததால் சிறிது குழம்பவும் செய்தான்.

''உன்னைக் காவலனுக்குத் தெரியாது. நீ துறவி, நாடோடியாகத் தெரிகிறாய். போகிற வருகிற நாடோடிகளுக்கெல்லாம் நகரப் பெருவாயிலைத் திறக்கும் அளவுக்குக் காஞ்சியின் காவலர் இழிபட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறாயா முகுந்தா?'' என்று வினவினார் மகாராஜா.

''அப்படியானால் என்னைக் காவலன் அனுமதித்தது.... எனக்குக் கயிறு வீசியது...'' என்று இழுத்தான் முகுந்தன்.

''வேறொருவன் உத்தரவால், நீ ஓடி வருவதை அவன் கவனித்தாலும் கவனிக்காதது போலிருந்தான். கதவு மூடப்பட்டதும் நகருக்குள் சொல்லாமல் கதவின் மறு பக்கத்தில் நின்றான். உன் குரல் கேட்டதும் நிதானித்தான். பிறகு காவலர்களுக்குச் சைகை செய்து போய்விட்டான். அதனால்தான் காஞ்சிக்குள் நீ விளக்கு வைத்துப்



புக முடிந்தது. அந்தி வேளைக்குப் பிறகு ஈ காக்காய் கூடப் புகமுடியாது. காஞ்சிக்குள் நீ புக முடிந்ததன் காரணம் காவலன் கருணையல்ல. நீ உள்ளே வர இன்னொருவன் ஆசைப்பட்டான்.''

மகாராஜாவின் விவரம் துறவியை சிந்தனையில் ஆழ்த்தியது. அதுவரை புரியாத பல விஷயங்கள் புரியலாயின. ஆனால் அப்படித் தன்னைக் கண்காணித்தவன் யாரென்பதைத் தெரிந்து கொள்ள மகாராஜாவை நோக்கிக் கேட்டான். ''அந்த மனிதர் யாரென்பதை நான் அறியலாமா?'' என்று.

மகாராஜா முகுந்தனை உற்று நோக்கினார். ''முகுந்தா! உனக்கு முன்பு காஞ்சியில் யார் நுழைந்தது?'' என்றும் வினவினார்.

''புரவி வீரர் கூட்டம்'' என்றான் முகுந்தன்.

''அந்தக் கூட்டம் உன்னைக் கடந்துதான் வந்திருக்க வேண்டும்.''

''ஆம் மகாராஜா! புரவிகளுக்குச் சமமாக என்னால் ஓட முடியுமா?''

''முடியாது. முடியாது. ஆனால் அந்தக் கூட்டம் உன்னைத் தாண்டிச் சென்றது. உனக்கு முன்பு உள்ளேயும் நுழைந்துவிட்டது. அந்தக் கூட்டத்திற்கு ஒரு தலைவன் இருந்தான்...'' மகாராஜா - வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

''ஆம் மகாராஜா! உபதளபதி போல் உடையணிந்திருந்தான்'' என்றான் முகுந்தன்.

''அவன் உப தளபதிதான். காஞ்சியைக் காக்கும் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது'' என்று மகாராஜா சுட்டிக் காட்டினார்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையாட்டிய முகுந்தன் ''அதனால்?'' -ஏதோ கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டான்.

''உன்னை வழியிலேயே கண்ட புரவி வீரர் தலைவன் காஞ்சிக்குள் புகுந்ததும் உடனடியாக இருப்பிடம் செல்லவில்லை. கதவுக்கு அப்புறம் புரவியிலேயே காத்திருந்தான். உன்னை உள்ளேவிடச் சைகையும் செய்துவிட்டு போய்விட்டான். பிறகு நடந்ததெல்லாம் தற்செயலாக நடந்ததல்ல'' என்று மகாராஜா கூறினார்.

''அவன் பெயர்?'' - சினத்துடன் வினவினான் முகுந்தன்.

''பலபத்திரன், வீரபத்திரன் தம்பி'' என்றார் மகாராஜா.

''அப்படியானால் வீரப்பத்திரன் சத்திரத்துக்குக் குடித்துவிட்டு வந்தது. என்னைச் சண்டைக்கிழுத்தது எல்லாம்...''

''முன்னேற்பாடு. காஞ்சியின பெருமதிலை ஏறி, மாலைக்குப்பின் நகருக்குள் யாரும் புகக்கூடாதென்ற உத்தரவையும் மீறி, ஒருவன் இந்த நகருக்குள் புகுந்தால் அவனை ஒற்றர்கள், அதுவும் பலபத்திரன் ஒற்றர்கள் கவனிக்காமல் இருப்பார்களென்று நினைக்கிறாயா? அப்படி எல்லாரும் இஷ்டப்படி இந்நருக்குள் நுழைவதானால் இதன் கதி அதோகதியாகி மாதம் ஆறு ஆகி இருக்கும்'' என்று விளக்கிய மகாராஜா, ''முகுந்தா! உன் வரவை நீயே பறைசாற்றிவிட்டாய். அதனால் உன் திறமையைச் சோதிக்க வீரபத்திரன் யதேச்சையாகத் தோன்றினான். சத்திரத்தில் உன்னைக் காக்க மஹாயனரும் விரைந்தார். உன்னைப் பிடித்த நல்ல காலம் நீ இங்கிருக்கிறாய், உன்னைக் கொல்ல வந்த வீரபத்திரன் அதோ மகிழ மரத்தடியில் நிற்கிறான்'' என்று மன்னர் விளக்கினார்.

''ஆம் பார்த்தேன் அவனை'' - என்றான் முகுந்தன்.

''அதனால் அவனைக் கொல்ல நாகசர்ப்பத்தை எடுத்துக் கொண்டு ஓட முனைந்தாய்.''

''ஆம் மகாராஜா!''



''மஹாயனா அவனைச் சிறைக்கு அனுப்பவில்லையா?''

''அனுப்பினார்.''

''அப்படியானால் அவன் மகிழமரத்தடிக்கு எப்படி வந்தான்?''

''பலபத்திரன் விடுவித்து விட்டானா?''

''ஆம''

மஹாயனர் உத்தரவையும் மீறியா?''

''மஹாயனருக்குத் தெரியாது.''

''இத்தனையும் பலபத்திரன் செய்யக் காரணம்?''

மகாராஜா நிதானித்தார். பிறகு மாதவியைப் பார்த்தார். ''நீயே சொல் மாதவி'' என்றார்.

அதுவரை ஏதும் பேசாமல், இமையைக்கூட கொட்டாமல் முகுந்தனைப் பார்த்துக் கொண்டிருந்த மாதவி சொன்னாள். 'துறவியாரே! பலபத்திரன் உங்களை நாளைக்குள் தீர்த்துக் கட்டப் பார்க்கிறான். இந்த மாளிகையைவிட்டு வெளியே சென்றால் உங்கள் உயிர் செல்லாக் காசு பெறாது'' என்று.

முகுந்தன் விழித்தான் ஏதும் புரியாமல். ''என்னை ஏன் பலபத்திரன் கொல்ல வேண்டும்?'' -என்று வினவினான்.

''நீங்கள் சென்னியின் மகன் என்பதால்'' என்றாள் மாதவி.

## 10. காஞ்சியின் துரோகி

மாதவியின் சொற்கள் முகுந்தனை மிதமிஞ்சிய வியப்புக்குள் ஆழ்த்தியதால் அவன் சொன்னான் மாதவியை நோக்கி ''மாதவி! முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாயே'' என்று.

அதனால் விழித்துக் கொண்ட மாதவியின் திடமனம் கூட அப்பொழுது குழம்பியதால் அந்தக் குழப்பச் சாயை முகத்திலும் விரிய விஷ்ணுகோப பல்லவனை நோக்கினாள். அதைக் கண்ட மகாராஜா மெல்ல நகைத்தார். ''மாதவி! ஆபத்தான காலத்தில் இருப்பவர்கள், ஆபத்தான அரசியலில் கலப்பவர்கள் பேச்சில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று நகைப்பின் ஊடே கூறிய மன்னர், ''இவனை நோக்கியிருக்கும் ஆபத்து இன்னதென்று தெரியாது என்று முதலில் கூறிய நீயே அந்த ஆபத்தைப் பின்னர் விவரித்தாய்'' என்றும் விளக்கிக் காட்டினார். ''மாதவி நடந்ததையெல்லாம் உனக்கு மஹாயனர் சொல்லியிருப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. தமது அந்தரங்கத்தை அவர் உன் ஒருத்தியிடம் தான் கொட்டுகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால்தான்....'' என்று மேலும் ஏதோ சொல்லப்போன மகாராஜாவின் சொற்களை இடையில் வெட்டிய மாதவி, ''கதையைச் சொல்லிக் கொண்டே போய் திடீரென 'நீயே சொல் மாதவி' என்று திருப்பிவிட்டீர்கள் நீங்கள். பெரிய உணர்ச்சிவசத்தில் மயங்கியிருந்த நானும் உளறிவிட்டேன்'' என்று கூறித் தமது சகோதரியையும் பார்த்து துறவியையும் நோக்கினாள்.

தேவகியின் கண்கள் வியப்புடன் நோக்கினமாதவியை. ''மாதவி! என்னிடம் இதுவரை நீ எதையும் மறைத்ததில்லையே'' என்றும் குற்றம் சாட்டும் குரலில் கூறினாள் தேவகி.

மாதவி சொன்னாள்: ''நான் என்ன செய்வது அக்கா? குருநாதர் கட்டளை. அந்தக் கட்டளையையும் மீறி என்னைப் பேசவைத்து விட்டார் மகாராஜா, நான் அயர்ந்திருந்த சமயத்தில்'' என்று.

சகோதரிகள் சண்டையைத் தீர்க்க மகாராஜாவே முன்வந்தார். ''தேவகி, மாதவி என்ன செய்வாள்? பல்லவ ராஜ்யத்தின் பெரும் சுமையை மஹாயனர் அவள் தலை மீது ஏற்றி வைத்திருக்கிறார். அவள் இன்றுவரை வாய்திறக்கவில்லை. ஆனால் யானைக்கும்



அடி சறுக்கும் அல்லவா?'' என்று கூறிய மகாராஜா ''உன்னிடம் சகலத்தையும் சொல்ல நானிருக்கிறேனே?'' என்றார்.

தேவகியின் வசீகரக் கண்கள் பல்லவனை விழுங்கி விடுவனபோல் பார்த்தன ''என்ன சொல்லிவிட்டீர்கள் அப்படி? இந்தத் துறவியைப் பற்றிச் சொன்னீர்களா?'' என்று அன்பு கலந்து ஆனால் வருத்தம் ஒலித்த குரலில் கேட்டாள்.

மகாராஜா அவளருகில் சென்று முதுகில் ஆதரவுடன் கையை வைத்தார். ''என் பிற்கால ராணிக்கு வேதனை அளித்து அவள் உள்ளத்தையோ, உடலையோ, அழகையோ குலைக்க நான் விரும்பவில்லை'' என்று மிகுந்த வாஞ்சையுடன் பேசினார்

தேவகியின் உள்ளம் அதில் சாந்தியடையவில்லை. மஹாயனரோ, மகாராஜாவோ மாதவியை நம்பும் அளவுக்குத் தன்னை நம்பவில்லை என்பதைப் புரிந்து கொண்டதால மனம் வெதும்பினாள். ''இந்த அரசியலின் தலை வேதனை எனக்கு எதற்கு? நான் போகிறேன் வெளியே'' என்று கூறி வெளியே செல்லவும் கிளம்பினாள்.

''இருங்கள் தேவகி! உங்களை நான் நம்புகிறேன்'' என்று துறவி அவளைத் தடுத்தான்.

தேவகி அவனை அனுதாபம் நிரம்பிய கண்களால நோக்கினாள். ''துறவி! உமக்கும் எதுவும் தெரியாது எனக்கும் எதுவும் தெரியாது. சகலமும் தெரிந்த இந்த இருவரிடமும் நமக்கென்ன வேலை? நீங்கள் வாருங்கள் போவோம்'' என்று இகழ்ச்சி ததும்பிய குரலில் அவனையும் அழைத்தாள.

வாலிபத் துறவியின் முகத்தில் புன்முறுவல் தெரிந்தது ''தெரியாததைத் தெரிந்து கொள்வது அவசியமல்லவா?'' என்று வினவினான், ஏளனம் ஒலித்த குரலில்.

''எனக்கு அவசியமில்லை'' என்றாள் தேவகி.

''எனக்கு அவசியமிருக்கிறது'' என்றான் துறவி.

''என்ன அப்பேர்ப்பட்ட அவசியம்?'' -தேவகியின் கேள்வியில் சினம் தொனித்தது.

''தலையைப் பற்றியது''

''தலையைப் பற்றியதா?''

''ஆம்! என் தலை போகுமென்று இவர்கள் இருவரும் சொல்லவில்லையா?'' என்று மாதவியையும் மகாராஜாவையும் சுட்டிக்காட்டினான் துறவி.

இவர்கள் இருவரையும் என்று அவர்களைச் சேர்த்துத் துறவி கூறியது வேப்பங்காயாக இருந்தது தேவகிக்கு.

''ஆமாம்! இருவரும் ரகசியக்காரர்கள், அவர்களைத் தனியே விடுவது நல்லதல்லவா?'' என்று கேட்டாள் அவள்.

''அந்த ரகசியம் என் உயிரைப்பற்றி இல்லாமலிருந்தால் நானும் உங்களுடன் வருவேன். இப்பொழுது நானிருக்கிற நிலைமையில் எதையும் பூர்ணமாக அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?'' என்று கேட்ட துறவி ''தேவகி! இந்தச் சதிகாரர்கள் சொல்வதை முழுவதும் கேட்போம்'' என்றான்.

அதுவரை மௌனமே சாதித்த மாதவி ''சதிகாரர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று வினவினாள். அவள் குரலில் சீற்றம் மிதமிஞ்சி கிடந்தது.

துறவி நகைத்தான், அவள் கோபத்தைக் கண்டு. ''ஒளிவு மறைவாக நான் ஏதும் சொல்லவில்லையே?'' என்று கூறினான்.

''மகாராஜாவைச் சதிகாரர் என்று குற்றம் சாட்டியதற்கே மரணதண்டனை உண்டு'' என்று சுட்டிக்காட்டினாள் மாதவி.

''மாதவி!'' -அன்புடன் அழைத்தான் துறவி.



''என்ன?'' -கேள்வி கடுசொல்லாக வந்தது மாதவியிடமிருந்து.

''என்னை யார் கொன்றாலென்ன? பலபத்திரன் கொன்றாலென்ன? குற்றம் சாட்டியதற்காக மகாராஜா கொன்றாலென்ன? இரண்டிலும் முடிவு ஒன்றுதானே?'' என்ற முகுந்தன் சோழநாட்டுத் துணிச்சலைக் காட்டலானான். ''மாதவி! என் உயிர் அவ்வளவு அற்பமானதன்று. அதைக் கொண்டு போகு முன்பு பலர் எனக்கு முன்பாகப் போய்ச் சொர்க்கத்தில் காத்திருப்பார்கள். சொர்க்கம் என்று தவறிச் சொல்லிவிட்டேன். சிலர் நரகத்திற்கும் போவர். இங்குள்ள மர்மத்தைப் பார்த்தால் நாணயமான எந்த மனிதனும் காஞ்சியில் நடமாட முடியாது போலிருக்கிறது'' என்றான்.

மாதவியின் கண்கள் நெருப்பைக் கக்கின. ''அதிகமாகப் பேசுகிறீர்கள். குற்றம் வளர்ந்து கொண்டே போகிறது'' என்று கூறினாள் அவள்.

''குற்றத்தைத் துவக்கியது நானல்ல மாதவி! அதை வளர்ப்பதும் நானல்ல. நான் படிக்க வந்தேன் இந்த நகருக்கு. ஆத்திரமிகுதியால் சுவரேறி வந்தேன். ஆனால் ஒருவீரனின் அவசரத்தில் பலசிக்கல்கள் ஏற்படுமென்பதை இன்றுதான் உணர்ந்தேன். அது கிடக்கட்டும். பலபத்திரன் என்னை ஏன் கொல்ல வேண்டும்? நான் சென்னியின் மகனாயிருந்தால் என்ன?'' என்று கேட்டான் துறவி.

மாதவி மகாராஜாவைப் பார்த்தாள். மகாராஜா சொல் என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினார். மாதவி சொன்னாள்: ''வீரரே! உங்கள் தந்தை படைகளை நடத்துவதில், போரில் வாள் சுழற்றுவதில் இணையிலா வீரர் என்பது பிரசித்தம். அப்பேர்ப்பட்டவரின் மகன் காஞ்சி வருகிறான். வீரர்கள் போர்க்காலத்தில் ஏறுவது கூடக் கடினமான காஞ்சி மதில்மீது அநாயாசமாக ஏறுகிறான். நாகசர்ப்பத்தைக்காட்டி யாரும் அஞ்சும் வீரபத்திரனைக் காயப்படுத்துகிறான். இதையெல்லாம் திரட்டிப் பார்த்தால் முடிவு என்ன?'' என்று

''மேலும் நீங்களே விவரித்து விடலாம்'' என்றான் துறவி.

''இந்த நகரத்தைப் பாதுகாக்க வேறொரு தளபதியை, சென்னியின் புதல்வரைக் கொண்டுவந்திருக்கிறார் மகாராஜா என்பதுதான் முடிவு'' என்று விளக்கினாள் மாதவி.

இதை வாலிபத் துறவியின் கூரிய புத்தி ஏற்கெனவே ஊகித்திருந்தாலும் அதைப் புதிதாகக் கேட்பவன்போல் கேட்டுக் கொண்டான். ''நியாயம்'' என்று ஒற்றைச் சொல்லில் பதிலும் சொன்னான்.

''எது நியாயம்?''

''எல்லாரும் என்னை ஏமாற்றியது.''

''யார் ஏமாற்றினார்கள்?''

''முதலில் என் தந்தை. காஞ்சிக்குப் படிக்கப் போ என்றார். ஓலையில் போருக்கு இவனை உபயோகப்படுத்தலாம் என்று குறிப்பிட்டார். நான் சோழ மன்னன் மகன் என்பதை வழியில் பலபத்திரன் பார்த்தும் பார்க்காதது போலப் போகிறான். உள்ளே அனுமதித்துத் தீர்த்துக் கட்டப் பார்க்கிறான். நான் அவன் பதவிக்குப் போட்டி என்று நினைக்கிறான். இதை மஹாயனர் என்னிடம் சொல்லாமல் உன்னிடம் சொல்லிவிட்டுப் போகிறார். திடீரென மகாராஜா வருகிறார், விஷயத்தை விவரிக்கிறார். இதில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. மாதவியாரே! நீங்களே சொல்லிவிடுங்கள்'' என்று மிக விஷமமாகப் பேசினான் துறவி.

இத்தனையும் கேட்டும் அவன் குரலில் இம்மியளவும் அச்சமில்லாததைக் கவனித்த மகாராஜா பெருமூச்செறிந்தார். ''இவனும் இந்த காஞ்சியும் ஒன்று'' என்று கூறினார் பெருமூச்சின் ஊடே.

துறவி மன்னனை நோக்கினான். ''எப்படி மகாராஜா?'' என்று வினவினான்.



மகாராஜா உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அறையில் இருமுறை அங்கும் இங்கும் நடந்தார். அவர் முகத்தில் தீர்க்கசிந்தனை படர்ந்து கிடந்தது. அவர் பேசிய போது அதில் சோகமும் ஓரளவு கலந்துகிடந்தது. ''காஞ்சி இன்று மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறது. ஆத்திரத்தில் ஏற்பட்டிருக்கும் எதிரிகளின் படையெடுப்பு இங்கு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் வரும். வந்தால் காஞ்சி அழியும். காஞ்சி அழிந்தால் அதன் கலைக் கூடங்கள் அழியும். மதக் கூடங்கள் அழியும். வித்யா கூடங்கள் அழியும். அப்பொழுது காஞ்சி உருக்குலைந்து போகும். அந்த உருக்குலைவிற்கு காரண கர்த்தாக்கள் காஞ்சிக்குள்ளும் இருக்கிறார்கள். ஆகவே, காஞ்சியை நீ காப்பாற்ற முனைந்தால் உன்னையும் அழிக்க சம்பந்தப்பட்டவர்கள் அஞ்சமாட்டார்கள். நீ இதைக் காக்க வந்திருப்பதாக பலர் நினைக்கிறார்கள். அவர்களில் பலபத்திரனும் ஒருவன்'' என்று விளக்கிய மகாராஜா, ''சென்னியின் மகனே, காஞ்சியும் நீயும் இனி ஒன்று. காஞ்சிக்கு உள்ள ஆபத்து உனக்கும் உண்டு. அதன் அழிவில் ஆசையுள்ளவர்கள் உன்னையும் அழிப்பார்கள்'' என்றார்.

''பலபத்திரன் காஞ்சிக்குத் துரோகியா'' என்று துறவி கேட்டான்.

''நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்றார் மகாராஜா.

''இத்தனை நேரம் நீங்கள் சொன்னதெல்லாம் என்ன?''

''பலபத்திரன் நேர்முக எதிரியல்ல. வேறு ஒருவரின் ஆயுதம்.''

''அவர் யார்?''

''அதுதான் தெரியவில்லை எனக்கு.''

''நாட்டை அழிக்க ஆயுதமாயிருப்பவனும் துரோகி தானே?''

''ஆம்.''

''அப்படியானால் அவனைச் சிறை செய்தாலென்ன?''

"எந்தச் சிறையிலும் அவன் ஒரு நாளைக்குமேல் இருக்க மாட்டான்."

"ஏன்?"

"அவனை உபயோகிப்பவர் வெளியே விட்டு விடுவார்."

"அவர் யாரென்பது தெரியுமா?"

"திட்டமாகத் தெரியாது. ஆனால் ஓரளவு ஊகிக்கிறேன்."

"சந்தேகத்தில் சிறை செய்யலாமே?"

"அது அவ்வளவு எளிதல்ல. அவரை நாம் தொட முடியாது. தவிர அவரைத் தொட்டால் எதிரியின் கடல் போன்ற படை ஒரே வாரத்தில் காஞ்சியில் நுழைந்து விடும்.

வாலிபத் துறவி சிந்தனையில் இறங்கினான். "என்னிடம் உங்கள் ஊகத்தைச் சொன்னால் என்ன?" என்று கேட்டான் நீண்ட நேரத்திற்குப் பிறகு.

"பயனளிக்காது" என்றார் மகாராஜா திட்டவட்டமாக.

மீண்டும் சிந்தனையில் இறங்கினான் துறவி. அவன் முடிவாகப் பேசியபோது அவன் குரலில் உறுதியிருந்தது. "மகாராஜா! இந்தப் பலபத்திரனை நான் பார்க்க வேண்டும்" என்றான்.

"எதற்காக?"

"காஞ்சியின் காவலனே அஞ்சும் உபதளபதியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசைதான்."

"பொறுப்பது நல்லது" என்று மகாராஜா புத்தி கூறினார்.

ஆனால், பொறுப்பதற்கு அவசியமில்லாது போயிற்று. அந்தச் சமயத்தில் வாயிற்படியில் வந்துநின்ற பணிப்பெண், "மகாராஜா! பலபத்திரர் உங்களைக் காண வந்திருக்கிறார்" என்று அறிவித்தாள்.



## 11. அடி வேசி

பலபத்திரன் வரவைப் பணிப்பெண் அறிவித்த உடனேயே அந்த அறைக்குள்ளிருந்த தேவகியும், துறவியும் குழப்பத்துக்குள்ளானார்கள் என்றாலும் மகாராஜாவும் மாதவியும் எந்தவித உணர்ச்சியும் காட்டவில்லை, தங்கள் முகங்களில். பணிப்பெண்ணுக்கு மகாராஜா பதில் சொல்லுமுன்பு மாதவியே பதில் கூறினாள். "உபதளபதியைப் பளிங்கு மண்டபத்துக்குப் பக்கத்திலுள்ள அறையில் உட்காரச் சொல், மகாராஜா வருவார்" என்று.

பணிப்பெண் சிறிது நிதானித்தாள். "அம்மா! மிக அவசரமாக மகாராஜாவைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார் பத்ரவர்மர்" என்று கூறவும் செய்தாள் தயக்கத்துடன்.

மாதவி சிறிதும் தயங்கவில்லை. "உடனடியாக வருவதாகச் சொல்" என்று சிறிது கடுமையாகவே பணிப்பெண்ணுக்கு உத்தரவிட்டாள்.

மாதவியின் குரலில் ஒலித்த கடுமைக்குப் பின்பு பணிப்பெண் நிற்கவில்லை. வெகு வேகமாக வெளியே சென்று விட்டாள். அவள் சென்றதும் மகாராஜா விஷ்ணுகோபன் தனது வீரவிழிகளை மாதவியின் மீது திருப்பினான். ஏதோ கேள்வி கேட்கும் பாவனையில். மாதவி ஒரு விநாடிதான் சிந்தித்தாள். "மகாராஜா! ஓர் உபதளபதியின் அழைப்புக்காக மகாராஜா உடனடியாக ஓடுவது மரியாதையல்ல!" என்று கூறி மகாராஜாவை உற்றுப் பார்த்தாள். மகாராஜாவின் விழிகள் மாதவியின் விழிகளுடன் கலந்தன. அவள் விழிகள் ஏதோ செய்தி சொல்லியிருக்க வேண்டும். "சரி மாதவி! வேறு யாரையாவது அனுப்பி பலபத்திரனை நிதானப்படுத்து" என்று மகாராஜா கூறினார் முடிவில்.

இந்த இடத்தில் துறவியார் தமது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள ஆசைப்பட்டு, "மகாராஜா! இந்த உபதளபதியின் பெயர் அடிக்கடி மாறுகின்றதே?" என்று விசாரித்தான்.

"எப்படி மாறுகின்றது?" என்று மகாராஜா கேட்டார்.

"முதலில் இவனைப் பலபத்திரன் என்று அழைத்தீர்கள்? பணிப்பெண் பத்ரவர்மன் என்று சொன்னாள். இந்த இரண்டில் எது சரி?"

"இரண்டும் சரி?"

"எப்படி?"

"இவன் பெயர் பலபத்திரன் தான். ஆனால், பல்லவ அரச வம்சத்தில் பிறந்தவன். ஆகவே, தன்னை பலபத்திர வர்மன் என்று அழைத்துக் கொண்டான். காலம் முதல் இரண்டு எழுத்துக்களை அழித்துவிட்டது. மக்கள் இவனை பத்ரவர்மன் என்று அழைக்கிறார்கள்."

"அதற்கும் காரணம் உண்டா? என்ன காரணம்?"

இதற்கு மகாராஜா பதில் சொல்லாததால் மாதவியே சொன்னாள். "இவன் பல்லவ சாம்ராஜ்யத்தின் அடுத்த அரசனாகத் தன்னை நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே 'வர்ம' சப்தத்தைவிடாது பெயரில் இணைத்துக் கொள்கிறான். அவனை மாற்றி அழைத்தால் அவனுக்கு வரும் கோபம்-உம் நீங்களே மாற்றி அழைத்துப் பார்ப்பது நல்லது" என்றாள் மாதவி.

துறவியின் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. "எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை" என்று துறவி சட்டென்று வரவேற்பறையை நோக்கிக் கிளம்பினான்.

"முகுந்தா!" என்ற விஷ்ணுகோபன் சொல், துறவியைத் தடுக்கவே துறவி திரும்பிப் பார்த்தான்.



"என்ன மன்னவா?" என்று வினவவும் செய்தான்.

"எங்கு போகிறாய்?" என்று வினவிய மன்னன் குரலில் லேசாகக் கடுமை ஒலித்தது.

"மாதவியாரின் விருப்பத்தை நிறைவேற்ற" என்றான் துறவி, ஏளனம் தொனித்த குரலில்.

"மாதவியின் கண்கள் துறவியைக் கோபத்துடன் நோக்கின. "இந்த மரியாதை எப்பொழுது வந்தது?" என்றும் கேட்டாள் எரிச்சலுடன்.

"மரியாதையா?"

"ஆம்; மாதவியார் என்று அழைக்கவில்லை நீங்கள்?"

"ஓ, அதுவா?"

"ஆமாம்!"

"பழக்கம்."

"என்ன பழக்கம்?"

"சோழநாட்டுப் பழக்கம்."

"அதுஎன்னவாம்?"

"யாரையும் மரியாதையாக அழைப்பது."

இதைக் கேட்டதும் மாதவி கலகலவென்று நகைத்தாள். "முன்பின் தெரியாத பெண்ணைத் தூக்கிக் கட்டிலில் போடுவதும், பாலை அருந்த அவளைக் கட்டாயப்படுத்துவதும் சோழ நாட்டு மரியாதைகளில் ஒன்றா?" என்றும் வினவினாள் நகைப்பின் ஊடே.

விஷ்ணுகோப பல்லவனின் முகத்தில் சினம் மெல்ல உதயமாயிற்றென்றாலும் அவர் அதை வெளிக்காட்டவில்லை. ஆனால் அவர் துறவியை அழைத்தபோது அவர் குரலில் ஒரு விபரீத ஒலி இருந்தது.

"சென்னியின் மகனே!" என்று அழைத்தார் மகாராஜா.

"மகாராஜா!" - துறவி தலை வணங்கினான்.

"மாதவி சொல்வது உண்மையா?" என்று கேட்டார் மகாராஜா.

"எனக்குத் தெரிந்தவரை மாதவி பொய் சொல்வாரென்று தோன்றவில்லை" என்றான் துறவி.

"மாதவியின் மனத்தை, குணத்தை எடை போடும் அளவுக்கு எத்தனை நாள் பழகியிருக்கிறாய்?" என்று மகாராஜா கேட்டார்.

"ஒருவர் குணத்தை எடைபோட நாட்கள் தேவையா?"

"நாழிகைகள் போதும்."

"விநாடிகளே போதும் மகாராஜா."

"அத்தனை வல்லவனா நீ?"

"ஆம்."

"என்ன ஆம்?"

"மனோதத்துவ சாஸ்திரம் படித்திருக்கின்றேன்."

இந்தச் சமயத்தில் உரையாடலில் புகுந்தாள் மாதவி.

"ஆம் மகாராஜா! மனோதத்துவ சாஸ்திரம் மட்டுமல்ல, மன்மத சாஸ்திரமும் படித்திருக்கிறார்" என்று கூறி நகைத்தாள் மீண்டும்.

இம்முறை மகாராஜாவின் இதழ்களில் கூட இளநகை சிறிது அரும்பியது. "மாதவி! விளையாட இது சமயமல்ல" என்று கூறினார். "மாதவி! இவன் ஒன்று பெரிய மேதையாய், வீரனாய் இருக்க வேண்டும். அல்லது அசட்டுத் துணிச்சலுள்ள பைத்தியமாயிருக்க வேண்டும். இவனைக் காஞ்சியைக் காக்க நியமிப்பது அத்தனை உத்தமமாகப் படவில்லை எனக்கு"



மாதவி சில விநாடிகள் பதில் சொல்லவில்லை. "இவர் தந்தை அதற்குத்தானே இவரை அனுப்பியிருக்கிறார்?" என்றாள் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

அதுவரை பொறுத்திருந்த துறவி சிறிது இரைந்தே நகைத்தான். "மகாராஜா! அந்தப் பெரும் பதவியை நான் கேட்கவில்லை. ஒப்புக்கொள்வேனா மாட்டேனா என்பதும் உங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீங்களே பதவி கொடுத்து, நீங்களே அதைத் திருப்பி வாங்கிக் கொள்கிறீர்கள்" என்று நகைப்பின் ஊடே தெரிவித்த துறவி "மகாராஜா! ஸ்திர புத்தியில்லாத நீங்கள் எப்படிப் பல்லவ காஞ்சியை, பல்லவ சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றப் போகிறீர்கள்?" என்றும் கேட்டான் மிக அலட்சியமாக.

துறவியின் துணிவைக் கண்ட மாதவி அசந்து போனாள். அதுவரை சற்றுத் தள்ளி கட்டிலில் உட்கார்ந்திருந்த தேவகி சட்டென்று எழுந்தாள். விழிகள் நெருப்பைக் கக்க "என்ன சொன்னாய் முகுந்தா! சமுத்திர குப்தன் கூட படையெடுத்து அணுகத் தயங்கும் காஞ்சி மன்னரைப் பற்றியா இப்படிப் பேசுகிறாய்? உன்தலை இனி செல்லாக் காசு பெறாது" என்றாள் சீற்றத்தால் உதடுகள் துடிக்க.

அசந்துபோன மாதவியும் கவிழ்ந்த கண்களைத் துறவியின் மீது நாட்டினாள். "மன்னனை அவமதிக்கும் யாரும் இந்த வீட்டில் தங்கமுடியாது" என்றாள் வறண்ட குரலில்.

"இதோ இப்பொழுதே வெளியேறத் தயாராகிறேன்" என்றான் துறவி, மாதவியை நோக்கி. தேவகியை நோக்கிச் சொன்னான் "அம்மா! மகாராஜ விடமுள்ள காதலால் உங்கள் புத்தியில் தெளிவில்லை. உங்களை மன்னித்து விடுகிறேன், என்னை அவமதித்ததற்கு"

இந்தப் பதிலைக் கேட்ட தேவகியின் விழிகளில் அச்சம் உதயமாயிற்று. "மகாராஜா! இவன் பைத்தியம் தான் சந்தேகமில்லை. இவனைக் கீழ் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்" என்றாள் அச்சம் குரலிலும் ஒலிக்க.

மகாராஜாவும் மாதவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் ஒரு விநாடி. இந்தச் சமயத்தில் துறவி இடைபுகுந்தான். "மகாராஜா, என்னைப் பார்த்து நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தால் பொழுது விடிந்துவிடும்; பத்ரவர்மர் காத்திருக்கிறார் கீழே. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவர் அத்தனை பொறுமைசாலி அல்ல என்று தோன்றுகிறது" என்று கூறினான் துறவி.

"உண்மைதான் முகுந்தா" என்ற மன்னர், "மாதவி நீ போய் அவனிடம் பேசிக் கொண்டிரு. சில நிமிடங்களில் நான் வருவதாகச் சொல்" என்றார்.

வெளியே செலல முயன்ற மாதவியை முகுந்தன் தடுத்தான். "மகாராஜா! எனக்குப் போக அனுமதி கொடுத்தால் மாதவி செய்வதை நானும் செய்யமுடியும்" என்றான்.

"முடியாது" - மகாராஜாவின் குரலில் தீர்மானமிருந்தது.

"எது முடியாது?"

"மாதவி செய்வதை நீ செய்ய முடியாது?"

"அப்படி என்ன மாதவி செய்துவிடுவாள்?"

"மயக்கிவிடுவாள், உபதளபதியை."

மகாராஜாவின் சொல் கேட்ட முகுந்தன் விழிகளில் விவரிக்க இயலாத சாயை ஒன்று படந்தது: "மகாராஜா! பெண்களை முன் விட்டு அவள் அழகை உபயோகப்படுத்தித்தான் நாம் காரியத்தைச் சாதிக்க வேண்டுமா?" என்று கேட்டான் வாலிபத் துறவி.

மகாராஜா பதில் சொல்லவில்லை. மாதவியைநோக்கி "சரி நீ போ மாதவி!" என்று மட்டும் சொன்னார்.

குறுக்கே தன்னைத் தடுத்த துறவியின் கையை அகற்றி விட்டு மாதவி வெளியே சென்றாள். துறவி மகாராஜாவையும்



நோக்கினான்; தேவகியையும் நோக்கினான். மகாராஜாவின் முகம் உணர்ச்சியற்றுக் கிடந்தது. தேவகியின் முகத்தில் அச்சம், சினம் இரண்டுமே கலந்து தெரிந்தன. அவர்களை ஒருமுறை நோக்கிவிட்டு, துறவி வெளியேறினான். அவனைத் தடுக்க முயன்ற தேவகியை "தடுக்காதே தேவகி" என்றார் மகாராஜா.

"கீழே சென்றால் அவருக்குப் புரிந்துவிடுமே மகாராஜா" என்ற தேவகியின் குரல் நடுங்கியது.

"புரிவதை இனிமேல் தவிர்க்க முடியாது தேவகி" என்றார் மகாராஜா.

கீழே மாதவி சென்ற இடத்தை நோக்கிச் சென்ற துறவிக்கு உண்மை புரியத்தான் செய்தது. ஆனால் எத்தனை பயங்கர உண்மை அது!

கீழே சென்றதும் அங்கிருந்த பணிப்பெண்ணை நோக்கி பலபத்திரன் தங்கியிருக்கும் அறை எதுவென்று கேட்டான் துறவி? மூடியிருந்த ஓர் அறைக் கதவைக் காட்டினாள் பணிப்பெண்.

"மாதவி வந்தாளே! அவள்"... "துறவி சொல்லி முடிக்கவில்லை.

"அங்கு தானிருக்கிறார்கள்" என்றாள் பணிப்பெண்.

அந்த அறையை இரண்டெட்டில் அடைந்த துறவி உள்ளே கேட்ட குரலை, குரல் அள்ளித் தெளித்த சொற்களைக் கேட்டு அதிர்ச்சியுற்று நின்றான்.

உள்ளே மிகுந்த சினத்துடன் கூவினான் பலபத்ரவர்மன்: "அடி வேசி! எதிர்பார்த்தேன் இதை. மகாராஜா உன்னைத்தான் அனுப்புவார் என்று எனக்குத் தெரியும். உங்கள் மறைவில் எத்தனை நாள் இந்த மகாராஜா வாழ முடியும்?"

இதைக் கேட்டபின் துறவியின் கால்கள் நகர மறுத்தன. "வேசி! மாதவி வேசி!" என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

# 12. வாள் இல்லாத போழ்து

மாதவியை வேசியென்று பத்ரவர்மன் அழைத்ததால் ஸ்தம்பித்து நின்று விட்டதன்றி ''மாதவி வேசி'' என்று முணுமுணுக்கவும் செய்த முகுந்தன் மனதில் பலப்பல எண்ணங்கள் உதிக்கத் தொடங்கின. பலப்பல விஷயங்களுக்கு விடையும் கிடைக்கலாயின. கோவலன் கதைக்கும் தன் கதைக்கும் பெருத்த சம்பந்தமிருப்பதைப் புரிந்து கொண்டான் அவன். 'கோவலன் துறவியல்ல, நான் துறவி என்பதைத் தவிர வேறு வித்தியாசமில்லை இருவருக்கும் ஒரு மாதவி கிடைத்தது எத்தனைப் பொருத்தம்' என்று மனதுக்குள் வெறுப்புடன் சொல்லிக் கொண்டான். அந்த வெறுப்புடன் அவன் திரும்பவும் சென்றிருப்பான், பத்ரவர்மனின் அடுத்த சொற்கள் அவனை தேக்கியிராவிட்டால்.

''அடி வேசி! மதில் மீது ஏறின அந்தக் கபட சந்நியாசி இங்கிருப்பது எனக்குத் தெரியாதென்று நினைக்காதே! நீ மகாராஜாவை வளைத்தது போல் அவனையும் வளைத் திருப்பாய் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அவன் வாலாட்டம் என்னிடத்தில் பலிக்காது. நான் வீரபத்திரனல்ல. வெளியில் அவன் என்று வருகிறானோ அவனை நானே வலியச் சண்டைக்கு இழுத்து வெட்டவும் போகிறேன்'' என்று சீற்றத்துடன் சொன்னான் பலபத்திரன் என்ற பத்ரவர்மன்.

அந்தச் சொற்களைக் கேட்டதால் தரையில் உறைந்து விட்ட கால்களுடன் நின்றுவிட்ட துறவி உள்ளூர நகைத்துக் கொண்டான். ''மாதவி வேசியானதால்தான் நான்அவளைத் தொட்டுத் தூக்கியதையும் கட்டிலில் போட்டதையும் சகித்துக் கொண்டாளா? எனக்கு சாஸ்திர பாடம் சொல்ல மஹாயனர் நியமித்த குரு, கேவலம் வேசியா? இந்தக் காஞ்சி கலைப் பொக்கிஷமா அல்லது கலவிக் கூடமா அல்லது போலித் துறவிகளின் இருப்பிடமா?'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான். தவிர தன் துறவிக் கோலத்துக்கும்,



தான் தங்கப் புகுந்த இடத்திக்கும் எத்தனை பொருத்தம் என்பதையும் எண்ணிப் பார்த்தான்.

''லீலாசாகர் வேசி வீட்டுக்குச் சென்றுவிட்டு பக்தரானார். நான் பக்தனாகி, துறவியாகி, பிறகு வேசி வீட்டுக்கு வந்திருக்கிறேன். சின்னஞ்சிறு மாறுதல், அவ்வளவு தான்'' என்று இகழ்ச்சியுடனும் சொல்லிக் கொண்டான். ''அடா! இந்த மாதவியைப் பற்றிக் காவியம் புனைய இளங்கோ இல்லாதது என்ன குறை?'' என்று கூறிச் சிரித்தும் கொண்டான்.

''இளங்கோ இருந்தால் காவியம் எழுத அவருக்கும் ஒரு கஷ்டமிருக்கிறது. கோவலனைப் போல் நானில்லை. நான் மன்னன் நீதியால் மரிக்கப் போவதில்லை. எதிராளியைக் கொன்ற பிறகுதான் சாவேன்'' என்று கூறிக் கொண்டு எதிரிலிருந்த கதவை மெல்லத் தட்டினான்.

உள்ளே அதுவரை நிகழ்ந்த உரையாடல் சட்டென்று நின்றது. ''மகாராஜா! வாருங்கள்'' என்று பத்ரவர்மன் குரல் ஒலித்தது. உள்ளிருந்து கதவின் தாழ் திறக்கப்பட்ட ஒலியும் கேட்டது. அது ஒலித்த உடன் கதவு தன் மீது படும்படியாக அத்துடன் இணைந்து நின்றுவிட்ட துறவி கதவு திறந்ததும் சட்டென்று உட்புகுந்து கதவைத் தாழ் இட்டு விட்டான்.

வந்தது முகுந்தன் என்பதை உணர்ந்ததும் மாதவி, பத்ரவர்மன் இருவருமே நிலைகுலைந்து போனார்கள். இருவரில் சுயநினைவுக்கு வந்த மாதவியே அவனை நோக்கிச் சொன்னாள். ''நாங்கள் இங்கு எதிர்பார்த்தது உங்களையல்ல, மகாராஜாவை'' என்று.

துறவி புன்முறுவல் செய்தான் விஷமமாக. ''எதிர் பாராத விஷயங்கள் நடப்பது இந்த ஊரின் தனித்தன்மை'' என்றும் கூறினான் விஷமம் சொட்டிய குரலில்.

மாதவி பதிலேதும் சொல்லவில்லை. பத்ரவர்மன் கேட்டான் "நீ மகாராஜாவா? இங்கு மகாராஜாவைத் தானே பார்க்க வந்தேன்?" என்று.

துறவியின் புன்முறுவல் மேலும் விரிந்தது. அவன் அழகிய உட்டுகளில்: "உன் இஷ்டப்படி ஓடிவருவாரானால் அவர் மகாராஜாவாயிருக்க முடியாது. நீ சற்று முன்பு சொன்னபடி அவர் மகாராஜாவாயிருக்கத் தகுதி உள்ளவருமல்லர். எனக்குத் தகுதி நிறைய இருக்கிறது. ஆகையால் நானே மகாராஜாவாகத் தீர்மானித்து விட்டேன்" என்றான் முகுந்தன், லேசாகச் சிரித்து.

"டேய்!" -பத்ரவர்மன் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

"அவர் மட்டும் பதவிக்கு அருகதை அல்லவென்று எண்ணினேன், நீயும் அப்படித்தான் போலிருக்கிறது. முதலில் மரியாதையாகப் பேசக் கூட உனக்குத் தெரியவில்லை" என்றான் துறவி.

"துறவியாரே!" - இகழ்ச்சியுடன் தொடங்கினான் பத்ரவர்மன்.

"உபதளபதியாரே!" -பதிலிறுத்தான் துறவி.

"உமக்கு ஆசை அதிகமாயிருக்கிறது."

"அது மனித இயற்கை."

"மகாராஜாவாக நினைப்பதுமா?"

"ஆம்; அந்த ஆசை உங்களுக்கு இருக்கும் போது எனக்கிருப்பதில் என்ன தவறு?" என்று துறவி கேட்டவுடன் பத்ரவர்மன் முகத்தில் கிலி படர்ந்தது. அந்தக் கிலியுடன் மாதவியைப் பார்த்தான் உபதளபதி.

மாதவி கோபத்துடன் துறவியை நோக்கினாள்....

"இந்தக் கட்டுக் கதையை யார் சொன்னது உங்களுக்கு?" என்று சீற்றத்துடன் வினவினாள்.



சிறிது கூடத் தாமதிக்காமல் துறவி "சொல்லக் கூடியவர்கள் சொன்னார்கள்" என்றான்.

"மகாராஜாவா!" -பயத்துடன் ஒலித்தது பலபத்ரன் குரல்.

"மகாராஜாவைப் பற்றி குற்றம் சாட்டினால் மரண தண்டனை உண்டு- அது ராஜத்துரோகம்" என்றான் துறவி.

பத்ரவர்மன் நிதானத்தை அடியோடு இழந்தான்.

"இந்தக் குற்றச்சாட்டுக்குப் பிறகு உன்னை நான் உயிருடன் விடமுடியாது" என்று சீறினான்.

துறவி மிகுந்த நிதானத்தைக் காட்டினான். "என் உயிரைப் போக்க என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் சர்வசாதாரணமாக.

"முதலில் சிறையில் தள்ளுவேன்."

"உம்."

"பிறகு தூக்கில் போடுவேன்."

"நீயாகப் போரிட வழியில்லையா?"

"ஏன் வழியில்லை?"

"வழியிருந்தால் அதை இப்பொழுதே நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்ற துறவியின் குரலில் நிதானம் ஆழமாகத் தெரிந்தது. அந்த நிதானக் குரலில் அபாயம் தொனித்ததை பத்ரவர்மன், மாதவி இருவருமே கவனித்தார்கள். பத்ரவர்மன், சில விநாடிகள் சிந்தித்தான். பிறகு பெருமூச்சுவிட்டு "உன் கையில் வலுவில்லையா?" என்றான் அனுதாபத்துடன்.

"உன் கையிலும் இல்லை" என்று சுட்டிக்காட்டினான் துறவி.

"உறையில் இருக்கிறது."

"இருந்தால்?"

"எந்த விநாடியிலும் எடுக்க முடியும்."

"எடுத்து?"

"உன்னைக் கொல்லமுடியும்."

இதைக் கேட்ட துறவி அந்த அறையே அதிரும்படியாக நகைத்தான். "நினைத்தேன் அப்பொழுதே" என்றும் கூறினான், நகைத்த வண்ணம்.

"என்ன நினைத்தாய்?" -பத்ரவர்மன் குரல் லேசாக ஆடியது, சினம் மீறியதால்.

"நீ வீரனல்ல, கொலைகாரன் என்று."

அதற்குமேல் பொறுமை மீறிய பத்ரவர்மன் சரேலென்று வாளை உருவத் தனது கையைக் கொண்டு போனான். அடுத்த நிமிடம் மின்னல் வேகத்தில் நிகழ்ச்சிகள் நடந்தேறின.

இடது கையைச் சட்டென நீட்டி பத்ரவர்மன் கையை இரும்புப் பிடியாக துறவி பிடித்தான். அவனது வலதுகை உபதளபதியின் வாளை உறையிலிருந்து வெளியே எடுத்து பலபத்ரன் முகத்தில் விவரிக்க இயலாத கிலி படரச் செய்தது.

அந்த கிலிக்கு அவசியமில்லை என்பது அடுத்த விநாடி மாதவிக்கும் புரிந்தது. எடுத்தவாளை பலபத்ரனை நோக்கி நீட்டவில்லை துறவி அதை இரு கைகளாலும் பிடித்துத் தனது முழங்காலில் வைத்து வளைத்தான். அதை அறைக்கோடியில் எறிந்தான். "பலபத்ரா! இப்பொழுது இருவரிடமும் வாள் இல்லை. துணிவிருந்தால் போரிடலாம்" என்றான் துறவி.

"வாளில்லாமல் எப்படிப் போரிடுவது?"

"கைகள் எங்கே போயின?" என்று கேட்டான் துறவி.



"மல்யுத்தம் செய்ய விரும்புகிறாயா?" என்று வினவினான் பத்ரவர்மன்.

"இல்லை, கொல் யுத்தம் செய்ய விரும்புகிறேன். என் இரு கைகளாலும் உன் கழுத்தை நெறிக்க முடிவு செய்து விட்டேன்" என்று கூறிக்கொண்டே பத்ரவர்மனை நெருங்கினான் துறவி. துறவியின் கண்களில் பெரும் வெறி பரவிக் கிடந்ததை மாதவி கண்டாள். பத்ரவர்மன் ஆயுள் அன்றுடன் முடிந்துவிட்டதென்ற முடிவுக்கும் வந்தாள். அதனால் அச்சம் நிறைந்த விழிகளைத் துறவிமீது திருப்பி "போகட்டும். அவரை விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சினாள்.

துறவி அவளை இகழ்ச்சியுடன் பார்த்தான். "இவனும் உன் ஆசை நாயகர்களில் ஒருவனா?" என்று வினவினான் முரட்டுத்தனமாக.

மாதவி பதில் சொல்லவில்லை. வெறுப்புடன் விழித்தாள் துறவியை நோக்கி. துறவி அவளைக் கவனிக்கவில்லை. பத்ரவர்மன் கழுத்தை நோக்கி நீட்டிய கைகளுடன் போய்க் கொண்டிருந்தான். பத்ரவர்மன் தப்ப அப்படியும் இப்படியும் நோக்கினான். வழி ஏதும் காணவில்லை. துறவியின் இரும்புக் கைகள் திடமாக அவன் கழுத்தில் பதிந்தன. நெருக்கவும் செய்தன.

"வாள் இல்லாத போழ்து சிறிது கைகளுக்கும் வேலை ராயப்படும்" என்று அந்தச் சமயத்தில் கூறிய துறவி, வெறிபிடித்த சிரிப்பு ஒன்றையும் வெளியிட்டான் பயங்கரமாக.

## 13. மன்னனும் மகாகவியும்

**வா**லிபத் துறவியின் வலிய கரங்கள் கழுத்தை மெல்ல மெல்ல நெரிக்கத் தொடங்கியதாலும், அவன் வெளியிட்ட பயங்கரச் சிரிப்பு அந்த அறையை மட்டுமின்றி மாளிகையையே கிடுகிடுக்கச்

செய்ததாலும் பீதிக்கும் திணறலுக்கும் உள்ளான பத்ரவாமன் ஏதோ சொல்ல முற்பட்டு முடியாததால் 'உம்உம்' என்று முனகினான். ''வருங்காலப் பல்லவ மன்னரே! ஏன் முனகுகிறீர்? உமது கைகளைத் தான் சுதந்திரமாக விட்டு வைத்திருக்கிறேனே, அந்தக் கைகளை உபயோகப் படுத்துவது தானே?'' என்று கேட்டுக் கொண்டே துறவி தனது எஃகு போன்ற விரல்களில் இரண்டை பத்ரவர்மன் நெஞ்சுக் குழியில் வைத்துச் சிறிது அழுத்தினான். ''ஹூம்'' என்ற பெரும் சத்தம் ஒன்று பத்ரவர்மனிடமிருந்து வந்தது. அதைத் தொடர்ந்து அவன் கைகள் செயலிழந்து கிடந்தன. விழிகள் பிதுங்கிய போது முகத்தில் அச்சத்தின் சாயை தீவிரமாய் படர்ந்தது.

அந்தச் சாயையைக் கவனித்த துறவி மீண்டுமொரு முறை நகைத்துவிட்டுத் தன் இரண்டு கைகளையும் சரேலென எதிரியின் கழுத்தைவிட்டு அகற்றி அந்தக் கைகளாலேயே பத்ரவர்மனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தானும் சற்று பின்னடைந்து நின்றான். துறவி தள்ளிய வேகத்தில் பின்புறமாக விழுந்துவிட்ட பத்ரவர்மன் நிதானித்துக் கொண்டு மஞ்சத்தைப் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்தான். முதலில் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டான். பிறகு கலைந்த தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு துறவியை ஏறிட்டு நோக்கி, ''உன் கைகளில் நல்ல வலு இருக்கிறது'' என்று பாராட்டினான்.

துறவி வெறுப்புக் கலந்த புன்முறுவலை இதழ்களில் படரவிட்டுக் கொண்டான். ''என் கை வலுவா? என்ன வலு இது'' என்று அலுத்துக் கொண்டான்.

''ஏன் இப்பொழுது சாதித்தது போதாதா?'' என்றான் பத்ரவர்மன்.

''என் கைகளில் உண்மையான வலு இருந்தால் இப்பொழுது நீ என்னுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டாய்.''



''பின் என்ன செய்வேன்?''

''மேல் உலகத்தில் உன் மூதாதைகளுடன் பேசிக் கொண்டிருப்பாய்.''

இதைக் கேட்ட பலபத்ரவர்மனுக்கு கோபம் வந்தாலும் அதை அவன் வெளிக்குக் காட்டாமல் புன்முறுவல் செய்தான். ''துறவி, உனக்குக் கை வலுவுடன் நகைச் சுவையும் இருக்கிறது'' என்று கூறினான்.

''காஞ்சியின் உபதளபதி! இல்லை, இல்லை வருங்கால மகாராஜா! உங்கள் பாராட்டுதலுக்கு நன்றி. ஆனால் ஒரு புத்தி சொல்கிறேன் உங்களுக்கு. கொலையில் மட்டும் ஈடுபடாதீர்கள். அதில் வரும் தொல்லைகள் அனந்தம்- திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார்.'' என்றான் துறவி.

பத்ரவர்மன் விழித்தான். ''திருவள்ளுவரா! அவர் யார்?'' என்று கேட்டான்.

துறவி புன்முறுவல் கொண்டான். ''உமது வீரத்துக்குச் சரியாகவே உமது தமிழறிவும் இருக்கிறது. நீர் இத்தனை நிரட்சாகுட்சி என்று எனக்குத் தெரியாது. திருவள்ளுவர் யார் என்று கேட்டதற்கே உம்மைக் கொல்லலாம். ஆனால் வள்ளுவர் தடுக்கிறார்'' என்ற துறவி, பத்ரவர்மனைச் சுடும் விழிகளால் நோக்கினான். தனது கைகளையும் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

அதுவரை சிலை போல் அந்த நாடகத்தை அறை மூலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மாதவி திரும்பவும் துறவி கைகளைப் பார்த்துக் கொண்டதும் அச்சத்தின் வசப்பட்டு, 'பத்ரவர்மரே! திருவள்ளுவர் உலகத்தின் முற்காலக் கவிஞர், கடந்த கால, நிகழ் கால, வருங்காலக் கவி. தெய்வத் திருவள்ளுவர் என்று தமிழர்கள் அவரை அழைக்கிறார்கள்'' என்று இடைப்புகுந்து பேசினாள்.

பத்ரவர்மன் விழித்தான். ''முற்காலக் கவிஞரா?'' என்றான் ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக.

''ஆம்'' என்றாள் மாதவி.

துறவியும் சும்மா இருக்கவில்லை. ''முப்பால் எழுதியிருக்கிறார்'' என்று கூறினான்.

''முப்பாலா!'' பத்ரவர்மன் திகைத்தான்.

''ஆம். மூன்றாவது பால் காஞ்சியில் விளையாடுகிறது'' என்றான் துறவி.

''நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லை'' என்ற பத்ரவர்மன் மாதவியை நோக்கினான்.

துறவி நகைத்தான். ''பத்ரவர்மரே! எடுத்த எடுப்பிலேயே மூன்றாவது பாலுக்கு பறந்துவிட்டீர். முதலாவது அறத்துப்பால் தர்ம சம்பந்தமானது. ஆகவே உமக்கும் அதற்கும் சம்பந்தமிருக்க முடியாது. இரண்டாவது பொருட்பால். அது உமக்குக் கிட்டாது. மூன்றாவது காமத்துப்பால். அதன் அடையாளங்கள் இந்த மாளிகையில் நிரம்ப இருக்கின்றன. மாதவியே போதும் சித்தத்தைக் குலைக்க. பாரும் அவளை, நன்றாகப் பாரும் இந்த வேசியை'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

இப்படி நகைத்த துறவி பத்ரவர்மனையும் பார்த்தான், மாதவியையும் நோக்கினான். பத்ரவர்மன் முகத்தில் ஏக்கம், கோபம், கிலி மூன்று உணர்ச்சிகளும் கலந்து கிடந்தன. மாதவி முகம் சுரணையற்ற கல்லாயிருந்தது. அவள் பேசவில்லை, புருவத்தைக் கூடச் சுளிக்கவில்லை. நின்ற நிலையில் அப்படியே கற்சிலையாகிவிட்டாள்.

அவளைப் பார்த்த பத்ரவர்மனுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, துறவியைச் சமாதானப்படுத்த முயன்று, ''துறவியாரே!'' என்று அழைத்தான்.



''பாதகமில்லை. உங்களுக்கு மரியாதை கூடத்தெரியும் போலிருக்கிறது'' என்று துறவி நகைத்தான் மெல்ல.

''உங்கள் திருவள்ளுவரைப் பாராட்டுகிறேன்'' என்றான் பத்ரவர்மன் அடுத்தபடி.

''உம்! திருவள்ளுவரின் கதி இந்த நிலைக்கு வந்து விட்டதா?'' -துறவியின் குரலில் அனுதாபம் ஒலித்தது.

''ஏன் அவர் கதிக்கு என்ன?''

''உங்களால் பாராட்ட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டாரே? அதைவிட அவருக்கு நேரக்கூடிய அவமானம் என்ன இருக்க முடியும்?''

''ஒரு கவிஞரை அறியாதிருப்பது தவறா?''

''பத்ரவர்மா! தயைசெய்து சும்மா இரேன்'' என்று கெஞ்சினான் துறவி.

''நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன்?'' என்று கேட்டான் பத்ரவர்மன்.

''உலக மகாகவியை ஒரு கவி என்கிறாய். அறியாதது குற்றமா என்கிறாய். மன்னனை அவமதிப்பதைவிட மகாகவியை அவமதிப்பது பெருங்குற்றம்'' என்ற துறவி, ''உபதளபதி! அடுத்தபடி நீ என்ன செய்ய உத்தேசம்? மகாராஜா உன்னைக் கண்டு பயப்படுகிறார், நீ என்னைக் கண்டு உளறுகிறாய், உன் சகோதரன் அந்த வெத்துத் தடியன் வீரபத்திரன் வெளியே நிற்கிறான், என்னைக் கொல்ல; அவனை அனுப்பிவிட்டு என்னுடன் சாதாரணமாகப் பேச இஷ்டமா? அல்லது முதலில் நான் வெளியே போய் அவனைக் கொன்றுவிட்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

துறவியின் குரலில் இருந்த கடுமையையும் உறுதியையும் பத்ரவர்மன் மட்டுமின்றி மாதவியும் கவனித்தாள். அதனால்

இருவருக்குமே அச்சமேற்பட்டதாலும் மாதவி பதில் சொன்னாள் துறவிக்கு. ''துறவியாரே! வெளியே போகாதீர்கள்'' என்று அவள் கோரிக்கை மிகுந்த பணிவுடன் வந்தது.

துறவி அவளை நோக்கி நன்றாகத் திரும்பி பத்ராவாமனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நின்றான். ''ஏன் வெளியே போகக் கூடாது?'' என்று கேட்டான் வெறுப்பு மண்டிய குரலில்.

மாதவியின் கண்கள் அவன் கணகளுடன் கலந்தன. ''வெளியே போனால் திரும்பி வரமாட்டீர்கள்'' என்று சொன்ன அவள் உதடுகள் லேசாகத் துடித்தன.

துறவி அவள் கண்களை நோக்கியதால், சிறிது சாந்த மடைந்தான். ''ஏன் வீரபத்திரப் பெருமாள் என்னைக் கொன்றுவிடுவாரோ?'' என்று வினவினான் சற்றே இளகிய குரலில்.

மாதவி துறவியை நோக்கினாள் நன்றாக. வீரபத்திரன் தனியாக வரமாட்டான். அவனுடன் வந்தவர்கள் ஒளிந்து கொண்டிருப்பார்கள். அங்கு சண்டைக்கு இடம் இருக்காது. கொலைக்குத்தான் இடமிருக்கும். நிச்சயமாகக் கொலை செய்யப்படுவீர்கள்'' என்றாள் மாதவி துயரம் நிரம்பிய குரலில்.

துறவியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. மாதவி தன் மரணத்தைக் குறித்து அத்தனை கவலைப்படும் காரணம் புரியவில்லை அவனுக்கு. ''வேசிக்கு யார் இருந்தால் என்ன? இறந்தாலென்ன?'' என்று உள்ளூரத் தன்னைக் கேட்டுக் கொண்டான்; அந்த நினைப்பினால் மாதவியைக் கேட்டான்; ''அப்படியே என்னைக் கொலை செய்தால் தான் உனக்கென்ன?'' என்று.

மாதவி அவன் கேட்டதன் காரணத்தைப் புரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ள வில்லை அவள்.



''பொறுப்புகள் சில என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன'' என்று கூறினாள் மெதுவாக.

''பொறுப்புகளா! பன்மையிலிருக்கிறதா விஷயம்?'' -துறவி சிரித்தான். ஆனால் மாதவியை நோக்கியதால் அவன் சிரிப்பு உதடுகளிலேயே உறைந்தது.

மாதவியின் முகம் வெட்கத்தாலும் அவமானத்தாலும் சிவந்து கிடந்தது. கண்களில் நீர் திரண்டு கொண்டிருந்தது. ''ஆம் வீரரே! பன்மையில்தானிருக்கிறது விஷயம். முதலில் உமது உயிரைக் காப்பது ஒரு பொறுப்பு. உமக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது இரண்டாவது பொறுப்பு, மூன்றாவது ஒரு பொறுப்பிருக் கிறது...'' என்ற மாதவி வாசகத்தை முடிக்கவில்லை, அவள் உதடுகள் துடித்த காரணத்தால்.

இதைக் கேட்ட துறவி பெரிதாக நகைத்தான். ''சென்னியின் மகன் ஒரு பெண்ணால் காப்பாற்றப்படும் நிலைக்கு வந்துவிட்டானா? அதுவும் பாடம் படிக்க அவனுக்கு ஒரு...'' சட்டென்று உதிர இருந்தவார்த்தையை அடக்கிக் கொண்டான் துறவி, தமிழகத்தின் பண்பாடு அவன நாவைக் கட்டுப்படுத்தியதால் ''வேசிதான் கிடைத்தாளா!'' என்று சொற்களை உதிர்க்கவில்லை அவன்.

பிறகு எதுவும் பேசவில்லை துறவி. மாதவியை ஒரு முறை உற்று நோக்கிவிட்டு வெளியே நடந்தான். ''நில்லுங்கள்!'' என்ற மாதவியின் குரலை அவன் லட்சியமே செய்யவில்லை. அந்த அறைக்கதவைப் பளீரென மாளிகை அதிரும்படியாகச் சாத்தி ஒலி எழுப்பிவிட்டு வேகமாக நடந்தான் வாயிலை நோக்கி. அப்படி நடந்தவன் வாயிற் கதவைத் திறந்துகொண்டு மகிழமரத்தடியை நோக்கிச் சென்றான். அங்கு வீரபத்திரனைக் காணோம். மகிழமரத்தடியிலிருந்த ஒரு பாறையில் உட்கார்ந்து கொண்டான்.

தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். நீண்ட நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தான். பிறகு அந்தப் பாறை மீதே கால் நீட்டிப் படுத்துக் கொண்டான். படுத்தவன் உறங்கிவிட்டான். எத்தனை நேரம் உறங்கியிருப்பானோ தெரியாது. அதிலிருந்து அவனை விழிக்க வைத்தவை இரு பூங்கரங்கள். உலுக்கி எழுப்பவில்லை அவை அவன் உடலைச் சுற்றித்தழுவின. ஏதோ ஒரு மலர்க்கன்னம் அவன் கன்னத்தில் இழைந்தது. ஏதோ விவரம் புரியாத சொர்க்கத்துக்கு வந்துவிட்ட நினைப்பு ஏற்பட்டது துறவிக்கு. புஷ்ப உதடுகள் அவன் முரட்டு உதடுகளைத் தேடி வந்தன.

## 14. மஹாயனரின் புதுத் தோற்றம்

பாறை மீது படுத்திருந்த தன்னைத் தழுவியது யார் என்பதை உணர, கண்ணிமைக்கும் நேரங்கூட சோழ மன்னன் செல்வனுக்கு ஆகவில்லையென்றாலும், அவள் சாகசம், நாடகம் எந்த அளவுக்குத்தான் போகிறதென்பதைக் கவனிக்க அவன் ஆடாமல் அசங்காமல் படுத்த வண்ணமே இருந்தான். வலிய தன் உதடுகளைத் தேடி வந்த அதரங்கள் உதடுகளின் மீது படியாமல் இடக் கன்னத்தின் வழியே நகர்ந்து காதுக்கருகில் வந்துவிட்டதைக் கவனித்த அந்த வாலிபன், அடுத்து என்ன செய்தி வரப்போகிற தென்பதைப்பற்றி மட்டுமே யோசித்தான். அப்படி அவன் உணர்ச்சியற்றவனல்ல. இந்திரியங்களை வெற்றி கொண்ட பிரும்மமும் அல்ல அந்தப் பிரம்மச்சாரி? ஆனால், அந்த மர்ம மாளிகையின் ரகசியங்களுக்கு ஒரு முடிவுகட்ட அவன் தீர்மானித்து விட்டதால் உள்ளே எழுந்து பிரவகித்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, எந்த விநாடியிலும் செயல்படத் தயாராக இருந்தான். ஆகவே அவள் உதடுகள் அவன் காதுக்கருகில் வந்து, "துறவியாரே" என்று அழைத்தபோதும் "உம்" என்று ஒலியை மட்டும் கிளப்பினான் பதிலுக்கு.



அந்தப் பாவையின் வாயிலிருந்து வந்த சொற்கள் மரம் விசித்திரமாயிருந்ததால் துறவி நிலைமை மிக நெருக்கடியாகி விட்டதைப் புரிந்து கொண்டான். அந்தப் பாவை சொன்னாள் "என்னை நன்றாகக் கட்டித் தழுவுங்கள். உங்களுக்குக் காமவெறி பிடித்ததாகக் காட்டிக் கொள்ளுங்கள். நான் சொல்லும்போது சட்டென்று என்னை உதறி எழுந்து நின்று வாயில் வந்தபடி வசைபாடுங்கள்" என்றாள்.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் அவள் சொன்னபடி செய்யத் தீர்மானித்த துறவியின் கைகள் மேலெழுந்து அவளை இறுக இரும்புப் பிடியாகப் பிடித்து அணைத்தன. அந்தப் பிடியின் அணைப்பில் கசக்கப்படும் மலரைப் போலத் துவண்ட மாதவி அவனைப் பிடித்துத் தள்ள முற்பட்டு, "விடு என்னை, நீ ஒரு துறவியா!" என்று கத்தினாள். ஆனால் துறவி அவளை விடாமல் அவளை இறுக்கியவண்ணம் மறுபுறம் திருப்பி அவள் வலக் கன்னத்தில் இதழ்களை அழுத்தி முரட்டுத்தனமாக இருமுறை புரட்டினான். அந்த நேரத்தில் முரட்டுத்தனமான இரு கைகள் அவளை வலிய இழுத்து அவனிடமிருந்து பிரித்தன. அப்படி அந்தக் கரங்கள் இழுத்த தருணத்தில் அவளை விட்டு நீங்கிய துறவி சரேலென எழுந்து நின்று தன் மீது கை வைத்தது யார் என்று நோக்கினான். நோக்கினவன் பிரமை பிடித்து பல விநாடிகள் நின்று விட்டான்.

எதிரே மஹாயனர் நின்று கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் கூட அவர் முகத்தில் சினம், சிறிதளவும் இல்லை. சாந்தமான பார்வையுடன் இருவரையும் பார்த்த மஹாயனர் "மாதவி! நீ உள்ளே செல்" என்று கட்டளையிட்டு அவள் சென்றதும் துறவியை நோக்கி, "முகுந்தா, இதற்கென்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

துறவியின் இதயத்தில் சந்தேகங்கள் பல எழுந்து தாண்டவமாடின. 'மடத்துக்குப் போவதாகச் சொன்ன மஹாயனர்

இங்கு எங்கு வந்தார்' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். 'ஒருவேளை தனக்குத் தெரியாமல் இந்த மாளிகையிலே தங்கிவிட்டாரோ' என்ற சந்தேகங்கூட அவன் இதயத்தில் எழுந்தது. ஆனால் 'இருக்க முடியாது. மஹாயனர் ஒருக்காலும் தாசி வீட்டில் தங்கமாட்டார்' என்று அந்தச் சந்தேகத்தை அரை விநாடியில் துடைத்துக் கொண்டான்.

அவன் அப்படி சிந்தனை வசப்பட்டுப் பதிலிறுக்காமல் நின்றிருந்ததைக் கண்ட மஹாயனர் "நான் கேள்வி கேட்டது உன் காதில் விழவில்லையா?" என்றார்.

"விழுந்தது."

"அப்படியானால் ஏன் பதில் சொல்லவில்லை?"

"பதில் சொல்ல ஏதுமில்லை."

"ஏதுமில்லையா?"

"இல்லை."

"உன் நடத்தை உனக்கே பிடித்திருக்கிறதா?"

"பிடித்திருக்கிறதோ இல்லையோ, அதற்கு நான் பொறுப்பாளியல்ல."

"யார் பொறுப்பாளி? மாதவியா?"

"இல்லை?"

"பலபத்ரவர்மனோ?"

"இல்லை."

"மகாராஜாவா?"

"இல்லை."



"வேறு யார்?" - இம்முறை கேள்வி சற்றுத் திட்டமான கடுமையான குரலில் எழுந்தது மஹாயனரிடமிருந்து.

"தாங்கள் தான்" என்றான் துறவியும், சிறிதும் பதற்றத்தைக் காட்டாமல்.

மஹாயனர் முகத்தில் சிறிது சந்தேகத்தின் சாயை விரிந்ததைத் துறவி பார்த்தான். நடந்த மற்றவையெல்லாம் நிதர்சனமாயிருக்க எதைப் பற்றி அவர் சந்தேகப்படுகிறார் என்பதைத் துறவியால் உணர முடியவில்லையாதலால் அவரே பேசட்டுமென்று காத்திருந்தான்.

"நானா?" என்று கேட்டார், மஹாயனர் முகத்தைப் பழையபடி சாந்தமாக்கிக் கொண்டு.

"ஆமாம், தாங்கள் தான். பஞ்சின் பக்கத்தில் நெருப்பை வைத்தீர்கள்."

மஹாயனர் சாந்தமாகவே கேட்டார், "எது பஞ்சு? எது நெருப்பு?" என்று.

"மாதவி பஞ்சு, நான் நெருப்பு" என்றான் துறவி.

மஹாயனர் சிறிதும் சிந்திக்காமலே கேட்டார்.

"மாதவியை இங்கு எப்பொழுது அழைத்து வந்தாய்?" என்று.

துறவிகூடச் சிறிதும் சிந்திக்கவில்லை. பொய்யை மிகச் சுலபமாகச் சொன்னான் "சற்று முன்புதான்" என்று.

"இருக்க முடியாது" என்றார் மஹாயனர்.

"ஏன் இருக்க முடியாது குருநாதரே?" என்று வினவிய துறவி குருநாதர் என்ற சொல்லைச் சிறிது அழுத்தியே சொன்னான்.

அவன் அப்படித் தன்னை அழுத்திப் பேசியதன் பொருளை கண நேரத்தில் உணர்ந்த மஹாயனர் அதை உணராதது போலவே

பேசினார் ''சற்று முன்புதான் நானே வந்தேன் இந்த வழியாக அப்பொழுது அவள் இல்லை. நீ மட்டும் படுத்திருந்தாய். மாளிகையிலிருந்து திரும்பினேன். அதற்குள் அவள் எப்படியோ உன்னிடம் வந்துவிட்டாள். உன்னிடம் வசீகர சக்தி நிரம்ப இருக்க வேண்டும். சோழனே! யாருக்கும் பிடி கொடுக்காத மாதவி, தானே உன்னைத் தேடி வந்திருக்கிறாளென்றால் என்னால் கூட அதை நம்ப முடியவில்லை. நீ அதிர்ஷ்டசாலி. அத்துடன் பொய்யன். உண்மையை என்னிடமிருந்தே மறைக்கப் பார்த்தாய்'' என்றார் மஹாயனர்.

துறவி சிந்தனையிலிறங்கினான் நீண்டநேரம். இரு முறை பாறையை அடுத்து காலை வைத்து சற்று அசக்கினான் உடலை. கடைசியில் ''மஹயானரே!'' என்று அவன் அழைத்தபோது அதில் கடுமை நிரம்பிக் கிடந்தது.

ஆனால் அவன் கடுமையை இலட்சியம் செய்யவில்லை மஹாயனர். ''என்ன முகுந்தா?'' என்று கேட்டார், சர்வ சாதாரணமாக.

முகுந்தன் நிலத்தை நோக்கிக்கொண்டே பேசினான்: ''மஹாயனரே! உமது புகழ் பரவாத இடம் எங்குமில்லை. என் தந்தை உம்மைப் பெரிதும் மதிக்கிறார். இல்லையேல் உம்மிடம் என்னை அனுப்பியிருக்கமாட்டார். ஆனால் உங்கள் நடவடிக்கைகள் ஏதும் எனக்குப் புரியவில்லை. உங்களுக்குச் சீடனாக வந்த என்னை ஒரு வேசி வீட்டில் விட்டுச் செல்கிறீர். சாஸ்திரங்களைப் போதிக்க அந்த வேசியை நியமிக்கிறீர். மடத்துக்குப் போவதாகப் போக்குக் காட்டி இங்கேயே இருந்து வேவு பார்க்கிறீர். இதற்கெல்லாம் காரணம் எனக்கு விளங்கவில்லை. இங்கு என்னைக் கொல்ல வீரபத்திரன் வந்து நிற்கிறான். நான் வந்ததும் திடீரென மறைந்து விடுகிறான். நான் படுத்து உறங்குகிறேன். மாதவி வருகிறாள் சரசத்துக்கு. போதாக் குறைக்கு ஒரு மகாராஜா வேறு தாசியைத் தழுவுகிறார். இந்த



மரத்தடியில். பிறகு உள்ளே வந்து மாளிகையில் தங்குகிறார். இதெல்லாம் என்ன மஹாயனரே? என்ன? விளங்கச் சொல்லுங்கள்!'' -இப்படி உணர்ச்சி பொங்கப் பேசிய முகுந்தன் மௌனம் சாதித்தான். மஹாயனரை அவன் கண்கள், கேள்விகளுக்கெல்லாம் விடையை எதிர் பார்ப்பனபோல பார்த்தன.

இத்தனைக்கும் மஹாயனர் கண்கள் அவன் கண்களைச் சிறிதும் சலனப்படாமல் சந்தித்தன. ''இதற்கெல்லாம் விளக்கம் எதற்காக உனக்குத் தேவை?'' என்று கேட்டார் முடிவில்.

''என்னைப் பாதிப்பதால்'' என்றான் முகுந்தன், அவன் குரலில் கண்டிப்பு ஒலித்தது.

''என்ன பாதித்து விட்டது உன்னை? எது பாதித்து விட்டது? காஞ்சி மண்டலத்திலேயே பெரிய அழகி உன்னைக் காதலிக்கிறாள். யாரும் பார்க்க முடியாத மகாராஜா உனக்குத் தாமாகவே காட்சியளிக்கிறார். தேவகி நாளைக்கு மகாராணியானால் அவள் சகோதரியை மணக்கும் உன் ஸ்தானம் காஞ்சி மண்டலத்தில் பெரிதும் உயரும். அப்படி உயர்ந்தால் நீ பல்லவ ராஜ்யத்தின் நிரந்தர சேனாதிபதியாகலாம். இதெல்லாம் கசக்கிறதா உனக்கு?'' என்று கேட்ட மஹாயனர் ''முகுந்தா என் சொற்படி கேடக உனக்கு இஷ்டமா இல்லையா?'' என்று விசாரித்தார் முடிவில்.

முகுந்தனின் விழிகள் அவர் முகத்தை ஆராய்ந்தன. ''நான் கேட்பதும் கேட்காததும் உங்கள் இஷ்டம் என்ன என்பதைப் பொறுத்தது'' என்ற சொற்களை உதிர்த்தன அவன் உதடுகள்.

''என் இஷ்டத்தை நான் வெளியிட மறுத்தால்?'' -மஹாயனர் கேள்வி திட்டமாயிருந்தது.

''உங்கள் சொற்படி கேட்க நானும் மறுப்பேன்'' என்றான் துறவி, சிறிதும் சளைக்காமல்.

"என் சொல்லை மறுப்பது எத்தனை சங்கடத்தில உன்னைச் சிக்க வைக்கும் தெரியுமா?" என்று கேட்டார்.

"அதைப்பற்றிக் கவலையில்லை."

"என் சொல்லை மீறினால் நீ காஞ்சியைவிட்டு வெளியேற முடியாது."

"நான் வெளியேற இஷ்டப்படவில்லை."

"வேறு என்ன செய்யப் போகிறாய்?"

"உங்கள் இஷ்டத்தையும் மீறி இங்கு தங்குவேன்."

"தங்கினால் உன் உயிர் செல்லாக் காசு பெறாது.

"உயிரைப் பற்றி சோழர்குலத்தவர் என்றுமே கவலைப்பட்டதில்லை."

"நீ மாதவியின் நட்பை இழப்பாய்."

"வேசியின் நட்பை நான் விரும்பவில்லை."

"மகாராஜாவினால் உன் பிற்காலம் பெரிதும் வளம் பெறும்."

"யார் தயவாலும் உன் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை."

"இதுதான் என் முடிவா?" என்று கேட்டார் மஹாயனர்.

"ஆம்" திட்டமாக வந்தது முகுந்தனின் பதில்.

மஹாயனர் துன்பப் பெருமூச்செறிந்தார். "சென்னியின் மகனே! என கனவுகளையெல்லாம் நீ உடைத்து விட்டாய், உன்னை இந்தக் காஞ்சியில் பாதுகாக்கும் என் கரம் இந்த விநாடியிலிருந்து அகலுகிறது" என்று கூறிக் கைகளைத் தட்டவே வீரபத்திரன் பத்து வீரர்களுடன் தோன்றினான்.

"இவனைச் சிறையிலடையுங்கள்" என்று உத்தரவிட்டார் மஹாயனர்.



உருவிய வாட்களை ஏந்திய பத்து வீரர்களுடன் விநாடி நேரத்தில் வாலிபத் துறவியை வளைத்துக் கொண்டான் வீரபத்திரன்.

## 15. காஞ்சியின் சிறையில்...

மஹாயனரின் கட்டளைப்படிபத்து வீரர்களுடன் வீர பத்திரப் பெருமாள் தன்னைச் சுற்றிக் கொண்டபோதும் முகத்தில் எந்தவித மாற்றத்தையும் காட்டாத முகுந்தன் வீரபத்திரனையும் மஹாயனரையும் மட்டும் மாறி மாறி சில விநாடிகள் நோக்கினான். பிறகு மிக லேசான மந்த காசத்தை இதழ்களில் படரவிட்டுக் கொண்டான். "இந்தத் தடியனை எதற்காக மீண்டும் வரவழைத்தீர்கள்?" என்று மஹாயனரை நோக்கிக் கேட்கவும் செய்தான், குரலில் இகழ்ச்சி ததும்ப.

பத்து வீரர்கள் ஆயுதமும் கையுமாக வளைத்தபோது அவன் அவர்களைப்பற்றிக் காட்டிய அசட்டை மஹாயனருக்கு எந்தவித வியப்பையும் அளிக்கவில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் அவன் சத்திரத்தில் சிக்கிக் கொண்டு கதையை, நேர்மாறாகத் திருப்பி வீரபத்திரனை திண்டாட வைத்ததை அவர் பார்த்திருந்ததால் அதைஒரு பெரிய விஷயமாக நினைக்க வில்லை அவர். ஆனால் இந்தச் சமயத்தில் அவன் காட்டிய அலட்சியம் வீரபத்திரனை நோக்கி மட்டுமல்ல என்பதையும், தன்னைக் குறித்தும் அவன் நகைக்கிறானென்பதையும் புரிந்து கொள்ளக் கண்சிமிட்டும் நேரங்கூடப் பிடிக்கவில்லை மஹாயனருக்கு. ஆகவே சொன்னார் அவர்:

"வீரபத்திரன் தடியனல்ல. காஞ்சியின் உதவித் தளபதிகளில் ஒருவன். குடித்திருக்கும் சமயத்தில் அவனை யாரும் வெற்றி கொள்ளலாம்" என்று.

முகுந்தன் மஹாயனரை நோக்கி "இப்பொழுதுஇவர் குடிக்கவில்லை என்கிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆம்." -மஹாயனர் சாதாரணமாகப் பதில் சொன்னார்.

"நிதானத்திலிருப்பதால் நிதானம் தவறமாட்டார்." -வீரபத்திரனைப்பற்றி மிக மரியாதையாகப் பேசினான் முகுந்தன்.

"அப்படித்தான் நினைக்கிறேன்."

"நிதானம் தவறாதால் இப்பொழுது என்னைச் சிறை செய்துவிடுவார்."

"ஆம்."

இந்த பதிலைக் கேட்ட முகுந்தன் நகைத்தான் மெல்ல, "மஹாயனரே! இவனுக்குத்தான் எச்சரிக்கை போதாது. உமக்குமா கண்ணில்லை பார்ப்பதற்கு?" என்று வினவினான் முகுந்தன் நகைப்பின் ஊடே!

"எதைப் பார்க்கச் சொல்கிறாய்?" என்று கேட்டார் மஹாயனர்.

"இதை" என்ற முகுந்தன், தொங்கப் போட்டுக் கொண்டிருந்த தனது வலதுகையைக் கண்ணால் காட்டினான். அதைப் பார்த்த மஹாயனர் அசந்துவிட்டார். அசட்டுத் துணிச்சலாலும் பத்துப் பேர் உதவிக்கு இருக்கும் திமிராலும் வீரபத்திரன் முகுந்தனுக்கு வெகு அருகில் தனது வாளை மட்டும் உருவாமல் ஆர்ப்பாட்டமாகக் கால்களை விரித்துத் தரையில் நின்றிருந்ததால், பக்கத்தில் துருத்திக் கொண்டிருந்த அவன் வாள் பிடியின் மேல் முகுந்தன் வலதுகையை லேசாக வைத்துக் கொண்டிருந்ததைக் கவனித்த மஹாயனர், எந்த விநாடியிலும் சோழன் மகன் வாளை உருவமுடியுமென்பதையும், அடுத்து பிரளயம் நிகழக் கூடும் என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டதால் திகைத்தாலும், தன் திகைப்பை வெளிக்குக் காட்டாமல் "புரிகிறது எனக்கு" என்றார்.



"உனக்கும் புரிகிறதா வீரபத்திரா?" என்று வினவினான் முகுந்தன் வீரபத்திரனை நோக்கி.

"எது புரிய வேண்டும்?" என்று முரட்டுத் தனமாகக் கேட்டான் வீரபத்திரன்.

"இது என்று சொல்லி வாளின் பிடியிலிருந்த தனது கையைச் சிறிது அதிகமாகவே அழுத்தினான் முகுந்தன்.

அவனால் அசைந்த வாளினால் நிலைமையை உணர்ந்துக் கொண்ட வீரபத்திரன் தனது அகிரத்தைக்காக சிறிது வருந்தினான். ஆனாலும் "மஹாயனர் கட்டளையை மீறி யாரும் நடக்க முடியாது காஞ்சியில்" என்று திடமாகவே பேசினான்.

"ஒப்புக் கொள்கிறேன்" என்று முகுந்தனும் ஆமோதித்தான் வீரபத்திரன் சொல்லை.

இதனால் சற்றுத் துணிவடைந்த வீரபத்திரன் "அப்படியானால் என் வாளை உருவமாட்டாய்" என்று வினவினான்.

"மாட்டேன்."

"சிறைக்கு வரச் சித்தமாயிருக்கிறாய்?"

"ஆம்."

"நீ புத்திசாலி."

"நீ புகழும் அளவுக்கு என் புத்தி வந்துவிட்டதே. அது எத்தட மந்தமென்பதை நிரூபிக்கிறது."

"நல்லது, உன் புத்தி மந்தமென்பதை நீயே உணர்ந்து கொண்டுவிட்டாய்."

"அதற்குச் சந்தர்ப்பம் காஞ்சியில்தான் கிடைத்தது."

வீரபத்திரன் உற்சாகத்தில் மேலும் ஏதோ பேசப் போனான். அதற்கு மேல் அவன் உளறலை சகிக்க முடியாத மஹாயனர்

''வீரபத்திரா!'' என்று அதட்டினார் பலமாக. அதனால் பேச்சை நிறுத்திக் கொண்ட வீரபத்திரன் ''குருநாதா!'' என்று பணிவுடன் தலை தாழ்த்தினான்.

முகுந்தன் மஹாயனரை நோக்கி புன்முறுவல்செய்தான். ''இவனுக்கும் நீங்கள்தான் குருநாதரா?'' என்று வினவினான்.

மஹாயனர் அதற்குப் பதில் சொல்லவில்லை. ''இப்பொழுது நீ என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினார்.

''சிறைக்குச் செல்வதாக உத்தேசம்; குருநாதர் கட்டளையை மறுக்க இஷ்டமில்லை. அது மட்டுமல்ல, மாளிகையில் மகாராஜாவும் இருக்கிறார்....'' என்று இழுத்தான் துறவி.

''அதனால்?''

''இங்கு சண்டை போட்டால் அவர் அமைதி குலையும். இந்த ஊரில் அதுவும் ராஜத் துரோகக் குற்றமாகிவிடும். குருத் துரோகம், ராஜத் துரோகம் இன்னும் என்னென்ன துரோகங்களுக்கு நான் ஆளாக நேரிடுமோ தெரியாது. கூடியவரை குற்றப் பட்டியலைக் குறைத்துக் கொள்ளப் பார்க்கிறேன்.''

துறவி தன்னை மட்டுமின்றி மகாராஜாவையும் எண்ணி நகைக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட மஹாயனர் ''நல்லது முகுந்தா! உன் முட்டாள்தனம் எதுவரை போகிற தென்று பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு அவனை அழைத்துச் செல்லும் படி கையை அசைத்துவிட்டு மாதவியின் மாளிகையை நோக்கி மிக மெதுவாக சிந்தனையில் ஆழ்ந்தவராய் நடந்து சென்றார்.

அவர் மாளிகைக்குள் நுழையுமட்டும் அவரைப் பார்த்துக் கொண்டே நின்ற வாலிபத் துறவி அவர் கண்ணுக்கு மறைந்ததும் வீரபத்திரனை நோக்கி, ''உபதளபதி! நாம் செல்லலாமே'' என்று அழைத்தான்.



34933 / 101
5233983

அதுவரை மஹாயனர் செல்வதைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டு நின்ற வீரபத்திரன் தனது வாளின்[illegible] நிமிர்ந்து, கம்பீரமாக நின்று ''துறவியாரே [illegible] நகைச்சுவை ததும்ப அழைத்து, ''டேய் இவரை ஜாக்கிரதையாக அழைத்து வாருங்கள்'' என்று தனது வீரர்களுக்கு ஆணையிட்டு மாளிகைக்கு எதிரிலிருந்த பாதையில் இறங்கி நடக்கலானான். துறவியும் அவன் பின்னால் நடந்து சென்றான். வீரர்கள் முன்னும் பின்னுமாகக் காவல் புரிந்து சென்றார்கள்.

மாளிகை முன்னிருந்த வீதியிலிருந்து ராஜவீதிக்கு வந்து, அங்கிருந்த பல வீதிகளைத் தாண்டிச் சுற்றி வளைத்து நடந்து கடைசியாக வேகவதி ஆற்றின் வேறொரு கோடியிலிருந்த சிறைச்சாலைக்கு வீரபத்திரன் துறவியை அழைத்து வந்தான். அவன் வந்ததும் சிறைச் சாலைக் காவலர் வீரபத்திரனுக்குத் தலைதாழ்த்தி வணங்கியதிலிருந்து அவனுக்கும் சிறைச் சாலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பது மிகத் தெளிவாகப் புரிந்தது முகுந்தனுக்கு. சிறைச்சாலை மதிலை அடுத்திருந்த பெரிய திறந்தவெளியில் வீரர்கள் பலர் கடுமையாகக் காவல் புரிந்ததைக் கண்ட முகுந்தன், ஒரு முறை உள்ளே புகுந்துவிடுபவர் யாராகயிருந்தாலும் அங்கிருந்து தப்புவது எளிதல்ல என்பதைப் புரிந்துகொண்டான். திறந்தவெளியை அடுத்து இருபுறத்திலும் நீள ஓடிய தாழ்வரையிலிருந்த சிறை அறைகளின் கம்பிகளும் வெளிப் பூட்டுகளும் மிகவும் பலமாயிருந்ததையும் துறவி கவனித்தான்.

ஆனால், அந்த அறைகள் இருந்த பக்கமே வீரபத்திரன் செல்லாமல் சிறைப் பெருங்கதவுக்கு நேர் எதிரில் இருந்த பெரிய கட்டடத்துக்கு முகுந்தனை அழைத்துச் சென்றான். அங்கிருந்த பெரிய அறை ஒன்றைத் திறந்து விடச்சொல்லி ''இங்கு நீ தங்கலாம்'' என்று முகுந்தனை அறைக்குள் செல்லப் பணித்தான். அந்தப் பெரிய அறையில் மஞ்சங்கள் பல இருந்தன. வீரபத்திரன் தன்னை அங்கு அழைத்து வந்தது சிறை வாசத்துக்கா, சுகவாசத்துக்கா என்பது

புரியவில்லை முகுந்தனுக்கு. இருப்பினும் அந்த அறை மஞ்சமொன்றில் போய் அமர்ந்துகொண்டு "இனி நீ கதவைச் சாத்திப் பூட்டிச் செல்லலாம்" என்று வீரபத்திரனுக்கு அனுமதி கொடுத்தான்.

"பூட்ட உத்தரவில்லை" என்று பதில் சொன்னான் வீரபத்திரன்.

வீரபத்திரனுக்கு சகல உத்தரவுகளையும் முன்னதாகப் பிறப்பித்தே தன்னைச் சிறை செய்திருக்கிறார் மஹாயனர் என்பதைப் புரிந்து கொண்டாலும், வீரபத்திரன் ஒவ்வொரு பேச்சிலும் மஹாயனரைக் காட்டிக் கொடுத்ததாலும் உள்ளூரச் சிரித்துக் கொண்ட முகுந்தன் "பூட்ட உத்தரவில்லையா!!" என்று வியப்படைந்தவனைப் போல கேள்விகேட்டான். வீரபத்திரன் வாயைக் கிளற.

"இல்லை."

"சிறையில் அடைத்தால் பூட்டவேண்டாமா?"

"இது பெரிய மனிதர்கள் சிறை."

"சிறையில் கூட தாரதம்மியம் வைத்திருக்கிறீர்களா?"

"ஆமாம்"

"இதுவும் மஹாயனர் ஏற்பாடோ?"

"சகலமும் அவர் ஏற்பாடுதான்"

"இங்கு அவர் வருவதுண்டா?"

"அடிக்கடி வருவார். சிறைவாசிகளின் நலன்களை பற்றி விசாரிப்பார். அவர்களுக்குப் புத்தி சொல்லுவார், மஹாயனர் உள்ளம் அன்புமயம்" - இதை மிகப் பெருமையோடு சொன்னான் வீரபத்திரன்.



இகழ்ச்சி நகையொன்று துறவியின் கடை இதழ்களில் தவழ்ந்தது. "சரி உபதளபதி! நீங்கள் போய்வாருங்கள். பொழுது விடிய இன்னும் சிறிது நேரந்தானிருக்கிறது. இன்று முழுவதும் சிவராத்திரியாக வேண்டாம். சிறிது நேரம் படுத்து உறங்குகிறேன்" என்ற துறவி ஆசனத்தை விட்டு எழுந்தான். வீரபத்திரன் தனது வீரர்களுடன் வெளியே சென்றதும் அறைக் கதவைச் சாத்திவிட்டு கட்டிலில் படுத்தான். மிதமிஞ்சிய களைப்பால் அயர்ந்து தூங்கிவிட்டான்.

மீண்டும் அவன் கண் விழித்தபோது பொழுது விடிந்து, கதிரவனும் எழுந்து ஐந்து நாழிகைகளுக்கு மேல் ஆகியிருந்ததால் கதிரவனின் கிரணங்கள் நேராக அவன் மார்பில் விழுந்து கிடந்தன. கண்ணை அகல விழித்தான் முகுந்தன். எதிரேயிருந்த ஆசனத்தில் அவன் மூட்டை இருந்தது. "இதை யார் கொண்டு வந்தார்கள்? எப்பொழுது கொண்டு வந்தார்கள்?" என்று வினவிக்கொண்டு கட்டிலிலிருந்து எழுந்து நடந்து சென்று அந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் அவன் உடை இருந்தது. கொண்டுவந்த ஓலைச் சுவடிகள் இருந்தன. மஹாயனர் கொடுத்த அடையாள மோதிரமும் இருந்தது. ஆனால் நாகசர்ப்பம் ஒன்று மட்டும் இல்லை.

## 16. உபதேசம்

நாகசர்ப்பத்தைக் காணவில்லையென்றதும் ஒரே ஒரு விநாடி முகுந்தன் முகத்தில் கோபத்தின் சாயை படர்ந்த போதிலும் அது அடுத்த விநாடி மறைந்து அவன் இதழ்களில் புன்னகையே அரும்பிற்று. அந்த மெல்லிய நீண்ட கத்தியை எடுத்தவர் யாராயிருந்தாலும் அவர்கள் தனது மூட்டையிலிருந்த ஓலைச்சுவடிகளைவிட பல்லவ ராஜ சின்னத்தையும், புத்த பிரார்த்தனைக் கோஷத்தையும் கொண்ட மோதிரத்தைவிட

நாகசர்ப்பத்தைப் பெரிதாக மதிக்கிறார்கள் என்பதை அறிந்த சென்னியின் மகன். "அவர்கள் மதிப்பீட்டில் தவறவில்லை. அதன் சூட்சுமத்தை அறிந்துதான் அதை எடுத்திருக்கிறார்கள். ஆனால் என்கையில் இயங்குவதைப்போல் அது மற்றவர்கள் கையில் இயங்க முடியாதே. அதை எடுத்தும் பயனில்லையே" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அடுத்த விநாடி அந்தச் சிந்தனையை அகற்றிவிட்டு அறையிலிருந்து வெளியே வந்து "யாரங்கே?" என்று குரல் கொடுத்தான்.

அந்தக் குரல் நாலைந்து பணிமக்களை அவன் முன்பாக வரவழைத்ததாலும், அவர்கள் தமக்குப் பணிவிடை செய்வதில் காட்டிய அக்கறையாலும் தனக்கு அந்தச் சிறைச் சாலையில் ராஜபோகம் இருக்குமென்பதைப் புரிந்துகொண்ட முகுந்தன் பணிமக்களை ஏவி நீராடித் தன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டான். நீராட்டம் சென்னியின் மகனுக்கு வெகு கம்பீரமாக நடந்தது. இரு பணியாளர்கள் அவனுக்குத் தைலம் தேய்த்தார்கள். இன்னுமிருவர் நல்ல வெந்நீரில் வாசனைத்திரவியங்களைக் கலந்து நீராட்டினார்கள். பட்டாபிஷேகம் செய்து கொள்ளுபவனைப் போல் நீராடிமுடித்த முகுந்தனுக்கு அவனது அறையில் காலை போஜனம் செய்விக்கப்பட்டது. இத்தகைய சைத்தியோபசாரங் களால் முந்திய இரவின் நித்திரை நீக்கமும் பயண அலுப்பும் தீர்ந்துவிடவே முகுந்தன் சிறைச்சாலையைப் பார்க்கக் கிளம்பினான். அவன் புறப்பட்டதும் அவனுக்கு முன்னால் இரண்டு வீரர்களும், பின்னால் இரண்டு வீரர்களும் தொடர்ந்து வந்து அவனுக்குச் சிறைச்சாலையை சுற்றிக் காட்டினார்கள்.

சிறைச்சாலையின் முக்கால்வாசி அறைகளில் யாருமில்லை. நாலைந்து அறைகளில் இருந்தவர்களும் சிறைவாசத்தைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. "ஏன் இப்படி சிறைச்சாலையில் யாருமே இல்லை?" என்று வீரனொருவனை வினவினான் வாலிபத்துறவி.



"காஞ்சியில் அனாவசியமாக யாரையும் தண்டிப்பதில்லை. அதுவும் நிர்வாகத்தை மஹாயனர் ஏற்றுக் கொண்ட பிறகு பெரும்பாலான குற்றவாளிகள் மன்னிக்கப்படுகிறார்கள்" என்று சமாதானம் கூறினான் வீரன்.

"குற்றவாளிகள் மன்னிக்கப்படுகிறார்களா!" என்று வியப்புடன் வினவினான் வாலிபத்துறவி.

"ஆம். ஆனால் அவர்கள் படையில் சேர்ந்து பணிபுரிய வேண்டும். சேவையால் குற்றத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். இது மஹாயனர் கட்டளை. இதனால் பலர் திருந்தியிருக்கிறார்கள்" என்றான் வீரன்.

அதுவரை வீரனுடன் சென்று கொண்டிருந்த முகுந்தன் சட்டென்று நின்றான். "இந்த நிர்வாக முறை எத்தனை நாளாக அமலில் இருக்கிறது?" என்று வினவினான் சிறிது சிந்தனை வசப்பட்டு.

"மௌரிய மன்னர் படையெடுத்து வந்த நாளாக" என்று வீரன் விளக்கினான்.

"அதாவது?"

"ஆறு மாதங்களாக."

"ஆறு மாதங்களாகப் படையில் சேர்க்கப்பட்ட குற்றவாளி களின் தொகை எவ்வளவிருக்கும்?"

"நிச்சயமாகத் தெரியாது. ஆனால் ஐயாயிரம் பேருக்குக் குறைவிருக்காது என்று கேள்வி."

அத்துடன் நீதி நிர்வாகக் கேள்விகளை நிறுத்திக் கொண்ட முகுந்தன் அந்த வீரனை நோக்கி "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

''மாரன்'' என்றான், அந்த வீரன் பணிவுடன்.

''மாரனா?'' -முகுந்தன் கேள்வியில் ஆச்சரியம் பெரிதும் நிலவிக் கிடந்தது.

''ஆம் பிரபு!''

''தமிழனா?''

''ஆம்.''

இதைக் கேட்டதும் மாரனை உற்று நோக்கிய முகுந்தன் ''பெயருக்குத் தகுந்தபடி அழகாய்த்தானிருக்கிறாய்'' என்று பாராட்டினான்.

வீரன் புன் முறுவல் கொண்டான். ''புற அழகில் என்ன இருக்கிறது பிரபு?'' என்று அலுத்துக் கொண்டான்.

அந்த வீரனுக்கு வயது கிட்டத்தட்ட தன் வயது தானிருக்குமென்பதை ஊகித்துக் கொண்டான் முகுந்தன். அந்தச் சிறுவயதில் அவன் ஏன் விரக்தியாகப் பேசவேண்டும் என்பது மட்டும் புரியவில்லை சோழன் மகனுக்கு. ஆகவே கேட்டான், ''வயதுக்கும் உன் பேச்சுக்கும் பொருத்த மில்லையே!'' என்று.

தங்கள் வயதுக்கும் வேஷத்துக்கும் கூட பொருத்தமில்லை தான். எதை வைத்து எதை நிர்ணயிக்க முடியும்?'' என்று கேட்ட மாரன் குரலில் ஏளனமிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாத முகுந்தன் ''சரி வா'' என்று மாரனுடன் சிறைச்சாலையின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தன் அறைக்குத் திரும்பினான்.

அவன் மஞ்சத்திலமர்ந்ததும் விடைபெற முயன்ற மாரனைத் தடுத்த துறவி ''மாரா! இந்த மூட்டையை யார் கொண்டு வந்தது. எப்பொழுது கொண்டு வந்தார்கள்?'' என்று கேட்டான்.



''நீங்கள் எழுந்திருக்க இருந்த சமயத்தில் கொண்டு வந்தார். அதை நான்தான் மஞ்சத்தின் மீது வைத்தேன். பத்ராவர்மர்தான் கொண்டு வந்தார்'' என்று கூறினான் மாரன்.

அதற்குமேல் மாரனை அனுப்பிவிட்டு அறையிலிருந்த கட்டிலில் படுத்துக்கொண்டு மோட்டுவளையை நோக்கிக் கொண்டு சிந்தனையிலிறங்கினான் முகுந்தன். தன்னை தந்தை கல்வி கற்க காஞ்சிக்கு அனுப்பியது முதல் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்த முகுந்தன் சகலமும் விசித்திரமாயிருந்ததை நினைத்துச் சிறிது குழப்பங்கூட அடைந்தான்.

சோழ நாட்டிலிருந்து புறப்பட்டபோது அவன் தந்தை சொன்னார்: ''முகுந்தா! நீ செல்லும் காஞ்சி பாரத நாட்டின் கலைக்களஞ்சியம். உலகத்திலுள்ள பல நாட்டவர்கள் அங்கு சாஸ்திரங்களைப் பயிலவும், பற்பல கலைகளை அறியவும் வருகிறார்கள். உனக்குப் பாடம் சொல்ல மஹாயனர் ஒப்புக் கொண்டு ஓலை அனுப்பி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. காஞ்சியிலுள்ள நிலைமை சரியில்லையே என்று யோசித்துக் கொண்டேயிருந்தால் பயனில்லை. காலா காலத்தில் நீ படிக்க வேண்டும். மஹாயனர் மஹாபுருஷர்களில் ஒருவர். சாஸ்திரம் சஸ்திரம் இரண்டும் கைவரப் பெற்றவர். அவர் உனக்குப் போதிக்க ஒப்புக் கொண்டது சோழர் குலம் செய்த பாக்கியம். மஹாயனர் எதைச் சொன்னாலும் கண்ணை மூடிக்கொண்டு செய். காரணம் கேட்காதே. மஹாயனர் உன்னை அங்கீகரிப்பதற்கு அடையாளமாக புத்தர் சரணம் பொறித்த முத்திரை மோதிரம் தருவார். அதை உன் உயிரைப் போல் பாதுகாத்துக் கொள்'' என்று சொன்ன சென்னி ''மோதிரம் இதைப் போலிருக்கும்'' என்று தன்னிடமிருந்த மோதிரத்தையும் காட்டினார்.

அந்தக் காட்சியை நினைத்துப் பார்த்த முகுந்தன், தந்தை சொன்னது போலவே மஹாயனர் மோதிரத்தை சத்திரத்திலேயே

காட்டி விட்டதையும் எண்ணி "அதுவரை சரி. மஹாரயனர் என்னை ஏற்றுக் கொண்டு விட்டார் சீடனாக. ஆனால் மாதவியிடம் அழைத்துக் கொண்டு ஏன் போனார்? சிறைச்சாலையில் ஏன் தள்ளினார்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். காஞ்சியில் நுழைந்தபின் ஏற்பட்ட அனுபவங்களுக்கும் காஞ்சியில் நுழையுமுன்பு இருந்த தனது எதிர்பார்ப்புக்கும் எந்தவித சம்பந்தமுமில்லாதிருந்ததையும் நினைத்துப் பார்த்ததில் பல விஷயங்களுக்கு விளக்கம் கிடைக்காததைப் புரிந்து கொண்டான்.

இத்தனையிலும் மாதவியின் அழகிய முகம் மனக்கண் முன்பு எழுந்து நின்றது. அவள் கண்களில் சதா ஒரு துயரம் தவழ்ந்து கொண்டிருந்ததை யோசித்துப் பார்த்து 'சகல போகங்களிலும் புரளும் ஒரு தாசிக்கு துன்பம் என்ன இருக்க முடியும்?' என்று வினவிக் கொண்டான். சகல போகங்கள் என்பது மாதவியிடம் சம்பந்தப்பட்டவரை ஐசுவரிய போகங்களே தவிர வேறு போகம் ஏதும் இருக்க முடியாது என்பது அவனுக்குத் தெள்ளெனத் தெரிந்தது. அவள் ஒரு சிறு குழந்தை போலவே தெரிந்தாள், அவன் மனக்கண்ணுக்கு. அவள் முகத்தில் தூய்மை பரவிக் கிடந்ததை அந்தச் சமயத்திலும் அவன் உணர்ந்தான். ஆனால், தான் அவளைக் கட்டிலில் தூக்கிப் போட்டபோது அவள் ஏன் வாளாவிருந்தாள் என்பது புரியவில்லை அவனுக்கு. எது எப்படியிருந்தாலும் மாதவியைப் பற்றிய நினைப்பு அவனுக்கு நிகரற்ற இன்பத்தை அளித்தது.

அடுத்து அவன் மன்னனை நினைத்தான். அவன் வெறுப்பு அளவு மீறியது. "இவனும் ஒரு மன்னனா?" என்று சற்று இரைந்தே சொன்னான். 'சமுத்திரக் குப்தன் படைகள் கோதாவரி தீரத்தை அடைந்துவிட்டன. இன்னும் பல்லவன் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். தேவகியைக் காண திருட்டுத்தனமாகக் காஞ்சிக்கு வருகிறான். என்ன மன்னன் இவன்'? என்று பெரிதும் அலுத்துக் கொண்டான். இத்தகைய நினைப்புகளாலும் அவற்றால் ஏற்பட்ட உணர்ச்சிக் குமுறலாலும் சலனமடைந்த உள்ளத்துடன் அன்றைய பகலைக் கழித்தான் முகுந்தன்.



வேளை தவறாமல் ஆகாரம் வந்து கொண்டிருந்தது. ஆகாரமும் அல்ப சொல்ப ஆகாரமல்ல. கனி வகையறாக்களாக ஏராளமாக அவன் மஞ்சத்தில் குவிக்கப்பட்டன. அவற்றை எதையும் தொடவில்லை துறவி. இரண்டொரு பழங்களை மாலையில் சாப்பிட்டுப் பாலும் அருந்தினான். அதற்குப் பிறகு எதும் வேண்டாமென மறுத்துவிட்டான். இரவும் வந்தது. காஞ்சி அந்தகாரத்தில் ஆழ்ந்தது. எங்கும் மௌனம் குடிகொண்டது. சிறைச்சாலையில் அதிக விளக்குகள் ஏற்றப்படாவிட்டாலும் அவசியமான அளவில் ஆங்காங்கு ஒன்றிரண்டு விளக்குகள் காட்சியளித்தன. அவற்றைத் தன் அறையின் முகப்புத் தாழ்வரையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த முகுந்தன் "காஞ்சியின் போர் எச்சரிக்கை சரியாகத்தானிருக்கிறது" என்று பாராட்டினான்.

கேளிக்கைகளும் விளையாட்டுகளும் நிரம்பிய காஞ்சி மௌனமாகக் கிடந்தது. போரின் பெரும் பீதி மக்களை அடக்கியிருந்தது முகுந்தனுக்குப் புரிந்தது. ஆனால், காஞ்சிக்குச் சரியான பாதுகாப்பு இருந்ததாக தோன்றவில்லை, சோழன் மகனுக்கு. "மக்கள் அடக்கப்பட்டிருக்கிறார்கள். வாயிற் பெருங்கதவுகள் காலாகாலத்தில் அடைக்கப்படுகின்றன. ஆனால் தேவையான படைப்பாதுகாப்பு இல்லை. வீரர் நடமாட்டம் மிகக் குறைவாய் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டான். மும்முரமான போருக்கு காஞ்சி இன்னும் தயாராகவில்லையென்பது அவனுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. ஆனால் அந்த அசிரத்தைக்கு யார் காரணம் என்பது மட்டும் புரியவில்லை அவனுக்கு.

இரவும் மெல்ல மெல்ல ஏறியது. அறையின் முகப்புத் தாழ்வரையிலிருந்து அறைக்குள் சென்று படுக்கத் தீர்மானித்த

முகுந்தன், அறையின் விளக்கு அணைந்து கிடந்ததைப் பார்த்து அதை ஏற்ற "யாரங்கே?" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான். கதவின் அருகே அவன் சென்றதும் அவன் தோளை மெல்லிய கையொன்று அழுத்தியது. "விளக்கை ஏற்ற வேண்டாம். அப்படியே விடுங்கள்" என்று காதில் யாரோ முணுமுணுத்தார்கள்.

முகுந்தன் சட்டென்று நின்றான். "யாரது?" என்று கேட்டான். கேள்விக்குப் பதிலில்லை. அவன் கையில் நாக சர்ப்பம் அழுத்தப்பட்டது. "காஞ்சியை விட்டுச் சென்று விடுங்கள் உங்களை யாரும் தடை செய்யமாட்டார்கள்" என்று உபதேசமும் காதுக்கருகில் ஒலித்தது.

## 17. அர்ஜுன சந்நியாசி

இருளடைந்த அறையின் கதவின் மறைவிலிருந்து தனது தோளை அழுத்திய கை யாருடையதென்பதைப் புரிந்துகொள்ள விநாடி நேரம் கூடப் பிடிக்கவில்லை முகுந்தனுக்கு. ஆனால், அந்த நேரத்தில் மாதவி எப்படி வந்தாள் தன் அறைக்கு, ஏன் வந்தாள், தாழ்வரையில் உட்கார்ந்திருந்த தான் அறியாமல் உள்ளே எவ்வாறு நுழைந்தாள் என்ற பல விஷயங்கள் விளங்கவில்லை அவனுக்கு. ஒரு வேளை தான் தீவிர சிந்தனையிலிருந்ததால் மாதவி வந்ததைக் கவனிக்க வில்லையோ என்று கூடச் சிந்தித்து பிறகு அந்தச் சிந்தனையைக் கைவிட்டான். உறக்கத்தில் கூட விழித்துக் கொண்டிருக்கும் தனது உணர்ச்சிகள், விழித்துக் கொண்டு ஏதோ நினைப்பிலிருக்கும் போது அசந்திருக்க முடியாதென்று நிச்சயத்துக்கு வந்தான். அதனால் கேட்டான்: "மாதவி! நீ எப்பொழுது வந்தாய்?" என்று.

மாதவி, அவன் காதுக்கருகில் இருந்த தனது முகத்தை அவன் தோளில் புதைத்துக்கொண்டு, "சிறிது நேரமாகிறது" என்று சொன்னாள்.



"என்னைத் தாழ்வரையிலிருக்கும் போதே அழைத்திருக்கலாமே?" என்றான் முகுந்தன்.

முகுந்தனின் அறிவுக் கூர்மையை மாதவி பெரிதும் வியந்தாள். "சோழநாட்டுச் சாமர்த்தியத்தை என்னிடமும் காட்டுகிறீர்கள்" என்று கூறி நகைத்தாள், வியப்பும் நகைப் பொலிவில் கலக்க.

"சோழநாட்டுச் சாமர்த்தியத்தைக் காட்டுகிறேனா? உன்னிடமா?" என்று மேலும் பேச்சுக் கொடுத்த வாலிபத் துறவி அவள் அழகிய இடையில் தனது இடக்கையைச் செலுத்தினான் வலக் கையில் நாகசர்ப்பமிருந்த காரணத்தால்.

மாதவி இடையில் தவழ்ந்த அவன் கையுடன் ஒத்துழைத்து அது இழுத்த இழுப்புக்கு இணங்கி அவன் பக்கத்தில் இழைந்தாள். "ஆம்... மிக சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள். சாமர்த்தியம் சோழ நாட்டின் சொந்தச் சொத்து. நீங்கள் சுற்றி வளைத்துக் கேட்பதைவிட இந்த அறைக்கு வர வேறு வழி இருக்கிறதா என்று கேட்டிருக்கலாமே" என்றாள் மாதவி.

துறவியின் கை அவள் துடியிடையை நன்றாகவே இறுக்கியது. அப்படி இறுக்கியவண்ணம் அவளை அழைத்துக் கொண்டு பஞ்சணையை நோக்கிச் சென்றான். தனது பஞ்சணையை அடைந்ததும், "மாதவி! இப்படி உட்கார். நிதானமாகப் பேசலாம்" என்று கூறி வலுக்கட்டாயமாக அவளை அழுத்தி உட்கார வைத்துவிட்டு எதிரே நின்று கொண்டான்.

உடனடியாக அவன் கேள்வி எதுவும் கேட்கவில்லை. தீவிர சிந்தனையிலிருந்தான். பிறகு கேட்டான் "மாதவி! என்னை நீ நம்புகிறாயா?" என்று.

மாதவி மெதுவாக நகைத்தாள். இந்த இருட்டில் "நம்பாமலா இந்த வேளையில் இங்கு வந்தேன்? நம்பாமலா விளக்கை ஊதிவிட்டு நீங்கள் உள்ளே வரட்டுமென்று காத்திருந்தேன்?" என்று வினவவும் செய்தாள்.

அதுவரை அவள் எதிரில் பின்னால் கையைக் கட்டி நின்றிருந்த முகுந்தன் சட்டென்று கைகளை முன்புறம் கொண்டுவந்து அவள் இரு தோள்களையும் அழுத்திப் பிடித்தான். பிடித்தவண்ணம் வினவினான்: ''நீ எந்த நாடு மாதவி!'' என்று.

''தொண்டைநாடு. இந்த ஊர்தான் என் சொந்த ஊர். எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டாள் மாதவி.

''சோழ நாட்டவனாதலால் என்னைச் சாமர்த்தியக் காரனென்றாய். ஆனால் தொண்டை நாட்டுச் சாமர்த்தியம் சோழ நாட்டைவிடப் பன்மடங்கு அதிகமாயிருக்கிறது'' இதைச் சொன்ன துறவி நகைத்தான்.

''அப்படி என்ன சாமர்த்தியத்தை நான் காட்டிவிட்டேன்?'' -இதைக் கேட்ட மாதவியின் குரல் பலவீனமாயிருந்தது.

''என்னை நம்புகிறாயா என்று கேட்டதற்குப் பதில் மிக சாமத்தியமாக சொல்கிறாய். நீ இரவில் இங்கு வருவாயா என்பதைக் கேட்கவில்லை நான். உன் மாளிகையில் எனக்கு அளித்த அறையில் என்னுடன் இருந்தாய். கட்டிலில் தூக்கிப் போட்டேன் ஆட்சேபிக்க வில்லை நீ. அதைப்பற்றித் தேவகியிடம் வேடிக்கையாகப் பேசினாய். ஆகையால் மாதவி நீ இந்த வேளையில் இங்கு வந்ததும் என்னைச் சந்தித்ததும், இருட்டில் இருப்பதும் விசித்திரமல்ல. ஆனால் எந்தக் காரியத்துக்காக உண்மையில் வந்தாயோ, எதற்காக நாகசர்ப்பத்தைத் திரும்ப என் கையில திணித்தாயோ, எதற்காக என்னைக் காஞ்சியைவிட்டு ஓடச் சொல்கிறாயோ அதன் உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியுமா? அந்த விஷயத்தில், அந்த அரசியல் மர்மத்தை அவிழ்ப்பதில், உடைப்பதில், என்னை நம்புகிறாயா? இதுதான் கேள்வி...'' என்று நிதானமாகப் பேசி, பேச்சைச் சற்றே நிறுத்திய முகுந்தன் மேலும் விசாரித்தான். ''மாதவி, இந்த அறையையும் வெளியே உள்ள ஏதோ ஓரிடத்தையும் பிணைக்கும் சுரங்க வழி இருக்கிறது.



அதைப்பற்றி நான் கேட்கவில்லை. நான் காஞ்சியைவிட்டு ஓட ஒப்புக் கொண்டால நீ காட்டக் கூடிய வழி அந்தச் சுரங்க வழிதான். அதைப்பற்றி அறிய நான் இஷ்டப்படவில்லை. ஆனால் நீயும் மகாராஜாவும், ஏன் எல்லோருமே காஞ்சியைவிட்டு என்னை விரட்டப் பார்க்கிறீர்கள்? நான் இங்கிருப்பதால் யாருக்கு என்ன கஷ்டம்? என்ன நஷ்டம்? சமுத்திர குப்தன் போன்ற ஒரு மாமன்னன் படையெடுத்து வரும்போது காஞ்சி ஏன் நடுங்குகிறது? ஏன் போர் சன்னதத்திலில்லை? இந்தப் பெரிய குழப்பத்தில் காஞ்சி இருக்கும்போது படிக்க வந்திருக்கும் சாதாரண வீரனான என்னைப்பற்றி ஏன் எல்லோரும் அளவுக்குமீறி அக்கறை கொள்கிறீர்கள்? அப்படி உங்களை அக்கறை கொள்ளச் செய்வது யார்? நீ என்னை நம்பினால் இந்த விஷயங்களைத தெளிவுப் படுத்தலாம்.''

இப்படிச் சிறிது உணர்ச்சியுடனேயே பேசிய சோழர்குல இளவல், மாதவியின் பதிலை எதிர்பார்த்து நின்றான். பதில்வரவில்லை, மாதவியிடமிருந்து. பதிலுக்குப பெருமூச்சு ஒன்று வெளிவந்து அந்த அறையின் நிசப்தத்தைச் சிறிதளவு கலைத்தது. விநாடிகள் பறந்தன. மாதவியின் மௌனம் உடையவில்லை. என்னவோ நினைத்து முகுந்தன் அவள் தோள்களிலிருந்து தனது கைகளை எடுத்து அவள் அழகிய கன்னங்களை பிடித்தான் இரு புறமும். இரு உள்ளங்கைகளும் நனைந்ததால் மாதவியின் கமல நயனங்களிலிருந்து நீர் வழிந்தோடுவதைப் புரிந்து கொண்டான். அதனால் அவளை நெருங்கி, அவள் தலையைத் தனது மார்பில் அழுத்திப் பிடித்துக் கண்களையும் கன்னங்களையும் துடைத்தான்.

''மாதவி என்னை நம்ப முடியாவிட்டால், நம்பினாலும் உண்மையைச் சொல்ல இஷ்டப்படாவிட்டால், இஷ்டமிருந்தும் சொல்லமுடியாத நிர்ப்பந்த நிலையில் நீ இருந்தால் என் கேள்விக்குப் பதில் சொல்லாதே'' என்று கூறி அவள் துன்பத்தைத் துடைக்க இறுக்கியே அணைத்தான் அவளை.

மாதவியின் பூவுடல் இழைந்தது அவன் உடலுடன் கைகளிரண்டும் எழுந்து அவன் கழுத்தை வளைத்து இழுத்தன. இன்னும் ஒரே விநாடி, அவள் கமலக் கனிவாயின் இதழ்கள் துறவியின் வலிய உதடுகளுடன் இணைந்தன. வெறியுடன் இழைந்தன. அவள் திண்ணிய மார்பகம் அவன் மார்பில் வலுவாக அழுந்தி அவன் உணர்ச்சிகளைச் சுழல வைத்தது. துறவி விசுவாமித்திரனானான். மேனகை எதற்காக பூலோகத்துக்கு வந்தாள் என்று நினைத்தான். அந்த நினைப்புடன் மாதவியை முதல் நாளிரவு போல கைகளால் தூக்கிக் கொண்டான். பஞ்சணையில் தான் உட்கார்ந்து அவளை தனது மடியிலும் கைகளிலும் ஏந்திய வண்ணம் அவள் உதடுகளை மீண்டுமொருமுறை பருகினான். அதற்குப் பிறகு தனது உதடுகளை நீக்கி, ''மாதவி! நான் ஒரு சத்தியம் செய்யட்டுமா?'' என்று வினவினான்.

''என்ன சத்தியம்?'' -மிக மெதுவாக கேட்டாள் மாதவி.

''உன்னைவிட்டு, இந்தக் காஞ்சியை விட்டுப் பிரிவதில்லையென்று சத்தியம் செய்கிறேன்'' என்று கூறினான் துறவி.

மாதவி பெருமூச்செறிந்தாள். ''வேண்டாம். அப்படி சத்தியம் செய்யாதீர்கள்'' என்று மெதுவாக வேண்டினாள்.

துறவி அவள் கன்னத்துடன் தன் கன்னத்தை இழைத்தான். ''ஏன் மாதவி'' என்று கேட்டாள், அவள் காதுக்கருகில் தனது உதடுகளைத் திருப்பி.

அந்த முரட்டு உதடுகள் திரும்பியபோது கன்னத்தில் முரட்டு ரோமங்களும் அவளுக்கு இன்பத்தை அளித்தன. அதனால் அதிகமாகச் சுழன்ற உணர்ச்சிகளால் இன்ப வேதனைப்பட்ட மாதவி, ''உங்கள் சத்தியம் உங்களை அழித்துவிடும்'' என்று விம்மி விம்மி சொற்களை உதிர்த்தாள்.

''விம்மாதே மாதவி'' என்றான் துறவி.



''ஏன்?'' -மாதவி மீண்டும் விம்மினாள்.

''நீ வீரனுக்குடையவள். எந்த நேரத்திலும் மனதைத் தளரவிடக்கூடாது'' என்றான் துறவி. ''எந்த வீரனுக் குடையவள்?'' என்று வேடிக்கையாக ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான்.

''உங்கள் கேள்வி விபரீதம்'' என்று சீறினாள் மாதவி.

''எப்படி?''

''எந்த வீரனுக்கு?'' என்றாள் மாதவி. ''வருகிற வீரர்களுக் கெல்லாம் விருந்தென்று நினைக்கிறீர்களா?''

துறவி உள்ளூர நினைத்தான் வேசியைப்பற்றி வேறு எவ்விதம் நினைப்பதென்று. ஆனால் என்ன காரணத்தாலோ அப்படி மாதவியைப்பற்றி நினைக்க அவன் மனம் இடம் கொடுக்காததால் மெல்ல பதில் சொன்னான் துறவி. ''மாதவி, நேற்று முதல் நிகழ்ந்த விஷயங்கள் அப்படித்தான் நினைக்க இடம் கொடுக்கும். ஆனால் என்ன காரணத்தினாலோ உன்னைப் பற்றி இழிவாக நினைக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. நீ செய்யும் விபரீத பணிகளெல்லாம் ஏதோ பெரிய நன்மையை முன்னிட்டு செய்வதாக எனக்குத் தோன்றுகிறது. அது என்னவென்பது எனக்குப் புரியவில்லை. எந்தக் காரணத்துக்காகவோ நீ உன்னை அழித்துக் கொள்கிறாய். உன்னை யாரோ அழிக்க முயலுகிறார்கள் அதற்கு நீயும் இடந் தருகிறாய். உன் மனம் பெரிய தியாகத்துக்குத் தயாராகிவிட்டது. அது என்ன என்பதை அறிய விரும்புகிறேன். நம்பிச் சொல்லுகிறாயா?''

மாதவியின் கரங்கள் எழுந்தன. மீண்டும் அவன் கழுத்தை வளைத்து அணைத்தன. ''நான் சொல்ல முடியாது. உங்கள் நம்பிக்கைக்கும், மேலான எண்ணங்களுக்கும் எனது நன்றி ஆனால் நான் வாயைத் திறக்க முடியாத நிலையில் இருக்கிறேன்'' என்றாள் துன்பம் நிறைந்த குரலில்.

''மாதவி! உன்னுடைய இந்தப் பிடிவாதம் என்னைப் பயனற்றவனாகச் செய்கிறது. உன் மனத்தைச் சிறிது திறந்துவிடு. அநியாயமாக உன்னிடம் யாராவது உறுதி மொழி வாங்கியிருந்தால் அது செல்லாது. எதற்கும் விலக்கு உண்டு. ஆணைக்குக் கூடத்தான்'' என்றான் துறவி.

மாதவி மெதுவாக முணுமுணுத்தாள்: ''யாரும் என்னிடம் உறுதிமொழி வாங்கவில்லை. யாரிடமும் நான் ஆணையிடவில்லை'' என்று.

''அப்படியானால்...?'' - துறவி கேட்டான்.

''நானாகச் செய்துகொண்ட கட்டுப்பாடு'' என்ற மாதவி, ''வீரரே! நாம் உதட்டளவில் செய்யும் ஆணையைவிட நாமாகச செய்து கொள்ளும் கட்டுப்பாடு பலமுள்ளதல்லவா?'' என்று வினவினாள்.

''ஆம் மாதவி'' என்ற துறவி அவளைத் தனது மடியிலிருந்து எடுத்துக் கீழே இறங்கினான்.

''ஏன்'' என்று குழைந்தாள் மாதவி.

''நான் சந்நியாசி'' என்றான் முகுந்தன்.

மாதவி நகைத்தாள்.

''ஏன் மாதவி நகைக்கிறாய்?'' என்று கேட்டான் துறவி.

''ஒன்றுமில்லை. சந்நியாசி என்கிறீர்களே!''

''ஏன் நான் சன்னியாசியல்லவா?''

''சந்நியாசிதான். அர்ஜுன சந்நியாசி'' என்று கூறிய மாதவி, அவன் பக்கத்தில் வலிய உட்கார்ந்தாள். அடுத்த விநாடி பஞ்சணையில் புரண்டாள்.



# 18. மகிழினிது கந்தம்

அதுவரை மாதவியின் எழிலாலும் அவளிடம் வேரூன்றிவிட்ட காதலாலும், அவள் சமீபத்தாலும் உணர்ச்சிகளுக்குப் பெரிதும் இடம் கொடுத்துவிட்ட வாலிபத் துறவி அவள் தன் பக்கத்தில் வலிய உட்கார்ந்து தன்னை ஒதுக்கிவிட்டுத் தன் பின்புறமாகப் பஞ்சணையில் விழுந்து புரண்ட சமயத்தில் தனது உணர்ச்சிகளைப் பெரிதும் அடக்கிக் கொண்டான். தான் மட்டும் இஷ்டப் பட்டால் பஞ்சணையில் புரண்ட அந்தப் பைங்கிளியுடன் தானும் புரள முடியு மென்பதையும், அதனால் காம தாகமும் தணியுமென்பதையும் அவன் அறிந்திருந்தாலுங் கூட மாதவியின் நெருக்கத்துக்கும் அழைப்புக்கும் அவன் இடங்கொடுக்க மறுத்தான். ''மாதவியை ஏதோ ஒரு பெரும் சக்தி ஆட்கொண்டு தன்னிஷ்டப்படி அவளை பொம்மையாக்கி விட்டது. பொம்மலாட்டத்தில் சூத்திரக் கயிற்றை இயக்குபவன் போல் பின்னாலிருக்கும் யாரோ ஒருவன் அவளைப் பலவந்தமாக இயக்குகிறான். இவள் சிந்தனை அவனால் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான், அவன் யாராயி ருந்தாலும் அவன் தன் தேவையைக் கொண்டு மன்னனான விஷ்ணு கோபனை மடக்கியிருக்க வேண்டுமென்பதும், விஷ்ணு கோபனுக்கு அடுத்தபடி தன்னை வளைக்கவோ, வளைத்து ஒட்டவோ மாதவி பயன்படுத்தப்படுகிறாள் என்பதும் முகுந்தனுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. அந்த மனிதன் யாராயிருந்தாலும் அவனைக் கண்டுபிடிக்கவும் அவன் வலையிலிருந்து இரு பெண்களை மீட்கவும் அந்தச் சிறை அறையில், இருட்டில் தீர்மானித்தான் சோழர்குல இளவல். இந்த எண்ணங்கள் மேலோங்கி நின்றதால் அவன் மாதவியை நோக்கித் திரும்பவும் இல்லை. இடித்த புளிபோல் கைகளிரண்டையும் ஒன்றுடன் ஒன்றைக் கோத்தவண்ணம் பஞ்சணை முகப்பிலேயே உட்கார்ந்திருந்தான்.

அவன் அடியோடு மவுனமாகி விட்டதையும், தன் பக்கம் திரும்பக்கூட இல்லாமல் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டதையும் பஞ்சணையில் கிடந்த மாதவி உணர்ந்து கொண்டாள். அவன் உறுதியையும், மௌனத்தையும் ஒருங்கே உடைக்க எண்ணி அவன் பின்புறத்தை நோக்கி உருண்டு ஒருக்களித்த நிலையில் தனது மலர்க்கரம் ஒன்றை அவன் இடுப்பைச் சுற்றி வளையவிட்டாள். ''என்ன திடீரென்று மௌனமாகி விட்டீர்கள்? ஏதாவது யோக சித்தியா?'' என்று கேட்டு மெதுவாகச் சிரித்தாள்.

துறவி நகைக்கவில்லை. ''ஆம் மாதவி'' என்று மட்டும் பதில் சொன்னான்.

''எதைப்பற்றி...?'' என்று விசாரித்த மாதவி தன் கையால் அவனைச் சிறிது வலியவே அணைத்தாள்.

''யோக சித்தி எதைப்பற்றி என்பதில்லை. உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், மனத்தை ஒரு நிலையில் நிறுத்தவும் உபயோகப்படுகிறது'' என்றான் முகுந்தன்.

''உணர்ச்சியை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்? யார் அதைத் தூண்டுகிறார்கள்?'' -மாதவி வினயத்துடன் கேட்டாள்.

முகுந்தன் சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான்: ''யோகத்துக்கும் தவத்துக்கும் இடையூறு பெண்கள். உணர்ச்சிகள் அவர்களால்தான் தூண்டப்படுகின்றன'' என்று.

''அப்படியா?''

''ஆம்: விசுவாமித்திரன் தவத்தை முதலில் மேனகை உடைத்தாள். இரண்டாவது முறை ரம்பை உடைத்தாள்.''

''நான் மேனகையா, ரம்பையா?''

''இரண்டும் கலந்த மோகினி.''



''அப்படியானால் நீங்கள் விசுவாமித்திரரா?''

''அப்படியிருப்பது தவறா?''

''தவறில்லை. ஆனால் உங்களைப் பார்த்தால் விசுவாமித்திரராகத் தெரியவில்லை.''

''தெரியவில்லையா?''

''இல்லை.''

''ஏன் எனக்கு உறுதி போதாதா? மனவலு இல்லையா?''

''இரண்டுமிருக்கிறது. ஆனால் கோபமில்லை. ஆகையால் நீங்கள் விசுவாமித்திரா இல்லை.'' - இதைச் சொன்ன மாதவி மீண்டும் நகைத்தாள்.

முகுந்தன் தனது வலது கையை ஆதரவாக அவள் முதுகின் மீது வைத்தான். ''உன்னிடம் எனக்குக் கோபம் எப்படி வரும் மாதவி?'' என்று கேட்டான், பரிதாபம் நிறைந்த குரலில்.

முன்பு அவன் கை தன் மீது பட்டதற்கும் இப்பொழுது பட்டதற்கும் பெரும் வித்தியாசமிருந்ததை மாதவி ஸ்பரிச மாத்திரத்தில் உணர்ந்தாள். முன்பு வலிய கையொன்று காமத்தினால் உந்தப்பட்டு முரட்டுத்தனமாக இடையை வளைத்து இழுத்தது. இப்பொழுதோ பரிதாபத்துடன் முதுகை ஒரு தகப்பன் குழந்தையைத் தடவுவதுபோல் தடவுகிறது. அவளுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அன்று இரவு அதற்கு மேல் எதற்கும் துறவி மசியமாட்டா னென்பது. ஆகவே துன்பப் பெருமூச்செறிந்தாள் மாதவி. அதனால் எழுந்து தாழ்ந்த முதுகு அவள் இதயக் கதையைச் சொல்லவே முகுந்தன் வினவினான், ''ஏமாற்றமா மாதவி?'' என்று.

இதைக் கேட்ட மாதவியின் மனம் பொறுமையை இழந்தது. சித்தம் சீறியது. ''எதில் ஏமாற்றம் என்கிறீர்கள்?'' என்ற கேள்வியும் சீற்றத்துடன் வெளிவந்தது.

''நான் ரிச்யசிருங்கன் ஆகாததால்'' என்ற துறவி, பெரிதாகவே நகைத்தான்.

''ரிச்யசிருங்கரா?'' -மாதவிக்கும் அதன் கருத்துப் புரிந்தாலும் புரியாததுபோல் கேட்டாள்.

''ஆம். மகரிஷி ரிசயசிருங்கர் காட்டிலிருந்தார். பெண்களை அறியாதவர். அவர்களைப் பார்த்ததும் அவர்களிடம் மயங்கிக் காட்டிலிருந்து நாட்டுக்குச் சென்று விட்டார்'' என்றான் முகுந்தன்.

கதை அவளுக்குத் தெரிந்ததுதான். ராமாயணக்கதை பாரத நாட்டில் யாருக்குத்தான் தெரியாது? இருப்பினும் அவன் சொற்கள் அவளுக்குக் கோபத்தை ஊட்டவே, ''ஓகோ! நீங்கள் ஏற்கனவே பெண்களை அறிந்தவரோ?'' என்று வினவினாள், உள்ளத்திலிருந்த சீற்றம் சொற்களிலும் விரிய.

''அறிந்திருக்கிறேன் ...'' -விஷமத்துடன் பதில் சொன்னான் முகுந்தன்.

''அப்படியா!''

''ஆம். புத்தகங்கள் மூலம்.''

''அது அனுபவத்தில் இல்லையா?''

''இதுவரையில் இல்லை. இப்பொழுது துவங்கியிருக்கிறது.''

''எப்படி?''

''சாஸ்திரம் படிக்க இவ்வூருக்கு வந்தேன். மஹாயனர் உன்னிடம் தள்ளினார் என்னை- நீ கற்பழிக்க ஆரம்பித்துவிட்டாய்.''

மாதவியின் கோபம் மிதமிஞ்சவே அவள் சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். ஆடைகளைச் சீர்படுத்திக் கொண்டாள் அவசர அவசரமாக. பிறகு பஞ்சணையிலிருந்து கீழே இறங்கினாள் வேகமாக. பிறகு வெளியே செல்ல இரண்டடி எடுத்து வைத்தவள் சட்டென நின்றுவிட்டாள்.



துறவி இருந்த இடத்தை விட்டு அகலவுமில்லை; அவளைத் தடை செய்யவுமில்லை. மாதவியே உக்கிரத்துடன் திரும்பி, ''நான் வெளியே போகமுடியாது'' என்று கூறினாள்.

துறவி புன்முறுவல் கொண்டான். அவன் உட்கார்ந்திருந்தாலும் தாழ்வரை விளக்கின் சிறு வெளிச்சம் அவன் முகத்தில் லேசாக விழுந்ததாலும் மாதவியால் அவன் முகத்தைப் பார்க்க முடிந்தது நன்றாகவே. புன்முறுவல் தவழ்ந்த இதழ்களைத் திறந்து துறவி பதில் சொன்னான். ''நான் போகச் சொல்லவில்லை'' என்று.

''நீங்கள் போகச் சொன்னாலும் நான் போக முடியாது'' என்று மாதவி கூறினாள். அவள் குரலில் சிறிது பயமும் ஒலித்தது.

''அதுவும் எனக்குத் தெரியும்'' என்றான் முகுந்தன், உணர்ச்சியற்ற குரலில்.

''என்ன தெரியும் உங்களுக்கு? என் வேதனை தெரியுமா?''

''முழுக்க முழுக்கத் தெரியும் மாதவி! நீ ரகசியமாக நிலவறையின் மூலம் வந்திருக்கிறாய். ஆகவே வெளியே பகிரங்கமாக மற்றவர்கள் போல் போகமுடியாது. அதனால் திண்டாடுகிறாய்'' என்று சிரித்தான் முகுந்தன்.

மாதவியை ஏதோ விவரிக்க இயலாத அச்சம் சூழ்ந்திருக்க வேண்டும். ''ஆம்... ஆம்'' என்று பதில் கூறிய அவள் உதடுகள் துடித்தன.

''இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான் துறவி.

''புரியவில்லை'' -மாதவியின் உதடுகள் துடித்தன சற்று அதிகமாகவே. அதனால் சொற்களும் தடுமாறியே வெளிவந்தன.

இதற்குப் பிறகு துறவி பேச்சுக் கொடுக்கவில்லை; எழுந்திருந்து அவளை நோக்கி வந்தான் பின்புறமாக. அவள் தோள்களில் தனது

கைகளை வைத்தான் ஆதரவுடன். மெல்லத் தன் மீது சார்த்தியும் கொண்டான் ஆறுதலளிக்க. "மாதவி அச்சத்தை விடு. அச்சந் தவிர் என்ற தமிழர் முதுமொழியை நினைத்துக்கொள். உன் நிலை எனக்குப் புரிகிறது. எனக்குத் தெரியாமல் உள்ளே வந்து விட்டாய், நிலவறை மூலம் நான் உறங்கியிருந்தால் வெளியே சென்றிருப்பாய் அதே வழியில். நான் இப்பொழுது இந்த ராத்திரியை சிவராத்திரியாக்கி விட்டேன். அதனால் உன் திட்டம் தகர்ந்துவிட்டது. உன்னை அனுப்பியவர் என்னை அதிகமாகப் புரிந்து கொள்ளவில்லை. மாதவியின் வலையில் சுலபமாக துறவி விழுந்து விடுவான். மாதவி அவனைக் காஞ்சியைவிட்டு விரட்ட ஏற்பாடு செய்வாள். அவன் போவதற்க ஆணையிட்டபின் அவன் உறங்கியபின் திரும்பி விடுவாள் என் நினைத்தார். அவர் திட்டம் நடக்கவில்லை. ஆனால் மாதவி! அஞ்சாதே. உன் இக்கட்டான நிலை எனக்குப் புரிகிறது. அதை நான் பயன் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. நான் வெளியே செல்கிறேன். தாழ்வரையில் கூட நிற்கவில்லை. நீ வந்த வழியே சென்றுவிடு. அப்பொழுது உன் மனச்சாட்சி உறுத்தாது. என்னிடம் நீ ரகசிய வழியைக் காட்டவில்லை. நானாகக் கண்டு பிடித்தால் அதற்கு நீ பொறுப்பாளியல்ல; நீ செல் மாதவி! நாம் மீண்டும் சந்திப்போம். ஏனென்றால் நான் இந்தக் காஞ்சியைவிட்டுச் செல்லப்போவ தில்லை. இதை மட்டும் உன்னை அனுப்பியவரிடம் திட்டமாகச் சொல்லிவிடு" என்று கூறிவிட்டு அறைக் கதவின் மூலம் வெளியே சென்று விட்டான், அவள் பதிலுக்குக் கூடக் காத்திராமல்.

கதவின் பக்கமே மாதவி நீண்ட நேரம் நின்றாள். துறவியின் நெடிய உருவம் கம்பீரமாகப் பெருங்கதவுகளை நோக்கிச் செல்வதைக் கண்டாள். அவன் நடை ஒரே சீராக இருப்பதையும் பார்த்தாள். அவன் நெஞ்சுரம் அவளுக்குப் பெரும் வியப்பாயிருந்தது. "இவரிடம் உண்மையைச் சொல்ல இயலவில்லையே" என்று வாய் விட்டே சொல்லிக் கொண்டாள். பிறகு கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்றாள்.



நீண்ட நேரம் கழித்தே துறவி அறைக்குத் திரும்பினான். திரும்பியதும் விளக்கைக் கொளுத்தினான். அறையில் எந்தவித மாற்றமுமில்லை. ஆனால் அறையின் ஒரு மூலையில் மகிழ மலர்கள் நான்கு விழுந்து கிடந்தன. அதைக் கண்ட துறவியின் முகத்தில் மகிழ்ச்சி பெரிதும் நிலவியது. நேராகச் சென்று அந்த மலர்களைக் கையில் எடுத்து முகர்ந்தான். "மடல் பெரிது தாழை. மகிழினிது கந்தம்" என்ற ஔவை பாட்டியின் பாடல் வரியை முணுமுணுத்தான். "மகிழ மலர்களே! உங்களை எனக்குப் பெரிதும் பிடிக்கும். உங்களுக்கும் என்னை பிடிக்குமென்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன்" என்று கூறிக்கொண்டே மீண்டும் அவற்றை முகர்ந்தான்.

## 19. மகாராஜாவின் கலக்கம்

அறையின் தெற்குக் கோடி மூலையில் சற்றே சிதறி விழுந்துகிடந்த மகிழ மலர்கள் நான்கையும் வலது கையில் வைத்து முகர்ந்து கொண்டே நின்ற இடத்திலிருந்து சிறிதும் அசையாமல் தீவிர சிந்தனையில் இறங்கினான் வாலிபத் துறவி. அந்தச் சிந்தனையுடன் பக்கத்திலிருந்த பலகணி வழியாக சற்று எட்டத் தெரிந்த வேகவதி நதியையும் நோக்கினான். நதிக்கு அப்பால் வெள்ளை வெளேரென்ற மணலை அடுத்துத் தெரிந்த ஜெயின் விஹாரத்தின் மகுடங்களையும் தனது கூரிய கண்களால் ஆராய்ந்தான். "அதோ மகுடங்கள், இதோ என் கையில் மகிடங்கள்" என்று மகுடங்களுக்கும் மகிடங்களுக்கும் தமிழில் ஒரே எழுத்துத்தான் வித்தியாசமென்பதை உதடுகளால் முணுமுணுத்தான். அப்படி முணுமுணுத்தவன் அந்த இரண்டுக்கும் ஏதோ பெருத்த சம்பந்தம் இருக்க வேண்டு மென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டான். அப்பொழுது மெல்ல உதயமாகிய கிருஷ்ணபட்சத்துச் சந்திரனையும் சாளரத்தின் மூலம் கவனித்த முகுந்தன் அது காஞ்சியின் நதிப்புரத்தையும், என

சிறைச்சாலையை அடுத்த புல் தரையையுங்கூட எத்தனை மனோகரமாக அடிக்கிறது என்று எண்ணிப் பார்த்தான். அத்தனை மனோகரத்தையும் காஞ்சியைச் சூழ்ந்துள்ள ஆபத்தும் காஞ்சிக்குள்ளேயே நடக்கும் சதியும், சதியின் மர்மமும் எத்தனை விகாரப்படுத்துகின்றன என்பதை நினைத்துப் பெருமூச்செறிந்தான். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு கையிலிருந்த மகிடமலர்களை முகர்ந்த வண்ணம் சிறைச்சாலைக்கு வெளிக்கதவையும் ஆராய்ந்தான். நள்ளிரவு நெருங்கி விட்டதால எங்கும் அமைதி நிலவிக் கிடந்தது. வெளிவாயில் கதவுக்கருகிலிருந்த காவலர் நடமாட்டம் தவிர வேறெவ்வித நடமாட்டமோ அரவமோ இல்லை. அந்த அமைதியைத் திருப்தியுடன் தலையை ஒருமுறை அசைத்து ஆமோதித்துவிட்டு அறைக்குள் வந்து கதவைத் தாளிட்டான். சாளரங்களையும் மூடி அவற்றின் மரத் தாழ்ப்பாள்களை இறுக்கினான். பிறகு விளக்கை எடுத்துக் கொண்டு மகிழமலர்கள் விழுந்து கிடந்த அறையின் மூலைக்குச் சென்றான். அந்த இடத்தில் விளக்கைக் கீழே வைத்துவிட்டு விளக்கைச் சுற்றிச் சுற்றி இரண்டு மூன்று முறை நடந்தான். நடந்தவன் சட்டென்று ஓரிடத்தில் நின்றான். நின்றதும் அவன் முகத்தில் குழப்பம் பெரிதும் தெரிந்தது. "மாதவி! உன் வித்தையை சோழ நாட்டானிடமே காட்டிவிட்டாய். ஆனால் சோழன் ஏமாறுகிறவனல்லன் என்பதை நீயும் புரிந்து கொள்ளவில்லை" என்று சற்று இரைந்தே பேசிக் கொண்ட வாலிபத் துறவி தான் நின்ற இடத்திலேயே உட்கார்ந்து கொண்டு கையால் மூன்று முழம் தரையில் அளந்தான்.

அந்த இடத்தை லேசாகத் தனது கையை முஷ்டியாகப் பிடித்துத் தட்டினான். அதன் விளைவாகக் கேட்ட ஒலியைக் காதில் வாங்கியதும் அவன் முகத்தில் பூர்ண திருப்தி நிலவியது. அந்தத் திருப்தியுடன் தரையில் அமைக்கப்பட்டிருந்த கற்களில் ஒன்றை லேசாக அசைத்தான். கல் மெல்ல அசைந்தது. அசைந்ததும் கீழே 'கிர்' ரென்று ஓர் ஒலி உண்டாக இன்னும் நான்கு கற்கள் அசைந்தன.



தரை விரிந்து பெரும் நிலைத்துவாரம்போல் அடியில் பள்ளம் ஒன்று தெரியவே விளக்கை எடுத்துக் கீழே தெரிந்த பாதாளத்தைக் கவனித்தான். சுமார் அரை ஆள் ஆழத்தில் ஒரு கல் இருந்தது வேறெதையும் காணோம். அந்த இடத்தில் இறங்கி நின்று அந்தப் பாறையை நோக்கினான். "நினைத்தபடிதான் இருக்கிறது" என்று தனனுள் சொல்லிக்கொண்ட வாலிபத் துறவி மேலிருந்த விளக்கை ஊதியணைத்துவிட்டுப் பக்கவாட்டில் கற்களை அசைக்க மேல்தரை பழையபடி மூடிக்கொண்டது. அடுத்த படி தான் நின்றிருந்த பாறையின் ஒரு மூலையில் போய் சுற்றிலுமிருந்த சுவரைத் தடவினான். அதில் தெரிந்த ஒரு தாழ்ப்பாளை இழுக்க அவன் நின்றிருந்த பாறை மெல்ல அகன்று கீழே ஓடும் படிகளைப் புலப்படுத்தியது. படிக்கருகில் எங்கிருந்தோ வீசிய விளக்கின் வெளிச்சத்தால் அப்படிகளை நன்றாக ஆராய்ந்தான். படிகள் சுத்தமாயிருந்தன. அன்றாடம் படிகள் சுத்தம் செய்யப்பட்டிருந்தது மிக நன்றாகத் தெரிந்ததால் அந்தப் படிகளில் நடமாட்டம் அடிக்கடி இருப்பதைப் புரிந்து கொண்ட வாலிபத் துறவி அவற்றில் இறங்கி மெதுவாகப் படிகளில் காலை வைத்துப் பார்த்தான் அவை திடமாக இருக்கவே அவற்றில் இறங்கி நடந்தான்.

அவன் முதல் படியில் காலை வைத்தவுடன் மேலிருந்த பாறை மூடிக்கொள்ளவே அந்தப் படிக்கும் பாறைக்கும் இணைப்பு இருப்பதைப் புரிந்து கொண்டான். பிறகு படிகளில் இறங்கியவன் இருபது படிகளுக்குக் கீழே சமதரை இருப்பதைப் பார்த்து அதன் வழியே நடந்தான். இப்படி சுமார் ஒரு நாழிகை நேரம் நடந்த பின்பு திடீரென்று இரண்டு கதவுகள் அவன் முன் தோன்றவே இரண்டும் இரண்டு பக்கங்கள் செல்கின்றன என்பதைப் புரிந்து கொண்டான். எந்தக் கதவைத் திறந்து செல்வது என்பது பற்றிச் சிறிது சிந்தித்து விட்டு வலப்புறக் கதவைத் திறந்தான். திறந்ததும் சில அடி தூரம் நடந்ததும் மேலே படிகள் ஓடின. அந்தப் படிகளின் உச்சிக்கு வந்ததும் இன்னொரு கதவு தென்பட்டது. ஆகவே இம்முறை நிலவறைப் படிகள் அறையின் தரையை அடையவில்லை

என்பதையும் பக்கச் சுவரில் முடிந்திருக்கின்றனவென்பதையும் ஊகித்துக் கொண்டு அந்தக் கதவை லேசாக தடவினான். சுவர் போலவே காட்சியளித்த அந்தக் கதவின் நடுவில் பெரிய சிமிழ் போன்ற ஒரு மரவை இருக்கவே அதை லேசாகத் திருகினான் துறவி. அது சுழன்று ஒரு துவாரம் தெரிய அதன் மூலம் சுள்ளென்று வெளிச்சம் முகத்திலடிக்க அதிலிருந்து தப்ப சிறிது விலகி நின்று பிறகு அந்தத் துவாரத்தின மூலம் நோக்கினான் பக்கவாட்டில் மறைந்து நின்றபடி.

அவன் கண்ணெதிரே விரிந்தது விசால்மான அறை. போகப் பொருள்கள் அந்த அறையில் நிறைந்திருந்தனவென்றாலும் அவையெல்லாம் தாறுமாறாகக் கிடந்தன. இரண்டு ஹம்ஸ கூஜாக்கள் ஒரு சாளரத்தில் உருண்டு கிடந்தன. மேலிருந்து தொங்கியது ஒரு ஹம்ஸ விளக்கு. அது தூங்கா விளக்காதலால் எரிந்து கொண்டிருந்தாலும் அது துலக்கபபட்டு நீண்ட நாளாகியிருக்க வேண்டும் என்பது பார்க்கும் போதே தெரிந்தது. அறையின் ஓரத்திலிருந்த பஞ்சணையில் படுக்கையும் தலையணைகளும் தாறுமாறாகக் கிடந்தன. இன்னொரு மூலையிலிருந்த ஒரு பெட்டி உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இந்த நிலையில் அந்த அறை இருப்பதற்குக் காரணம் என்னவென்று புரியாததால் சிந்தனை வசப்பட்டான் துறவி. அப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான் மகாராஜா விஷ்ணுகோபன் உள்ளே நுழைந்தார்.

உள்ளே நுழைந்த மகாராஜா சிலையென நின்றார் சில விநாடிகள். பிறகு சுற்றிலும் ஒரு முறை தமது கண்களை ஓட்டி முகத்தைச் சுளித்துக் கொண்டார். சற்று நிதானத்துக்கு வந்ததும் "மாதவி! மாதவி!" என்று கூவி அழைத்தார்.

அவர் அழைப்பைக் கேட்ட அவள் சற்று எட்ட இருந்த ஒரு பெரிய கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து "ஏன் மகாராஜா" என்று தொடங்கியவள், அறையைப் பார்த்ததும்



திடுக்கிட்டு நின்றாள். "இது யார் வேலையாயிருக்கும்?" என்று வினவினாள், மகாராஜாவைத் திரும்பி நோக்கி.

"யார் வேலை? எல்லாம் உன் காதலன் வேலையாகத் தானிருக்கும்?" என்று மகாராஜா எரிந்து விழுந்தார். என்றும் நிதானமிழக்காத மகாராஜா அன்று நிதானத்தை இழந்து விட்டதைத் துவாரத்தின் மூலம் பார்த்துக் கொண்டிருந்த துறவி கவனித்தான். தவிர அவர் காதலன் என்று குறிப்பிட்டது யாராக இருக்கும் என்று சிந்தித்தான்.

அந்தக் கேள்வியை மாதவியே கேட்டாள். "யார் மகாராஜா என் காதலர்?" என்று.

"ஏன்? உன் காதலன் யாரென்று உனக்கு தெரியாதா?" என்று சுள்ளென்று விழுந்தார் மகாராஜா.

மாதவியும் முகம் சுளித்தாள். "எனக்குத் தெரிந்தாலென்ன தெரியாவிட்டாலென்ன? உங்களுக்குத்தான் தெரியுமே, சொல்லுங்களேன்" என்றாள் மாதவி, சினத்தைக் குரலில் காட்டி.

மகாராஜாவின் கோபம் சிறிது அடங்கியிருக்க வேண்டும். மாதவியின் கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. எதிரே கவிழ்ந்து கிடந்த ஓர் ஆசனத்தைத் திருப்பிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். "அவன்தான் அந்தப் போலி சந்நியாசி" என்று மகாராஜா கூறினார். கூறினார் என்பதைவிட எரிந்து விழுந்தார் என்று சொல்வது பொருந்தும்.

"அவர் இங்கு எப்படி வரமுடியும்?" என்று மாதவி கேட்டாள்.
"நீ சொன்னபடி செய்தாயல்லவா?" என்று மகாராஜா வினவினார்.

"செய்தேன்" -மாதவியின் பதில் சகஜமாக வந்தது.

"மகிழ மலர்களை குறித்த இடத்தில் போட்டாயா?"

"போட்டேன்."

"அகஸ்மாத்தாகத் தலையிலிருந்து உதிர்ந்தது போலத்தானே போட்டாய்?"

"ஆம்."

"அப்பொழுது அவன் தான் வந்திருப்பான்."

"வந்தால் எங்கு ஓடிப்போய் விடுவார்?"

"திரும்பப் போயிருந்தால்?" என்று மகாராஜா வினவினார்.

ஒருநாளும் திரும்பிப் போகமாட்டார். அவர் இங்கு வந்திருந்தாலும் இப்படி அறையை அலங்கோலப்படுத்தித் தான் வந்திருப்பதைப் பறைசாற்றியிருக்க மாட்டார்." -இதை வெகு திட்டமாக சொன்னாள் மாதவி.

அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக விஷ்ணுகோபன் தலையைஅசைத்தான். "அப்படியானால் வேறு யார் வந்திருப்பார்கள்?" என்று வினவினான் சிந்தனை மிகுந்த குரலில்.

மாதவி பதில் சொல்லத் திராணியற்று நின்றாள். அப்பொழுது மகாராஜா மீண்டும் குற்றஞ்சாட்டினார், "மாதவி! நான் நினைத்த அளவுக்கு உன் அழகு பயனுடையதல்ல" என்று.

"ஏன் மகாராஜா?" -தலைகுனிந்து வெட்கத்துடன் வினவினாள் மாதவி.

"இந்தச் சனியன் பிடித்த துறவியை உன்னால் இழுக்க முடியவில்லையே?" என்று கூறினார் மகாராஜா அலுப்புடன்.

இதற்கு என்ன பதில் சொல்லுவாள் மாதவி? நாணம் பிடுங்கித் தின்ன, உணர்ச்சியால் மார்பு எழுந்து தாழ தலைகுனிந்து நின்றாள். நின்ற நிலையில் கேட்டாள்: "மகாராஜா! பெண்களின் அழகை வைத்துத் தான் உங்களால் காரியத்தைச் சாதிக்க முடியுமா?" என்று.

"மஹாயனரைக் கேள் இந்தக் கேள்வியை" என்றார் மகாராஜா.



"அவரை எதற்குக் கேட்க வேண்டும்?" என்று கேட்டாள் மாதவி.

"அவர்தானே என்னைத் தேவகியிடமும் உன்னைத் துறவியிடமும் சிக்க வைத்தார்! நான் சிக்கினேன்; துறவி தப்பினான்" என்று மகாராஜா அலுத்துக் கொண்டார்.

"தவறு மகாராஜா, நானும் தப்பவில்லை" என்று கூறிய வண்ணம் நிலவறைக் கதவைத் திறந்துகொண்டு அந்த அறைக்குள் நுழைந்தான் துறவி. நுழைந்ததும் மகாராஜாவையும் மாதவியையும் பார்த்துப் புன்முறுவல் கொண்டான். "மகாராஜா! உங்கள் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன். என்ன செய்ய வேண்டும்? ஆணையிடுங்கள்" என்றும் கேட்டான்.

அவன் கேள்வியில் உள்ளடங்கிய பொருளைக்கண்டு பிரமித்தார் மகாராஜா.

## 20. மன்னனை வீழ்த்திய துறவி

மகாராஜாவின் விழிகள் துறவியை ஏறெடுத்து நோக்கின ஒரு விநாடி. பிறகு நிலத்தில் தாழ்ந்தன. "உங்கள் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன்" என்று துறவி சொன்ன சொற்களில் ஆழமான அர்த்தம் புதைந்து கிடப்பதை மகாராஜா சந்தேகமற உணர்ந்துகொண்டதால் நிலத்தில் தாழ்ந்த விழிகளைத் தூக்கியபோது, துறவியைக் கவனிக்காமல் மாதவியையே நோக்கினார். மாதவி அவர் கண்களைத் தைரியத்துடன் சந்தித்தாள். அடுத்து துறவியையும் நோக்கினாள் துணிவுடன். "மகாராஜா அழைத்ததாகச் சொன்னீர்களே. எப்பொழுது அழைத்தார் உங்களை?" என்று வினவினாள் ஏதுமறியாதவள் போல.

வாலிபத் துறவியின் வதனத்தில் மந்தகாசம் பெரிதும் படர்ந்தது "நேரிடையாக அழைக்கவில்லை. ஆனால் அழைப்பு அழைப்புத்தானே?" என்று வினவியதன்றி இதழ்களில் சிறிது புன்சிரிப்பையும் படரவிட்டுக் கொண்டான் துறவி.

''நேரிடையாக அழைக்கவில்லை யென்றால்?'' -மாதவியின் கேள்வியில் பொய் வியப்பு ஒலித்தது.

''நேரிழையை விட்டு அழைத்தார்'' என்று துறவி லேசாக நகைக்கவும் செய்தான்.

''நான் உங்கள் அறைக்கு வந்ததைச் சொல்கிறீர்களா?'' - ஒன்றுமறியாத குழந்தைபோல் கேட்டாள் மாதவி.

''ஆம்'' - துறவியின் பதில் சர்வசாதாரணமாயிருந்தது.

''உங்களை மன்னர் அழைத்ததாகக் கூறவில்லையே நான்?''

''இல்லை.''

''நீங்களாக ஊகித்துக் கொண்டீர்களா?''

''இல்லை.''

''என்ன இல்லை?''

''மகார்ராஜா மலர் தூவி அழைப்பார் என்பது எனக்குத் தெரியாது. காஞ்சியில் அதுவும் ஒரு வழக்கம் என்பதை இன்றுதான் அறிந்தேன்'' என்ற துறவியின் முகத்தில் மகிழ்ச்சி அதிகமாக விரிந்தது.

துறவி தங்களைப் பார்த்து நகைக்கிறானென்பதை மகாராஜா, மாதவி இருவருமே புரிந்து கொண்டார்கள். இருப்பினும் மாதவி கேட்டாள் ''என்ன புதிர் போடுகிறீர்கள்?'' என்று.

முகுந்தன் மாதவியை உற்று நோக்கினான் சில விநாடிகள். ''மாதவி, உனக்கோ மகாராஜாவுக்கோ சிந்திக்கும் சக்தி சிறிது குறைவாயிருக்கிறது'' என்று கூறிய முகுந்தன், மாதவியின் முகத்தில் ஏற்பட்ட கோபத்தைக் கண்டு, ''கோபிக்காதே மாதவி! நான் சொல்வதில் தவறு இல்லை. சரி, ஒரு கேள்விக்கு பதில் சொல்'' என்றான்.



''கேளுங்கள்'' என்றாள் மாதவி.

''நீ தலையில் மகிழம்பூ சூடியிருக்கிறாய்?''

''ஆம்.''

''மகிழம்பூவைத் தொடுப்பதில்லை.''

''இல்லை.''

''கோத்துத்தான் வைத்துக் கொள்வார்கள்.''

''ஆம்.''

''கோத்த மாலையிலிருந்து உதிரிப்பூக்கள் விழா. அதுவும் மகிழம் நான்கு நாள்களானாலும் வாடுமே தவிர பிரிந்து விழா. ஆகவே மாதவி நீ போட்டுவந்த நான்கு மகிழம் பூக்களும் தற்செயலாகத் தலையிலிருந்து விழுந்தவையல்ல. வேண்டுமென்றே என்னை இங்கு இழுக்க நீ போட்டு வைத்த மலர்கள் இதில் அதிக புத்திசாலித்தனம் இல்லை'' என்ற துறவி மேலும் சொன்னான்: ''அந்த மலர்களைப் பார்த்ததுமே நீ முக்கியமாக வந்தது என்னை அழைக்கவே என்பதை உணர்ந்து கொண்டேன். நீ நாகசர்ப்பத்தை என் கையில் திணித்தது, காஞ்சியைவிட்டு ஓடும்படி கூறியது எல்லாம் நாடகம். என்னை இங்கு அழைக்க வந்ததற்குப் பூர்வாங்கமான நடிப்பு'' என்றும் கூறினான்.

மாதவியின் கண்கள் நெருப்பைக் கக்கின. ''உங்களை நேரில் அழைத்திருந்தால் வந்திருக்க மாட்டீர்களா?'' என்று கேட்டாள் துணிவுடனும், சினத்துடனும்.

''வந்திருப்பேன். ஆனால் அப்படி என்னை நேர்முகமாக அழைத்துவர இஷ்டப்படவில்லை. தவிர இந்தக் காஞ்சியில் நான் புகுந்தது முதல் நேர்வழியில் எதுவுமே நடக்கவில்லை, சர்வமும் மர்மம்'' என்று வாலிபத் துறவி கூறினான்.

''நான் ஏன் உங்களை நேரில் அழைக்கக்கூடாது?'' என்று கேட்டாள் மாதவி.

பதிலுக்கு அறையின் அலங்கோலத்தைச் சுட்டிக்காட்டினான் துறவி. "இந்த அறையில் வேறு யாராவது இருக்கலாம் என்ற பயம் உனக்கு இருந்தது. மகாராஜாவுக்கும் அந்த அச்சம் இருந்திருக்க வேண்டும். ஆகையால் முதலில் நீ வந்து இங்கு யாருமில்லையா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள இஷ்டப்பட்டாய். நீங்கள் இருவரும் சற்று முன்பு பேசியதிலிருந்து என் ஊகம் சரியென்று தெரிந்து கொண்டேன்" என்றும் சொன்னான் முகுந்தன்.

மாதவியும் மகாராஜாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் ஒரு விநாடி. பிறகு பார்வையைத் துறவிமீது திருப்பினாள் மாதவி. "நாங்கள் பேசியதை ஒட்டுக் கேட்டீர்களா?" என்று வினவினாள் சினத்துடன்.

"ஆம், அதனால் நான் கோபிக்கவில்லை" என்றான் துறவி.

"கோபிக்கவில்லையா!" -வியப்பு இருந்தது மாதவியின் கேள்வியில்.

"ஆம்."

"எதற்கு?"

"மகாராஜா என்னைப் போலி சந்நியாசி என்றார். கோபிக்கவில்லை. நீயே எனக்கு அர்ஜுன சந்நியாசி பட்டத்தை ஏற்கனவே சூட்டிவிட்டாய். அதற்கும் கோபிக்க வில்லை." -இதைச் சொல்லிய துறவி நகைத்தான். "ஆனால் மாதவி! அறையை நான் இப்படி அலங்கோலம் செய்யமாட்டேன் என்று மகாராஜாவுக்கு உறுதி கூறியதற்கு நான் மிகவும் நன்றி செலுத்தவேண்டும்" என்றும் கூறி அதில் சிறிது சந்துஷ்டியைக் காட்டினான்.

இந்த உரையாடலை மகாராஜா கேட்டுக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார் நீண்டநேரம். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, "முகுந்தா!" என்று அழைத்தார்.





"மகாராஜா!" -முகுந்தன் தலை வணங்கினான்.

"அதோ அந்த ஆசனத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்" என்று எட்ட குப்புறக் கிடந்த இன்னொரு மஞ்சத்தைச் சுட்டிக் காட்டினார் மகாராஜா.

துறவி நாலடி நடந்து மஞ்சத்தை எடுத்து வந்து மகாராஜாவுக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டான். "சொல்லுங்கள் மகாராஜா" என்று வினவவும் செய்தான்.

மகாராஜா விஷ்ணுகோபன் முகத்தில் துயர் விரிந்து கிடந்தது. "காஞ்சி பேராபத்திலிருக்கிறது" என்று கூறினார்.

தான் வந்த தினத்திலிருந்து ஒவ்வொருவரும் பாடிய அதே பல்லவியைக் கேட்ட துறவி உணர்ச்சி எதையும் காட்டாமல் தலையை அசைத்தான்.

"அந்த ஆபத்திலிருந்து இந்த மாநகரத்தை மீட்க உனது உதவி வேண்டும்" - மகாராஜா இதைத் தயக்கத்துடன் சொன்னார்.

"ஆணையிடுங்கள் மகாராஜா?" என்றான் துறவி.

"உதவி கேட்பவன் ஆணையிட முடியாது" என்று மகாராஜா விளக்கினார்.

"சாதாரண மனிதர் கேட்டால் அது உதவி. மகாராஜா சொன்னால் அதுவே ஆணை" என்ற துறவி "இல்லையா மாதவி?" என்று, மாதவியையும் அபிப்பிராயம் கேட்டான்.

மாதவி பதில் சொல்லவில்லை. அவள் விழிகள் பதில் கூறின. புரிந்துகொண்ட துறவி, "மகாராஜா! நான் உங்கள் ஆணைக்கு இணங்குமுன்பு இரண்டு மூன்று விஷயங்களை அறிய விரும்புகிறேன்" என்றான்.

"கேள் முகுந்தா!" -மகாராஜாவின் பதிலில் உறுதி இருந்தது.

''மகாராஜா! காஞ்சிக்குள் சமுத்ரகுப்தன் கையாள் ஒருவன் இருக்கிறானென்பதை முன்னமே அறிவோம்...'' என்ற துறவி வாசகத்தை முடிக்கவில்லை.

''ஆம்'' என்றார் மகாராஜா.

''அது யாரென்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது?''

''தெரியாது.''

''ஆனால் முற்றுகையையோ போரையோ எதிர்பார்க்கும் நிலையில் காஞ்சியின் பாதுகாப்பு கையாளப்படவில்லை.'' -இதைத் துறவி வெகு திட்டமாகச் சொன்னான்.

மகாராஜா சட்டென்று அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தார். ''காஞ்சியின் பாதுகாப்புக்கு என்ன குறை? கோட்டை மதில் கதவுகள் மாலையில் மூடப்படுகின்றன. மதில்களில் வீரர்கள் உலாவுகிறார்கள். இது உனக்கே தெரியுமே'' என்றார் மகாராஜா.

துறவி தனது கால்களைச் சிறிது விரித்து தரையில் ஊன்றிக் கைகளைப் பின்னி மடியில் வைத்துக்கொண்டு, ''தற்காப்புக்கு இது போதுமா மகாராஜா?'' என்று கேட்டான். கேட்டபோது அவன் விழிகள் மகாராஜாவைக் கூர்ந்து நோக்கின.

மகாராஜா அவன் விழிகளைச் சந்திக்கவில்லை. ''ஏன் போதாது?'' என்று அறைச் சாளரத்தைப் பார்த்துக் கொண்டு கேட்டார்.

''கோட்டைக் காவல் போதும் மகாராஜா. கோட்டைக்குள் எதிரிகள் புகுந்தால் சமாளிக்க என்ன ஏற்பாடு இருக்கிறது? அத்தகைய நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மக்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கிறதா? உள்ளே இருக்கும் சேனை, நகரத்தின் உள்ளுக்குள் நடக்கும் போரைச் சமாளிக்க சித்தமாயிருக்கிறதா? படை திரட்டப்பட்டிருக்கிறதா? படையில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள்? அவர்கள் தகுதியானவர்கள்



தானா?'' -இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனான் துறவி.

அவனை இடைமறித்த மகாராஜா, ''படைதிரட்டியிருக்கிறோம்'' என்றார்.

''அது படையா?''-இகழ்ச்சி இருந்தது துறவியின் கேள்வியில்.

''ஏனில்லை?'' -மகாராஜாவின் பதில் கேள்வியில் சங்கடமிருந்தது.

''அதில் அனேகமாகச் சிறைக் கைதிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஊரைச் சூறையாடுவதற்கு இந்தப் புதிய படை உபயோகப்படலாம். ஆனால் ஊரைக் காக்க முடியாது'' என்று திட்டவட்டமாகச் சொன்ன துறவி, ''மகாராஜா! உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா?'' என்று வினவினான்.

''கேள்'' என்றார் மகாராஜா. அவன் என்ன கேட்கப் போகிறானோ என்று அவர் முகத்தில் கிலி தெரிந்தது.

துறவி ஒரு பெரிய வெடியைத் தூக்கிப் போட்டான் மகாராஜாமீது. அதைக் கேட்ட மகாராஜா அதிர்ச்சி அடைந்தார். மாதவி எல்லை மீறிய திகில் கொண்டாள். மகாராஜா ஆசனத்தைவிட்டு எழுந்துவிட்டார். துறவி இரண்டாம் முறை அதே வெடியை வீசினான். ''மகாராஜா உங்களுக்கு இப்பொழுது காஞ்சியில் என்ன வேலை?'' என்று அவர் பதில் சொல்லும்முன்பு அவர்மீது பாய்ந்து அவரை நிலத்தில் உருட்டியும் விட்டான். மாதவி அலற வாயைத் திறந்தாள். சக்தியில்லாததால் வாயடைத்து நின்றாள். மயக்கமுற்று ஆடினாள் அப்படியும் இப்படியும். இந்த விபரீதத்தை மகாராஜாவோ, மாதவியோ எதிர்பார்க்கவில்லை. துறவி மட்டும் சட்டென்று சாளரத்தை நோக்கி ஓடினான்.

# 21. முகுந்தன் கோரிக்கை

மகாராஜாவோ மாதவியோ சற்றும் எதிர்பாராதவிதமாக முகுந்தன் திடீரென மகாராஜாவின் மீது பாய்ந்து அவரை உருட்டிவிட்டுச் சாளரத்தை நோக்கி ஓடுவதற்கும் அறைக்குள் மகாராஜாவிருந்த இடத்துக்கு அருகில் ஒரு கூரிய குறுவாள் விழுந்து 'கிணாங்' என்ற விபரீத ஒலியை எழுப்புவதற்கும் இடைவெளி சிறிதுமில்லாததால் யாரும் பேசுவதற்கோ எதையும் நினைப்பதற்கோ அவகாசம் அடியோடு இல்லாதிருந்தது. சாளரத்தை நோக்கி ஓடிய முகுந்தன் வெளியே எட்டிப் பார்த்துவிட்டுப் பெருமூச்சு விட்டு திரும்பி அறைக்குள் வந்தபின்பே தரையிலிருந்து எழுந்த விஷ்ணு கோபன் தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு மீண்டும் பழைய ஆசனத்தில் உட்காராமல், நின்ற வண்ணம் தனது கண்களாலேயே கேள்விகளை எழுப்பினான் துறவியை நோக்கி. மாதவியின் அதிர்ச்சி நிரம்பிய அழகிய விழிகளும் அவனை ஏறெடுத்து நோக்கின; வினவின விஷயம் என்னவென்று. இருவர் விழிகளையும் மாறி மாறி ஒரு விநாடியே பார்த்த வாலிபத் துறவி, மன்னன் உட்கார்ந்த ஆசனத்தை எடுத்து அறையில் இரு சாளரங்களுக்கும் இடையிலிருந்த சுவரை ஒட்டிப் போட்டான். ''மகாராஜா இப்படி அமரலாம்'' என்றும் கூறினான்.

மகாராஜா ஒரு விநாடி அவனை உற்று நோக்கினார். பிறகு பேசாமல் அவன் போட்ட ஆசனத்தில் அமர்ந்தார். அவர் எதிரே நின்று கொண்டிருந்த முகுந்தன், ''மகாராஜா! இனிமேல் நீங்கள் இந்த அறைக்கு வரும் போது இந்த இடத்தில் அமருவது நலம். சாளரத்தின் மூலம் எட்டிப் பார்த்தாலும் நீங்கள் இருப்பது தெரியாது. எதிரே இருப்பதோ சுரங்கக் கதவு. இது திறக்கப்பட்டால் தங்களுக்கு ஆபத்தில்லை. அது எப்படியும் எச்சரிக்கைச் சத்தம் அளிக்கும். அடிக்கடி உபயோகப்படுத்தாத கதவு பாருங்கள்'' என்று தனது ஏற்பாட்டுக்குக் காரணம் கூறினான்.



பெரிய அனார்த்தம் ஏதும் ஏற்படாதது போலவும், சர்வ சகஜமாகவும் பேசிய முகுந்தனைப் பார்த்த மகாராஜாவின் விழிகள் வியப்பால் மலர்ந்தன. ''என்னைக் கொல்ல நடந்த இந்த நிகழ்ச்சியைப்பற்றி நீ அதிக அக்கறை ஏதும் காட்டவில்லையெனத் தெரிகிறது'' என்று சொன்னார் மகாராஜா.

முகுந்தன் நிலத்தைப் பார்த்தான் பதிலுக்கு. ''மகாராஜா! அந்தஸ்து அதிகமாக ஆக ஆபத்தும் அதிகம். நமது அருகிலேயே எதிரி இருக்கும் போது இத்தகைய நிகழ்ச்சிகளை எதிர்பார்க்க வேண்டியது தானே?'' என்றான் நிதானமாக.

அதுவரை மௌனமாயிருந்த மாதவியின் கண்களில் கோபம் உதயமாயிற்று. ''இந்த இடத்திலா?'' என்ற கேள்வியிலும் சீற்றம் இருந்தது.

துறவி தனது பார்வையைச் சற்று எட்ட நின்றிருந்த மாதவி மீது திருப்பினான். ''ஏன் இந்த இடத்திற்கென்ன?'' என்று வினவினான்.

''இது... இது...'' இரண்டு 'இது'களுக்கு மேல் நா இயங்காததால் மென்று விழுங்கினாள் மாதவி.

''தேவகியின் பள்ளியறை'' என்றான் துறவி. ''இந்த மஞ்சங்களையும் மற்ற பொருள்களையும் கவிழ்த்தவன் ரசிகத் தன்மையில்லாதவன்'' என்று குற்றமும் சாட்டினான்.

'இது தேவகியின் அறை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' -மாதவியின் கேள்வியில் சீற்றத்துடன் சங்கடமும் புலப்பட்டது.

'கிட்டத்தட்ட உன் அறையைப் போலவே இருக்கிறது...''

'அதனால்?''

'இத்தனை போகப் பொருள்களை மகாராஜாதான் அளிக்க முடியும். எல்லாம் விலை உயர்ந்தவை.''

"அதனால்?"

"நீ அவருடன் வர நியாயமில்லை. இருப்பினும் வித்தியாசம் யாருக்குத் தெரியப்போகிறது? நீங்கள் இருவரும் ஒரே அச்சில் வார்த்த மாதிரி இருக்கிறீர்கள்."

"மாதவியைப் பற்றி ஏதும் நினைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது மகாராஜா" என்று கேட்டான் துறவி.

இந்தச் சமயத்தில் மகாராஜா உரையாடலில் குறுக்கிட்டார். "முகுந்தா! மாதவியைத் தவறாக நினைக்காதே" என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

"மகாராஜா இதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "முகுந்தா! என் வலுக்கட்டாயத்தின் மேல்தான் மாதவி இங்கு வந்தாள்" என்று விளக்கினார், தாம் ஏதோ தவறு செய்து விட்டவரைப்போல.

"மகாராஜா கட்டாயப்படுத்தினால் யார்தான் வராதிருக்க முடியும்? மகாராஜாவின் இஷ்டப்படி நடப்பது, ஏன்? குறி நோக்கி நடப்பதுங்கூட, குடிமக்கள் கடமையல்லவா?" என்று வினவிய முகுந்தன், "மகாராஜா! மகிழம்பூ ஜாடை கண்டு நானே வரவில்லையா?" என்றும் கேட்டான்.

அவன் தங்களைப் பார்த்து நகைக்கிறான் என்பதை மகாராஜா, மாதவி இருவருமே புரிந்துகொண்டார்கள். அவ்விருவரில் மாதவியே பேசினாள் முதலில். "சோழ நாட்டு வீரரே! எதையும் வெளிப்படையாகப் பேசுவது நல்லது" என்றாள்.

"அது மட்டும் காஞ்சியில் முடியாது" என்று திட்டமாகச் சொன்னான் துறவி.

மாதவி அவனை நெருங்கிவர இரண்டு அடி எடுத்து வைத்தாள். பிறகு சட்டென்று நின்று "ஏன் முடியாது? காஞ்சி என்ன பித்தலாட்ட



அரங்கமா?" என்று கேட்டாள், உள்ளேயிருந்த சினம் சொற்கள் மூலம் கனல் கக்க.

துறவி மெல்லப் புன்முறுவல் செய்தான் அவளை நோக்கி. பிறகு மெதுவாகப் பதில் சொன்னபோது, அவன் சொற்கள் அர்த்த புஷ்டியுடன் வெளிவந்தன. "இதைக் கலையரங்கம் என்று நம்பித்தான் சோழ மண்டலத்திலிருந்து வந்தேன். கலைக் கூடங்களை இன்னும் பார்க்க வசதியில்லை. சிறைக்கூடத்தைப் பார்த்திருக்கிறேன. காதல் கூடங்களை, பள்ளியறைகளை, இவற்றையும் பார்த்திருக்கிறேன். எல்லாவற்றிலும் மர்மம் புதைந்து கிடக்கிறது. மர்மம் என்ற சொல்லுக்குப் பலபடி பொருள் கொள்ளலாம். நமக்குப் புரியாதது என்பது ஒன்று. அது நமது புத்திக் குறைவாலும் புரியாதிருக்கலாம், பிறர் பித்தலாட்டத்தின் திறமையாலும் புரியாதிருக்கலாம்" என்று விவரித்தான் முகுந்தன்.

அவன் உள்ள நிலையைத் தெளிவாக விளக்காவிட்டாலும் உட்பொருள் வைத்தே பேசியிருக்கிறானென்பதை மகாராஜா, மாதவி இருவருமே புரிந்து கொண்டதால் பதில் ஏதும் பேசவில்லை இருவரும். கடைசியில் மகாராஜா பேசியபோது அவர் குரலில் வெறுப்பு ஒலித்தது. "முகுந்தா மகாராஜாவின் வாழ்க்கை நல்ல வாழ்க்கையல்ல" என்றார்.

துறவி, மகாராஜாவை நன்றாகவே நோக்கினான். "மகாராஜா! உங்கள் வாழ்க்கையைவிடப் பொறுப்புள்ள வாழ்க்கை கிடையாது. காஞ்சி மண்டலத்தின் நலன், பல்லவ குலத்தின் பிற்காலம் இரண்டும் உங்கள் கையில் தானிருக்கின்றன" என்று கூறினான். அவன் சொற்களில் இருந்த ஒலி, "உன் கடமையைச் சரியாகச் செய்" என்று சொல்வது போலிருந்தது மகாராஜாவுக்கு.

மகாராஜா சிந்தித்தார் சில விநாடிகள். பிறகு சொன்னார் "எல்லாம் ஆண்டவன் கைகளில் இருக்கின்றன" என்று.

''ஆண்டவன் சித்தம் மனிதர்கள் மூலம் செயல்படுகிறது'' என்றான் துறவி.

''மகாராஜா தலையசைத்தார், ஆமோதிப்பதற்கு அறிகுறி யாக. ''இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்றும் கேட்டார்.

''செயல்படச் சொல்கிறேன்'' -துறவியின் பதில் திட்டமாயிருந்தது.

''விளக்கமாகச் சொல்.''

''உங்கள் எதிரியைச் செயலற்றவராகச் செய்யச் சொல்கிறேன்.''

''யார் அது?''

''உங்களுக்குத் தெரியும்.''

''உனக்கு?''

''திட்டமாகத் தெரியாது. ஊகம்தான்.''

''உன் ஊகம் சரியென்று வைத்துக்கொள்வோம்; என் நிலையில் நீ என்ன செய்வாய்?''

''முதலில் எதிரியைத் தொடமாட்டேன்.''

''அதைத்தான் நானும் செய்கிறேன்.''

''அது மட்டும் போதாது.''

மகாராஜா புருவங்களைத் தூக்கினார், வேறு என்ன செய்வது என்று கேட்கும் பாவனையில். துறவி சொன்னான் பதிலை: ''எதிரியைச் சேர்ந்தவர்களை ஒவ்வொருவராகச் சிறை செய்யலாம்'' என்று.

மகாராஜா எழுந்தார் ஆசனத்தை விட்டு. ''அது சுலபமென்று நினைக்கிறாயா?'' என்று கேட்டார். அப்படியும் இப்படியும் இருமுறை நடந்து, பிறகு சட்டென்று நின்று துறவியை நோக்கினார்.



''தங்களுக்குச் சுலபமில்லை...'' என்றான் துறவி.

''வேறு யாருக்குச் சுலபம்?''

''தங்களால் நியமிக்கப்படும் அதிகாரிக்கு.''

''அந்த அதிகாரி எதிரியைச் சேர்ந்தவனாயிருந்தால்?''

''புது அதிகாரியை நியமிப்பது.''

மகாராஜா பெரிதாக நகைத்தார். ''அப்படி யார் கிடைப்பார்கள்? அதுவும் காஞ்சியில்! வெறும் பகற்கனவு முகுந்தா!'' என்றார் நகைப்பின் ஊடே.

''காஞ்சியைச் சேர்ந்தவனைத்தான் நியமிக்க வேண்டும் என்பது என்ன கட்டுப்பாடு?'' என்று கேட்டான் துறவி மெதுவாக.

மகாராஜாவின் கண்களில் ஒரு விவரமற்ற பார்வை விரிந்தது. ''நீ சொல்வது புரிகிறது முகுந்தா!'' என்றார் துக்கம் நிறைந்த குரலில்.

''புரிந்தால் செயல்பட வேண்டியதுதானே'' என்றான் முகுந்தன்.

''முடியாது. முகுந்தா முடியாது. எனது எதிரி சாமான்யப்பட்டவனல்லன். மிகுந்த அறிவாளி. எதையும் விநாடியில் ஊகிக்கக் கூடியவன்'' என்று மகாராஜா கூறினார்.

முகுந்தன் முகத்தில் அப்பொழுதுதான் சினம் துளிர்த்தது சிறிதளவு. ''அச்சம் அரசர்களுக்கு அழகல்ல'' என்றான் சலிப்புடன்.

மகாராஜாவின் முகத்திலும் சினம் லேசாக உதயமாயிற்று. ''அச்சம் என்பது என்னவென்று எனக்குத் தெரியாது முகுந்தா! ஆனால் விவேகமற்ற காரியத்தில் நான் பிரவேசிப்பதில்லை'' என்ற மகாராஜா, ''முகுந்தா, அந்த எதிரியைச் சமாளிக்க உன்னை நியமிக்கச் சொல்கிறாய்'' என்றும் கூறினார்.

''ஆம்!'' சிந்தனை சிறிதுமின்றிப் பதில் வந்தது முகுந்தனிடமிருந்து.

''உன்னை நியமித்தால் ஏற்கனவே உள்ள படைத் தலைவனை அகற்ற வேண்டும்'' என்றார் மகாராஜா.

''அவசியமில்லை. அவனுக்கு உபதலைவனாக நியமிக்கலாம்.''

''அவனுக்கு ஓர் உபதலைவன் ஏற்கனவே இருக்கிறான்.''

''ஓர் அரசில் இரண்டு மூன்று உபதளபதிகள் இருப்பது சகஜந்தானே?''

''இந்த ஊரில், இந்தச் சமயத்தில், அது சகஜமல்ல'' -இதை மிகத் திட்டமாகச் சொன்னார் மகாராஜா.

''அப்பொழுது ஒன்று செய்யலாம்'' என்றான் துறவி.

''என்ன?''

''எனக்குப் பதில் எனக்கு வேண்டிய ஒருவரை நியமியுங்கள்'' என்றான் துறவி.

''யாரை?'' -மகாராஜாவின் கேள்வி வியப்புடன் வந்தது. பதில் கூறினான்.

மகாராஜாவுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது.

''நீ சுயபுத்தியுடன்தான் இருக்கிறாயா?'' என்று கேட்டார் ...ரிச்சலுடன்.

## 22. தேடி வந்த சொர்க்கம்

மகாராஜா விஷ்ணுகோபனுக்கு அத்தனை கோபம் வந்ததிலோ அவர் கேட்ட கேள்வியிலோ தவறு ஏதுமே இல்லை. அத்தகைய யோசனையை - யாரும் ஏற்க முடியாத வழியைச் சொன்னான் வாலிபத் துறவியான முகுந்தன். ''மாதவியை நியமித்துவிடுங்கள்'' என்று அவன் சொன்னது மன்னன் காதுகளுக்கு



நாராசமாகவிருந்தது. இருப்பினும் முதலில் சினத்தின் வசப்பட்டிருந்த மகாராஜா சிறிது தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, ''முகுந்தா! மாதவியை உபதளபதியாக நியமித்தால் காஞ்சி என்ன சொல்லும்? என்ன கேட்கும்?'' என்று கேட்டார்.

துறவி சிறிதும் சிந்திக்காமல் உடனடியாகப் பதில் சொன்னான்: ''மகாராஜாவுக்கு சமுத்திரகுப்தன் படையெடுப்பால் பைத்தியம் பிடித்துவிட்டதென்று சொல்லும். ஏன்? இந்தக் காஞ்சி மண்டலத்தில், வீரர்களுக்கு இருப்பிடமான தமிழ்நாட்டில் ஆண்மகன் எவனுமே கிடைக்க வில்லையா என்று கேட்கும்'' என்றான்.

''இத்தனையும் தெரிந்துமா மாதவியை இந்தப் பதவிக்கு நியமிக்கச் சொல்கிறாய்?'' என்றார் மகாராஜா அடுத்தபடி.

துறவி மாதவியை நோக்கினான் ஒரு விநாடி. அடுத்த விநாடி ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவன் போல் தலையை ஆட்டிக் கொண்டு, ''ஆம் மகாராஜா! நன்றாக யோசித்த பிறகே இந்த முடிவுக்கு நான் வந்தேன். மாதவியை நியமிப்பதில் அனுகூலங்கள் பல இருக்கின்றன'' என்று கூறினான்.

''அவை என்னவோ?'' -மகாராஜா கேள்வி கேட்டுத் துறவியை உற்று நோக்கினார்.

''முதலில் அவள் பெண். யாரும் கொல்ல மாட்டார்கள்...''

இங்கு மகாராஜா இடைமறித்தார். ''அதெப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?'' என்று கேட்டார்.

''அந்த நிலைக்குத் தமிழகம் இன்னும் வரவில்லையென்று நினைக்கிறேன். தவிர, பெண்ணைக் கொன்றால், அது மக்களுக்குத் தெரிந்தால், அப்புறம் தங்கள் எதிரி காஞ்சி மண்டலத்திலிருக்க முடியாது. பல அநீதிகளைச் சமூகம் பொறுத்துக் கொள்ளும். ஆனால் அநீதி அளவுக்கு மீறினால் சமுதாயம் என்ன செய்யும்.

எதுவரையில் போகும் என்று சொல்லமுடியாது மகாராஜா! இந்த விஷயத்தில் தாங்கள் எதிரி கூட எச்சரிக்கையாயிருப்பான்'' என்று விளக்கினாள்.

எதையும் மிகத் தெளிவுடன் நோக்கக் கூடிய விஷ்ணு கோப மகாராஜா கூடக் குழப்பமடைந்தார். துறவியின் சொறகளால், துறவி சொன்ன எதிலும் லவலேசமும் தவறு இல்லையென்பதை அவர் புரிந்து கொண்டுதானிருந்தார். ஆனால் தனிப்பட்ட கொலைகளால் சமுதாயம் விழித்துக்கொண்டு விடாது என்பதிலும் அவருக்கு சந்தேகமில்லை. ஆகவே மாதவியைப் பகிரங்கமாக உபதளபதியாக்குவதில் பல கஷ்டங்கள் இருப்பதை அவர் உணர்ந்தார். பிறகு கேட்டார்: ''பெண்ணை நியமிப்பதானால் தேவகியை நியமித்தாலென்ன?'' என்று

கூடாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் துறவி. ''தேவகி தங்கள் காதலியென்பதைக் காஞ்சி அறியும்'' என்று சொன்னான்.

''அதனாலென்ன?''

''காதலிக்குப் பதவி கொடுக்க நீங்கள் அவளை நியமிப்பதாக மககள் நினைப்பார்கள். அந்த நியமனத்தை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள்.''

''மாதவியை நியமிப்பதாலும் அப்படித்தானே? காதலியின் தங்கையை நியமித்ததாகச் சொல்ல மாட்டார்களா?''

''சொல்ல மாட்டார்கள்; என் யோசனைப்படி நடந்தால்.''

''என்ன யோசனை?''

''மாதவி எனக்குப் பாடம் சொல்லத் தினம் சிறைச்சாலைக்கு வருவாள்'' - சொற்களைத் துறவி முடிக்கும் முன்பே மகாராஜா, மாதவி இருவருமே அதிர்ச்சியடைந்தார்கள்.



துறவியும் அவர்கள் அதிர்ச்சியைக் கவனிக்கவே செய்தான். அதனால் புன்முறுவல் கொண்டு மேலும் தொடர்ந்தான்: ''மகாராஜா! மாதவி எனக்குப் பாடம் சொல்ல இந்த நிலவறை வழிமூலம் வரவேண்டியதில்லை. பகிரங்கமாகச் சிறையின் பெருவாசல் வழியாக வரலாம். இதில் மஹாயனரும் நமக்கு உதவியாயிருப்பார். அவர் உத்தரவுப்படிதான் மாதவி பாடம் சொல்லுகிறாள். ஆதலால் அதை அவர் ஆட்சேபிக்க மாட்டார். அவர் ஆட்சேபிக்காததைக் காஞ்சி மண்டலத்தில் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். பத்ரவர்மன்கூட இதில் தலையிட மாட்டான். தவிர உதவவும் செய்வான்.''

இந்த விவரம் மகாராஜாவுக்கு இன்னும் அதிக வியப்பை அளித்தது. ''உனக்குப் பத்ரவர்மன் உதவுவானா? நானிலவா விட்டால் மன்னன் அவன் என்பது உனக்குத் தெரியுமல்லவா?'' என்று வினவினார் மகாராஜா வியப்பு குரலிலும் ஒலிக்க.

துறவி மகாராஜாவின் வியப்பைக் கண்டு அசரவில்லை. ''நீங்கள் மாதவியை நியமிப்பதே பத்ரவர்மன் கையைப் பலப்படுத்துவதாகும் மகாராஜா. தாசிலோலன் என்று வதந்தி கிளப்பிவரும் பத்ரவர்மன், மாதவியை நீங்கள் உபதளபதியாக நியமித்து அவள் எனக்குப் பாடம் சொல்ல வருவதை அறிந்ததும் இந்த நியமனம் போலி நியமனம் என்று பறைசாற்றுவான். மகாராஜா மாதவி மூலம் அந்த சோழ நாட்டானுக்குத்தான் பதவி வழங்கியிருக்கிறார் என்று புரளி கிளப்புவான். பல்லவ நாட்டில் யாருமில்லையா இந்தப் பதவிக்கு என்று கேட்பான்'' என்று விளக்கினான் மேலும்.

மாதவி இதைச் கேட்டுச் சீற்றமடைந்தாள். ''என்னைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?'' என்று கேட்டாள்.

துறவி அவளை நன்றாக நோக்கினான் ஒருமுறைக்கு இருமுறை. ''எனது அபிப்பிராயங்களை நான் அடிக்கடி மாற்றிக் கொள்வதில்லை'' என்று கூறினான் முடிவில்.

''அதாவது?''...என்று கேட்டாள் மாதவி சீற்றமும் தயக்கமும் இணைந்த குரலில்.

''சேராத சேர்க்கை நீ'' என்றான் துறவி.

''சேராத சேர்க்கையா?''

''ஆம்; முதலில் நீ அழகி...''

''உம்.''

''இரண்டாவது நல்ல அறிவாளி.''

''நன்றி.''

''நன்றி தேவையில்லை. அழகும் அறிவும் சேருவது கிடையாது. ஆகையால்தான் சேராத சேர்க்கை என்றேன்'' என்றான் துறவி.

இந்த அனாவசியத் தர்க்கத்தை வளர்க்க மகாராஜா இஷ்டப்படாததால் ''முகுந்தா!'' என்று சற்றுக் கடுமையாகக் குரல் கொடுத்தார்.

''மகாராஜா!'' என்று பணிவுடன் கேட்டான் துறவி.

''உன் யோசனைக்கு நான் ஒப்புக்கொண்டால்!'' என்று மகாராஜா வினவினார்.

''காஞ்சி மீது யாரும் கைவைக்க முடியாது'' - இதைத் திட்டமாகச் சொன்னான் துறவி. மேலும் கூறினான், ''மகாராஜா! நான் வந்து நேரமாகிறது. நீங்கள் மாதவியை விட்டு என்னை அழைத்த காரணத்தைச் சொல்லவில்லையே?'' என்று கேட்டான்.

''சொல்ல வேண்டியதெல்லாம் தர்க்கத்தில் முடிந்து விட்டது. நான் இன்னும் நான்கு நாட்களில் காஞ்சியை விட்டுப் புறப்படுகிறேன்'' என்று மகாராஜா கூறினார்.

''அது நல்ல ஏற்பாடு'' என்று கூறிய துறவி ''நான் வருகிறேன் மகாராஜா! மாதவியை நாளைக்கு அனுப்பி வையுங்கள்'' என்று



கூறிவிட்டு ரகசியக் கதவுக்கருகில் சென்றான். அதைத் திறக்க விசையைத் திருகு முன்பு ''மாதவி? இப்படி வா'' என்று அழைத்தான்.

மாதவி அவனை நெருங்கினாள்.

''சுரங்கப் பாதையிலுள்ள இன்னொரு கதவை நான் திறக்கவில்லை என்று மகாராஜாவிடம் கூறிவிடு'' என்று காதோடு சொல்லிவிட்டு விசையைத் திருகி மர்மக் கதவு வழியாக நிலவறைப் படிகளில் இறங்கிவிட்டான்.

அவன் இறங்கியதும் பழையபடி மூடிக்கொண்ட கதவை அசக்கிப் பார்த்த மாதவி திரும்பவும் மகாராஜாவிடம் வந்தாள். அவள் முகத்திலிருந்த திகிலை மகாராஜா கவனித்தார். ''அப்படியானால் அதுவும் அவனுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியும் மகாராஜா!'' என்று மாதவியின் கண்களில் நீர் மெல்லத் துளிர்க்கலாயிற்று.

''மனத்தை தளரவிடாதே. மாதவி! உன்னிடம் அன்பு வைத்திருக்கும் துறவி ஈடு இணையற்ற அறிவாளி. உனக்கு இனி எந்தக் குறைவுமில்லை'' என்று தைரியம் சொல்லி மாதவியின் முதுகைத் தடவியும் கொடுத்தார் ஆறுதலாக.

நிலவறைப் படிகளில் இறங்கிய துறவி, வந்த வழியே மிகத் துரிதமாக நடந்து சென்று தனது அறையை அடைந்தான். திருப்தியுடன் படுக்கையில் படுத்துக்கொண்டு மோட்டு வளையை நோக்கிச் சிந்தனையில் இறங்கினான். நாழிகைகள் ஓடின. வெள்ளி முளைக்கும் நேரம் வருவதற்குச் சிறிது முன்பாகவே சிறைச்சாலைக்குள் பல புரவிகள் வரும் சத்தம் கேட்கவே மிகுந்த திருப்தியுடன் கண்களை மூடிக்கொண்டான் துறவி. புரவிகளில் வந்தவர்கள் அவனிருந்த அறைக் கட்டடத்துக்கு

முன்பு கீழே குதித்த அரவம் கேட்டது துறவிக்கு. பிறகு அவன் அறைக் கதவும் பலமாகத் தட்டப்பட்டது. ''திற கதவை'' என்று பத்ரவர்மன் அதிகாரக் குரல் மிகப் பலமாக ஒலித்தது வெளியே. துறவி மெல்லப் படுக்கையிலிருந்தே கேட்டான் ''யாரது?'' என்று.

''திற கதவை'' - பத்ரவர்மனின் குரல் கடுமையுடன் ஒலித்தது இரண்டாம் முறை.

துறவி கண்களைக் கசக்கிவிட்டுக்கொண்டு தள்ளாடி நடந்தான் கதவை நோக்கி. தாழ்ப்பாளை அகற்றிக் கதவைத் திறந்து, ''யாரடா அவன்?'' என்று சீறி நோக்கினான்.

பக்கத்தில் வீரனொருவன் ஏந்திய விளக்கொளியில் பத்ரவர்மன் முகத்தைக் கண்ட துறவி, ''தாங்களா?'' என்றான் வியப்புடன்.

''ஆம்'' என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்த பத்ரவர்மன் அறையை ஆராய முற்பட்டான். அவன் எதையோ தேடுவதாகத் தோன்றியதால் ''என்ன தேடுகிறீர்கள்'' என்று கேட்டான் துறவி.

பத்ரவர்மன் கண்களைத் துறவிமீது நிலைக்கவிட்டான் ஒரு விநாடி. ''சற்று முன்பு இங்கு வந்தேன்'' என்றான் கடுமையுடன்.

அது பொய்யென்பதை உணர்ந்த துறவி, ''அப்படியா?'' என்றான் சர்வசாதாரணமாக.

''கதவையும் தட்டினேன்'' என்று மீண்டும் கூறினான்.

''அப்படியா?''

''ஆம்.''

''எதற்காக?''

''உன்னிடம் பேச.''

''மகிழ்ச்சி?''



''எதற்கு மகிழ்ச்சி?''

''இவ்வளவு பெரிய மனிதர் என்னுடன் பேச வந்ததற்கு; அதுவும் இரவிலே'' என்ற துறவி, புன்முறுவல் கொண்டான்.

அதைக் கவனித்த பத்ரவர்மன் ''அப்பொழுது நீ கதவைத் திறக்கவில்லை'' என்றான்.

''உறங்கும்போது யார் கதவைத் தட்டினாலும் திறக்கும் வழக்கமில்லை''

''நீ உறங்கவில்லை.''

''ஓகோ!''

''அறையில் நீ இல்லை.''

இதைக்கேட்ட துறவி சிறிது நேரம் சிந்தனை வசப்பட்டான். ''ஆம் உண்மை'' என்றான்.

''எங்கு போயிருந்தாய்?'' - பத்ரவர்மன் குரலில் சந்தேகம் ஒலித்தது.

''சொர்க்கத்துக்கு''

''என்ன!''

''ஆம் சொப்பனத்தில்'' என்று துறவி இடிஇடி என்று நகைத்தான், பத்ரவர்மன் முகத்தருகில்.

''சொர்க்கத்துக்கு உன்னை நிஜமாகவே சீக்கிரம் அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான் பத்ரவர்மன்.

அன்று நடுப்பகலில் மாதவி வந்தாள், சிறைக்கு துறவியைச் சந்திக்க. ''பத்ரவர்மன் என்ன, என்னை அனுப்புவதாகச் சொல்வது சொர்ககத்துக்கு? சொர்க்கமே என்னைத் தேடி வருகிறது'' என்ற

தன்னுள் சொல்லிக்கொண்டாள் துறவி. மாதவி சிறையின் பிரதான வாயிலில் நுழைவதைப் பார்த்ததும் சொர்க்கம் மெல்ல மெல்ல அவள் அறையை நோக்கி நடந்து வந்தது. அதன் நடையும் இன்பமாக இருந்தது.

## 23. பாடம் சொல்லும் படலம்

நடுப்பகலில் இன்ப நடை நடந்து சிறைச்சாலையின் இருபுறங்களின் அறைகளையும் பார்த்துக்கொண்டும், தீவிர சிந்தனை வசப்பட்டும் வந்த மாதவி, நீண்ட நேரத்துக்குப் பிறகே துறவியின் அறையை அடைந்தாள். அடைந்ததும் திறந்திருந்த கதவுகளை நோக்கியும் அறைக்குள் புகாமல், எட்ட இருந்த சிறைக் காவலர் தலைவனை அருகில் வருமாறு கையால் சைகை காட்டி அழைத்தாள். அவள் சைகை காட்டி அழைத்த விதத்தில் ஏதோ புதுமை இருந்திருக்க வேண்டும். காவலர் தலைவன் விழிகளில் வியப்பு நிரம்பி நின்றது. அந்த வியப்பின் விளைவாகச் சிறிது துரிதமாகவே வந்த காவலர் தலைவன், "அம்மணி! தங்களுக்கு ஏதாவது தேவையா?" என்று கேட்டான்.

"தேவை எனக்கில்லை, உள்ளேயிருக்கும் துறவிக்கு உணவளித்து விட்டாயா?" என்று அதிகாரக் குரலில் கேட்டாள் மாதவி.

என்றும் எந்தவித அதிகாரத்தையும் செய்யாதவளும் மிக இன்பமாகவும் நயமாகவும் பேசக்கூடியவளுமான மாதவியின் அதிகாரத் தோரணையும் குரலும் காவலனுக்குப் புதிதாக இருக்கவே, அவன் அவளை அதிசயத்துடன் பார்த்தான். "மாதவி அம்மையாருக்கு வேண்டியவர்களைப் பட்டினிபோட எங்களுக்கு என்ன பைத்தியமா?" என்று தன் சாதுர்யத்தைக் காட்டினான் காவலன்.



மாதவியின் கண்கள் கோபத்தைக் கக்கின. "நீ எத்தனை நாட்களாகச் சிறைத் தலைவன் உத்தியோகத்தைச் செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள், கடுமை நிரம்பிய குரலில்.

சிறைத்தலைவனுக்கு வியப்பு தாங்கவில்லை. எத[illegible] சொல்லி வைத்தான்: "மஹாயனர் நியமித்த கா[illegible]" என்று.

"அதாவது?"

"நான்கு ஆண்டுகளாக."

"உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களுக்கு [illegible] சிறைவாசிகளுக்கு மட்டுந்தான் உணவளிக்கும் பழக்க[illegible] ஆண்டுகளாக நடந்து வருகிறதா?"

"அம்மணி...." சற்றுத் தயங்கினான் சிறைத்தலைவன்.

"துறவிக்கு உணவளித்து விட்டாயா என்று கேட்டேன். எனக்கு வேண்டியவராகையால் போட்டுவிட்டதாகச் சுட்டிக்காட்டுகிறாய். அப்படியானால் எனக்கு வேண்டாதவரை பட்டினி போடுவாயா?" என்று அதட்டிய மாதவி, "உன்னை இன்றிலிருந்து வேலையிலிருந்து நீக்கி விட்டேன். உனக்கு அடுத்தபடி வேலை பார்ப்பவனை வரச் சொல்" என்றாள்.

சிறைத் தலைவன் இதைக் கேட்டதும் நகைத்தான் வெளிப்படையாக. "என்னை நியமித்தவர் மஹாயனர். அவரைத் தவிர வேறு யாரும் என்னைப் பதவியிலிருந்து நீக்க முடியாது" என்றான் திட்டமாக.

"அப்படியா?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டாள் மாதவி.

தன் நகைப்பாலும் மஹாயனர் பெயராலும் அவள் பயந்து விட்டதாக நினைத்துக்கொண்ட சிறைத்தலைவன் "அம்மணி! தவறாக நினைக்க வேண்டாம். நீங்கள் பேசியது ஏதோ

34933
523198

முன்கோபத்தில் பேசினாலும் நடக்காததைப் பற்றிப் பேசியதால் நானும் உணர்ச்சிவசப்பட்டேன். தாங்கள் உள்ளே செல்லுங்கள் துறவி காத்திருக்கிறார்'' என்றும் கூறினான்.

அவன் தன்னைப் பார்த்து நகைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட மாதவி புன்முறுவல் கொண்டாள். பிறகு, ''சிறைத் தலைவரே! தங்களுக்குப் படிக்கத் தெரியுமா?'' என்று வினவினாள்.

''சிறை அதிகாரி, அதுவும் மன்னரிடமிருந்தும் பத்ரவர்மனிடமிருந்தும் வரும் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டியவன், அப்படியிருக்கும் எனக்குப் படிக்கத் தெரிய வேண்டாமா?'' என்றான் சிறைத்தலைவன்.

மாதவி அதற்குப் பதில் சொல்லவில்லை உடனடியாக, அறைக்குள் எட்டிப் பார்த்து, துறவியாரே! இப்படிச் சற்று வருகிறீர்களா?'' என்று அழைத்தாள்.

அதுவரை மாதவிக்கும் சிறைச்சாலை அதிகாரிக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு கட்டிலை விட்டு அகலாமல் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்த துறவி மெல்ல எழுந்து வெளியே வந்து மாதவியின் பக்கத்தில் நின்றான். மாதவி தனது மடியிலிருந்து ஓர் ஓலைச்சுருளை எடுத்துக்கொண்டாள். பிறகு துறவியை நோக்கி, ''துறவியாரே! சிறை அதிகாரியின் கையைப் பிடித்துக்கொள்ளுங்கள். அவனைத் தப்ப விடாதீர்கள்'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட சிறைச்சாலை அதிகாரி அச்சத்தின் வசப்பட்டான். திரும்பவும் முயன்றான். ஆனால் மாதவி சொற்களை முடிக்கு முன்பாக அதிகாரியின் கையைத் துறவியின் இரும்புக் கரங்கள் பிடித்துக்கொண்டன. இந்த நிலையில் திரும்பக் கேட்டான் துறவி: ''இவனைத் தூக்கிச் சிறைச்சாலைக்கு வெளியே போட்டு விடட்டுமா அல்லது ஏதாவது சிறை அறை ஒன்றில் தள்ளிப் பூட்டி விடட்டுமா?'' என்று.



சிறைச்சாலை அதிகாரி மிதமிஞ்சிய வியப்பினாலும் துரிதமாக ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சிகளாலும், கைகளோடு புத்தியின் சுவாதீனத்தை இழந்துவிட்டதாலும், திகைத்து நின்றான். அவன் திகைப்பை நீக்க இஷ்டப்பட்ட மாதவி தனது மடியிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக்கொண்டிருந்த ஓலையைச் சிறைத் தலைவன் கண்களுக்கு முன்னால் காட்டி ''இதைப் படி'' என்றாள்.

அதைப் படித்த அதிகாரியின் முகத்தில் அச்சமும் அதிர்ச்சியும் ஒருங்கே படர்ந்தன. ''அம்மணி! இதை முன்னமே தாங்கள் சொல்லவில்லையே'' என்றான். அவன் குரலில் அதுவரையிலிருந்த திமிர் மறைந்து கெஞ்சலுக்கு இடம் கொடுத்தது.

''உன்னை என்ன, இங்குள்ள யாரையும் நியமிக்கவோ நீக்கவோ எனக்கு அதிகாரமிருப்பதைப் புரிந்து கொண்டாயல்லவா?'' என்று கேட்டாள் மாதவி.

''புரிகிறது உபதளபதியாரே! புரிகிறது'' என்று கெஞ்சினான் சிறை அதிகாரி. அதுவரை சிறை அதிகாரியின் கையைப் பிடித்துக்கொண்டிருந்த துறவி ஏதுமறியாததுபோல் மாதவியை நோக்கித் திரும்பி, ''உபதளபதியா யார் உபதளபதி?'' என்று வினவினான்.

''அவனையே கேளுங்கள்'' என்றாள் மாதவி.

''உனக்கு புத்தியிருக்கிறதா?'' - என்று சீறினான் துறவி.

''துறவி! யாரிடம் பேசுகிறாயென்பதை எண்ணிப் பேசு மரியாதைக் குறைவாய் பேசாதே'' என்று அறிவுரை கூறினான் சிறைத்தலைவன்.

''உன்னைக் கேட்கவில்லை, சும்மா இரு'' என்று சிறைத்தலைவனை அடக்கிய துறவி மாதவியை நோக்கி, ''நான் உன்னைக் கேட்டால் நீ அவனைக் கேட்கச் சொல்கிறாயே. உனக்கு லவலேசம் புத்தியிருக்கிறதா?'' என்று சீறினான்.

''துறவி!'' என்று கூவினான் சிறைத்தலைவன்.

''உன் உபத்திரவம் தாங்கவில்லை. எதற்காகக் கூவுகிறாய்?'' என்று துறவி சீறினான் சிறைத் தலைவனை நோக்கி.

''உன் மாதிரி பேசித்தான் எனக்கு வேலை போய் விட்டது'' என்றான் சிறை அதிகாரி.

''எனக்கு வேலை எதுவும் கிடையாது. ஆகையால் போக முடியாது'' என்றான் துறவி.

''உனக்குப் போதாத காலம். சிறையில் மரியாதையாக நடத்தப்படுகிறாய். இனி அதுவும் போய்விடும்.''

''ஏனோ?''

''உபதளபதியை மரியாதையின்றிப் பேசுகிறாய்.''

''உபதளபதி யாரென்று கேட்டேன் உன்னை.''

''துறவி! என்னை ஒழுங்காகப் பதில் சொல்ல விட்டால்தானே நீ! மாதவி அம்மையார்தான் உபதளபதி'' என்று பணிவு நிரம்பிய குரலில் கூறினான் சிறைத்தலைவன்.

துறவி முகத்தில் போலி ஆச்சரியத்தைக் காட்டினான். ''மாதவி! நீயா! உபதளபதியா?'' என்று கேட்டான், போலி ஆச்சரியத்தைக் குரலில் காட்டி.

பதிலுக்கு மாதவி தன் கையிலிருந்த ஓலையைத் துறவியின் எதிராகவும் பிடித்தாள். அதைப் படித்த துறவி பெரிதாக நகைத்தான்.

''காஞ்சியில் ஆண் பிள்ளைகள் இல்லை போலிருக்கிறது. பெண் உபதளபதியாகிவிட்டாள்'' என்று கூறி இரண்டாம் முறையும் நகைத்தான்; சிறை அதிகாரியின் கைகளையும் விட்டுவிட்டான்.

சிறை அதிகாரி துறவியின் எமப்பிடியால் செயலற்ற தனது மணிக்கட்டுகளை உதறிவிட்டுக் கொண்டான். பிறகு நிமிர்ந்து நின்று



ஒருமுறை குனிந்து மாதவியை வணங்கி, ''உபதளபதியாரே! இந்தத் துறவியை என்ன செய்யட்டும்?'' என்று வினவி அவள் உத்தரவுக்கு எதிர்பார்த்து நின்றான்.

''அவருக்கு எனது நியமனம் தெரியாததால் மன்னித்து விடுவோம்'' என்ற மாதவி, ''சிறைத்தலைவரே! நீங்கள் செல்லுங்கள். இவரை நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்று கூறவே சிறைத்தலைவன் படுவேகத்தில் படிகளில் இறங்கிச் சென்றான்.

மாதவி துறவியின் அறைக்குள் நுழைந்தாள். ''துறவியாரே! வாருங்கள்'' என்று அவனுக்கு அழைப்பு விடுத்தாள். மாதவி உள்ளே செல்ல, துறவி அவளைத் தொடர்ந்தான். மாதவி அவன் படுத்திருந்த பஞ்சணைக்கு எதிரில் இருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன்? இப்படி உட்காரலாமே'' என்று பஞ்சணையைக் காட்டினான் துறவி.

''அதில் நானாக உட்கார முடியாது'' என்றாள் மாதவி.

''ஏன்?''

''அப்படிப் பழக்கவில்லை நீங்கள்'' என்று கூறிய மாதவி புன்முறுவல் செய்தாள்.

''வேறு எப்படிப் பழக்கியிருக்கிறேன்?'' - துறவி கேட்டான் குழப்பத்துடன்.

''என் மாளிகையில் உங்கள் அறைக்குள் வந்தபோது என்ன செய்தீர்கள்?'' என்று மாதவி கேட்டாள் தலைகுனிந்த வண்ணம்.

அவளைத் தான் கட்டிலில் அள்ளிப்போட்ட காட்சி துறவியின் நினைவுக்கு வந்ததால் கலகலவென நகைத்தான். ''உபதளபதி உத்தரவிட்டால் இப்பொழுதும் அதைத் செய்யத் தடையில்லை'' என்றான் நகைப்பை அடுத்து.

மாதவி புன்முறுவல் காட்டினாள். ஆகையால் அதற்குப் பதில் சொல்லவில்லை. ''நாடகத்தின் அடுத்த காட்சி என்ன?'' என்று கேட்டாள்.

''படிப்புப் படலம்'' என்று துறவி, அவள் காலடியில் உட்கார்ந்தான். சட்டென்று எழுந்திருக்க முயன்ற மாதவியின் தொடைகளைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தான். ''நாடகம் ஆடுவதென்றால் சரியாக ஆடவேண்டும். இன்று நீ இங்கு வந்திருப்பது உபதளபதிப் பதவியைப் பிரகடனப்படுத்த அல்ல'' என்று கூறினான்.

''வேறு எதற்கு?'' - மாதவி கேட்டாள் குழப்பத்துடன்.

'மஹாயனர் உத்தரவை நிறைவேற்ற!''

''என்ன உத்தரவு அது?''

''எனக்குப் பாடம் சொல்ல உன்னை நியமித்தார் அதைச் செய்'' என்றான்.

மாதவியின் உதடுகளில் உதயமான இளநகை முகம் பூராவும் படர்ந்தது.

''எந்த இடத்தில் ஆரம்பிக்கட்டும்?'' எனக் கேட்டாள்.

''சங்கத் தமிழ் எதுவாயிருந்தாலும் தொடங்கலாம். அல்லது வேத உபநிஷத் சாஸ்திரப் பகுதிகள் எதையும் தொடங்கலாம்'' என்றான்.

தொடங்கினாள் மாதவி முதல் பாடத்தை. ஆரம்பமே சுவாரஸ்யமாயிருந்தது. அதை மறைவிலிருந்து கேட்ட மஹாயனர் மகிழ்ச்சியின் எல்லையை எய்தினார்.



# 24. காவிய மாதவியும் காஞ்சி மாதவியும்

பாடத்தைத் தொடங்குமுனபு மாதவி ஒரு கேள்வி கேட்டாள். ''துறவியாரே! எதைத் தொடங்கட்டும்? தமிழ்க் காவியம் சொல்லட்டுமா? வடமொழியில் தர்ம சாஸ்திரம் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

''சோழ நாட்டான் எதை விரும்புவான்? தமிழே சொல்லுங்கள்'' என்றான் துறவி.

''சொல்லுங்கள் என்று மரியாதை என்ன வேண்டிக் கிடக்கிறது? மாதவி என்று அழைத்தால் போதும்'' என்று சொன்னாள் மாதவி.

''இப்பொழுது நீங்கள் குரு ஸ்தானம். இந்த மஞ்சத்தில் இருக்கும்வரை இப்படித்தான் அழைப்பேன்.''

''இறங்கியபின்?''

''எப்படி அழைப்பேனோ, என்ன சொல்வேனோ தெரியாது''.

துறவியின் சொற்களைக் கேட்ட மாதவி நகைத்தாள். ''நல்ல குரு. நல்ல சீடர்'' என்று கூறிவிட்டு ''சீடப் பிள்ளாய்!'' என்று கம்பீரமாக அழைத்தாள் அவள்.

''குரு!'' என்று பணிவுடன் கேட்டான் முகுந்தன்.

''இன்று சிலப்பதிகாரம் தொடங்கப் போகிறேன்.''

''தொடங்குங்கள், ஆனால்...'' என்று இழுத்தான் துறவி.

''ஆனால்?''

''அதில் தாசிகளைப் பற்றி வருமே?''

''வந்தாலென்ன?''

''நான் துறவி.''

''சிலப்பதிகாரத்தை எழுதியவர் உம்மைவிடப் பெரிய உண்மையான துறவி.''

''அப்படியானால் நான் போலித் துறவியா?''

''அப்படிச் சொல்லவில்லை. ஆனால் காஞ்சிக்கு வந்ததிலிருந்து நீங்கள் ஈடுபட்டிருக்கும் செயல்கள், என்னிடம் நடந்து கொண்ட முறைகள், எதிலும் சந்நியாசி லட்சணத்தைக் காணோம்'' என்ற மாதவி புன்முறுவல் கொண்டாள்.

''அப்படி நான் ஏதாவது தவறாக நடந்துகொண்டால் காரணம் நானல்ல'' என்றான் முகுந்தன், வருத்தம் தோய்ந்த குரலில்.

''வேறு யார் காரணம்?''

''நான் யாரிடம் படிக்க வந்தேனோ அவர், மஹாயனர்.''

''அவர் என்ன செய்தார்?''

''பாடம் சொல்ல உன்னை நியமித்தார்.''

''அது தவறா?''

''தவறோ என்னவோ தெரியாது. வாழைப் பழத்தையும் வைத்து குரங்கையும் பக்கத்தில் வைத்தால் என்ன ஆகும்?'' என்று கேட்டான் முகுந்தன்.

அந்த உவமையைக் கேட்ட மாதவி நகைத்தாள் கல கலவென்று. ''இரண்டு உவமைகளில் ஒன்று சரி'' என்று கூறினாள் நகைப்பின் ஊடே.

''எது?'' - தெரியாததுபோல் கேட்டான் துறவி.



''குரங்கு அது உங்களைத்தான் குறிக்கும்'' என்ற மாதவி ''நீங்கள் ஊருக்குள் வந்ததே மதில் மீது தொத்தி ஏறித்தானே?'' என்று விளக்கினாள்.

துறவி அவளைக் கூர்ந்து நோக்கினான். ''இரண்டு உவமைகளும் சரி'' என்றான்.

''அதாவது?'' - விளக்கம் கேட்டாள் மாதவி.

''நீ வாழைப்பழம் போலத்தான் இருக்கிறாய்.''

''அப்படியா?''

''ஆம். குரங்கு வாழைப்பழத்தை என்ன செய்யும்?'' என்ற துறவி ''கடிக்கும், நான் உன்னைக் கடிக்கட்டுமா?'' என்று கேட்டான்.

மாதவி பொய்க் கோபம் காட்டினாள் தனது அழகிய முகத்தில். ''மரியாதையாகப் பேசுங்கள். குருவிடம் உன்னை என்று சொல்லக்கூடாது'' என்றாள்.

''மறந்துவிட்டேன். மன்னிக்கவேண்டும். குருநாதரே! உங்களைக் கடிக்கட்டுமா?'' என்று பணிவுடன் கேட்டு நகைத்தான்.

''விளையாட்டிருக்கட்டும். பாடத்துக்கு வருவோம்'' என்ற மாதவி சிலப்பதிகாரத்தைத் தொடங்கினாள். ''உற்றுக் கேளுங்கள் சீடரே! சிலப்பதிகாரம் பல காதைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் இசையும், கூத்தும் கலந்த மாதவியின் அரங்கேற்றுக் காதையின் நுட்பத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்று கூறிய மாதவி, ''மாதவி தெய்வாம்சம் வாய்ந்தவள். உலகத்தில் ஒரு காப்பியம் பிறக்கவே அவள் தோன்றினாள். ஊர்வசியின் அவதாரம் என்று அடிகள் காப்பியத்தில் கூறுகிறார். அகத்திய முனிவர் சாபத்தால் அவள் ஆடல் மகளாக இங்கு பிறந்தாள்'' என்று விளக்கம் சொல்லி, ''தெய்வமால்வரை திருமுனி அருள்'' என்ற காப்பிய வரிகளையும் தொடங்கினாள், தொடர்ந்தாள் மேலும்.

அழியாக் காவியமான அந்த அருந்தமிழ்க் காப்பியத்தின் அரங்கேற்றுக் காதை வரிகளை அவன் சொல்லச் சொல்லத் தேனைப்போல் சுவைத்தான் வாலிபத் துறவி. "எழுகோல் அகலத்து, எண்கோல் நீளத்து, ஒரு கோல் உயரத்து உறுப்பினது ஆகி" அமைக்கப்பட்ட அருந்தொழில் அரங்கத்திலே என் ஆரங்க இலக்கணம் கூறிய மாதவி, மேலும் காவிய மாதவியின் ஆடலைப்பற்றிக் கூறினாள். அவள் ஆயிரம் பொற் கழஞ்சுகள் பெறும் தலைக்கோலியான உரிமை பற்றியும் கூறினாள். அதைச் சொன்ன மாதவி உணர்ச்சிப் பெருக்கால் சிறிது பாடத்தை நிறுத்தினாள். "என்ன வாழ்க்கை அது! பணத்துக்காகக் காமம்" என்று அலுத்துக் கொண்டாள்.

ஆயிரத்து எட்டுக் கழஞ்சுகள் பெறுமான அந்த மாலையைப் பெருந்தெருவிலேயே கூனி ஒருத்தி மூலம் விலை கூறிய மாதவியின் தாய் கோவலனை வளைத்த கதையையும், பிறகு மாதவியும் கோவலனும் இன்பம் துய்த்த சீர்மையையும் எடுத்து விளக்கினாள். மாதவியின் தழுவலால் எப்படிக் கோவலன் மனையாளை மறந்தான் என்பதையும் எடுத்துச் சொன்னாள்.

அப்பொழுது துறவி மாதவியின் மடிமீது கையை வைத்தான். காப்பிய வரிகள் அவன் சிந்தையில் கள்வெறி ஊட்டியதால். ஆனால் மாதவி, "இங்கு ஒரு வேறுபாடு இருக்கிறது" என்றும் சொன்னான், கையை அவள் மடியை விட்டு எடுக்காமலே. அவன் கைப்பட்டக் காரணத்தால் மாதவியின் உணர்ச்சிகள் கரை புரண்டன. அவள் குனிந்து அவனை நோக்கி "என்ன வேறுபாடு?" என்று கேட்டாள்.

"எனக்கு மனைவி யாரும் கிடையாது மறக்க" என்றான் துறவி.

"அதனால்?"

"மாதவியிடம் நான் ஈடுபட்டால் யாருக்கும் நஷ்டம் இல்லை."



"என்ன சொல்கிறீர்கள்?"

"அந்த மாதவியை நான் கண்டதில்லை. இந்த மாதவியைக் கண்டு கொண்டிருக்கிறேன்."

"நீங்கள் துறவி. நினைப்பிருக்கட்டும்" என்ற மாதவி அதிகமாக குனிந்தாள் அவனை நோக்கி.

துறவியின் உதடுகளுக்கு வெகு அருகாமையில் மாதவியின் மாம்பழக் கன்னம் இருந்தது. அதனால் அவன் உதடுகள் அதை லேசாகத் தடவவும் செய்தன. இந்த இடம் சிறை என்பதையும் அறைக் கதவு திறந்திருந்ததையும் இருவருமே மறந்தார்கள். உணர்ச்சி வேகம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த நிலையில் மாதவியின் கழுத்தை துறவியின் ஒரு கை வளைத்தது. "மாதவி!" என்று மெதுவாக அழைத்தான் துறவி, கன்னத்திலிருந்து நீக்கி உதடுகளை அவள் காதுக்கருகில் கொண்டு சென்று.

"என்ன?" - மாதவி முணுமுணுத்தாள்.

"கதை மாறுகிறது மாதவி" என்று துறவியும் ரகசியம் பேசினான்.

"என்ன கதை?"

"நம் கதை"

"எப்படி மாறுகிறது?"

"சாதாரணமாகச் சம்சார வாழ்க்கை, பிறகு துறவறம்."

"உம்..."

"இப்பொழுது எனக்குத் துறவறத்திலிருந்து சம்சார வாழ்க்கை ஏற்படும் போலிருக்கிறது."

"திருமணமா?"

"ஆம்."

''ஒருக்காலும் நடக்காது'' - இதை மாதவி வருத்தத்துடன் சொன்னாள்.

துறவி கேட்டான், ''ஏன் மாதவி?'' என்று அதை வாய் கேட்டது; கை அவள் இடையைச் சுற்றியது

''பத்ரவர்மன் என்னை வேசியென்று அழைக்கவில்லையா எங்கள் மாளிகையில்'' என்று நினைவுபடுத்தினாள் மாதவி.

''அது உண்மையானால் நீங்கள் என்னைத் திருமணம் செய்துகொள்ள முடியாது.''

இதற்கு முகுந்தன் பதில் சொல்லவில்லை. தரையில் இருந்து எழுந்தான். ''நீ வேசியென்று நான் நம்பவில்லை. இந்த ஊரில் நான் நம்பக்கூடியவர் மஹாயனர் ஒருவர் தான் அவர் உன்னை வேசியென்று சொன்னால் நம்புவேன் அப்படியே வேசியாயிருந்தாலும் உன்னை மணம் புரிவேன்'' என்று திட்டமாகக் கூறி அவளை அப்படியே மஞ்சத்திலிருந்து இடுப்பைப் பிடித்துத் தூக்கித் தன் எதிரில் நிற்க வைத்தான். ''மாதவி! என் கண்களை உற்றுப்பார்'' என்றும் உத்தரவிட்டான்.

மாதவி கண்கள் அவன் கண்களுடன் கலந்தன. விநாடிகள் ஓடின. கடைசியில் அவளைச் சுற்றித் தன் கைகளை ஓடவிட்டான் துறவி. ''மாதவி! நீ வேசியல்ல, என் குருநாதர்மீது ஆணை'' என்றான்.

''மஹாயனர் மீதா?''

''ஆம், வேறு யார் குருநாதர்?''

''நான்?'' - விளையாட்டாகக் கேட்டாள் மாதவி.

''நீயும் ஒருவகையில் குருநாதர்தான்.''

''ஒருவகையில் என்றால்?''

''என் குருநாதரால் நியமிக்கப்பட்டவள்.''



''எதற்கு?''

''பாடம் சொல்ல.''

''என்ன பாடம்?''

''குருநாதரிடம் நீயே கேள்'' என்ற துறவி சட்டென்று குரலை மாற்றி, ''உபதளபதி! இங்கு எதற்கு வந்தீர்கள்?'' என்று இரைந்து கூறிவிட்டு அவளிடமிருந்து விலகி நின்றான்.

''உபதளபதியா?'' என்று விசாரித்துக் கொண்டு மஹாயனர் உள்ளே நுழைந்தார்.

## 25. மஹாயனர் போதிக்கிறார்.

மஹாயனர் உள்ளே நுழைந்ததும் திடுக்கிட்டவன் போல் பாசாங்கு செய்த துறவியும், உண்மையாகவே திடுக்கிட்டுவிட்ட மாதவியும் சரேலென்று விலகி நின்றதும் குருநாதர் இதழ்களில் புன்முறுவல் பெரிதும் படர்ந்தது. நல்ல வெண்மையான உடையணிந்ததாலும், வெளேரென்ற சரீரத்தாலும் மிகக் கம்பீரமான தோற்றத்தைப் பெற்றிருந்த குருநாதர் புன்முறுவலில்கூட பெரும் கம்பீரமும் விவரிக்க இயலாத ஒரு பொருளும் புதைந்து கிடந்தது. அதைக் கவனித்த துறவி குருநாதர் தாள்களில் தனது தலையை வைத்து தரையில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினான். அவனை எழுந்திருக்கப் பணித்த மஹாயனர், ''முகுந்தா! யாரையோ உபதளபதி என்று அழைத்தாயே, அது யார்?'' என்று கேட்டார்.

முகுந்தன் மறுபடியும் தலையைச் சிறிது தாழ்த்தி, கையால் மாதவியைச் சுட்டிக்காட்டினான். மஹாயனர் தனது கண்களை மாதவியை நோக்கித் திருப்பினார். ''மாதவியா!'' என்று கேட்டார் பெருவியப்புடன்.

''ஆம் குருநாதர்களே'' என்றான் துறவி.

''குருநாதர்களா!'' - ஆச்சரியத்தைக் குரலில் காட்டினார் மஹாயனர்.

''ஆம்.''

''எத்தனை குருநாதர்கள் உனக்கு?''

''இருவர்''

''இருவரா?''

''ஆம். நீங்கள் ஒருவர். உங்களால் நியமிக்கப்பட்ட மாதவி ஒருவர்.''

''நன்று, நன்று'' என்று சிலாகித்த மஹாயனர், ''அப்படியானால் இரண்டாவது குருநாதரிடம் பாடத்தைத் தொடங்கலாமே'' என்றார்.

''தொடங்கிவிட்டேன். ஆனால்....''

''என்ன ஆனால்?''

''பாடம் தொடராது போலிருக்கிறது.''

''ஏன்?''

''இரண்டாவது குருநாதர் உபதளபதியாகி விட்டதால்.''

''மஹாயனர் சிறிது சிந்தித்தார். ''என்ன பாடம் தொடங்கினார் இரண்டாவது குருநாதர்?'' என்று கேட்டார்.

''சிலப்பதிகாரம்'' என்றான் துறவி.

''நல்ல நூல், தமிழர் தலைநூல். அதுவும் சிறந்த சமணநூல்'' என்று சிலாகித்த மஹாயனரின் முகத்தில் பெரு மகிழ்ச்சி படர்ந்தது.



''இலக்கியத்திலும் மத வேறுபாடுகள் உண்டா?'' என்று கேட்டான் துறவி.

''இலக்கியத்தைப் படைப்பதே மதத்தை உணர்த்துவதற்குத் தான்'' என்றார் மஹாயனர். அத்துடன் கேட்டார்: ''ஆமாம்; பாடம் தொடராது என்றாயே அது ஏன்?'' என்று.

''மாதவி உபதளபதியாகிவிட்டதால் பாடம் சொல்ல அவகாசம் இருக்காது. அதுவும் சமுத்திரகுப்தர் படையெடுத்தால் காஞ்சியைப் பாதுகாக்கும் பொறுப்பு மாதவியிடம் சேரும். அப்புறம் பாடம் எப்படிச் சொல்லுவாள்?'' என்று துறவி கேட்டான்.

மஹாயனர் மீண்டும் சிந்தனையில் இறங்கினார். அவர் சிந்திக்கத் தொடங்கியதும் முகுந்தன், ''குருநாதரே என் நிற்கிறீர்கள், இப்படி உட்கார்ந்தாலென்ன?'' என்று கேட்டு பஞ்சணையையும் காட்டினான்.

அதை மகா வெறுப்புடன் நோக்கிய மஹாயனர், ''என்னைப்போன்ற துறவி உட்காரத் தகுந்த இடமா அது?'' என்று கேட்டுவிட்டு, ''முகுந்தா! வா, சிறையின் அறைகளைச் சுற்றிப் பார்ப்போம்'' என்று அவனையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றார். மாதவி அறைக் கதவைப் பிடித்துக் கொண்டு அவ்விருவரும் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அந்த அறையை விட்டுக் கிளம்பி, தாழ்வறையையும் தாண்டி சிறையின் பெருங்கதவுகளுக்குச் செல்லும் பாதையில் வந்ததும் மஹாயனர் மெல்லத் துவங்கினார் உரையாடலை. ''முகுந்தா!'' என்று அழைத்த அவர் குரலில் குழைவு பெரிதும் இருந்தது.

''குருநாதரே!'' - அதைவிட அதிகமாகக் குழைந்தான் முகுந்தன்.

''நீ பாடம் கேட்கும் அழகைப் பார்த்தேன்'' என்றார் மஹாயனர்.

''பாடம் சொல்பவர் அழகாயிருந்தால் அது கேட்பவரையும் தொத்திக் கொள்கிறது'' என்றான் துறவி.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் மஹாயானர். "இனி மாதவி பாடம் சொல்ல வேண்டாம் உனக்கு" என்று கூறவும் செய்தார்.

"ஏன்?"

"அவளிடம் பாடம் கேட்டால் நீ கெட்டுப்போவாய்."

"எப்படிக் கெட்டுப்போவேன்?"

"இன்று கெட்டுப்போன மாதிரி."

"இன்று கெட்டுப் போனேனா?"

"ஆம்; அவளை மணம் செய்து கொள்வதாகச் சொன்னாயல்லவா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் பெரு வியப்பைக் காட்டினான் முகுந்தன்.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"நான் சற்று முன்பே வந்துவிட்டேன்...."

மஹாயனர் ஏதோ சொல்ல வாயெடுத்து நிறுத்தினார். பிறகு கேட்டார் மெதுவாக, "முகுந்தா! காஞ்சியின் படைபலம் அத்தனை கேவலமென்று நினைக்கிறாயோ?"

"ஆம்."

"எதனால் நினைக்கிறாய்?"

"பத்ரவர்மன் ஓர் உபதளபதி. மாதவி ஓர் உபதளபதி. என்னைச் சிறையில் அடைக்க ஒரு தடியனை அனுப்பினீர்களே, அவன் ஓர் உபதளபதி. இவர்களைக் கொண்டு சமுத்திர குப்தனை எதிர்த்துவிட முடியுமா?"



"இதைக் கேட்ட மஹாயனர் புன்முறுவல் கொண்டார். "முடியாதென்பது எனக்குத் தெரியும். ஆனால் விஷ்ணு கோபனுக்கு அது தெரியவில்லையே" என்றார் புன்முறுவலின் ஊடே.

முகுந்தன், பேசிக்கொண்டே நடந்தவன் சட்டென்று நின்றான்.

"தாங்கள் அனுமதி கொடுத்தால் மன்னரிடம் இதை நானே தெரிவித்து இவர்கள் அனைவரையும் நீக்கிவிடச் செய்கிறேன்" என்றான்.

மஹாயனரும் நின்றார். "யாரை நீக்கினாலும் மாதவியை நீக்க முடியாது" என்று திட்டமாகச் சொன்னார்.

"ஏன் முடியாது?" என்று சீறினான். "கேவலம் அவள் ஒரு பெண்" என்றும் கூறினான்.

"இருப்பினும் மாதவிக்கும் மன்னனுக்குமுள்ள தொடர்பை நீ அறியமாட்டாய்" என்றார் மஹாயனர் மெதுவாக.

"என்ன தொடர்பு மஹாயனரே" - திகிலுடன் எழுந்தது கேள்வி துறவியிடமிருந்து.

"மன்னனுக்கும் மாதவி போன்ற அழகிக்கும் என்ன தொடர்பிருக்க முடியுமோ அந்தத் தொடர்புதான்" என்று கூறிய மஹாயனர் வெறுப்புடன் நடந்தார் மேலே.

துறவி அதைப் பற்றிச் சங்கடப்பட்டதாகத் தெரியவில்லை. அவருடன் வேகமாக நடந்து, "குருநாதரே! இதை ஏன் எனக்கு நீங்கள் முன்பே தெரிவிக்கவில்லை?" என்று கேட்டான்.

"அப்பொழுது அவசியமில்லை."

"இப்பொழுது?"

''அவசியமேற்பட்டிருக்கிறது நீ அவளை மணக்க விரும்புகிறாய். அதை முறிக்க, சோழர் குலத்தைக் காக்க முயல்வது எனது கடமை'' என்று சற்று உஷ்ணத்தைக் குரலில் காட்டிய மஹாயனர், ''மாதவியை மறந்துவிடு. இன்றிரவு வேகவதியைத் தாண்டி சமண காஞ்சியிலுள்ள நமது மடத்திற்கு வந்து சேர்'' என்று கூறினார்.

''எப்படி வர முடியும்?'' நான் சிறையிலிருக்கின்றேனே!''

''மாதவிக்கு அதிகாரமிருக்கிறது. அவளை விடுதலை செய்யச் சொல்.''

''அதை நீங்களே சொல்லுங்கள். நீங்களே விடுதலை செய்தாலென்ன? நீங்கள்தானே என்னைச் சிறையில் தள்ளினீர்கள்?'' என்று கேட்டான் வாலிபத் துறவி.

மஹாயனர் சற்றுத் திரும்பி அவனை நோக்கினார். ''நான் செய்யும் எதற்கும் காரணமிருக்கும். ஆகவே சொல்படிகேள் மாதவியைக் கொண்டு விடுதலை அடை. இரவு என் மடத்துக்கு வந்து சேர்'' - கூறிவிட்டு வெளியேறினார்.

அவர் கதவுகளைத் தாண்டி கதவுகள் மூடப்பட்டதும் சர்வசாதாரணமாகத் திரும்பினான் தனது அறைக்கு. அங்கு கதவைப் பிடித்து நின்றிருந்த மாதவியைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான். மாதவியையும் உள்ளே இழுத்து கதவையும் சாளரங்களையும் மூடினான். பிறகு அவளை அவசரமாகப் பஞ்சணையில் படுக்க வைத்தான்.

மாதவிக்கு அவன் செயல்களுக்கு ஏதோ காரணமிருப்பதாகத் தெரிந்ததால், அவள் மௌனமாகவே அவன் சேஷ்டைகளுக்கு உட்பட்டாள். அவள் இதழ்களுடன் தனது இதழ்களை இணைத்தான் துறவி நீண்ட நேரம். பிறகு சொன்னான் ''மாதவி! நீ திமிறி



வெளியே சென்று காவலர்களை அழைத்து என்னைக் கடுங்காவலில் வைத்து விடு'' என்று கூறினான். அவள் வெளியே செல்லு முன்பு ''ஆடைகளைச் சிறிது கலைத்துக் கொள்'' என்று கூறித் தானே சிறிது கலைத்தும் விட்டான்.

## 26. துறவியின் விடுதலையும் வேகமும்

சோழநாட்டு வாலிபத் துறவி எதற்காக அந்த நாடகத்தை ஆடச் சொல்கிறான் என்பதை அறியாத மாதவி, அதற்கு உடன்படலாமா வேண்டாமா என்று சிறிது ஆலோசித்தாள். உடன்பட்டால் தன் பெயர் வாலிபத்துறவியின் பெயருடன் சேர்ந்து மிகக் கேவலமாக அடிபடும் என்பதை உணர்ந்தாள். உணர்ந்தும் துறவியிடம் இருந்த நம்பிக்கையால், ''அனாவசியமாக இவர் எதையும் செய்யமாட்டார்'' என்று தீர்மானித்து அவன் சொன்னவுடனே கலைந்த ஆடையுடன் வெளியே சென்று, ''யாரங்கே, யாரங்கே?'' - என்று இருமுறை ஆத்திரத்துடன் கூவினாள். அவள் கூச்சலைக் கேட்டு ஓடிவந்த காவலர் இருவரையும் சுடும் விழிகளால் நோக்கி, ''என்ன நீங்கள் உறங்குகிறீர்களா? விழித்திருக்கிறீர்களா? எத்தனை முறை கூவுவது உங்களை அழைக்க!'' என்று கூறினாள்.

காவலர்கள் அவளை அச்சத்துடன் பார்த்தார்கள். அவள் கோபத்தைக் கண்டு திகைத்தார்கள். ''அம்மணி! இதைத் தங்களுக்குச் செய்தது...'' என்று வாசகத்தை முடிக்க முடியாமல் கண்களின் மூலமே கேள்வியை எழுப்பினார்கள்.

''உள்ளே இருக்கிறான் அந்தச் சோழ நாட்டுத் துறவி. அவன் கைகால்களைப் பிணையுங்கள். அவனைக் கடுங்காவலில் வையுங்கள். உணவு ஒரு நாளைக்கு ஒருமுறை அளித்தால் போதும்.

மாதவியுடன் விளையாடுவது எத்தனை அபாயம் என்பதை அவன் புரிந்து கொள்ள வேண்டும்'' என்று உணர்ச்சியால் மார்பு எழுந்து தாள, உதடுகள் துடிக்க உத்தரவிட்டாள் மாதவி.

இதைக் கேட்ட காவலர் விழித்தனர். பிறகு ஒருவன் மெல்லக் கூறினான். ''அம்மணி! இவர் மஹாயனரால் சிறை செய்யப்பட்டவர்...'' என்று.

''மன்னரால் சிறை செய்யப்பட்டாலும் சிறையில் முறை தவறி நடக்க யாருக்கும் உரிமையில்லை'' என்று கடிந்து கொண்டாள் மாதவி.

''மன்னர் சொல்லைக்கூட மீறலாம். மஹாயனர் சொல்லை மீற முடியாதே'' என்றான் இன்னொரு காவலன்.

''காஞ்சியை ஆள்வது மன்னரா மஹாயனரா?'' - இக் கேள்வியைச் சீற்றத்துடன் உதிர்த்த மாதவி, ''உங்களுக்கு இங்கு வேலையிலிருக்க இஷ்டமா? விலக இஷ்டமா?'' என்றும் விசாரித்தாள்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்த சிறைக் காவலர் தலைவன், ''உபதளபதியை எதிர்த்து என்ன பேசுகிறீர்கள்?'' என்று கோபத்துடன் கேட்டதும், ''உபதளபதியா?'' என்று வாயைப்பிளந்த காவலருக்கு மாதவி உபதளபதி என்பதை விளக்கி ''அவர்கள் எதைச் சொன்னாலும் செய்ய அரசர் உத்தரவிருக்கிறது'' என்றும் கூறவே காவலர்கள் அறைக்குள் பாய்ந்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் துறவியின் கைகால்கள் பிணைக்கப்பட்டன. அப்படியே அவனைத் தூக்கிப் பஞ்சணையில் போடுமாறும், முக்கியமான காரியங்களுக்குத் தவிர, தளைகளை அவிழ்க்கக் கூடாதென்றும் உத்தரவிட்ட மாதவி துறவி எதிரில் நின்று ''இப்பொழுது என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.



''இதை என் குருநாதர் அறிந்தால் உங்கள் அனைவரையும் சிறையில் தள்ளிச் சித்திரவதை செய்வார்'' என்று கூறினான் துறவி.

அதைக் கேட்ட மாதவி தன் கையை ஓங்கினாள் துறவியை நோக்கி. பிறகு கையைக் கீழே போட்டு, ''நீ துறவி. ஆகையால் தப்பினாய். இல்லாவிட்டால் இந்தக் கணமே சித்திரவதை செய்ய உத்தரவிட்டிருப்பேன்'' என்று கூறிவிட்டு, ''இந்த அறைக் கதவைப் பூட்டிச் சாவியை என்னிடம் கொடுத்து விடுங்கள்'' என்று உத்தரவிட்டு வெளியே வந்தாள். அறைக்கதவு பூட்டிச் சாவி அவளிடம் கொடுக்கப்பட அதைச் சிறைத் தலைவனிடம் மாதவி கொடுத்து, ''ஏதாவது அதிகத் தொல்லை இருந்தால் தவிர கதவைத் திறக்க வேண்டாம். சாவி உங்களிடமே இருக்கட்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று இரவும் மெல்ல மெல்ல நெருங்கியது. இரவு உணவளிக்கப்பட்ட சமயத்தில் மட்டும் சிறைக்காவலன் துறவியின் கையை அவிழ்த்துவிட்டான். பிறகு தளைகளை நன்றாகப் பிணைத்து அறையையும் பலமாகப் பூட்டிச் சென்றான். நள்ளிரவு வரை கட்டிலில் பலவித சிந்தனைகளில் படுத்திருந்த துறவி மெல்ல எழுந்து, பிணைத்த கைகளால் தலையணையைத் தள்ளி அதன் கீழிருந்த நாகசர்ப்பத்தை எடுத்தான். தளைகளை அறுக்காமல் கத்தியை முடிப்பில் கொடுத்து, கால் தளைகளை மெதுவாக, பிணைக்கப்பட்ட தனது இரு கைகளாலும் தளர்த்திக் கொண்டான். பிறகு பற்களில் கத்தியைக் கடித்து, கைத்தளைகளிலிருந்தும் விடுதலை அடைந்தான். அந்த இடத்தை இருமுறை கத்தியால் தட்டிப் பார்த்து அகற்றினான். அறை விளக்கை ஊதி அணைத்துவிட்டு சுரங்கப்படிகளில் இறங்கிச் சென்றான். இம்முறையும் இரு வழிகளில் செல்லும் இரு கதவுகளண்டை வந்ததும், மன்னர் இருந்த பழைய அறைக்குச் செல்லும் கதவைத்

திறந்து கொண்டு நடந்தான். சமார் ஒரு நாழிகை நேரம் நடந்த பின்பு மேலே ஏறிய படிகளில் ஏறிச் சென்றான். படிகளின் மேலே இருந்த அறைக் கதவுகளிடம் சில விநாடிகள் மௌனமாக நின்றான்.

உள்ளே இருவர் பேசும் அரவம் கேட்கவே, காதை இரு கதவுகளுக்கிடையே கொடுத்துக்கொண்டு பேசுவதை கேட்கலானான்.

மஹாயனர் தமது சுபாவத்துக்கு மாறாக இரைந்து கொண்டிருந்தார்: ''யார் அவனைப் பிணைக்கச் சொன்னது? அவன் என் சீடனென்பதை மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''உபதளபதி மாதவி உத்தரவிட்டார்கள். இந்தத் துறவி அவளை அலங்கோலப்படுத்தி விட்டான்'' என்றது பணிவான ஒரு குரல். அது சிறைத் தலைவன் குரல் என்பது சந்தேகமறத் தெரிந்தது துறவிக்கு.

''மாதவியை அலங்கோலப்படுத்தினால் என்ன கெட்டுப் போய்விட்டது? அவள்...?'' என்ற மஹாயனர் நிதானித்தார்.

''வேசியாக நாடகமாடினாலும் வேசியல்ல என்பது காஞ்சியின் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் தெரியும்'' என்று சிறைத் தலைவன் பணிவுடன் சொன்னான்.

''அதைப் பற்றி உனக்கென்ன?''

''எனக்கொன்றுமில்லை. அவர்கள் உத்தரவை மீறினால்...''

''தலை போய்விடுமா?''

''அரசர் இஷ்டப்பட்டால் அதுவும் போய்விடும்.''

''அப்படியானால் என் உத்தரவுகளுக்கு மதிப்பில்லையா?''

''இல்லையென்று சொல்ல முடியுமா? ஆனாலும் இது பெரிய இடத்து விஷயமாகயிருக்கிறது. நாங்கள் சிறிய



உத்தியோகஸ்தர்கள். முரண்பாடான இரண்டு உத்தரவுகளை நிறைவேற்றுவது கஷ்டம்.'' -இதைச் சொன்ன சிறைத் தலைவன் குரலில் நடுக்கம் தெரிந்தது.

மஹாயனர் பேச்சு உடனடியாக வரவில்லை. சிறிது தாமதித்துக் கேட்டது: ''சரி, நீ போ. இந்த மாதவியின் ஆட்டம் எத்தனை நாள் நடக்கிறது பார்ப்போம்?'' என்று கூறினார். பிறகு சிறைத் தலைவன் வெளியே செல்லும் அரவம் கேட்டது. மேற்கொண்டு தனக்கு அங்கே வேலையில்லை என்பதை உணர்ந்து கொண்டு திரும்ப யத்தனித்த சமயத்தில் வேறு ஒரு கதவு எங்கிருந்தோ திறக்கும் சத்தம் கேட்கவே சிறிது நின்றான் துறவி.

அந்தக் கதவைத் திறந்துகொண்டு வந்தவனைப் பார்த்ததும் மஹாயனருக்குப் பெரும் எரிச்சல் உண்டாகியிருக்க வேண்டும். ''சிறைத் தலைவன் சொன்னதையெல்லாம் கேட்டாய் அல்லவா?'' என்று வினவினார்.

''கேட்டேன்'' -தடிப்பாக இருந்தது அவன் குரல். குரலிலிருந்து அவன் பத்ரவர்மன் என்பதைப் புரிந்து கொண்டான் துறவி.

''நீ இந்த நகரத்தின் பிரதான உபதளபதி.'' -இகழ்ச்சியுடன் சொற்களை உதிர்த்தார் மஹாயனர்.

''ஆம்''

''உனக்குத் தெரியாமல் இன்னும் ஓர் உபதளபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

''தெரியாது.'' -பத்ரவர்மன் குரலில் குழப்பம் இருந்தது.

''மாதவி'' என்றார் மஹாயனர்.

''மாதவியா?'' -வியப்புடன் நகைத்தான் பத்ரவர்மன்.

''நகைப்பதற்கு எதுவுமில்லை. உன்னைவிட, என்னைவிட, அதிக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது அவளுக்கு.''

"எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"இப்பொழுதுதான் சிறைத் தலைவன் சொல்லி விட்டுப் போனான்."

இதைக் கேட்ட பத்ரவர்மன் மௌனம் சாதித்தான். "அவனைக் கொன்று விடட்டுமா?" என்று கேட்டான்.

"கொலையால் நாம் எதுவும் சாதிக்க முடியாது. இதை முன்பே சொல்லியிருக்கிறேன் உனக்குப் பலமுறை. அதையும் நீ மீறி இருக்கிறாய்" என்று கண்டிப்பான குரலில் பேசினார் மஹாயனர்.

பத்ரவர்மனும் கொதித்துப் பேசினான். "விஷ்ணு கோபனுக்குப் பிறகு நான் மன்னனாக வேண்டும். அதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுப்பேன்" என்று சீறினான்.

"ஒரு நடவடிக்கை எடுக்கலாம்" என்று நிதானமாகக் கூறினார் மஹாயனர்.

"எது?"

"நீயே தூக்குப் போட்டுக் கொள்ளலாம்."

"எதற்காக?"

"கொலை முயற்சி செய்து மன்னனால் வெட்டப்படுவதை விட அது நல்லது."

பத்ரவர்மன் மௌனம் சாதித்தான். மஹாயனர் நிதானமாகப் பேசினார்: "பல்லவ மரபு பெரிய மரபு. அதில் வீரனாயிருப்பவன்தான் பிழைக்க முடியும். அரசாள முடியும். கொலையாளிகள் அரசாள முடியாது. காஞ்சி கலைக்களஞ்சியம்; அதைப் பாதுகாப்பவன் கலைஞனாக இருக்கவேண்டும். கொலைஞனாக இருக்க முடியாது. ஆகையால் நிதானமாகக் கேள். அரசர் மீது எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாதே. அவர்



இன்னும் நான்கு நாட்களில் போர்முனைக்குப் போகிறார்..."-இந்த இடத்தில் பேச்சை நிறுத்தினார் மஹாயனர்.

பத்ரவர்மன் மௌனமாய் இருந்தான். மஹாயனர் சொன்னார். "பத்ரவர்மா; அவர் வெற்றிக்கும் பிரார்த்திப்போம்" என்று.

பத்ரவர்மன் பெரும்வியப்பைக் காட்டினான். "மஹாயனரே! அவ்வப்பொழுது உங்கள் குரலும் மாறுகிறதே" என்றான்.

"என் குரலும் நோக்கமும் மாறுவதில்லை. என் குரலும் குறிக்கோளும் ஒன்று" என்று கூறிய மஹாயனர், "சரி நீ போய் வா" என்றார்.

பத்ரவர்மன் சென்ற சில வினாடிகளுக்கெல்லாம் அறைக்கதவின் இடுக்கை அதிகப்படுத்தி உள்ளுக்குள் நோக்கினான் துறவி. மஹாயனர் ஓர் ஓலையில் ஏதோ வேகமாக எழுதிக் கொண்டிருந்தார். எழுதி முடித்து ஒரு குழலில் போட்டு முத்திரையும் வைத்தார். பிறகு "யாரப்பா அங்கே?" என்று குரல் கொடுக்க ஒரு வீரன், தோன்றினான்; அவனிடம் ஓலைக் குழலைக் கொடுத்தார். அவன் தலைவணங்கி அதனைப்பெற்றுச் சென்றதும் மஹாயனர் நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். அவர் இதழ்களில் புன்முறுவலும் அரும்பிற்று. அதற்குமேல் துறவி அங்கு நிற்கவில்லை. கதவை மெதுவாகச் சாத்திவிட்டு சுரங்கப் பாதையில் இறங்கிச் சென்றான். தனது அறைக்கு வந்ததும் சுரங்கப்பாதையை மூடிவிட்டுப் பஞ்சணையில் உட்கார்ந்து கால்களைக் கயிறுகளால் பிணைத்துக் கொண்டான். கைகளிலும் கயிற்றை அரையும் குறையுமாகச் சுற்றிக் கொண்டு படுத்து நிம்மதியாக நித்திரை செய்தான். நித்திரை அதிக நேரம் நீடிக்கவில்லை. மாதவி வந்து சிறைக் கதவைத் திறந்தாள். அவன் கட்டுகளை அவிழ்க்கப் போனவள், கட்டுகளை உதறிய அவன் கைகளைக் கண்டு ஏதோ பேச இஷ்டப்பட்டாள்.

''பேச அவகாசமில்லை. என்னை விடுதலை செய்ய உத்தரவிட்டு ஒரு புரவியைக் கொடு'' என்றான் துறவி.

அவன் அவசரத்தைப் பார்த்த மாதவி சிறைத்தலைவனை அழைத்து அப்படியே உத்தரவிட, புரவியில் ஏறிப்பறந்தான் துறவி, காஞ்சியின் பிரதான வாயிலை நோக்கி.

## 27. ராஜோபசாரம்

வாலிபத் துறவியின் விந்தை வழிகள் மாதவிக்கு வியப்பை அளித்தாலும், அவற்றுக்கு அஸ்திவாரமாக ஏதோ முக்கியக் காரணம் இருக்கவேண்டுமென்பதை மட்டும் அவள் புரிந்து கொண்டிருந்தாளாகையால், அவளே அவன் கால் தளைகளை அவிழ்த்துவிட்டு, சிறைக்காவலனை அழைத்துத் துறவி விடுதலை செய்யப்பட்டதாகவும், அவருக்கு ஒரு புரவியைக் கொடுக்குமாறும் கட்டளையிட்டாள். இந்தக் கட்டளையைக் கேட்ட சிறைக் காவலன் முதலில் வியப்பைக் காட்டினாலும் கடைசியில் மாதவிக்கு சிரம்தாழ்த்தி துறவிக்குப் புரவியைக் கொண்டுவரச் சென்றான். அவன் அறையைவிட்டுச் சென்றதும் ஒரு முறை மாதவியை இறுக அணைத்த துறவி, ''மாதவி! காஞ்சியின் நாடகம் முடியும் நாள் நெருங்கிவிட்டது. ஆகேவே துரிதமாக இதன் பாதுகாப்புகளைப் பலப்படுத்து. அதற்குத் தேவையான அதிகாரத்தை மன்னரிட மிருந்து பெற்றுக் கொள். விரிவாகப் பேச அவகாசமில்லை'' என்று கூறி விட்டு வெளியே சென்றான். அந்த சமயத்தில் புரவி வந்து விட அதன்மீது தாவிப் பறந்தான். போகுமுன்பு தனது நாகசர்ப்பத்தை எடுத்துத் தனது உடையில் மறைத்தும் கொண்டான்.

பிரதான வாயிலை அடைந்த துறவி வாயிலை மெல்ல நெருங்கிவிட்டதால் கோட்டை வாயில் காவலரை நோக்கிக்



கதவுகளைத் திறக்கச் சொன்னான். துறவியின் பிரபல்யம் ஏற்கனவே காஞ்சிமாநகர்க் காவலர்களிடம் பரவியிருந்ததாலும், அவர் மஹாயானரின் சீடனென்பது எல்லாருக்கும் தெரிந்திருந்த தாலும், அவன் விருப்பப்படி கதவுகள் திறக்கப்பட்டன. கதவைத் தாண்டிச் சென்றதும் நேரான பாதையில் செல்லாமல், சற்றுத் திரும்பி வடமேற்குத் திசையில் சென்று சிறுபாதையில் புரவி யைத் திருப்பினான் துறவி. அந்தப் பாதை முடியுமிடத்தில் திரும்பிய காஞ்சியின் பெருஞ் சாலையில் புரவியை வேகமாகத் தட்டிவிட்டான். இப்படிச் சுமார் நான்கு நாழிகை நேரம் பயணம் செய்த பின்பு வழியிலிருந்த சத்திரமொன்றில் நுழைந்த துறவி சத்திர தலைவனுக்குத் தன்னை மஹாயனரின் தூதன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

சத்திரதலைவன் முகத்தில் ஆச்சரியம் பெரிதும் பிரதி பலித்தது. ''சற்று முன்புதானே மஹாயனரின் தூதன் ஒருவன் வந்து போனான். அதற்குள் இன்னொரு தூதனா?'' என்று கேட்டான்.

''குருநாதர் கட்டளைகளைப்பற்றிக் கேட்கவோ சந்தேகப்படவோ நீ யார், நான் யார்?'' என்று கேட்டான் துறவி, சிறிது அதிகாரக் குரலில்.

முகுந்தனின் துறவி உடையை நோக்கிய சத்திர தலைவன் ''உன்னைப் பார்த்தால் தூதனாகத் தெரியவில்லையே; துறவி மாதிரி இருக்கிறாயே!'' என்று கேட்டான்.

''மஹாயனர் சீடன் எப்படியிருப்பான்?'' என்று கேட்டான் துறவி.

''நீங்கள் அவர் சீடரா?'' என்று கேட்டான் சத்திர தலைவன்.

''சற்று முன்பு அவரைக் குருநாதரென்று அறிவித்தேன்'' என்று கட்டிக் காட்டினான் துறவி.

''ஆம், ஆம்'' என்று ஒப்புக்கொண்ட சத்திரதலைவன் ''ஆனால் இதுவரை குருநாதர் எந்தச் சீடனையும் தூதனாக அனுப்பியது கிடையாது'' என்றான். அவன் குரலில் சந்தேகமிருந்தது.

''இருக்கலாம்.''

''அப்படியானால் உன்னைத் தூதன் என்று எப்படி ஒப்புக் கொள்வது?''

''சற்றுத் தனிமையில் வந்தால் அத்தாட்சியைக் காட்டுகிறேன்.''

துறவியின் இந்தப் பதில் நியாயமாயிருக்கவே, சத்திர தலைவன் தனது பீடத்திலிருந்து எழுந்திருந்து துறவியை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்றான். அறைக்குள் நுழைந்ததும் அதைத் தாழிடவும் செய்தான். விநாடிகள் பல ஓடின; தாழிட்ட கதவு திறக்கவில்லை!

அவர்கள் இருவரும் தனித்து ஓர் அறைக்குள் சென்றதைச் சத்திரத்துக் கூடத்திலிருந்த பல வீரர்கள் கவனித்தாலும், அதைப் பற்றி முதலில் அக்கறை காட்டவில்லை என்றாலும், விநாடிகள் ஓடிக்கொண்டே இருந்ததால் ஒரு வீரன் மட்டும் சந்தேகப்பட்டு உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்தான். மற்றவர்களை நோக்கி, ''நான் கதவைத் தட்டிப் பார்க்கிறேன். நமது தலைவர் இத்தனை நேரம் தனிமையில் யாருடனும் பேசியதில்லை. இதில் ஏதோ சூது இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு அறைக் கதவை நோக்கிச் சென்றான்.

அந்தச் சமயத்தில் அறைக்கதவு திறக்கப்பட்டு சத்திர தலைவனும்,துறவியும் பரஸ்பரம் தோள்மேல் கையைப் போட்டுச் சிரித்த வண்ணம் வெளியே வரவே, அறைக் கதவை நோக்கிச் சென்ற வீரன் திகைத்து நின்றான். அவனையும் சத்திரத் தலைவனையும் நோக்கிய துறவி, ''இவன் யார்?'' என்று விசாரித்தான்.

''நம்மவன்தான்'' என்ற சத்திரக்காரன், ''வீரர்களே! மஹாயனரின் பிரதம சீடரைப் பாருங்கள். இனி இவர் எப்பொழுது



இங்கு வந்தாலும் எனக்குக் காட்டும் மரியாதையை இவருக்கும் நீங்கள் காட்டவேண்டும்'' என்று உத்தரவிட்டான் துறவியை அழைத்துக்கொண்டு சத்திரத்து வாயிலுக்குச் சென்றான்.

வாயிலை அடைந்ததும், ''நீங்கள் உணவருந்திவிட்டு போகலாம். ஆனால் உங்கள் அலுவல் அதற்கு இடந்தரவில்லை'' என்று வருத்தத்துடன் சொன்னான்.

''உணவு எங்கே போகிறது? இன்னொருமுறை நமது காரியம் நிறைவேறியதும் உணவருந்துவோம். அதுவும் இருவருமாக அரண்மனையில் உணவருந்துவோம்'' என்று கூறிய துறவி, ''நான் எழுதிக் கொடுத்த ஓலை பத்திரம். வேறு யார் கையிலும் சிக்கக் கூடாது. சிக்கினால் குரு நாதர் கோபத்துக்கு இலக்காவோம்'' என்று கூறிவிட்டுப் புரவியில் ஏறினான். புரவி மீண்டும் பறந்தது வடபெருஞ் சாலையில். அவன் புரவி கண்ணுக்கு மறைந்ததும், சத்திர தலைவன் தனது மடியிலிருந்த ஓலையை எடுத்துப் பார்த்தான்.

''உபதளபதியும், குருநாதர் சீடப் பெண்ணுமான மாதவி அவர்களுக்கு, துறவியின் வணக்கம். இதைக் கொண்டுவரும் சத்திரதலைவர் விஷயமறிந்தவர். இவரை நன்கு உபசரித்து ஆவன செய்யவும்'' என்று கண்டிருந்தது. அடியிலிடப்பட்ட கையொப்பம் கத்தக் கிறுக்கலாயிருந்தது.

அதைத் திரும்பத் திரும்பப் படித்த சத்திர தலைவன் முகத்தில் சிந்தனை ரேகை ஓடியது. ''எல்லாம் விசித்திரமாயிருக்கிறது. ஆனால் குருநாதரைக் கேட்க யாருக்கு உரிமை உண்டு? பெண்ணை உபதளபதியாக நியமிப்பது பெரும் விந்தை, ஆனால் குருநாதர் ஆழ்ந்த திட்டமில்லாமல் எதையும் செய்யமாட்டார்'' என்று கூறிக்கொண்டான். அந்த நினைப்புடன் உள்ளே சென்றவன், கூடத்திலிருந்த வீரர்களைப் பார்த்து தான் காஞ்சி

வரையில் செல்லப் போவதாகவும், எல்லாரையும் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பணித்தான். பிறகு உணவருந்தி இளைப்பாறி இரவு நெருங்கும் வரை காத்திருந்தான். இரவு நெருங்கியதும் ஒரு புரவியை எடுத்துக் கொண்டு காஞ்சி நோக்கிச் சென்றான். இரவின் முதல் ஜாமம் முடியும் தறுவாயில் காஞ்சியின் பிரதான வாயிலை அடைந்தவன், வாயில் காவலரை இரைந்து கூவி அழைத்தான். இரு காவலர்கள் மதில் மீது தோன்றியதும், சத்திரத்தலைவன் ஏதோ சைகை செய்யக் கதவுகள் திறந்தன. திறந்ததும் உள்ளே சென்ற சத்திரத்தலைவன் நேராகப் பல தெருக்களைத் தாண்டி மாதவியின் இல்லத்தை அடைந்து, முதல் பெருங்கதவைத் தட்டினான்.

கதவு திறக்கப்பட்டதும், தான் உபதளபதி மாதவியைக் காணவேண்டுமென்று கதவைத் திறந்த பணிப் பெண்ணிடம் சொன்னதும், அவள் அவனை முன்னறை ஒன்றில் உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

சில நிமிடங்களுக்கெல்லாம் அந்த அறைக்குள் புகுந்த மாதவி, "நீ யார், என்ன வேண்டும் உனக்கு?" என்று விசாரித்தாள்.

"நான் தங்களைப்போலவே குருநாதரைச் சேர்ந்தவன்" என்றான் சத்திரத் தலைவன்.

மாதவியின் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது. அதைக் கவனித்த சத்திரத்தலைவன், "எனக்கும் முதலில் சந்தேகமாகத் தானிருந்தது" என்றான்.

"எது?"

"குருநாதர் ஒரு பெண்ணை உபதளபதியாக நியமிப்பார் என்பது."

"குருநாதர் நியமித்ததாக யார் சொன்னது?"



"அவர் சீடர்தான். இத்தனை வாலிப வயதில் அவர் துறவியானது நான் விந்தை. ஆனால் அது உண்மைத் துறவறம் என்பது எப்படித் தெரியும்? என்னைப் போல் வேடதாரியாகவும் இருக்கலாம்" என்றான் சத்திரத் தலைவன் விஷமமாகச் சிரித்து.

"நீ வேடதாரியா?" என்று கேட்டாள் மாதவியும் போலிப் புன்முறுவலுடன்.

"ஆம். முன்பு இங்கு உபதளபதியாயிருந்து மன்னரால் விலக்கப்பட்டவன். இப்பொழுது வடபெருஞ் சாலையில் சத்திரக்காரனாகப் பணிபுரிகிறேன். எல்லாம் குருநாதர் கட்டளை. காரணமில்லாமல் அவர் கட்டளையிடமாட்டார் என்பது தங்களுக்குத் தெரியும்."

இதைக் கேட்டதும் மாதவி சிரித்தாள். "ஆம்; ஆம். குருநாதர் மன விந்தையை, செயல் விந்தையை யார் அறிய முடியும்? சரி! நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றாள்.

பதிலுக்கு, சத்திரக்காரன் தனது மடியிலிருந்த ஓலையை எடுத்து மாதவியிடம் கொடுத்தான். துறவியின் ஓலையை நிதானமாகப் படித்த மாதவி, "இங்கு தாங்கள் வந்தது யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும்படி நடந்து கொள்வேனா?" என்று கேட்டான் சத்திரக்காரன்.

"நல்லது. நீங்கள் இந்த அறையிலிலேயே தங்கலாம்; இங்கேயே உணவு அருந்துங்கள். நான் மஹாயனரைச் சந்தித்து விஷயத்தைச் சொல்லிவிட்டு, உங்களை திரும்ப அனுப்பி வைக்கிறேன்" என்று கூறிவிட்டு சத்திரக்காரனுக்குச் சகல மரியாதைகளையும் செய்யுமாறு கூறினாள், ஒரு பணிப்பெண்ணை அழைத்து.

சத்திரக்காரனுக்கு ராஜோபசாரம் நடந்தது. அங்கு இருந்த மஞ்சத்தில் படுத்து நன்றாக உறங்கினான். அறுசுவை உண்டி அருந்திய பிறகு, அன்று இரவு முடிந்து பகலும் விடிந்தது. அப்பொழுதும் யாரும் வரவில்லை. உறக்கம் விழித்த சத்திரக்காரன், "யாரங்கே?" என்று இரு முறை குரல் கொடுத்தான். பதில் ஏதும் கிடைக்க வில்லை. மஞ்சத்திலிருந்து எழுந்து சென்று கதவை இழுத்தான் திறக்க; கதவு வெளிப்பக்கம் பூட்டியிருந்தது.

## 28. மறைந்த துறவி

கதவை இருமுறை இழுத்துப் பார்த்து வெளியே பூட்டப்பட்டிருந்ததை உணர்ந்த சத்திரக்காரன், தனக்கு அங்கு நடந்தது ராஜோபசாரமானாலும் அது உண்மையில் சிறைச்சாலை உபசார மென்பதைப் புரிந்து கொண்டதால் பெரும் திகிலுக்கு உள்ளானான். தன்னை ஏமாற்றி இந்த இக்கட்டில் மாட்டி வைத்தவன் மஹாயனரின் சிஷ்யனா அல்லது மன்னரின் ஒற்றனா என்பதை எண்ணிப் பார்த்து விடை காணாததால், பழையபடி மஞ்சத்தில் சென்று படுத்துக் கொண்டான். கதிரவன் நன்றாக உதித்துவிட்டு நாழிகை ஆனபின்புதான் யாரோ கதவைத் திறக்கும் சத்தம் கேட்கவே மஞ்சத்தில் துள்ளியெழுந்து உட்கார்ந்த சத்திரக்காரன் ஒரு பணிப்பெண் உள்ளே வருவதைக் கண்டதும் சினத்தின் வசப்பட்டு, "இப்பொழுது எதற்காக வந்தாய்?" என்று சீறினான்.

பணிப்பெண் அவன் சீற்றத்தை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. "உங்களுக்கு நீராட இஷ்டமிருந்தால் அழைத்துச் செல்ல வந்தேன். இல்லாவிட்டால்...." என்று வாசகத்தை முடிக்காமல் கையிலிருந்த பூட்டில் சாவியை வைத்துச் சுழற்றினாள்.

அதன் பொருள் சத்திரக்காரனுக்குப் புரியவே, "இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறிப் பணிப்பெண்ணைத் தொடர்ந்தான்.



அவனை நீராட அறைக்குள் விட்ட பணிப்பெண், அவன் நீராடிப் புது ஆடை புனைந்து வரும் வரையில் வெளியிலேயே காத்திருந்தாள். பிறகு அவனை அவனது அறைக்கு அழைத்துச் சென்று, "உள்ளே செல்லுங்கள்" என்றாள்.

"மீண்டும் பூட்டப் போகிறாயா?" என்ற திகிலுடன் கேட்டான் சத்திரக்காரன்.

"இல்லை" -பணிப்பெண் சர்வசாதாரணமாகப் பதில் சொன்னாள்.

"நேற்று ஏன் பூட்டினாய்?"

"தங்களை யாரும் தொந்தரவு செய்யாதிருக்க."

"இன்று தொந்தரவு செய்தால் பாதகமில்லையா?"

"இன்று உங்களை யாரும் அணுக முடியாது. நீங்கள் நிம்மதியாக ஓய்வு எடுக்கலாம்.

"எனக்கு ஓய்வு தேவையென்று யார் சொன்னது?"

"உபதளபதி."

"யார், மாதவியா?"

"உபதளபதியைப் பெயர் சொல்லி அழைத்தால் தண்டனை உண்டு."

இதைக் கேட்ட பின்பு சத்திரக்காரன் வாயைத் திறக்க வில்லை. பணிப்பெண் அவனுக்கு உணவு கொண்டு வருவதாகச் சொல்லி வெளியே சென்றதும், சத்திரக்காரன் மெல்ல வெளியே தலை நீட்டினான். இரண்டு ஈட்டிகள் வாயிற்படிக்குக் குறுக்கே பாய்ந்து அவனைத் தடுத்தன. தான் காவலில் வைக்கப்பட்டிருப்பதைச் சத்திரக்காரன் சந்தேகமற உணர்ந்து கொண்டான். ஆதலால்

அப்புறம் எந்தவித நடவடிக்கையிலும் இறங்காமல் மஞ்சத்தில் உட்காருவதும், பிறகு அறையில் நடப்பதுமாகக் காலங் கழித்தான்.

பகல் போஜனம் முடிந்ததும், அவனை அதே பணிப் பெண் வந்து அழைத்துப் போனாள். சித்திரக் கூடத்தில் இருந்த மாடிப்படி ஏறி, மேல் அறையொன்றுக்கு வந்ததும் உள்ளே செல்லக் கட்டளையிட்டாள். அங்கிருந்த பெண்ணைக் கண்டதும் தலைவணங்கிய சத்திரக்காரன், ''உபதளபதியார் என்னைக் காவலில் வைத்துள்ள காரணத்தை விளக்க வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டான்.

அந்தப் பெண் அவனை ஏறெடுத்து நோக்கினாள் வியப்புடன். ''உபதளபதி நானல்ல'' என்று சொன்னாள்.

''தாங்கள் தானே மாதவி அம்மையார்...?'' என்று தடுமாறினான் சத்திரக்காரன்.

''இல்லை, நான் மாதவியின் உடன் பிறந்தவள்'' என்றாள் அவள்.

''அப்படியானால் தாங்கள் தேவகி அம்மையாராக இருக்க வேண்டும்'' என்றான் சத்திரக்காரன்.

இதைக் கேட்ட தேவகி புன்முறுவல் கொண்டாள். ''அரண்மனை விவகாரம் முழுவதும் தங்களுக்குத் தெரிந்திருக்கிறது'' என்று கூறினாள் புன்முறுவலின் ஊடே.

''எல்லாம் குருநாதர் அருள்'' என்று சத்திரக்காரன் கூறினான்.

''உண்மை'' என்றாள் தேவகி.

''எது உண்மை?'' என்று கேட்டான் சத்திரக்காரன்.

அதற்குத் தேவகி பதில் சொல்லுமுன்பு, ''நீ நம்மைச் சேர்ந்தவன் என்பது'' என்று ஒரு குரல் ஒலித்தது அந்த அறைக்கோடியில். அதுவரையில் அறையின் அந்தப் பகுதியைக் கவனிக்காத



சத்திரக்காரன் அங்கு கண்களை ஓட்டினான். சட்டென்று மண்டியிட்டு வணங்கினான் மன்னர் பிரானை. ''மன்னிக்க வேண்டும், மகாராஜா இருப்பதைக் கவனிக்கவில்லை'' என்று பணிவுடன் கூறினான்.

''எப்படி கவனிக்க முடியும்? தொழில் வேறாகிவிட்டதல்லவா?'' என்றான் விஷ்ணுகோபன்.

''தொழிலா மகாராஜா?'' - சத்திரக்காரன் குரல் சிறிது ஆட்டங் கண்டிருந்தது.

''ஆம். தளபதியாயிருந்து சத்திரக்காரனாக மாறுவது சாதாரணமாக நடக்கும் விஷயமா?'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன விஷ்ணு கோபன் மண்டியிட்டுக் கிடந்த சத்திரக்காரனை, ''எழுந்திரு உபதளபதி'' என்றான்.

சத்திரக்காரன் எழுந்ததும், ''சத்திரக்காரரே! பழைய உத்தியோகத்தைப் பெற உங்களுக்கு இஷ்டமா?'' என்று கேட்டான் மன்னன்.

''கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?'' -சத்திரக்காரன் குரலில் ஆவல் ஒலித்தது.

''வேண்டியதில்லைதான். இருப்பினும் கூலியும் தருவோம்.''

''சரி, மகாராஜா.''

''கூலி எத்தனை என்று கேட்கவில்லையே?''

''மகாராஜாவிடம் சம்பளம் கேட்க அத்தனை துணிவா எனக்கு?''

''உன் துணிவைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. அந்தத் துணிவினால் தான் முன்பே உபதளபதி பதவியை விட்டுச் சொல்லாமல் ஓடிவிட்டாய். இனி ஓடமுடியாது. தவிர சம்பளம்...'' என்ற மகாராஜா அவன் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னார்.

சத்திரக்காரன் முகத்தில் திகில் விரிந்தது. ''பத்தாயிரம் பொற்காசுகளா! இத்தனை ஊதியம் தளபதிக்கே கிடையாதே'' என்றான் திகில் குரலிலும் ஊடுருவ.

''நீ செய்யக்கூடிய வேலையைத் தளபதி செய்ய முடியாது'' என்றார் மகாராஜா.

''அத்தனை கடுமையான வேலையா?''

''ஆம்.''

''ஆணையிடுங்கள். என் தலை போனாலும் செய்து முடிக்கிறேன்.''

''செய்து முடித்தால் தலை போகாது''.

''இல்லாவிட்டால்...'' சத்திரக்காரன் குரலில் கிலி அபரிமிதமாயிருந்தது.''

''சே, சே! அதைப்பற்றி இப்பொழுது பேசுவானேன்?'' என்றார் மகாராஜா.

சத்திரக்காரன் விழித்தான் ஆந்தைபோல. ''மகாராஜா! ஆணையிடுங்கள்'' என்றான்.

''நாளை மாலை உன் வேலை தொடங்குகிறது'' என்று மகாராஜா கூறிவிட்டு, ''நமது உபதளபதிக்குச் சகல உபசாரங்களும் நடக்கட்டும்'' என்று பணிப் பெண்ணை அழைத்து ஆணையிட்ட விஷ்ணுகோபன் பழையபடி அறைக்கோடிக்குச் சென்று அங்கிருந்த சாளரத்துக்கருகில் உட்கார்ந்து கொண்டான்.

பணிப்பெண், மன்னன் கட்டளைப்படி சத்திரக்காரனை அழைத்துப் போனாள். அவர்கள் வெளியே சென்றதும் தேவகி கேட்டாள், ''இவன்...'' என்று.



''பரம அயோக்கியன்'' என்றார் மகாராஜா.

''அப்படியிருக்க அவனை ஏன் மீண்டும் பதவியில் நியமித்தீர்கள்?'' என்று வினவினாள் தேவகி.

''மாதவி நியமிக்கச் சொன்னாள்.''

''எதற்காக?''

''அவள் தலைவன் உத்தரவு.''

''யார் அவள் தலைவன்?''

''அந்த வாலிபத் துறவி.''

''அவன் எங்கே இப்பொழுது?''

''தெரியாது.''

''தெரியாதா?''

''தெரியாது.''

''உங்களுக்குத் தெரியாமல் அவன் எப்படி மறைந்தான்?''

''மறையவில்லை. மாதவி விடுதலை செய்தாள். போனான்!''

''எங்கு?''

''எதிரியின் பாசறைக்கு.'' -இதைச் சொன்ன விஷ்ணு கோபன் திடீரென எழுந்தான் ஆசனத்தை விட்டு.

தேவகியின் கண்களில் அச்சம் துளிர்த்தது. ''எதிரியின் பாசறைக்கா?'' என்று அச்சம் குரலிலும் ஒலிக்கக் கேட்டாள்.

''ஆம்'' என்றார் மகாராஜா.

''அப்படியானால் துறவியை நாம் இழந்துவிட்டோம்''

''இல்லை.''

''எப்படி அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?''

மகாராஜா தேவகியை அணைத்துக் கொண்டு அவள் விழிகளை உற்றுப்பார்த்தார். ''தேவகி! பெரிய வீரர்கள் அனாவசியமாகக் கொலையில் இறங்குவதில்லை'' என்றும் சொன்னார்.

தேவகி தனது தலையை விஷ்ணு கோபன் மார்பில் சாய்த்துக் கொண்ட வண்ணம் கேட்டாள் ''யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று.

''சமுத்திர குப்தனை'' என்ற விஷ்ணுகோபன் சொற்களில் மரியாதை மிதமிஞ்சி ஒலித்தது.

தேவகியின் விழிகளில் ஆச்சரிய ரேகை அதிமாகத் துளிர்விட்டது. ''உங்கள் எதிரியைப் புகழ்கிறீர்கள்'' என்று சுட்டிக்காட்டினாள்.

பல்லவ மன்னன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு, ''பகைவனானாலும், பண்புள்ளவன்; பாரதம் என்றோ ஒரு முறை காணும் மகாவீரன். இவனை வடநாட்டு அலெக்ஸாண்டர் என்று மக்கள் அழைக்கிறார்கள். பல போர்களைக் கண்டவன், வெற்றி கொண்டவன்'' என நிதானமாகவும் கண்ணியம் சொட்டிய குரலிலும் பேசினான்.

''அந்த அலெக்ஸாண்டர் எங்கே?'' என்று தேவகி எரிச்சலுடன் கேட்டாள்.

''காஞ்சிக்கு வெகு அருகில்'' என்றான் விஷ்ணு கோபன்.

''எத்தனை அருகில்''



''இன்னும் இரண்டு நாளில் தெரியும்.''

''எப்படி?''

''வாலிபத் துறவி வந்து சேதி சொல்லுவான்.''

வாலிபத் துறவி வரவில்லை. இரண்டு நாள் கழிந்து நான்கு நாட்கள் ஓடிவிட்டன. துறவியின் சுவடுகூடத் தெரியவில்லை. அவனைப்பற்றிய தகவலும் ஏதும் இல்லை. துறவி அடியோடு மறைந்துவிட்டான்.

## 29. மாதவியின் மனம்

நாட்கள் மேலும் நான்கு ஓடியும் துறவியைப்பற்றி எந்தச் செய்தியும் வராததால், மகாராஜா விஷ்ணுகோபன் கவலை மிகவும் அதிகமாகியதால், அவன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டு வடகிழக்கே உதயகிரிக்குத் தெற்கே இருந்த தனது படைத்தளத்துக்குச் செல்லத் தீர்மானித்து அதைப்பற்றித் தேவகியுடனும் மாதவியுடனும் கலந்து ஆலோசித்தான். அப்படிச் செல்வது விவேகமில்லை என்று தேவகி சொன்னாள். ''உதயகிரியின் சரிவில் குப்த சக்கரவர்த்தியின் பெரும்படை தங்கியிருப்பதால், அது என்றும் பல்லவரின் சிறு படையைத் தாக்கி அழிக்க முடியும். ஆகையால் தீர்க்காலோசனைக்குப் பிறகு தாங்கள் செல்வதுதான் சரியாகும்'' என்று காரணமும் காட்டினாள் தேவகி.

மாதவி பதிலேதும் சொல்லவில்லை. கதிரவனின் காலைக் கிரணங்கள் அவள்மீது சாளரத்தின் மூலம் பாய்ந்து அவள் கன்னத்தைப் பொன்னிறமாக அடித்திருந்தன. அவள் இதழ்கள் இருமுறை அசைந்தன. அவள் ஏதோ சொல்ல முற்பட்டாலும் சொற்கள் வரவில்லை வாயிலிருந்து. அவள் வாயைக் கவனித்த

விஷ்ணுகோபன் தனது கவலையைக் கூட சிறிது மறந்து, "என்ன மாதவி, என்ன சொல்கிறாய் நீ?" என்று கேட்டுப் புன்முறுவல் செய்தான்.

மகாராஜாவின் புன்முறுவலுக்குக் காரணம் புரிந்திருந்தது மாதவிக்கு. துறவியைப்பற்றித் தான் நினைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததாலேயே மகாராஜா தன்னைப்பார்த்து நகைக்கிறார் என்பதையும் மாதவி உணர்ந்து கொண்டாள். 'அவரைப்பற்றி நான் எப்படி நினைக்காதிருக்க முடியும்? இந்தக் காஞ்சியை அவர் தானே காப்பாற்ற முடியும்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டவளானாலும் உண்மையான காரணம் காஞ்சியின் பாதுகாப்பு அல்ல என்பதும் அவளுக்குச் சந்தேகமறப் புரிந்திருந்ததால், "யாரையும் நெருங்கவிடாத என் மனம் இந்தத் துறவியிடம் ஏன் லயித்துவிட்டது?" என்று கேட்டுக் கொண்டாள் தன்னை. "நானும் ஒரு துறவியல்லவா? துறவியாக சமணமதத்துக்காகப் பாடுபடுவதாக மஹாயனரிடம் சத்தியம் செய்து கொடுக்கவில்லையா?" என்றும் தன்னை விசாரித்துக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் மகாராஜா இன்னுமொரு கேள்வியையும் வீசினார். "என்ன குழம்புகிறாய் மாதவி?" என்று.

மாதவி மகாராஜாவை நிமிர்ந்து நோக்கினாள். "குழப்பம் ஏதுமில்லை மகாராஜா" என்று தீர்மானமான குரலில் பதில் கூறினாள்.

மகாராஜா மெல்ல நகைத்தார். "உனக்கு இப்பொழுது என்னைப்பற்றிக் கவலையில்லை. காஞ்சியைப் பற்றியும் கவலையில்லை" என்றும் கூறினார் நகைப்பின் ஊடே.

"வேறு எதைப்பற்றிக் கவலை மகாராஜா?" என்று கேட்டாள் மாதவி, தரையின்மீது கண்களை ஓட்டிய வண்ணம்.



"உன் மனத்தைக் கேட்டுப்பார்" என்றார் மகாராஜா. "என்ன தேவி! சரிதானே?" என்று தேவகியையும் பார்த்துக் கேட்டார்.

"வேறு யாரையும் கேட்க வேண்டியதில்லை. மகாராஜா, என் மனதைக்கூடக் கேட்க வேண்டியதில்லை. துறவியிடம் என்மனம் லயித்துவிட்டதாக நினைக்கிறீர்கள்" என்றாள் மாதவி.

"அது தவறா?" -மகாராஜா கேட்டார் அனுதாபத்துடன்.

"தவறில்லை மகாராஜா. ஆனால் பலனளிக்க முடியாதது" என்றாள் மாதவி.

"ஏன் மாதவி?"

"நான் சமணத் துறவியாவதாக மஹாயனருக்கு முன்னரே வாக்களித்திருக்கிறேன். துறவிக்குத் திருமணம் கிடையாது."

"உண்மை."

"என்ன உண்மை மகாராஜா?"

"துறவிகளுக்குக் காதல் மட்டும்தான் சாத்தியம்."

"மகாராஜா!" -மாதவியின் குரல் சினத்துடன் ஒலித்தது.

"என்னைச் சினந்து பயனில்லை மாதவி! அவன் ஏற்கெனவே துறவி. நீ இனிமேல் துறவியாவதாக மஹாயனரிடம் ஒப்புக் கொண்டிருக்கிறாய். இரு துறவிகளுக்கும் சிறைச்சாலையில் நிகழ்ந்த தவம், சிறைச்சாலை அதிகாரிக்கும் மற்ற எல்லாருக்குமே தெரிந்திருக்கிறது" என்ற மகாராஜா, புன்முறுவல் காட்டினார். "இதில் தவறேதுமில்லை" என்றும் சுட்டிக்காட்டினார்.

"தவறில்லையா?" மாதவி மன்னனை ஏறெடுத்து நோக்கினாள்.

"இல்லை."

''வேறென்னவாம்?''

''வயது முறைப்படி, சாதி முறைப்படி நடக்கும் தர்மம்.''

''நான் என்ன சாதி?''

''வெளிப்படையாக தாசி, உண்மையாக அரச குலத்தவள்.''

''பத்ரவர்மன் என்னை வேசி என்றே அழைக்கிறான்.''

''அவனுக்கும் உன் குலம் தெரியும், இருப்பினும் தன் கை ஓங்காததால், அதற்கு நீயும் அந்தத் துறவியும் இடைஞ்சலாயிருப்பதால், கோபத்தில் வசைபாடுகிறான்'' என்ற மகாராஜா எழுந்து மாதவிக்கு அருகில் வந்து ''குழந்தாய்! உன் மனம் எனக்குத் தெரியும்; தேவகிக்கும் தெரியும். என்னைக் காக்க, இந்தக் காஞ்சியைக் காக்க, நீங்கள் இருவரும் தூஷணைகளை, எத்தனை அவப் பெயர் தாங்கியிருக்கிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும், மாதவி. நலன் என்னைப் பற்றி மட்டுமிருந்தால் நான் இத்தனை தியாகத்துக்கு ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். காஞ்சி பாதுகாக்கப்படுவதற்கு அந்தத் தியாகம் செய்யப்பட்டதால் அதை நான் மறக்க முடியவில்லை'' என்ற விஷ்ணு கோபன், ''எதற்கும் நாளை நான் புறப்படுகிறேன்'' என்று கூறினான்.

''வேண்டாம் மகாராஜா'' -திட்டமாகத் தடுத்தாள் மாதவி.

''போர் வாசலுக்கு வந்துவிட்டது மாதவி. இந்தச் சமயத்திலும் மன்னன் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது ஆண்மைக்கோ க்ஷத்திரிய தர்மத்திற்கோ சரியாகாது மாதவி'' என்ற மன்னன் குரலில் தீர்மானமிருந்தது.

''எதற்கும் அவர் வரட்டும்'' என்ற மாதவியின் குரலிலும் தீர்மானமிருந்தது.

''அவன் வராவிட்டால்?'' என்று கேட்டார் மகாராஜா.



''வராமலிருக்கமாட்டார்.''

''அவன் உயிருடனிருக்காவிட்டால்? இறந்திருந்தால்?''

''இறக்கவில்லை'' -திட்டமாகச் சொன்னாள் மாதவி.

''எப்படித் தெரியும் உனக்கு?'' என்று வினவினார் மகாராஜா.

''என் மனம் சொல்லும்'' என்றாள் மாதவி.

''உன் மனதுக்கு ஜோதிடம் தெரியுமா?'' என்றார் மகாராஜா.

''இதற்கு ஜோதிடம் தேவையில்லை மகாராஜா. உணர்ச்சிகள் சொல்லும் செய்தி இது'' -என்ற மாதவி ''மகாராஜா! பெண்களின் மனத்திற்கு இந்தச் சக்தி எப்பொழுதும் உண்டு'' என்று விளக்கினாள். அவள் குரலில் உணர்ச்சி மண்டிக் கிடந்தது.

''இல்லை மகாராஜா. வாலிபத் துறவியாருக்குச் சில சந்தேகங்கள் இருந்தன. அவை சரியா என்று பார்க்கலாமென்று நினைக்கிறேன்'' என்றாள் மாதவி.

''என்ன சந்தேகங்கள் மாதவி?'' -மகாராஜாவின் குரலில் சற்றுக் குழப்பம் தெரிந்தது.

''இரவில் பார்த்து விடுவோமே'' என்ற மாதவி அந்த அறையை விட்டுப் பக்கத்திலிருந்த தனது அறைக்குச் சென்றாள். இரவுவரை அவள் அந்த அறையைவிட்டு வெளியே வரவில்லை. இரவின் இரண்டாம் ஜாமம் தலை காட்டியதும் அறையைத் திறந்து முக்காடிட்டு வெளியே வந்தாள். மன்னனும் தேவகியின் அறையிலிருந்து வெளியே வந்தான். அவன் உடல் முழுவதையும் ஒரு போர்வை மறைத்திருந்தது. முகத்தின் முக்கால் பாகத்தைக் கூடப் போர்வை மூடியிருந்தது. ''நல்லது மகாராஜா, வாருங்கள்'' என்று மாதவி முன்னே நடந்தாள்.

மகாராஜா பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தார். அவள் எந்த ரகசிய வழியிலும் போகவில்லை. நேராக மாளிகைக் கதவைத் திறந்துகொண்டு வீதியில் சென்றாள். தடுத்த காவலருக்கு ஏதோ சைகை செய்ய, அவர்கள் விலகினர். மகாராஜா இதையெல்லாம் பார்த்து வியந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அவர் பேசாமல் மாதவியைத் தொடர்ந்தார். மாதவி பல தெருக்களைக் கடந்து சிறைச்சாலைக்கு எதிரில் வந்து அங்கிருந்த தோப்புக்குள் மறைந்து நின்றாள்.

சிறைச்சாலையின் பெருங்கதவு திறக்கப்பட்டு பத்துப் பதினைந்து குற்றவாளிகள் வெளியே வந்தார்கள். சற்று எட்ட புரவியிலிருந்த ஒருவன் அவர்கள் தன்னுடன் வரும்படி சைகை செய்து புரவியை மெல்ல நடத்திச் சென்றான். குற்றவாளிகள் அவனைத் தொடர்ந்தார்கள்.

சற்று எட்ட மாதவியும் அவர்களைத் தொடர்ந்தாள், மன்னனுடன். சற்று தூரம் சென்றதும் ஒரு தோப்பில் குற்றவாளிகள் புகுந்தார்கள். அவர்களை அழைத்துச் சென்றவன் அங்கு நின்றான் சில விநாடிகள். அப்பொழுது தோப்புக்குள் மற்றும் நால்வர் விளக்குகளுடனும் ஒரு மூட்டையுடனும் வந்தார்கள். மூட்டை அவிழ்த்துக் கொட்டப்பட்டது. அதிலிருந்த கத்தி கேடயங்களைக் குற்றவாளிகள் எடுத்துக் கொள்ள, புரவி மேலிருந்தவன் அவர்களைப் பார்த்துக் கூறினான்: "உங்கள் கடமை உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று.

"தெரியும்" என்றான் ஒரு குற்றவாளி.

மற்றவர்கள் தெரியும் என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தார்கள். "வடக்கு வாசலுக்குச் செல்லுங்கள்; அங்குள்ள சத்திரத்தில் உங்களுக்கு உணவு காத்திருக்கிறது" என்று புரவியிலிருந்தவன் கூறிவிட்டு, புரவியைத் தட்டிவிட்டுத் தோப்புக்குள் மறைந்தான். ஆயுத மூட்டை கொணர்ந்தவர்களும் மறைந்தார்கள். குற்றவாளிகள் வடக்கு வாசலை நோக்கிச் சென்றார்கள்; அங்குள்ள சத்திரத்துக்குள் நுழைந்தார்கள்.



மாதவியும் மன்னனும் ஏதுமறியாதவர்கள் போல் எட்டவே அவர்களைத் தொடர்ந்தார்கள். சத்திரத்துக்குள் அவர்கள் நுழைந்ததும் கதவு மூடப்பட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் பெருங் கூச்சலும் கொம்மாளமும் உள்ளே கேட்டன.

மகாராஜாவும் மாதவியும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டனர். மாதவி மகாராஜாவைச் சத்திரத்தைச் சுற்றி அழைத்துச் சென்று பின்புறக் கதவை இரு முறை லேசாகத் தட்டினாள். கதவு மெல்லத் திறக்கப் பட்டது. மகாராஜாவை உடன் வரச்சொல்லி மாதவி நுழைந்தாள் பின் வாயிலில். மகாராஜா ஏதும் பேசாமல் தொடர்ந்தார்.

வாயிலைத் திறந்தவன் பின்கட்டிலுள்ள ஒரு சிறு அறைக்குள் அவர்களை அழைத்துச் சென்றான். அந்த அறைக்குள் சென்றதும் மாதவி தனது முக்காட்டை எடுத்தாள்.

"செய்தி ஏதாவது உண்டா?" என்று வாயிலைத் திறந்தவனை நோக்கிக் கேட்டாள்.

"இருக்கிறது; ஆனால் உங்களுக்கல்ல" என்றான் அவன்.

"வேறு யாருக்கு?"

"மகாராஜாவுக்கு."

"அப்படியானால் என்னிடம் கொடுக்கலாம்" என்று மகாராஜா கையை நீட்டினார்; முக்காட்டையும் நீக்கினார்.

கதவைத் திறந்தவன் அதிர்ச்சியடைந்தான். "தாங்களா!" என்றான், அதிர்ச்சி குரலில் ஒலிக்க.

"தாங்கள் இங்கிருப்பது...?"

"தெரியும் ஆபத்து."

"உடனே போய்விடுங்கள் மகாராஜா."

"போவதால் பயனில்லை. கொடு ஓலையை" என்று கேட்டு ஓலையை வாங்கிக் கொண்டார். அதை அந்த மங்கலான விளக்கிலும் பார்த்தார். பார்த்ததும் அவர் முகத்தில் விவரிக்க முடியாத வியப்பு விரிந்தது. "திட்டமாயிருக்கிறது ஓலை. உன் மனம் சொன்னது சரிதான் மாதவி" என்று கூறி மாதவியிடம் ஓலையைக் கொடுத்தார்.

மாதவி ஓலையைப் பிரித்து ஆவலுடன் படித்தாள். பிறகு மன்னனை ஏறிட்டுப் பார்த்தாள். பார்வையில் பொருள் பூர்ணமாகப் பொதிந்து கிடந்தது. பெருமை நிலவிக் கிடந்தது. அதற்குக் காரணம் மகாராஜாவுக்கும் புரிந்திருந்ததால், மாதவி! நீ அதிர்ஷ்டக்காரி" என்ற சொற்கள் அவரிடமிருந்து உதிர்ந்தன. "உன் மனம் மிகுந்த அறிவு வாய்ந்தது. சத்தியத்தைச் சொல்கிறது" என்றும் சொன்னார் மகாராஜா.

## 30. குப்தனும் துறவியும்

சத்திரத்தின் அந்தச் சிறு அறையில் மகாராஜா அந்த ஓலையை ஒரு முறைக்கு இருமுறையாகப் படித்துவிட்டு, மாதவியின் அதிர்ஷ்டத்தைப் பாராட்டிய பின்பு, தீவிர சிந்தனையிலிருந்து இறங்கினார். ஓலையின் விஷயம் மிகத் தெளிவாயிருந்தது.

"மன்னருக்கு அடிமை எழுதிக்கொள்வது: கோதாவரி முகத்துவாரத்துக்கும் கிருஷ்ணாநதி முகத்துவாரத்துக்கும் இடையில் அரசு புரியும் அவமுக்த நாட்டு மன்னர் ராஜாவுக்கும், வேங்கி நாட்டு ஹஸ்திவர்மனுக்கும், பலாக்கா அதிபர் உக்ரேசன்



மகாராஜாவுக்கும், தேவ ராஷ்டிரத்தின் குபேர மன்னருக்கும், குஷ்டப்புரத்தின் தனஞ்செய மகாராஜாவுக்கும் உடனடியாக ஓலைகளை அனுப்பிப் போருக்குச் சித்தமாயிருக்கச் சொல்லுங்கள். இவர்களெல்லாரும் பல்லவர்களின் துணை நாடுகளின் மன்னர்களாதலால், இவர்கள் உதவத் தயாரா யிருப்பர். குப்த சக்கரவர்த்தியைக் கண்டு அஞ்ச வேண்டாமென்று தூது அனுப்புங்கள். தாங்கள் புறப்பட்டு உதயகிரிக்கு அருகிலே உள்ள நமது படைத்தளத்துக்கு இந்த ஓலை கிடைத்தவுடன் வாருங்கள். பயணத்தில் அதிக அவசரத்தைக் காட்டுங்கள். ஆனால் காஞ்சியைப் பற்றிக் கவலை வேண்டாம் என்று என் குருநாதர் மாதவியிடம் சொல்லுங்கள்."

-துறவி

இந்த ஓலையைப் படித்ததால் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்த மன்னர் சத்திரக்காரனை நோக்கி, "நீ செய்து வரும் இந்தச் சேவையை மறக்க மாட்டேன்" என்று உபசார வார்த்தைகள் சொன்னார்.

"எந்தப் பலனையும் உத்தேசித்து இந்தப் பணியில் இறங்கவில்லை மகாராஜா" என்ற சத்திரக்காரன் குரலில் பணிவுமிருந்தது, சுய மதிப்புமிருந்தது.

இதைக் கேட்ட மகாராஜாவின் புருவங்கள் எழுந்தன. கேள்வி கேட்பதுபோல்; அவன் கண்கள் மாதவிமீதும் திரும்பின. சத்திரக்காரனுக்குப் பதில் மாதவியே பேசினாள். "மகாராஜா! காஞ்சியின் தற்கால அவல நிலையால் மக்கள் அவதிப்படுகிறார்கள். குற்றவாளிகள் படையில் சேர்க்கப் பட்டதால் படை பலம் குறைந்தது மட்டும் அல்ல. எந்த வர்த்தக நிலையமும், பொது ஸ்தலங்களும் மானத்துடன் இயங்க முடியவில்லை. பழைய நாகரிக நிலையை மீண்டும் கொண்டு வர, காஞ்சியில்

பிரபலஸ்தர்கள் பலரும் எந்தத் தியாகத்துக்கும் தயாராயிருக்கிறார்கள் அத்தகைய பெருந்தகைகளில் இவர் ஒருவர் நமது துறவியாருக்காக, தங்களுக்காக, உயிரையும் கொடுப்பார் எந்த பலனையும் இவர் எதிர்பார்க்கவில்லை பலனை எதிர்பார்ப்பவர்கள் வேறு இடங்களில் இருககிறார்கள்'' என்று மாதவி விளக்கினாள் மன்னனுக்கு

விஷ்ணுகோபனும் புரிந்ததற்கு அடையாளமாகத் தலையை அசைத்து விட்டுப் புறப்பட்டான். அந்த அறையிலிருந்து முதலில் வந்தவழியே மாதவியின் மாளிகைக்குத் திரும்பிய இருவரும் மாளிகையை அடையும் வரை ஏதும் பேசவிலலை. மாளிகையை அடைந்ததும், மன்னர் சில சந்தேகங்கள் கேட்டார் மாதவியை. ''மாதவி இந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட ஐந்து அரசர்களும் நான் சொல்வதற்கு இணங்குவார்களென்பது என்ன நிச்சயம்?'' என்று முதல் கேள்வியைத் தொடுத்தார்

''சுய நலனை முன்னிட்டு இணங்குவார்களென்று துறவி எதிர்பார்க்கிறார்'' என்றாள் மாதவி.

''துறவியாவது மண்ணாங்கட்டியாவது. என்ன துறவி வேண்டிக்கிடக்கிறது? முகுந்தன் என்று சொல்'' என்ற மகாராஜா, ''சுயநலமிருந்தாலும் எதிரி பலத்தையும் பார்ப்பார்களல்லவா? சமுத்திரகுப்தனின் பெரும்படை, வடக்கில் சகல மன்னர் களையும் வென்று இப்பொழுது தெற்கிலும் பெரும் வெற்றிகளை அடைந்திருக்கிறது. கோவல மன்னன் மந்தராஜா. பிஷ்டிபுர அரசன் மகேந்திரன். மலைக் கோட்டையின் மன்னன் ஸ்வாமிதத்தன், ஏரந்த பள்ளியின் காவலன் தமானன் இவர்களையெல்லாம் முறியடித்துவிட்டு வந்திருக்கிறான் குப்த சக்ரவர்த்தி. அவன் பெரும்படை இப்பொழுது காஞ்சிக்கு வடமேற்கில், வட பெண்ணையாற்றுக்கு மேலே நான்கு காததூரத்திலுள்ள உதயகிரிச்



சரிவில் தங்கியிருக்கிறது. அதை நாம் எதிர்த்து நிர்மூலம் செய்ய முடியுமா? முடியும் என்று முகுந்தன் தனது ஓலையில் குறிப்பிட்டுள்ள மன்னர்கள் கனவு காண்பவர்களா?'' என்றும் கேட்டார்.

மாதவி தனது அழகிய விழிகளால், விஷ்ணுகோபனை ஏறிட்டு நோக்கினாள் ''படைப்பெருக்கம் மட்டும் வெற்றி களைச் சம்பாதித்து விடுவதில்லை'' என்றாள் மெதுவாக

அரசர் மாதவியின் பதிலைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டார். ''அது எனக்குத் தெரியும் மாதவி. இப்பொழுது குப்தசக்கரவர்த்தியிடமிருக்கும் படையில் பாதிப்படையா யிருந்தாலும் இந்தப் பாரதத்தை வெற்றி கொள்ள அவரால் முடியும். இந்தப் பாரதத்தை வெற்றி கொள்ள அவரால் முடியும். இந்தப் பல்லவகாஞ்சி இப்பொழுது எதிர்க்க முற்பட்டிருப்பது படை பலத்தை மட்டுமல்ல. படைகளை எப்படி நடத்தினால் வெற்றி கிடைக்கும் என்பதை உணர்ந்த ஒரு பெரும் போர்த் தந்திரசாலியை; பாரதத்தின் இணையற்ற ஒரு வீரனை எதிர்க்க முற்பட்டிருக்கிறோம். நட்ட நடுப்போரில் கூட அணிவகுப்பை மாற்றும் அவனது திறனையும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்'' என்றும் கூறினான் விஷ்ணுகோபன்.

அதுவரை அவ்விருவரையும் அணுகாமல் எட்ட நின்றிருந்த தேவகி மன்னன் அருகில் வந்தாள். ''பல்லவ சிங்கமா இப்படிப் பேசுகிறது?'' என்று கேட்டாள்.

பல்லவ மன்னன் தேவகியின் மீது கண்களைத் திருப்பினான். ''தேவகி! சிங்கத்தைச் சிங்கம்தான் அறிய முடியும். எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதாலோ குறைத்துப் பேசுவதாலோ நாம் வெற்றியடைந்துவிட முடியாது. எதிரியின் பலாபலன்களை

அறிந்து, முடிவுகளை அறிந்து, முடிவுகளை எடுப்பதுதான் பலன் தரும். சமுத்திரகுப்தனைச் சாதாரண மன்னனாகவோ, படையெடுத்துப் பிற நாடுகளைச் சீரழிக்கும் வெறியனாகவோ நினைக்க வேண்டாம். அவர் படையெடுப்புக்குக் கலாச்சார காரணமும் இருக்கிறது. தனது நிலப்பரப்பை மட்டுமின்றி, பௌத்த சமயத்தையும் விஸ்தரிக்கப் பார்க்கிறார் குப்தசக்ரவர்த்தி'' என்றான் விஷ்ணுகோபன்.

''நாம்?'' என்று கேட்டாள் மாதவி.

''நமது மதத்தை, கலாச்சாரத்தைக் காக்கப் பார்க்கிறோம். நாட்டிற்கு போரால் ஏற்படும் நாசத்தைத் தவிர்க்கப் பார்க்கிறோம். அதனால்தான் குப்தசக்ரவர்த்தியை உதயகிரிக்கு அருகில் சந்திக்கப் படைகளை அனுப்பியிருக்கிறேன். நானும் நாளை பயணமாகிறேன்'' என்று பதில் கூறினான் விஷ்ணுகோபன்.

''நாளைக்கா?'' தேவகியின் கேள்வியில் துன்...

''ஆம்.''

''ஏன் இத்தனை துரிதம்?''

''அழைப்பு வந்திருக்கிறது.''

''யாரிடமிருந்து?''

''எனது ஒற்றர்களிடமிருந்து'' என்று கூறிய... ''தேவகி! சமுத்திரகுப்தன் படையெடுப்பு முடியும் கட்டத்தை நெருங்குகிறது'' என்றும் சொன்னான். பிறகு நான்கு அறைகள் தாண்டியிருந்த தனது அந்தரங்க அறைக்குச் சென்று ஐந்து ஓலைகளை எழுதி எடுத்துக் கொண்டு வந்து மாதவியை நோக்கி, ''மாதவி! இந்த ஓலையை அனுப்ப வேண்டியவர்களுக்கு அனுப்பிவிடு. நாளை நான் பயணமாகிறேன்'' என்றார்.

...மாவட்ட கிளை நூ...
34933
5231983
...சென்னை



அந்த ஓலைகள் யார் யாருக்கு என்பதை உணர்ந்திருந்ததால் மாதவி ஏதும் கேட்கவில்லை மன்னனை. சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினாள்.

அத்துடன் மன்னன் மாதவிக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, ''தேவகி, கதவைத் தாழிடு. சிறிது நேரம் உறங்குகிறேன். விடிய அதிக நேரமில்லை. நாளைக்காலையில் புறப்படவேண்டும் பாசறைக்கு'' என்று சொல்லிவிட்டுப் பஞ்சணைக்குச் சென்று படுத்துக்கொண்டான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் எழுந்து நீராட்டத்தை முடித்துக் கொண்ட மன்னன் மஹாயனரையும், பத்ரவர்மனையும் தனது அறைக்கு வரவழைத்து தனது திட்டங்களைச் சொன்னான். ''குருநாதரே! இன்று நான் பத்ரவர்மனை அழைத்துக்கொண்டு பாசறைக்குச் செல்கிறேன். நான் திரும்பும்வரை இந்த நகரத்தைக் காக்கும் பொறுப்பை தாங்கள் தான் ஏற்கவேண்டும்'' என்று வேண்டினான்.

மஹாயனரின் முகத்தில் திருப்தி மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தது. பிறகு சிறிது கவலையுடன் கேட்டார்: ''மன்னா! இங்குள்ள திறமையான படைத்தலைவன் பத்ரவர்மன் ஒருவன்தான். அவனையும் நீ அழைத்துக் கொண்டு போய்விட்டால் நான் யாரைக்கொண்டு நகரத்தைக் குப்தனிடமிருந்து காக்க முடியும்?'' என்று வினவினார்.

''குப்தன் இங்கு வரப்போவது அத்தனை நிச்சயமா?'' என்று வினவினான் விஷ்ணுகோபன்.

மஹாயனர் சிறிது சங்கடம் துலங்கிய புன்முறுவலைத் தமது வயோதிக உதடுகளில் படரவிட்டுக் கொண்டார்.

''குப்தன் வந்தாலும் வராவிட்டாலும் நாம் சித்தமாயிருக்க வேண்டாமா?'' என்று வினவினார்.

''ஆம் ஆம்! சித்தமாகத்தானிருக்க வேண்டும்'' என்று ஒப்புக்கொண்ட பல்லவ மன்னன், ''குருநாதரே! உங்களுக்கு இஷ்டமான திறமையான படைத்தலைவரை தருகிறேன்'' என்று கூறியதன்றி, தனது மடியிலிருந்து ஒரு ஓலையையும் எடுத்து மஹாயனரிடம் அளித்தான்.

ஓலையை வாங்கிப் படித்த மஹாயனர் முகத்திலும் சிறிது அதிர்ச்சி தெரிந்தது. ''மாதவியா?'' என்றும் கேட்டார் வியப்புடன்.

''ஆம் மஹாயனரே! இப்பொழுது உபதளபதியா யிருக்கிறாள். பத்ரவர்மன் இல்லாதபோது தளபதி பதவியை வகிக்க உங்கள் சீடப் பெண்ணைத் தவிர வேறு யாரை நம்பமுடியும்? வீரபத்ரப்பெருமாள் இருக்கிறான் பெரிய பதவிக்குத் தகுதியற்றவன், நமது படைகளை எனக்கு சமதையாக நடத்தி உதவக் கூடியவன் பத்ரவர்மனைத் தவிர வேறு யாரும் கிடையாது'' என்று கூறிய விஷ்ணுகோபன் மாதவியை நோக்கி, ''மாதவி! குரு நாதர் சொற்படி கேட்டு நட. எதைச் சொன்னாலும் செய். அப்பொழுதுதான் காஞ்சி பாதுகாக்கப் படும். காஞ்சியின் துரோகிகள் பலரிருக்கிறார்கள்'' என்று உத்தரவிட்டான்.

மாதவி தலை வணங்கினாள். விஷ்ணுகோபனுக்கும் மஹாயனருக்கும், ''மகாசக்கரவர்த்தி உத்தரவு! குரு நாதர் உத்தரவு!'' என்று சொல்லவும் செய்தாள்.

இதற்குப் பிறகு அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு விஷ்ணுகோபன் கிளம்பினான் காஞ்சியிலிருந்து. பத்ரவர்மன் அவனைத் தொடர்ந்து சென்றான்.

அதே காலையில் வாலிபத் துறவியும் உதயகிரிச் சாரிலிருந்த சமுத்ரகுப்தனுடன் பேசி நடந்து கொண்டே அவன் படைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். குப்தசக்கரவர்த்தி துறவியின் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டு படைகளின் ஊடே நடந்து சென்றான்.



# 31. சக்கரவர்த்தியின் தீர்க்கதரிசனம்

பெரும் போர்களை வென்றதால் மஹாரதனென்று கொண்டாடப் பட்டவனும், அலெக்ஸாண்டருக்குப் பிறகு போரையும் பிராந்திய வெற்றிகளையுமே குறிக்கோளாகக் கொண்டவனும், அஞ்சாநெஞ்சமும் சாணைபிடித்த கத்தியைப் போன்று கூரிய அறிவும் படைத்தவனான சமுத்ரகுப்தன் முகத்தில், என்றுமில்லாத திருநாளாக அன்று மட்டும் சிறிது வியப்பின் சாயை படர்ந்து கிடந்தது. அதைக் கூட பக்கத்திலிருந்த துறவி பார்க்கக் கூடாதென்ற நோக்கத்தாலோ என்னவோ, அதையும் கணப்பொழுதில் மறைத்துக் கொண்டு உதயகிரிச் சாரலின் மூன்று பக்கங்களிலும், அடுத்திருந்த பெரும் சமவெளியிலும் சமுத்திரம் போல் பரவிக் கிடந்த தனது பெரும் படையை நோக்கினான். சிறிது நேரம் ஓரிடத்தில் நின்ற சக்ரவர்த்தியின் கை தனது தோள்மீது இருந்ததால் அவர் நின்றவுடன் துறவியும் நின்று சக்ரவர்த்தியின் கண்கள் சென்ற திசையையும் அதன் விளைவாக அவர் முகத்தில் விரிந்த பெருமையையும் கவனித்தான். ஆகவே சொன்னான் ''யாரும் பெருமைப்படக்கூடிய படை'' என்று.

சமுத்ரகுப்தன் சற்று தலையைத் திரும்பி நோக்கினான் துறவியை. ''துறவி! நீ சொன்ன கதை இந்தப் படையின் பெருமையைப் போக்கடித்து விடும் போலிருக்கிறது.'' என்றான். அத்துடன் அவன் மீண்டும் நடக்கவும் முற்பட்டதால் துறவியும் நடந்து கொண்டே பேசினான்: ''பிரபு, நான் சொன்னது கதையல்ல உண்மையாக நடந்தது; நடப்பது'' என்று கூறினான்.

''இத்தகைய நிலையில் விஷ்ணுகோபன் என்னுடன் போரிடுவது விவேகமா?'' என்று வினவினான் சமுத்திர குப்தன்.

துறவி சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான் "பிரபு! வீரர்கள் விளைவுகளைக் கவனிப்பதில்லை. கடமையை செய்கிறார்கள். எதிரி அணுகும் போது பணிவது வீரமாகாது" என்று.

சமுத்ரகுப்தன் தனது ஆராய்ச்சி விழிகளைத் துறவி மீது திருப்பினான். "காரிய காரணமின்றிப் படைகளைப் பலி கொடுப்பது தர்மமா?" என்றும் கேட்டான்.

"காரிய காரணமில்லாமல் மகாராஜா எதுவும் செய்ய வில்லை. எதிரி வரும்போது தனது அரசைக் காப்பது அவர் செய்ய வேண்டிய காரியம். அது முடியுமா முடியாதா என்ற விசாரம் அர்த்தமற்றது. தங்கள் படையெடுப்பு காரணத்தைக் கற்பிக்கிறது. செய்ய வேண்டிய காரியத்தைக் கடமை உந்துகிறது" என்று விளக்கினான் துறவி.

சமுத்திர குப்தன் துறவியை அழைத்துக் கொண்டே வெகு தூரம் நடந்து சென்று மலைச்சரிவிலிருந்த ஒரு தோப்புக்கு வந்து தரையில் உட்கார்ந்தான். "சக்கரவர்த்தி மண்ணில் உட்காருகிறீர்கள். அதோ பாறை இருக்கிறது" என்று ஆட்சேபித்த துறவி, பாறையைக் காட்டினான்.

"பாறையிலிருந்துதான் மண் உண்டாகிறது. மண்ணிலிருந்து தான் மற்றவர்களைப் போல மன்னனும் உண்டாகிறான். பாரத மண்ணை நான் நேசிக்கிறேன்" என்ற சக்கரவர்த்தி அருகில் உட்காரும்படி துறவிக்கு ஓர் இடத்தைக் காட்டினான். துறவி அமர்ந்ததும், "மேலே கதையைச் சொல்" என்றான்.

"சொன்னது கதையல்லவென்று முன்னமே சொன்னேன் தங்களுக்கு" என்று துறவி கூறினான்.

"சரி நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகச் சொல்" என்று கேட்ட மன்னன், நன்றாக மல்லாந்து படுத்துக் கொண்டான் புல்தரையில்.



துறவி காஞ்சியில் நடந்ததையெல்லாம் தான் வந்த நாளிலிருந்து படிப்படியாகச் சொன்னான். அனைத்தையும் கேட்ட சமுத்திரகுப்தன் நகைக்கவில்லை. ஒரு கேள்வி மட்டும் கேட்டான். "நீ என் படைத்தலைவனாக விரும்புகிறாயா?" என்று.

இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது துறவிக்கு.

"பிரபு! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் அதிர்ச்சியுடன்.

"என் படைத் தலைவனாகிறாயா? என்று கேட்டேன்."

"என்னை எதற்காக இத்தனை தூரம் நம்புகிறீர்கள்? என்னைச் சந்தித்து இரண்டு நாட்கள் கூட ஆகவில்லை."

"ஒரு மனிதனை எடைபோட நாட்கள் வேண்டியதில்லை, விநாடிகள் போதும்."

"எப்பொழுது வந்தீர்கள் இந்த முடிவுக்கு?"

"இப்பொழுதுதான்."

"ஏன்?"

சமுத்திரகுப்தன் படுத்தபடியே நகைத்தான். "இந்தத் தோப்புக்கு நான் அடிக்கடி வருவது வழக்கம்" என்றான்.

துறவிக்கு விவரம் புரியாததால் விழித்தான். "அதற்கும் என்னைப் படைத்தலைவனாக்குவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினான் குழப்பத்துடன். 'இவர் சக்கரவர்த்தியா யிருப்பதில் விந்தை இல்லை. என்னையே குழம்பச் செய்துவிட்டார்' என்று மனதுக்குள்ளும் சொல்லிக் கொண்டான்.

சமுத்திர குப்தன் தொடர்ந்தான்: "இந்தத் தோப்பு என் அமைதிக்காக ஏற்பட்டது. இங்கு யாரும் வர உத்தரவில்லை" என்று கூறினான்.

''அது புரிகிறது. நாம் வந்ததிலிருந்து ஒரு காவல் கூட இங்கு எட்டிப் பார்க்கவில்லை'' என்றான் துறவி.

''இந்தத் தனித்த இடத்தில் தனித்துப்படுத்திருக்கிறேன், நீ இஷ்டப்பட்டிருந்தால் உன் நாகசர்ப்பத்தை என் மார்பில் பாய்ச்சி இருக்கலாம்.'' என்று சமுத்திர குப்தன் பேச்சைக் கேட்ட துறவி, தேள் கொட்டியது போல் எழுந்திருக்க முயன்றான்.

''உட்கார்'' என்ற சமுத்திர குப்தனின் அதிகாரச் சொல் அவனை மீண்டும் உட்கார வைத்தது. ''சோழன் சென்னியின் மகன் அத்தகைய இழிசெய்கைக்கு உடன்படமாட்டா னென்பது எனக்குத் தெரியும். உன் முகத்திலுள்ள ராஜகளை உன் துறவறத்தை அர்த்தமற்றதாகச் செய்கிறது'' என்றும் கூறினான் சக்கரவர்த்தி.

ஏதோ சொப்பனத்தில் வார்த்தைகளைக் கேட்டது போலிருந்தது துறவிக்கு. சமுத்திரகுப்தன் மேலும் சொன்னான்: ''விஷ்ணுகோபன் படை சிறியது. உன்யோசனைப் படி மற்ற ஐந்து அரசர்களும் சேர்ந்து கொண்டால் போரில் எனக்குச் சிறிது சிரமம் ஏற்படலாம். ஆனால் வெற்றியில் சந்தேகமில்லை. ஒன்று நிச்சயமாகச் சொல்ல முடியும். உன் ஓலைப்படி அந்த ஐந்து மன்னர்களில் யாரும் விஷ்ணுகோபன் உதவிக்கு வர மாட்டார்கள். முகுந்தா! இந்த நாட்டில் ஒவ்வொரு மன்னனும் சுய நலக்காரன். இது ஒரு குடைக்கீழ் என்றுமே இருந்ததில்லை, புராணக்காலம் தவிர. அதனால் தான் மற்றவர்கள் துணிச்சலாக இந்நாட்டின்மேல் படையெடுத்து வருகிறார்கள். அதைத் தடுக்கவும் இந்த நாட்டை ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ் கொண்டு வரவும் போர்களில் இறங்கினேன். என் அனுபவத்தில் எந்த மன்னர்களும் கூட்டுச் சேர்ந்ததில்லை. சேரமாட்டார்கள்.''



சக்கரவர்த்தியின் இந்த விவரத்தைக் கேட்ட துறவி திகைத்தான், பல வினாடிகள். ''சக்கரவர்த்தி!'' என்ற அவன் குரலில் மிக மிஞ்சிய மரியாதையும் பணிவும் நிரம்பி நின்றன.

''என்ன முகுந்தா!'' -சக்கரவர்த்தியின் முகத்தில் மந்தகாசம் விரிந்தது.

''சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்'' என்ற துறவி எழுந்து நின்றான்.

சமுத்திர குப்தன் படுத்த நிலையிலிருந்து எழுந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டிருந்தான். சட்டென்று அவன் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. திடீரென மண்டியிட்ட துறவியின் தலை சமுத்திர குப்தன் தாள்களில் இருந்தது.

சமுத்திர குப்தன் அந்தத் தலையின் குழல்களைத் தடவிக் கொடுத்தான். ''எழுந்திரு முகுந்தா! இப்பொழுது சொல். நான் காஞ்சியை வெற்றிக் கொள்ள முடியுமா? முடியாதா?'' என்று கேட்டான்.

சக்கவர்த்தியின் பாதங்களிலிருந்து எழுந்த முகுந்தன், ''முடியும். தங்களால் முடியாதது எதுவுமில்லை'' என்று பயபக்தியுடன் கூறினான்.

''நான் வடநாட்டவன்.''

''தாங்கள் பாரத நாட்டவர், சக்கரவர்த்தி!''

''எதனால் அப்படி சொல்கிறாய்?''

''காரணம் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''விஷ்ணுகோபன் வீரத்தை உணர்ந்திருக்கிறீர்கள்.''

''ஆம், பாரதத்தின் மகா வீரர்களில் விஷ்ணுகோபனும் ஒருவன்.''

''அப்படியிருந்தும் அவரிடம் போரிட மறுக்கிறீர்கள்.''

''யார் சொன்னது அப்படி?''

''இல்லாவிட்டால் தாங்கள் என்னைத் தங்கள் படையின் தலைவனாகும்படி கேட்பீர்களா?''

''விளக்கிச் சொல் துறவி! துறவிகள் சகலத்தையும் அகக்கண் கொண்டு பார்க்கிறார்களல்லவா?'' என்ற சமுத்திர குப்தன் புன்முறுவல் கொண்டான்.

''என் உள்ளத்திலுள்ளதைச் சொல்லச் சொல்கிறீர்கள். வேறு வழியில்லாததால் சொல்கிறேன்'' என்று தொடங்கிய துறவி,

''பிரபு! என் அகக்கண்ணில் பல காட்சிகள் தோன்றுகின்றன. எதிரியான விஷ்ணுகோபனை எதிர்த்து அழிக்க இஷ்டமில்லாத ஒரு பேரரசன் தோன்றுகிறான். காஞ்சி கையில் விழத் தயாராயிருப்பதை அறிந்ததும், அதை ஏற்க மறுக்கும் ஒரு மஹாவீரன் தோன்றுகிறான். தவிர, பெண்களை எதிர்க்க இஷ்டமில்லாத ஒரு பெருந்தகை தோன்றுகிறான்...'' என்று சொல்லிக் கொண்டு போனவனைச் சமுத்திரகுப்தன் தடுக்க முயல, தனது கையின் சைகையால் சக்கரவர்த்தியை இடைப்புக வேண்டா மென்று தடுத்த துறவி மேலும் சொன்னான். ''சக்கரவர்த்தி, என் ஊகம் சரியானால் தன்மீது குறுவாள் வீசிக் கொல்ல முயன்ற பலபத்ரனை உடன் அழைத்துக் கொண்டு வருவார் விஷ்ணுகோப மகாராஜா. அப்படி வரும்போது மாதவியைத் தளபதியாக நியமித்து விட்டு வருவார், காஞ்சியைக் காக்க தான் அழிந்தாலும் காஞ்சி அழியாது. அதன் கலை



அழியாது. அதில் துலங்கும் நான்கு மதங்கள் அழியா என்பது மகாராஜாவுக்குத் தெரியும். மாதவி படைகளை அழைத்துக் கொண்டு வந்தால், மஹாவீரரான தாங்கள் வாளை உறையிலிருந்து எடுக்க மாட்டீர்களென்பது காஞ்சி மகாராஜாவுக்கு மிக நன்றாகத் தெரியும்.''

இதைக் கேட்ட சமுத்திரகுப்தன் விழிகளில் ஒரு புத்தொளி பிறந்து மறைந்தது. ''நல்லது நல்லது'' என்ற சொற்கள் சக்கரவர்த்தியின் இதழ்களிலிருந்து உதிர்ந்தன.

''என்ன சக்கரவர்த்தி!'' என்றான் துறவி.

''இந்தப் போருக்கு முடிவுகட்டும் திட்டம்'' என்றான் சமுத்திரகுப்தன்.

''திட்டத்தை நான் அறியலாமா?'' என்று துறவி வினவினான்.

''துறவி இப்படி அருகில் வா'' என்று அழைத்தான் சமுத்திரகுப்தன். துறவி அருகில் வந்ததும், அவன் காதில் ஏதோ முணுமுணுத்தான் பல விநாடிகள். ''இது போராபத்து!'' என்று கூவினான் துறவி, உணர்ச்சி நிரம்பிய குரலில்.

''ஆபத்தைக் கண்டு அஞ்சுபவனல்லன் இந்த குப்தன்'' என்று கூறிக்கொண்டு எழுந்திருந்த சக்கரவர்த்தி, மீண்டும் துறவியின் தோளின் மீது கையைப் போட்டுக் கொண்டு நடக்கலானான். சக்கரவர்த்தியின் தீர்க்கதரிசனத்தில் மனத்தைப் பறிகொடுத்த துறவி, மௌனமாகவே அவனுடன் நடந்தான், எண்ணங்கள் பல உள்ளத்தை உலுக்க.

# 32. மந்திராலோசனை

எங்கிருந்தோ வந்து திடீரெனச் சக்கரவர்த்தியின் பாசறையில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கியதன்றி, அவரது அந்தரங்க நண்பனாகவும் மாறிவிட்ட வாலிபத் துறவியைக் கண்ட குப்தராஜ்யப் படைத்தலைவர்கள் வியந்து விட்டார்களா? பயந்து விட்டார்களா? என்ற இரண்டுங்கெட்டான் நிலையில், சக்கரவர்த்தி தங்களைத் திடீரென ஆலோசனைக்கழைக்க அந்த ஆலோசனையில் பூனைபோல் அமர்ந்திருந்த துறவி அடிக்கடி தலையை ஆட்டிச் சக்கரவர்த்தி சொன்னதை ஆமோதித்ததும் பெரும் எரிச்சலாயிருந்தது. பல போர்களில் தங்கள் பலத்தையும் ராஜபக்தியையும் நிருபித்திருந்த படைத் தலைவர்களுக்கு.

தோப்பில் துறவியும் சக்கரவர்த்தியும் நுழைந்து நீண்ட நேரம் வெளிவராதிருந்ததைக் கவனித்திருந்த படைத்தலைவர்களுக்கு மறுநாள் நடந்த மந்திராலோசனை பெரும் குழப்பத்தை அளித்தது. தவிர, துறவி குப்தசக்கரவர்த்திக்கு ஏதோ சொக்குப் பொடி போட்டு விட்டானென்ற தீர்மானத்தை அளித்தது. இத்தனைக்கும் சக்கரவர்த்தி சர்வ சாதாரணமாகவே மந்திராலோசனையைத் தொடங்கினான். ''பல்லவ காஞ்சியை வெற்றி கொண்டுவிட்டதும் நமது பாரத வெற்றி பூர்த்தியாகிறது'' என்று பூர்வ பீடிகை போட்ட சக்கரவர்த்தி, ''அதை முதலில் கஷ்டமென்று எண்ணினேன். அப்படி ஒன்றும் கஷ்டமல்ல என்பது இப்போது தெரிகிறது'' என்று சொல்லித் துறவி மீது கண்ணைத் திருப்பினான். துறவி தலையை ஆட்டினான், ஆமோதிப்பதற்கு அறிகுறியாக.

படைத்தலைவர்களில் சிறிது முதிர்ந்தவராகக் காணப்பட்டவரும், இருப்பினும் உடற்கட்டும் உறுதியும் தளராத வருமான ஒருவர் எழுந்திருந்தார் ஆசனத்தைவிட்டு. ''இத்தனை



நாள் கடினமாயிருந்தது இப்பொழுது எப்படிச் சுலபமாயிற்று?'' என்று வினவினார்.

சக்கரவர்த்தி இதைக் கேட்டதும் பெரியவரைப் பார்த்தார், அன்பு ததும்பும் கண்களுடன். ''முன்பு தெரியாத பல உண்மைகள் இப்பொழுது தெரிந்திருக்கின்றன'' என்ற சக்கரவர்த்தி, துறவியையும் நோக்கினார், துறவி திரும்பவும் தலையை ஆட்டினான், ஆமோதிப்பதற்கு அறிகுறியாக.

''அந்த உண்மைகளைக் கொண்டுவந்தவர் இந்தத் துறவி போலிருக்கிறது'' என்று சற்று உஷ்ணத்துடன் கேட்டான் நடுத்தர வயதுள்ள இன்னொரு படைத்தலைவன்.

சற்று துடிப்புள்ள ஒரு வாலிபப் படைத்தலைவன் எழுந்திருந்து, ''இந்தத் துறவியை எத்தனை தூரம் நம்பலாம்?'' என்று வினவினான்.

சக்கரவர்த்தியின் அருட் கண்கள் அந்த வாலிபனின் துடிப்பான பேச்சை ரசித்தன. அந்த ரசனையுடன் வெளி வந்தது பதிலும் ''என்னை நம்புமளவுக்கு இவரை நம்பலாம்'' என்ற மன்னன் சொல் மேற்கொண்டு ஆட்சேபணைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

சமுத்திர குப்தன் தொடர்ந்தான்: ''இப்பொழுது நமக்குப் புலனாகிறது, காஞ்சி நாம் நினைத்தது போல் அத்தனை பலமுள்ளது அல்ல என்பது. தவிர, காஞ்சிக்குள் நம்மை வரவேற்க நமது நண்பர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது'' என்று சொல்லித் துறவியைப் பார்த்தார். துறவி இருமுறை தலையாட்டினான், சக்கரவர்த்தி சொன்னதை ஆமோதித்து.

சக்கரவர்த்தி மேலும் சொன்னான்: ''விஷ்ணுகோபன் இரு தாசிகளுடன் வசிக்கிறான். இதனால் மக்கள் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். அதனால் தான் காஞ்சியில் இருந்து அதைக் காப்பாற்றாமல் சமவெளிப் போருக்கு வந்திருக்கிறான். தனக்கு உதவ மற்றும் ஐந்து மன்னர்களையும் அழைத்திருக்கிறான்.''

இதைச் சக்கரவர்த்தி சொல்லுகையில் துறவி திரும்பத் திரும்பப் பெருமாள் மாடு மாதிரித் தலையை ஆட்டினான். அதனால் மற்ற படைத்தலைவர்கள் எரிச்சல் கொண்டதைக் கவனித்த சமுத்திர குப்தன் புன்முறுவல் கொண்டான், பிறகு முதிய படைத்தலைவரை நோக்கி, ''மற்ற ஐந்து மன்னர்கள் படை இன்னும் ஒருவார காலத்திற்குள் பல்லவர் படையுடன் சேரலாம்'' என்றான்.

''அப்படியானால் பல்லவனை உடனே தாக்கினால் என்ன?'' என்று கேட்டார் பெரிய படைத் தலைவர்.

''சில சங்கடங்கள் இருக்கின்றன'' என்றார் சக்கரவர்த்தி.

இதுவரை தலையாட்டிப் பொம்மையாயிருந்த துறவி ''விஷ்ணுகோபனை வைத்துக்கொண்டு நாம் காஞ்சியில் நுழைந்தால் மற்ற ஐந்து அரசர்களின் படைகளால் காஞ்சி சூழப்படும். அந்த முற்றுகை ஏற்பட்டால், குப்த ராஜ்யப் படை காஞ்சியிலிருந்து நகர நாளாகும். அடுத்து வரப்போவது மழைக்காலம்'' என்றான்.

துறவி போர் ஆலோசனையில் கலந்து கொள்வது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றாலும், துறவி மேலும் சொன்னான்: ''அப்படியில்லாமல் ஐந்து அரசர்களையும் நாம் இங்கே சந்தித்தாலும் வெற்றி பெறலாம். ஆனால் நமது படை அனாவசியமான சேதத்துக்கு உள்ளாகும்.''



முதிய படைத் தலைவரின் எரிச்சல் அதிகமாகியது. ''உனக்கும் இந்தப் படைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று விசாரித்தார்.

''சக்கரவர்த்திக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? சக்கரவர்த்தி என்னை ஏன் நேசிக்கிறார்?'' என்று துறவி வினவினான்.

இந்தப் பதில் முதியவர் வாயையும் அடைத்துவிடவே, சமுத்திர குப்தன் தனது திட்டத்தை விவரிக்க ஆரம்பித்தார்: ''காஞ்சி இங்கிருந்து ஐந்து நாள் பயணத்திலிருக்கிறது. நான் இங்கிருந்து எதிரிகள் அறியாமல் நமது படையின் சிறுபகுதியொன்றை அழைத்துக்கொண்டு, மேற்குப் புறமாகச் சென்று, பிறகு தென்புறத்தில் இறங்கி, காஞ்சியை அடைவேன். இங்குள்ள பெரும் படையைக் காணும் எதிரிகள், நான் இங்கிருப்பதாக நினைப்பார்கள். ஆகையால் போர் விளையாது. இங்கு அவர்கள் போரைப் பற்றி நினைக்குமுன்பு நான் காஞ்சியைக் கைப்பற்றி விடுவேன். காஞ்சிக்குள்ளிருக்கும் நமது நண்பர்கள் சித்தமாயிருக்கிறார்கள் நம்மை வரவேற்க'' என்று கூறினார் சமுத்திர குப்தன்.

சக்கரவர்த்தியின் போர் முறையைக் கேட்ட மற்ற படைத் தலைவர்கள் ஸ்தம்பித்தனர். ''இப்படித் துரோகிகளைக் கொண்டு சக்கரவர்த்தி நாடுகளைப் பிடித்ததில்லையே. இப்பொழுது முறை மாறுகிறதே'' என்று முதியவர் கேட்டார்.

''காலத்துக்கும் இடத்துக்கும் தகுந்தபடி போர் முறைகளை, போர் தந்திரங்களைக் கையாள சாஸ்திரம் அனுமதிக்கிறது'' என்று சமுத்திரகுப்தன் கூறியதும் துறவியின் தலை பெரிதும் ஆடியது.

முதிய படைத் தலைவர் பொறுமை அடியோடு குலைந்து போகவே, ''சக்கரவர்த்தி! இந்தத் துறவி தலையாட்டம் நிற்காவிட்டால்...'' என்று சீறினார்.

''தலையைக் கொய்துவிடுவீர்'' என்று வாசகத்தை முடித்த துறவி லேசாக நகைத்தான்.

முதியவர் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்துவிட்டார் சமுத்திரகுப்தன் அவரை மன்னித்துவிடுங்கள்'' என்று துறவிக் காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

முதியவர் மிகுந்த வெறுப்புடன் தலையை ஆட்டினார் ''பெரியவரே! என் வியாதி உங்களையும் பிடித்துவிட்டது'' என்றான் துறவி.

''என்ன வியாதி?'' என்று கேட்டார் முதியவர்.

''மன்னர் சொல்வதற்குத் தலையாட்டும் வியாதி'' என்றான் துறவி. முதியவர் ஏதோ சொல்ல வாயைத் திறக்குமுன்பாக, ''கவலை வேண்டாம். இன்றே நான் இந்த இடத்தை விட்டுச் செல்கிறேன்'' என்றும் சொன்னான்.

''ஏன்?'' -இளம் படைத்தலைவன் கேட்டான், அவனுடைய இயற்கையான துடிப்புடன்.

''காஞ்சியில் சக்கரவர்த்தியை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்ய'' என்று பதில் சொன்னான் துறவி.

இளம் படைத் தலைவன் பெரும் துணிவையும் துடிப்பையும் காட்டினான். ''பல்லவனைக் காட்டிக் கொடுக்கும் துரோகி நீதானா?'' என்று.

இதைக் கேட்டதும் துறவி சினத்தின் வசப்படுவான் என்றோ, கொந்தளித்து எழுவானென்றோ நினைத்திருந்ததால் ஏமாந்து போனார்கள். துறவி மகிழ்ச்சியுடன் சொன்னான்: ''துரோகி என்று என்னைச் சொல்வதற்கில்லை'' என்று.

''ஏன் சொல்வதற்கில்லை?'' இளம் படைத் தலைவன் மீண்டும் கேள்வியை வீசினான் சினத்துடன்.



துறவி அந்த வாலிபன் மீது கண்களைச் செலுத்தினான். அந்தக் கண்களில் நகைப்பும் விஷமமும் தாண்டவமாடின. ''சக்கரவர்த்தி என்னை நண்பனாக ஏற்றுக் கொண்டுவிட்டார், ஆகையால் அவரது விரோதிகள் எனக்கும் விரோதிகள். விரோதிகளை எதிர்ப்பது, பணியவைப்பது துரோகச் செயலாகாது. அது எனது குப்த பக்தியைக் காட்டும்'' என்ற துறவியின் சொற்களிலும் விஷமம் ஊடுருவி நின்றது.

அத்துடன் சக்கரவர்த்தி மந்திராலோசனையை முடித்தார். ''பெரியவரே! என்னுடன் ஆயிரம் வீரர்கள் கொண்ட சிறுபடை வரட்டும். அப்போதுதான் நான்முன்னே செல்வது தெரியாது. நான் இங்கிருந்து புறப்பட்ட மூன்றாவது நாள் நான் சொல்லும் மார்க்கத்தில் நமது பெரும்படை தொடரட்டும். துறவி! நீ இன்று புறப்பட்டு நம் திட்டப்படி உன் பணியைக் கவனி. காஞ்சி வாயிலில் நாம் சந்திப்போம்'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு அத்துடன் மந்திராலோசனை கலைந்து விட்டதைக் குறிப்பிட மௌனம் சாதித்தார். படைத் தலைவர்கள் ஒவ்வொருவராகப் பாசறையிலிருந்து வெளியேறினார்கள்.

அவர்கள் சென்ற பின்பு சமுத்திரகுப்தன் எழுந்திருந்தார். துறவியின் தோள்மீது கையை வைத்தார் ''துறவி! புறப்படு! நாம்...'' என்று கூறி உற்று நோக்கினார்.

''சத்திரத்தில் சந்திப்போம்'' என்று கூறினான் துறவி.

குப்தன் தலையை அசைத்தான். இன்பப் புன்முறுவலும் செய்தார்.

# 33. காஞ்சியின் நிலை

பல நாட்களுக்குப் பிறகு சூரிய அஸ்தமன வேளையில் காஞ்சியின வடக்குப்புற வாயிலுக்கு வந்த வாலிபத் துறவிக்கு வாயிற் கதவுகள் தாமாகவே திறந்தாலும், அவன் உள்ளே நுழையாமல புரவியில் அமர்ந்த வண்ணமே பக்கத்திலிருந்த சுவர்களை ஏறிட்டு நோக்கினான். 'இம்முறை காவலரைக் கெஞ்ச வேண்டியதில்லை. கயிறு பிடித்து மேலே ஏற வேண்டியதில்லை. எத்தனை சீக்கிரத்தில மனிதன் அந்தஸ்து மாறுகிறது?' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, ஆதிநாள் அனுபவத்தை எண்ணிப் பார்த்தான் முகுந்தன். அந்த எண்ணத்துடன் தனது முகவாய்க் கட்டை தாடியையும் தடவிப் பார்த்து, ''இது நன்றாகவே வளர்ந்திருக்கிறது. படிக்க வந்ததற்கு இது தான் பலன்'' என்று கூறிக்கொண்டு லேசாக நகைக்கவும் செய்தான். பிறகு புரவியை தட்டிவிட்டு நகருக்குள் நுழைந்தான்.

நகரில் காவல ஏற்பாடுகள் பலமாயிருப்பதைத் தெருக்களில் சென்றபோதே கவனித்தான் துறவி. எங்கும் ஆயுத பாணிகளான வீரர்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். குடிகாரர்களோ, குற்றவாளிகளோ அவன் கண்ணில் மருந்துக்குக் கூடப் படவில்லை. இதெல்லாம் யார் ஏற்பாடாயிருக்க முடியும் என்பது அவனுக்குத் தெரிந்தேயிருந்ததால் அதைப்பற்றி அதிக சிந்தனை செய்யாமல் மாதவியின் மாளிகையை நோக்கி புரவியைச் செலுத்தினான். மாதவி அங்கில்லையென்பதை அறிந்ததும் வேகவதியின் கரையை நாடிச் சென்றான்.

அங்கு ஒரு பாறையில் மாதவி உட்கார்ந்திருந்தாள். கையில் ஒரு விகசித்த தாமரை மலரை ஏந்தி, இரவு நெருங்கிவிட்டதால் அந்த தாமரை தனது இதழ்களை மூட முயன்றும், மூடவிடாமல் தனது விரல்களால் அதைப் பிரித்தே வைத்திருந்த மாதவி, ''எனக்கு



உறக்கம் வரவில்லை. நீ மட்டும் கண்ணை மூடுவானேன்? விழித்திரு'' என்று அம்மலரை அதட்டினாள். அவள் பின்னால் ஒரு புரவி சித்தமாயிருந்தது, பயணத்துக்குச் சேணமிட்டு.

மாதவி உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சற்று எட்டவே புரவியிலிருந்து இறங்கிய துறவி, மெல்ல அவளை அணுகினானென்றாலும் அவள் முகத்தைத் தூக்கவில்லை. சோகம் அவளை ஆட்கொண்டிருப்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்ட வாலிபத் துறவி ஓசைப்படாமல் பூனைபோல நடந்து அவளுக்குப் பக்கத்தில் நின்றான். ''மாதவி!'' என்று மெல்ல அழைக்கவும் செய்தான்.

அந்தக் குரலைக் கேட்டதும் மாதவி துணுக்குற்று முகத்தை நிமிர்த்தினாள். எதிரே யாரும் இல்லாததால், ''வெறும் பிரமை'' என்று சற்று பயமாகவே சொல்லிக் கொண்டு தலையை மீண்டும் குனிய முற்பட்டாள். குனிய முடியவில்லை. அவள் தலையை இரண்டு முரட்டுக் கைகள் பற்றி நின்றன. அவை அவள் இரு கன்னங்களிலும் இறங்கிக் கழுத்தையும் தடவின. ''இது பிரமையல்ல'' என்ற சொற்களும் தொடர்ந்தன பின்புறமிருந்து. இதனால் வேகமாக எழுந்து திரும்பிய மாதவி மறுகணம் துறவியின் அணைப்பிலிருந்தாள்.

அந்த அணைப்பின் பலம், அதனால் ஏற்பட்ட இம்சை, இரண்டும் அமுதத்தை அள்ளித் தெளித்தன அவள் உடல் பூராவும். போதாக்குறைக்கு அணைத்த கைகள் அகன்று அவள் உடல் முழுவதையும் ஆராயவும் தொடங்கியதால் மாதவி சொர்க்க நிலைக்குச் சென்றாள். ''இப்பொழுது புரிகிறது எனக்கு'' என்று சொன்னாள், துறவியின் முகம் அவள் கழுத்தில் புதைந்தபோது.

''என்ன புரிகிறது?'' -துறவி கேள்வியை அவள் கழுத்துக்கே வீசினான் உதடுகளை எடுக்காமலே.

''நரகத்தின் பக்கத்தில்தான் சொர்க்கம் இருக்கிறது என்பது'' என்று முணுமுணுத்தாள். கழுத்தையும் நன்றாகத் திருப்பிக் கொடுத்தாள், அவன் உதடுகளுக்கு உதவியாக.

கழுத்துப் பிரசாதத்தை அமுது செய்து கொண்டிருந்த துறவியார் கேட்டார், ''அது எப்படித் தெரியும் உனக்கு'' என்று.

''சற்றுமுன் நரக வேதனையிலிருந்தேன்.''

''காரணம்?''

''எங்கிருந்தோ வந்த போலிசந்நியாசி என்னைத் தொட்டு ஓடிவிட்டான்.''

''அப்படியா!''

''ஆம், அதனால் நரகத்தில் வாசம் செய்தேன்.''

''அடுத்து?''

''அவன் பக்கத்திலிருப்பது தெரியாது. திடீரென்று சொர்க்கம் வந்தது'' என்ற மாதவி, ''ஆமா, சொர்க்கம் பின்னால்தான் இருக்குமா?'' என்று கேட்டாள்.

''சுகம் எப்பொழுதும் நம் அருகில் தானிருக்கிறது, நாம் தான் அதைத் திரும்பிப் பார்ப்பதில்லை'' என்று கூறிய துறவி, மாதவியைத் தழுவியவண்ணம் நடக்க முற்பட்டு, ''வா, உன் மாளிகைக்குச் செல்வோம்'' என்றான்.

''என்ன அவசரம்? இங்குதான் நிம்மதியாயிருக்கிறதே'' என்றாள் மாதவி.

''காஞ்சியில் நிம்மதி எந்த இடத்திலும் இல்லை. எதிரி படையெடுப்பை எதிர்பார்க்கும் நகரத்துக்கு நிம்மதி ஏது?'' என்று வினவிய துறவி, அவளை அழைத்துக் கொண்டு மாளிகைக்கு



வந்து சேர்ந்தான். அங்கு மாதவியின் அறைக்குள் சென்று பயணக் களைப்பால் அவள் பஞ்சணையில் படுத்துக் கொண்டான். அவன் சோர்வு அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்ததால் மீண்டும் சோகத்தின் உருவாகிவிட்ட மாதவி, ''உணவு அருந்திய பிறகு படுக்கலாம்'' என்றாள்.

''வேண்டாம் உணவு'' என்றான் துறவி.

''ஏன்?''

''இன்று ஏகாதசி. எனக்கு உபவாசம்.''

''பட்டினிதானா இன்று?''

''இல்லை.''

''என்னதான் சாப்பிடுவீர்கள்?''

''பழம், பால், இதுதான் துறவிகளின் ஆகாரம். இவற்றால்தான் துறவிகள் சாதாரண மனிதர்களைவிடப் புஷ்டியாயிருக்கிறார்கள்.''

மாதவி நகைத்தாள், துறவியை நோக்கி. ''சரி கொண்டு வருகிறேன்.'' என்று திரும்பினாள் வெளியே செல்ல.

''நில் அப்படியே'' என்ற துறவியின் சொல் அவளை நிற்க வைத்தது.

தலையை மட்டும் திருப்பிப் பார்த்தாள் மாதவி. பஞ்சணையில் மல்லாந்து கிடந்த துறவியைக் கேள்வி ஏதும் கேட்கவில்லை. உற்று மட்டும் பார்த்தாள் சில விநாடிகள்.

''நன்றாகத் திரும்பு'' துறவியின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

திரும்பிய மாதவி புன்முறுவல் காட்டி, ''நான் போகாமல் பழம், பால் எப்படிக் கொண்டு வரமுடியும்?'' என்று வினவினாள்.

''கொண்டு வரவேண்டிய அவசியமில்லை இப்படி வா'' என்றான் துறவி.

திரும்பக் கட்டிலை நோக்கி நடந்த மாதவியை கட்டிலில் உட்காரும்படி கூறிய துறவி அவளுக்கு இடம் விட்டு நகர்ந்து படுத்தான். ஏதும் பேசாமல் மாதவி உட்கார்ந்தாள் பஞ்சணையில். துறவியின் கைகள் அவள் இடையைச் சுற்றின. அவன் மார்பு அவள் பின்னெழிலின் புடைப்புடன் இணைந்தது.

''கதவு திறந்திருக்கிறது'' என்று மெல்லத் துறவிக்கு மட்டும் கேட்கும்படி பேசிய மாதவி மெல்ல எழுந்திருக்க முயன்றாள், கதவைமூட.

''கதவை மூடவேண்டாம். நான் சொல்கிற செய்தியைக் காதில் வாங்கிக்கொள். நான் எதிர்பாராத பதிலை மட்டும் சொல்'' என்ற துறவி, ''மாதவி! காஞ்சி எந்த நேரத்திலும் தாக்கப்படலாம். ஆகையால் நீ தயாராயிருக்க வேண்டும்'' என்றான்.

''நானா?'' என்று வியப்புடன் கேட்டாள் மாதவி.

''ஆம், உன்னைத்தானே மன்னர் தளபதியாக நியமித்திருக்கிறார்?'' என்று கேள்வியை வீசினான் துறவி.

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''மன்னர் சொன்னார்.''

''எங்கு?''

''பாசறையில்.''

''என்று?''

''இரண்டு நாள்களுக்கு முன்பு. நீ சென்று மாதவியை எச்சரிக்கை செய். சமுத்திர குப்தன் வேறு வழியில் காஞ்சியை



அணுகப்போவதாகக் கேள்வி என்று சொன்னார். அதனால் தான் வந்தேன் இங்கு.''

மாதவி சிந்தித்தாள். ''அப்படியானால் காஞ்சியின் ஆபத்து வலுக்கிறது. வேகமாகப் போர் அணுகுகிறது'' என்றாள்.

''ஆம்'' என்று துறவி குதூகலித்தான்.

''இதில் மகிழ்ச்சியென்ன வேண்டிக் கிடக்கிறது?'' என்று மாதவி கேட்டாள்.

''சமுத்திர குப்தனுக்கு இங்கு பெருத்த தடுமாற்றம் காத்திருக்கிறது'' என்றான் துறவி.

''என்ன ஏமாற்றம்?'' என்று கேட்டாள் மாதவி.

''இங்கு போரை எதிர்பார்த்து வருகிறான் சமுத்திர குப்தன். ஆனால் இங்கு போர் நடக்காது'' என்று துறவி மீண்டும் குதூகலித்தான்.

''ஏன் நடக்காது? பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலமாகச் செய்திருக்கிறேன். அவ்வளவு சுலபமாகக் காஞ்சியில் நுழைய முடியாது'' என்றாள் மாதவி.

''முடியும்'' என்றான் துறவி திட்டமாக.

''எப்படி முடியும்?'' என்று மாதவி வினாவினாள்.

''குப்த சக்கரவர்த்திக்குக் கதவுகளைத் திறக்கக் காஞ்சியில் துரோகிகள் இருக்கிறார்கள்'' என்றான் துறவி.

மாதவி சினம் கொண்டு எழுந்தாள். ''இங்கு யாரும் துரோகிகள் கிடையாது.'' என்றாள் மாதவி.

''இருக்கிறான் ஒருவன்.''

''யாரவன்?''

''நான்தான்.''

''மாதவி திகைத்து நின்றாள் ''நீங்களா!'' என்றும் வினவினாள்.

''ஆம் சக்கரவர்த்தி எனது நண்பர்.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''உளறவில்லை. உண்மை, நான்கு நாள்களில் தெரியும்'' என்ற துறவி ஏதோ சைகை காட்ட அவள் குனிந்தாள் அவனை நோக்கி.

''உன் காவலரை அழைத்து என்னை சிறையில் தள்ளி விடு'' என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படி பேசினான் துறவி.

மாதவியின் கண்கள் கேள்வியைத் தொடுத்தன. ''கேட்காதே! சொன்னபடி செய்'' என்றான் துறவி.

அடுத்த விநாடி மாதவி இரு கைகளையும் தட்டினாள்; வந்த காவலரை நோக்கி, ''இந்தத் துரோகியைச் சிறையில் தள்ளிவிடுங்கள்'' என்றாள்.

காவலரால் பலமாக இழுத்துச் செல்லப்பட்டான் துறவி. போகும் முன்பு, ''நாளை சிறையில் சந்திப்போம்'' என்றான் நகைத்து.

''நாளைக்கு உன்னைச் சந்திக்க மாட்டேன்; தூக்கில் போட்டு விடுகிறேன்'' என்று சீறிய மாதவி, ''சரி இவனைக் கொண்டு செல்லுங்கள்?'' என்று உத்தரவிட்டாள் காவலருக்கு.

துறவியார் காவலாளிக்கு அதிகச் சிரமம் வைக்காமல் நடந்து சென்றார் சிறையை அடைந்ததும் அங்கிருந்த கட்டிலில் நிம்மதியாகப் படுத்து உறங்கினார்.

நள்ளிரவு வந்தது முக்காடிட்ட உருவம் ஒன்று சிறைக் கதவைத் திறந்து கொண்டு அவனிருந்த சிறை அறையில் நுழைந்தது.



மெல்லக் கட்டிலை அணுகிக் குனிந்து ''சமுத்திரகுப்தன் எங்கிருக்கிறான்?'' என்று கேட்டது.

''வடகிழக்குச் சத்திரத்தில்'' என்றான் துறவி ரகசியமாக.

''போதிய படை வருகிறதா?''

''வருகிறது.''

''சரி; நீ போய் அவனை அழைத்து வா.''

''காஞ்சியின் பாதுகாப்பு?''

''மேல்பூச்சு. நகரம் அவர் கைகளில் விழத் தயாராயிருக்கிறது'' என்று சொன்ன அந்த முக்காடிட்ட உருவம் ''உன் புரவி எதிர்க்காட்டில் இருக்கிறது'' என்று கூறிவிட்டுச் சென்றது.

அந்த உருவம் சென்றதும் மெல்ல நகைத்தான் துறவி. பிறகு எழுந்து கொண்டு எதிரேயிருந்த காட்டை நோக்கிச் சென்றான் சிறைக்காவலர் யாரும் அவனைத் தடுக்கவில்லை.

## 34. மாதவி தொடுத்த போர்

சிறைச்சாலைக்கு எதிரே இருந்த காட்டில் நுழைந்த துறவி, அங்கு தனக்கு ஒரு புரவி தயாராகச் சேணமிட்டு மரத்தில் கட்டியிருந்ததைப் பார்த்ததும் மகிழ்ச்சி வசப்பட்டு மிகுந்த குதூகலத்துடன் அதன் மீது தாவி ஏறி வடபெரும் வாசலுக்கு வந்தான். அங்கு தனக்காகக் காத்திருந்த உபதளபதியைக் கண்டு, ''இந்த நேரத்தில் நீங்கள் எதற்காக இங்கு காத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் வடகிழக்குச் சாலைச் சத்திரத்தின் அதிபதியாயிருந்து, சமுத்திரகுப்தனால் உபதளபதி ஆக்கப்பட்ட அந்த மனிதன், ''காரணம் தங்களுக்கே தெரியும்'' என்றான்.

''எனக்கு புத்தி வரவர மந்தமாகிறது. விஷயத்தை விளக்கிச் சொல்லும்'' என்றான் துறவி.

''உமக்கு இந்தக் கதவுகளைத் திறந்துவிட'' என்றான் புது உபதளபதி.

''கதவைத் திறக்க எனக்கே அதிகாரமுண்டு'' என்றான் துறவி.

''இருந்தது'' -அந்த மனிதனின் குரலில் ஏளனம் இருந்தது.

''இப்பொழுது?'' -துறவி கேட்டான் சந்தேகக் குரலில்.

''இல்லை. நேற்று உங்களைச் சிறை செய்ததும் யாரும் இந்த நகரத்தைவிட்டு வெளியேறக் கூடாதெனத் தளபதி உத்தரவு அனுப்பிவிட்டார்கள். நான்கு வாயில்களுக்கும்.''

''யார் மாதவியா?''

''தளபதியாரைப் பெயர் சொல்லி அழைப்பது குற்றம்.''

இதைக் கேட்ட துறவி புன்முறுவல் கொண்டு, ''உபதளபதி! கதவைத் திறவுங்கள். நான் மீண்டும் வருகிறேன் குப்த சக்கரவர்த்தியுடன். அப்பொழுது இவளைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று உஷ்ணத்துடன் கூறினான்.

அடுத்த விநாடி உபதளபதி கைகாட்ட கதவுகள் திறந்தன. போகுமுன்பு துறவி கேட்டான்: ''உபதளபதி! இந்தப் பிரதான வாயிலைப் பாதுகாக்கும் பொறுப்பு உம்முடையதா?'' என்று.

''ஆமாம்'' -புன்முறுவல் செய்தான் பழைய சத்திரக்காரன்,

''பாலுக்கு பூனையைக் காவல் வைத்திருக்கிறார்கள்'' என்றான் துறவி நகைத்து.

''நான் பூனையல்ல.''



''புலியா?''

''ஆமாம்.''

''புலியாரே! நாம் மீண்டும் சந்திப்போம்'' என்று சொல்லிவிட்டு, துறவி திறக்கப்பட்ட கதவுகளின் மூலம் வெளியே சென்றான். சத்திரக்காரன் அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தான், நீண்ட நேரம். 'நான்தான் விஷ்ணுகோபனுக்குத் துரோகி என்று நினைத்தேன். இவன் பரம துரோகியாயிருக்கிறான். இவனை எப்படி அரசன் நம்பினான்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு கதவுகளை மூடச் சைகை காட்டினான்.

இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் சமுத்திரகுப்தன் தனது படையுடன் காஞ்சிக்கருகில் வந்துவிட்டதாகவும், அவனுக்குப் பின்புறத்தில் விஷ்ணுகோபன் படையும் வருவதாகவும் மாதவிக்குச் செய்தி கிடைக்கவே, மாதவி காஞ்சியின் பாதுகாப்பைத் திடப்படுத்தினாள். அவளே புரவியில் பூரண கவசமணிந்து நான்கு வாசல்களுக்கும் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டாள். பலவீனமான இடங்களைப் பலப்படுத்தினாள். காஞ்சியின் மதில்கள் மீதிருந்த விற்பொறிகளையும் வேல் பொறிகளையும் பார்வையிட்டாள். ஆங்காங்கிருந்த வேலெறிவோரையும் வில்லவரையும் எச்சரித்தாள். அன்றிரவு நேரம் கழித்து வந்த மாதவியைத் தேவகி கேட்டாள்: ''உனக்குப் போர்ப் பயிற்சி எதுவும் கிடையாது. நீ காஞ்சியைக் காத்துவிட முடியுமா?'' என்று.

''அக்கா! போர்ப் பயிற்சியுள்ள வீரர்கள் காஞ்சியில் இருக்கிறார்கள்.''

''அவர்களை நடத்த?''

''நானிருக்கிறேன்.''

''நானில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே மஹாயனர் உள்ளே நுழைந்தார்.

இரு பெண்களும் அவர் வந்தவுடன் எழுந்து நின்று வணங்கினார்கள் ''மாதவி! நீ பெண். போர்களைத் தாங்க உன்னால் முடியாது. நான் பார்த்துக் கொள்கிறேன் காஞ்சியை. நீ சிரமப்படாதே'' என்று தைரியம் கூறினார்.

''சுவாமி! நீங்கள் துறவி. அதுவும் சமணத் துறவி. போர்களை நீங்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?'' என்று வினவினாள் மாதவி.

''நாம் ஒப்புக் கொண்டா போர் வருகிறது? போர் வந்த பின்பு இந்நகரத்தைக் காப்பது ஒவ்வொரு பிரஜையின் கடமை. நானும் ஒரு பிரஜை அல்லவா?'' என்று வினவினார்.

''ஆம் சுவாமி'' என்றாள் மாதவி.

''ஆகையால் நான்கு வாயில்களையும் சுற்றிவந்தேன். வடக்கு வாயிலைக் காக்க இப்பொழுதுள்ள உபதளபதியுடன் வீரபத்ரப்பெருமாளையும் நியமித்து வந்திருக்கிறேன்'' என்றார் குருநாதர்.

''தாங்கள் அருளுக்கு நாங்கள் என்ன கைமாறு செய்யப் போகிறோம்? தங்கள் தவத்தின் பயன் இந்த காஞ்சியும் பல்லவர் குலமும் பிழைக்க வேண்டும்'' என்று மாதவி அவரை வணங்கினாள்.

மஹாயனர் அவ்விருவரையும் ஆசீர்வதித்துச் சென்றார். செல்லும் முன்பு ''குப்த சக்கரவர்த்தி காஞ்சிக்கு அருகில் வந்துவிட்டதாகக் கேள்வி. இந்தச் சமயத்தில் சமுத்திரகுப்தன் பாசறையில் என்ன செய்கிறான்?'' என்று கேட்டார்.

''தெரியவில்லை'' என்றாள் மாதவி.



அத்துடன் திருப்தியுடன் தலையை ஆட்டிவிட்டுச் சென்றார் மஹாயனர்.

அதே சமயத்தில் குப்தனின் ஆயிரம் பேர்கொண்ட சிறுபடை வடகிழக்குச் சாலையிலிருந்த சத்திரத்தை அடுத்து நின்றது. குப்த சக்கரவர்த்தியும் துறவியும் மிக்க மகிழ்ச்சியுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள் சத்திரத்துக்குள்.

சத்திரத்தின் முற்றத்துத் தரையில் சாதாரண வீரன் போல் படுத்துக் கிடந்தான குப்த சக்கரவர்த்தி. அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த துறவி ''நாளை இதே நேரத்தில் காஞ்சி தங்கள் கையிலிருக்கும்'' என்று கூறினான்.

''காஞ்சியைக் கைப்பற்றுவது அவ்வளது திருப்தியாயில்லை எனக்கு'' என்றார் சக்கரவர்த்தி.

''அதுவாக அழைக்கும்போது தாங்கள் எப்படி மறுக்க முடியும்?'' என்று துறவி கேட்டான்.

''உன்னைப் போன்ற ஒரு துரோகியை நான் பார்த்ததில்லை இதுவரையில்'' என்று கூறிய சமுத்திர குப்தன் நகைத்தான் பெரிதாக.

''அந்த வாய்ப்பைப் பல்லவ ராஜ்யம் உங்களுக்கு அளிக்கிறது'' என்றான் துறவி.

''எந்த வாய்ப்பை?'' -குப்தனின் கண்களில் சிரிப்பு விரிந்தது.

''இணையற்ற ஒரு துரோகியைப் பார்க்கும் வாய்ப்பை'' என்றான் துறவி.

''எப்பொழுது நாம் புறப்படலாம்?'' என்று குப்த சக்கரவர்த்தி கேட்டார்.

''நாளை விடியற்காலையில்'' என்றான் துறவி. புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் குப்த சக்கரவர்த்தி.

மறுநாள் பொழுது விடிவதற்கு முன்பே குப்த சக்கர வர்த்தியின் சிறுபடை புறப்பட்டு பிற்பகலில் காஞ்சியின் வடக்குச் சாலையை அடைந்தது. ஆயிரம் வீரர்கள் அணிவகுத்துப் பின்னால் வர வீரத்தின் இலக்கணம் போல், தலையில் கிரேக்கர்களைப் போல் இரும்பு மகுடம் சூடி, மார்பை இரும்புக் கவசம் மறைக்க, இடையிலிருந்த பெரிய வாள் புரவியின் பக்கவாட்டைத் தடவ விறைத்து உட்கார்ந்திருந்த குப்த சக்கரவர்த்தியை வாசலின் மேல் தளத்திலிருந்து கவனித்த மாதவி, 'சக்கரவர்த்தி மகாவீரர், சந்தேகமில்லை' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

சக்கரவர்த்தியைப் பற்றி தான் சிந்தித்த சில நிமிடங்களில், அவர் வீரர்கள் லேசாகப் பிரிந்து கைகளில் பெரிய ஈட்டிகளுடன் விற்பொறிகளையும் வேற்பொறிகளையும் நோக்கிக் கொண்டு நின்றுவிட்டதைக் கவனித்த மாதவி, சக்கரவர்த்தி கையை அசைத்தால் தனது விற்பொறிகளும் வேல் வீசும் இயந்திரங்களும் விநாடி நேரத்தில் செயலற்றுப் போய்விடும் என்பதைப் புரிந்து கொண்டாள். அச்சமயம் வீரனொருவன் வந்து அவள் காதில் ஏதோ சொல்ல அவள் முகத்தில் பெருமகிழ்ச்சி தாண்டவமாடியது; அதனால் குப்த சக்கரவர்த்தியை நோக்கிப் பேச முற்பட்டாள், மதில் மீதிருந்து. அவள் பேசும் முன்பு மதில் மீதிருந்த முரசு ஒரு முறை மடமடவென சப்தித்தது. சம்பிரதாயப்படி அதைத் தொடர்ந்து மாதவி பேசினாள் இரைந்து. ''குப்த வம்ச திலகமே! தாங்கள் பெரும் போர்களில் வெற்றி கண்டவர்கள். ஆனால் காஞ்சியை வெற்றி கொள்ள முடியாது. அதுவும் ஆயிரம் வீரர்களைக் கொண்டு இம்மாநகரைக் கைக்கொள்வது வீண்பிரமை. ஆகையால் திரும்பிவிடுங்கள். உங்கள் மார்பில் கவசமிருப்பதால் எனது வில்லவரை உங்கள் கழுத்துக்குக் குறி வைக்க



உத்தரவிட்டிருக்கிறேன்'' என்றாள்.

அவள் குரலையும் தோரணையையும் கண்ட குப்த சக்கரவர்த்தி, சற்று எட்ட பூர்ண கவசமணிந்து நின்ற துறவியை அருகில் அழைத்தார் துறவி அருகில் வந்ததும், ''பெண்ணே! இதோ பார் உன் காதலன். இவனை இந்த நிமிஷமே நான் கொல்ல முடியும்'' என்று துறவியைச் சுட்டிக் காட்டினார் சக்கரவர்த்தி.

மாதவி நகைத்தாள் பெரிதாக. ''ஒரு நாளும் அவரை நீங்கள் கொல்ல மாட்டீர்கள்; கொன்றால மகாவீரனான சமுத்திர குப்தன் ஒரு பெண்ணின் காதலனைக் காட்டி மிரட்டிக் காஞ்சியைக் கைப்பற்றினான் என்ற சாசுவத அவப்பெயர் சரித்திரத்தில் நிலைக்கும்'' என்றாள் நகைப்பின் ஊடே. திடீரென அவள் தொண்டையைத் துக்கம் அடைத்துக் கொண்டது. ''நாட்டுத் துரோகியை எந்தப் பெண்ணும் கணவனாக ஏற்றுக் கொள்ளமாட்டாள்'' என்று மாதவி தலையைத் துக்கத்தால் தாழ்த்திக் கொண்டாள். பிறகு சட்டென்று நிமிர்ந்து ''சக்கரவர்த்தி! இனி என்ன போரா? சமாதானமா? திரும்பிச் செல்கிறீர்களா, அல்லது விற்களை இயக்கட்டுமா?'' என்று வினவினாள்.

அந்தச் சமயத்தில் தான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. வடக்கு வாயில் கதவுகள் திடீரெனத் திறக்கப் பட்டன. போர் முரசுக்குப் பதில் மங்கள வாத்தியங்கள் முழங்கின. ''குப்த சக்கரவர்த்தி வருக! காஞ்சியின் வெற்றி வீரரே வருக!'' என்ற கோஷம் வானைப் பிளந்தது. மாதவி அதிர்ச்சியடைந்தாள். வில் வீரர்கள்ள நோக்கி, ''உம் ஆகட்டும்! இயக்குங்கள் பொறிகளை'' என்று பெரும் குரலில் உத்தரவிட்டாள். அதே சமயத்தில் வேற்கூடங்களுக்குத் திரும்பி, ''கதவைத் திறந்த துரோகிகளை அழித்து விடுங்கள்'' என்றாள். பெரும் அழிவு நெருங்க முற்பட்டது. வேல்கள் பாய்ந்தன, கதவைத் திறந்த கூட்டத்தின் மீது.

விற்பொறிகள் இயங்கியதால் அம்புகள் பறந்தன, சமுத்திர குப்தனின் வீரர்கள் மீது. குப்த சக்கரவர்த்தியின் கழுத்தை நோக்கியும் பறந்தது ஒரு வாளி.

இத்தனைக்கும் அசையாமல் குப்த சக்கரவர்த்தி தனது புரவிமீது அமர்ந்திருந்தார்.

## 35. தொலைத்த துறவறம்

**வி**ற்பொறிகளையும் வேற்பொறிகளையும் இயக்கி மாதவி போரைத் தொடங்கிவிட்ட பிறகும், குப்த சக்கரவர்த்தி சிறிதும் அசையாமலும், தமது வாளை உருவாமலும், தமது படை வீரருக்கு எந்தவிதச் சைகையும் செய்யாமலும், விறைத்து புரவிமீது உட்கார்ந்திருந்தார். தன் மீது பாய்ந்து வந்த வாளியைக் கூட தமது முன் கைகளைப் பாதுகாத்திருந்த இரும்புக் கவசமொன்றால் அனாயாசமாகத் தட்டி அப்புறம் தள்ளினார். சக்கரவர்த்தியின் போக்கு அவர் வீரர்களுக்கும் புரிந்திருக்க வேண்டும். அல்லது உத்தரவுகள் ஏற்கனவே பிறப்பித்திருக்கப்பட வேண்டும். கோட்டை மீதிருந்து பறந்து வந்த அம்புகளையும் வேல்களையும் ஏதோ விசையால் இயக்கப்பட்ட யந்திரங்கள் போலச் சக்கரவர்த்தியின் பிரிந்து நின்ற படைப்பிரிவுகள் மூன்றும் கேடயங்களால் தடுத்துவிட்டன. அந்தச் சமயத்தில் வாயிற்கதவுகள் வேகமாகத் திறந்து மங்கள வாத்தியங்கள் முழங்கியதால் கவனத்தைக் கதவில் திருப்பி விட்ட மாதவி, வீரபத்திரப் பெருமாள் தலைமையில் அங்கு வந்த துரோகிகளைக் கொல்ல உத்தரவு பிறப்பித்த உடனேயே இங்கு வீசப்பட்ட வேல்கள் பலரின் உயிரைக் குடிக்கவே, அந்த வீரர்கள் பலமாக அலறி விழுந்த கூச்சல் நாசத்தின் அவலக் கூச்சலாகத் தெரிந்ததேயொழிய போர் வீரர்களின் வீர மரணக் கூச்சலாகத் தெரியவில்லை. ஓரளவு காரணத்தைப்



புரிந்து கொண்டாள் மாதவி. கோட்டை வாயில் பாதுகாப்பாளர்கள் முந்திய இரவில் தனக்கும் தெரியாமல் மாற்றப்பட்டிருக்க வேண்டுமென்பதும், மாற்றப்பட்டவர்கள் சிறைச்சாலைக் குற்றவாளியாக இருந்து படையில் சேர்க்கப்பட்ட போர் அனுபவமற்ற வீரர்களே என்பதும் தெரிந்ததால், அவள் முகம் உள்ளே கொதித்த கோபத்தின் விளைவாகப் பெரிதும் சூரிய வெளிச்சத்தில் பளபளத்தது. அப்பொழுது தனது அருகிலிருந்த வில்லவரையும் வேல் வீசும் வீரர்களையும் மேற்கொண்டு பொறிகளை இயக்க வேண்டாமென்று தடுத்துவிட்டுச் சக்கரவர்த்தியை நோக்கி "சக்கரவர்த்தி! இனி நீங்கள் உட்புகலாம். கதவு திறந்து விட்டது. மங்கள வாத்தியங்கள் முழங்கிவிட்டன. இங்குள்ள உங்கள் சதிகாரர்கள் சம்பாதித்துக் கொடுத்த வெற்றியை நீங்கள் அனுபவிக்கலாம்" என்று இரைந்தாள் மாதவி, கோட்டை மதில் மீதிருந்து. "ஏன் உங்கள் வீரர்களை விட்டு என்மீதும் வேலை வீசி உங்கள் போரை முடித்துக் கொள்ளலாமே" என்றும் சொல்லி நகைத்தாள்.

அப்பொழுது மாலை அணுகிவிட்ட நேரம். அந்திக் கதிரவன் பொற்கிரணம் மாதவியின் அழகிய வதனத்தைப் பொன்மயமாக ஆக்கியிருந்தது. கோபத்தில் ஏற்கெனவே சிவந்துவிட்ட அந்த முகத்துக்கு அதிகப் பொலிவையும் சிவப்பையும் அளித்தான் மாலைச் சூரியன். அவள் அழகையும் வீர தோரணையையும் பருகிக்கொண்டு தனது புரவி மீது அமர்ந்திருந்த குப்த சக்கரவர்த்தி பக்கத்திலிருந்த துறவிக்கு மட்டும் கேட்கும்படி தலையை இப்புறமோ அப்புறமோ திருப்பாமல் சொன்னார்: "துறவி! பிடித்தாலும் பிடித்தாய் புளியங்கிளையாகத்தான் பிடித்தாய். இவள் இஷ்டப்படி காஞ்சி இயங்குமானால் நூறு குப்த சக்கரவர்த்திகள் வந்தாலும் இந்தக் காஞ்சியைப் பிடிக்க முடியாது" என்று.

அதை ஆமோதிக்கும் வகையில் துறவி தலையை அசைப்பதற்கும் மீண்டும் வடக்கு வாயிலில் மங்கள வாத்தியம் முழங்குவதற்கும் சரியயிருந்தது. இம்முறை மற்றொரு படை வெளியே வந்தது. பூரண ஆயுதம் தரித்து அதற்குத் தலைமை வகித்துப் புரவிமீது மஹாயனர் வந்தார். குபத சக்கரவர்த்தியைக் கோபத்துடன் நோக்கிய மஹாயனர், தமது கையால் சைகை செய்ய அவர் பக்கத்திலிருந்த முரசுகள் முழங்கின. அவை அடங்கியதும் பெரிய குரலில், சினம் மிகுந்த சொற்களை உதிர்த்தார் மஹாயனர். ''குப்த சக்கரவர்த்தி! உன் மூதாதைகள் மஹாவீரர்கள். பெரும் போர்க்களங்களில் வெற்றி வாகை சூடியவர்கள். ஒரு பெண்ணை எதிர்த்து ஒரு தலைநகரைப் பிடிக்க உனக்கு வெட்கமாயில்லை?'' என சீறினார்.

அப்பொழுதுதான் குப்த சக்கரவர்த்தி தனது படையிலிருந்து பிரிந்து தன் பாதுகாப்புக்கு வந்த காவலரையும் நிற்கச் சொல்லிவிட்டுத் தன்னந்தனியாக முன்னால் வந்தார். ''மஹாயனரே! பெண் இங்கு தலைமை வகிப்பது யார் குற்றம்? பெண்ணை நகரத்துக்குக் காவல் வைக்கப் பல்லவ மன்னனுக்கு வெட்கம் கிடையாது. எனக்கு மட்டும் இருக்கவேண்டுமா? தவிர, பல்லவர் குருநாதரான நீர்தான் இதை எப்படி அனுமதித்தீர்?'' என்று கேட்டான் பெருங்குரலில். அவன் குரலில் சிங்கத்தின் கர்ஜனை இருந்தது. கேள்வி திடமாகவும் பதற்றமற்றும் இருந்தது.

''நான் துறவி. அதுவும் சமணத் துறவி. போர்களை விரும்புவதில்லை. அதனால் விஷ்ணுகோபன் செயல்களில் தலையிடவில்லை'' என்றார் மஹாயனர் மிகக் கம்பீரமான குரலில்.

''அப்படியானால் இந்தப் போர்க்களத்துக்கு ஏன் வந்தீர்? துறவியான உமது வருகையைக் குறிக்க மங்கள வாத்தியங்கள் எதற்கு?'' என்று கேட்டார் குப்த சக்கரவர்த்தி.



தன்மீது வீசப்படும் வலையை உணராத மஹாயனர் ''மங்களவாத்தியம் எனக்கல்ல, உனக்கு'' என்றார்.

''அப்படியானால் இந்த நகரத்துக்குள் துரோகிகள் இருக்கிறார்கள் என்று சொல்லும்'' என்றான் குப்தன்.

அதுவரை பின்னடைந்து நின்ற துறவி, குப்த சக்கரவர்த்தியிடம் வந்து, ''சக்கரவர்த்தி! துரோகிகள் என்று பன்மையில் சொல்லாதீர்கள். கைப்பாவைகளைக் குற்றம் சொல்லி என்ன பயன்?'' என்று கேட்டான்.

குப்தன் முகத்தில் உணர்ச்சி ஏதுமில்லை. ''இந்தத் துறவி ஒரு துரோகி. இவனை என்ன செய்யலாம்?'' என மஹாயனரைக் கேட்டார்.

மஹாயனர் முகத்தில் வெற்றிக்குறி தாண்டவமாடியது. ''இவனை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள். சிறையில் தள்ளிக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார்.

அச்சமயத்தில் துறவி தனது சுயரூபத்தைக் காட்டினான். ''நான் சீடன். என் குருநாதரை விட்டுப் பிரிய மாட்டேன்'' என்றான்.

குப்த சக்கரவர்த்தியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. சட்டென்று பின்புறம் திரும்பிப் பார்த்தார். நான்கு குப்த வீரர்கள் முன்னால் பாய்ந்து வந்தார்கள். சக்கரவர்த்தியின் புரவியையும் தாண்டி மஹாயனரிடம் சென்று நாற்புறமும் நின்றார்கள். தமது புரவிகளால் குரு நாதரின் புரவியை இடித்து முன்னேற்றி குப்த சக்கரவர்த்தியின் அருகில் கொண்டு வந்தார்கள்.

குப்தன் மஹாயனரை ஆழ்ந்து நோக்கினான். ''மஹாயனரே! எல்லாம் கற்ற நீர் ஒன்று கற்கவில்லை. துரோகிகளைக் கொண்டு

எந்தக் குப்தனும் வெற்றியைச் சம்பாதித்ததில்லை. இதை உணர்ந்திருந்தால் காஞ்சியை- கலைகளின் இருப்பிடத்தை நாசம் செய்ய ஏற்பாடு செய்திருக்க மாட்டீர். எந்த விஷ்ணுகோபனிடமிருந்து சமண மதத்தை ஏற்றீரோ அந்த விஷ்ணுகோபனை என்னிடம் காட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்க மாட்டீர்'' என்ற குப்தன், வீரர்களை நோக்கி ''அழைத்துச் செல்லுங்கள்'' என்றான். அடுத்த விநாடி மஹாயனர் குப்த வீரர்களின் பிடியிலிருந்தார்.

''குப்தா! உனக்காகத்தானே இத்தனையும் செய்தேன்? சமணம் செழித்த வடநாட்டிலிருந்து உன்னை இதற்காகவா வரவழைத்தேன்? சமணம் விரியவும், நல்லுணர்வு தெற்கே பரவவும், காஞ்சி சமண சிற்பங்களுக்கும், ஓவியங்களுக்கும் இடமாகத் திகழவுந்தானே காஞ்சியின் கதவுகளைத் திறந்தேன்? குப்தா! நன்றி கெட்டவனே!'' என்று கூறினார். பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்த நிதானத்தைக் காற்றில் பறக்கவிட்டு.

குப்தன் சற்றே திரும்பி, ''மஹாயனரே! மதங்கள் வெறியில் வளர்வதில்லை. துரோகத்திலும் வளர்வதில்லை. அன்பிலும் உறுதியிலும் வளர்கின்றன. பல பாடங்களைப் படித்த நீர் இதைப் படிக்காதது வருந்தத் தக்கது'' என்று கூறிவிட்டு மதில் மீதிருந்த மாதவியை நோக்கி, ''மாதவி! நீ க்ஷத்திரியப் பெண் என்பதை நிரூபித்து விட்டாய். உன்னைப்போல் வீராங்கனைகள் எத்தனையோ பேர் இந்த நாட்டைக் காக்கச் சகல தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். மஹாயனர் துரோகத்தில் கதவுகள் இன்று திறக்காதிருந்தால் உன்னைப் போன்ற பெண்ணிடம் போரிடுவதைக் கௌரமாக நினைத்திருப்பேன். பல போர்களில் எதிரிகளைப் புறங்கண்ட குப்தன், துரோகிகளால் பல்லவனை வென்றான் என்ற அவமதிப்பைப் பெற இஷ்டமில்லாததால் போரை



நிறுத்திவிட்டேன். வருகிறேன்'' என்று திரும்பியவன் மீண்டும் திரும்பி, ''இந்தத் துறவியை உன்னிடம் ஒப்படைக்கிறேன். தகுந்த தண்டனையைக் கொடு'' எனக் கூறினான் முகுந்தனை சுட்டிக்காட்டி.

அப்பொழுது மீண்டும் வடக்கு வாயிலில் புரவிக் கூட்டத்தின் காலடி ஓசை பலமாகக் கேட்டது. முரசுகள் பலமாக முழங்கின. சுமார் நூறு வீரர்கள் கூட்டத்தின் முன்னிலையில் விஷ்ணுகோபன் வெளியேவந்தான். அவன் எந்தவிதக் கவசத்தையும் அணியாமலும் முன்னறிவிப்பு இன்றியும் திடீரெனக் காட்சியளித்தபோது, ''இன்னும் என்னென்ன விசித்திரங்கள் இந்தக் காஞ்சியில் இன்று நிகழப் போகின்றனவோ?'' என்று நினைத்த மாதவி கோட்டை மதிலின் மேல் செயலிழந்து நின்றாள்.

கோட்டையைவிட்டு வெளியே வந்த விஷ்ணுகோபன் குப்த சக்கரவர்த்தி முன்பு வந்தான். புரவியை நிதானமாக நடத்திக் கொண்டு, குப்த சக்கரவர்த்தி முன்பு தலையை லேசாக வணங்கினான். ''காஞ்சிக்கு வரவேண்டும் குப்தர்கள் தலைவரே! உங்கள் வரவால் இந்த மாநகர் இன்று பெருமை பெற்றது'' என்று அழைப்பு விடுத்தான்.

குப்த சக்கரவர்த்தியும் பதிலுக்கு தலை சாய்க்கவே இரு மன்னர்களும் காஞ்சிக்குள் நுழைந்தனர். அவர்களை வரவேற்க விஷ்ணுகோபன் வீரர்கள் சித்தமாயிருந்தனர். அப்பொழுது இருட்டும் நேரமாதலால் காஞ்சியின் விளக்குகளும் பெரிதாக எரிந்தன. வீரர்கள் வாள்களைத் தாழ்த்தி குப்த சக்கரவர்த்தியை வரவேற்றார்கள். குப்த வீரர்கள் ஆயிரம் பேரும் அவர்களிடையே சிறைப்பட்ட மஹாயனரும் பின்தொடரக் குப்தசக்கரவர்த்தி உலகத்தின் கலைக் களஞ்சியமான காஞ்சியின் பெரும்

கோபுரங்களைப் பார்த்தும், ஆங்காங்கு கேட்பாரற்று நின்றிருந்த தனித்தூண்களின் சிற்பங்களை ரசித்துக்கொண்டும் விஷ்ணு கோபனுடன் சென்றான். மக்கள் மலர் தூவினர், சக்கரவர்த்தி மீது.

இவையனைத்தையும் கவனித்துக்கொண்டு மதில் மீதிருந்த மாதவி சடசடவென இறங்கித் தனது புரவியில் தாவிப் பறந்து சென்றாள், தனது மாளிகையை நோக்கி. சக்கரவர்த்தி அங்கு வந்ததும் மாதவியும் தேவகியும் சக்கரவர்த்திக்கு ஆரத்தி எடுத்தார்கள்.

குப்தன் வியப்புடன் நோக்கினான் விஷ்ணுகோபனை. ''மன்னவா! நான் காஞ்சியை வென்றுவிட்டதுபோல் அல்லவா வரவேற்பு நடக்கிறது?'' என்று கேட்டார்.

''ஆம், வென்றுதான் விட்டீர்கள். மக்கள் உடல்களை ஆயுதங்களால் சாய்த்து வெற்றி பெறவில்லை. தங்கள் பெருந்தன்மையால், அன்பினால் மக்கள் மனங்களை வெற்றி கொண்டீர்கள்'' என்றான் விஷ்ணுகோபன்.

குப்தன் முகத்தில் முதன்முதலாக உணர்ச்சி புலனாயிற்று. ''என்னை எதிரியின் நகரத்துக்குள் சிக்கவைத்து இந்தப் போலி வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்தவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்று விசாரித்தான் மாளிகை வாயிலில் நின்றபடியே.

''எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் கொடுக்கலாம்'' என்றான் விஷ்ணுகோபன் புன்முறுவல் செய்து.

பின்னாலிருந்த துறவியை முன்னால் வரச் செய்த குப்தன், ''இவன்தான் சகலத்துக்கும் காரணம். இவன் அவ்வப்பொழுது ஓலைகளை எழுதியும், நடப்பதை அறிவித்தும் நேரில் வந்தும் காஞ்சியைக் காப்பாற்றினான். மஹாயனர் அனுப்பிய ஓலைகளை எல்லாம் வழிமறித்துக் கைப்பற்றியதும் இவன்தான். உங்களையும் எங்களையும் ஒரே நாளில் காஞ்சிக்குள் வெவ்வேறு வாயிலுக்கு வரத் திட்டமிட்டவனும் இவன்தான். இவனை உங்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன்...'' என்று சற்று நிதானித்த சக்கரவர்த்தி, ''உங்களுக்கு இந்தச் சிரமத்தை அளிப்பானேன்? உங்கள் படைத் தலைவரிடம் ஒப்படைத்து விடுகிறேனே'' என்றான்.



விஷ்ணுகோபனும் மாதவியை நோக்கி, ''இவனை உன்னிடம் குப்த சக்கரவர்த்தி ஒப்படைக்கிறார். சிறை செய்'' என்றார்.

குப்த சக்கரவர்த்தி சொன்னார் ''இவன் சுத்தப் போலித்துறவி. மிகுந்த எச்சரிக்கையாயிரு. உறவாடிக் கெடுப்பவன். மஹாயனரையே ஏமாற்றியவன்'' என்றார் மாதவியை நோக்கி.

''இவன் வேஷத்தைக் கலைத்துவிடு முதலில்'' என்றான் விஷ்ணுகோபன்.

துறவி தனது புரவியை முன்னால் நடத்தி தனது வாளை மாதவியிடம் நீட்டினான். அடுத்து இடையில் இருந்த நாகசர்ப்பத்தையும் நீட்டினான். இரண்டையும் வாங்கிக்கொண்ட மாதவி சட்டென்று திரும்பி உள்ளே ஓடினாள்.

குப்தன் அப்பொழுதே பயணமானான் தனது பாசறைக்கு. சிறைப்பட்ட மஹாயனரையும் உடன் அழைத்துச் சென்றான். விஷ்ணுகோபன் எத்தனையோ வேண்டியும் குப்தன் காஞ்சியில் தங்க சம்மதிக்கவில்லை. மஹாயனரைக் கொண்டு பலபத்ர வர்மனையும் சிறைசெய்து அழைத்துச் செல்கிறேன். பல்லவமன்னரே! இனி நீங்கள் போரை மறந்து காஞ்சியின் கலையை வளர்க்கலாம். நிம்மதியாகப் போர் அணியிலிருந்து

படைகளையும் திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுப் புரவிமீது தாவினான். வாளை உயர்த்த அவன் ஆயிரம் வீரரும் யந்திரம் போல் திரும்பினர். குப்தன் படை நகர்ந்தது.

''அதோ ஒரு பெருமன்னன் போகின்றான். இவனைப் போல் எப்பொழுதோ ஒருவன் சரித்திரத்தில் தோன்றுகிறான்; கலையைக் காக்க வெற்றியை விட்டுக் கொடுத்து வீரன் போகின்றான். அவனை இரண்டு நாள் வைத்துக் கௌரவிக்க காஞ்சி கொடுத்து வைக்கவில்லை'' என்று பெருமூச்சுவிட்ட விஷ்ணுகோபன் மாளிகைக்குள் நுழைந்தான்.

மறுநாள் துறவி மீசை தாடி ஏதுமில்லாமல் அரச உடையணிந்து மன்னன் முன்பு தோன்றினான். ''மாற்றம் நன்றாயிருக்கிறது'' என்று பாராட்டினான் விஷ்ணுகோபன்.

''மாதவியின் உத்தரவால் என் துறவறம் அழிந்தது'' என்று முறையிட்டான் மாஜித் துறவி.

அப்பொழுது தேவகியின் அறையில் உட்கார்ந்திருந்தான் விஷ்ணுகோபன். அவனுக்கு அருகில் நின்றிருந்த ராணி தேவகி கூறினாள்: ''அவள் உத்தரவால் உங்கள் துறவறக் கோலந்தான் அழிந்தது'' என்றாள்.

''அவள் உறவால் துறவறமே அழிந்துவிடும்'' என்று மன்னன் கூறி நகைத்தான்.

அப்பொழுது உள்ளே நுழைந்த மாதவி கேட்டாள்: ''என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?'' என்று.

''இவன் துறவறக் கோலத்தை ஏன் அழித்தாய்?''



''குப்த சக்கரவர்த்தியின் உத்தரவு'' என்றாள் மாதவி.

''அப்படியானால் என் உத்தரவுக்கு மதிப்பு இல்லையா?'' என்று விஷ்ணுகோபன் கேட்டான்.

''ஏனில்லை? உத்தரவிடுங்கள்'' என்றாள் மாதவி.

''இவன் துறவறத்தை முழுவதும் அழித்துவிடு என்று உத்தரவிட்டார் மகாராஜா.

மகாராஜா சொற்களின் குறிப்பறிந்த மாதவியின் முகம் சிவந்தது. அத்துடன் புன்சிரிப்பைக் கொட்டி வெளியேறினாள் அறையைவிட்டு.

மாஜித் துறவியும் அவளைப் பின்தொடர்ந்தான். ''எங்கு போகிறார் இவர்?'' என்று விசாரித்தாள் தேவகி. ஏதும் அறியாதவள் போல்.

''துறவறத்தைப் பறிகொடுக்கப் போகிறார்.''

''இருவருக்கும் திருமணமாகவில்லையே!''

''காந்தர்வம் அரச குலத்தவர்க்கு அனுமதிக்கப்படுகிறது.''

இதைக் கேட்ட தேவகி நகைத்தாள். அதே சமயத்தில் அடுத்த அறைக் கதவைத் துறவி திறந்து தலையை உள்ளே நீட்டினான் மெல்ல.

சாளரத்தின் மூலம் வெளியே தெரிந்த வேகவதியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த மாதவி கதவு திறந்த சத்தம் கேட்டதும் சரேலெனத் திரும்பினாள். ''எங்கு வந்தீர்கள்?'' என்று கேட்டாள் கோபத்துடன்.

''மன்னர் உத்தரவை நிறைவேற்ற வந்தேன்'' என்று துறவி உள்ளே நுழைந்து கதவையும் மூடினான்.

உத்தரவு என்னவென்பதை அறிந்திருந்த மாதவி மதுரமாகச் சிரித்தாள். சிரிப்பில் அழைப்பிருந்ததால் அவளை நோக்கி நடந்தான் மாஜித் துறவி. சோர நாட்டிலிருந்து கொண்டு வந்த அவன் துறவறம் அன்று இரவு தொலைந்தது.

''காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த'' பெருமையை பிற்காலத்தில் ஜெயங்கொண்டார் தெரியாமலா பாடினார்!

*(முற்றும்)*

சென்னை மாவட்ட கிளை நூலகம்
34933
5231983
கொளத்தூர், சென்னை

காஞ்சியிருக்க - இடையில் அணியும் ஆபரணம் இருக்க கலிங்கம் - ஆடை, குலைந்தது - அழிந்தது ('கடைத்திறப்பு')